amount *(n.)* total value, the combined quantity, measure, total effect, மொத்தத் தொகை, கூட்டுத்தொகை, அளவு, முழு விளைவு; also *(v.i. & t.)*.

amphib'ian *(n.)* an animal living both on land and in water, நில நீர்வாழ் உயிரி; **amphib'ious** *(adj.)*.

amphitheatre *(n.)* an unroofed building with row of seats used for public amusements, திறந்தவெளி அரங்கு.

am'ple *(adj.)* spacious, abundant, quite enough, இடமகன்ற, மிகுதி யான, தாராளமான.

am'plify *(v.t. & i.)* enlarge, give full details, பெருக்கு, அதிகமாக்கு, விளக்கு; **amplifica'tion, am'plifier** *(ns.)*.

am'poule *(n.)* small glass container for injection, மருந்துக்குழாய்.

am'putate *(v.t.)* to cut off, துண்டி; **amputa'tion** *(n.)*.

am'ulet *(n.)* thing worn as charm against evil, தாயத்து.

amuse' *(v.t.)* to entertain, to give pleasure to, to make laugh, வேடிக்கை காட்டு, மகிழ்ச்சியூட்டு, சிரிக்க வை; **amuse'ment** *(n.)*; **amus'ing** *(adj.)*.

anach'ronism *(n.)* something not in harmony with the present, காலக் கணிப்பு முரண்; **anachron'ic** *(adj.).*

anacon'da *(n.)* a large snake that crushes its prey, ஒருவகையான மலைப்பாம்பு.

anaem'ia *(n.)* poorness of blood, unhealthy paleness, குருதிச் சோகை, வெளிறின தோற்றம்; **anaem'ic** *(adj.).*

anaesthet'ic *(n.)* a substance used in surgery etc., that causes insensibility, மயக்க மருந்து; **also** *(adj.),* **anaes'thetize** *(v.t.);* **anae'sthesia, anaesthe'sis, anaesthe'tist, anaes-the'tics** *(ns.).*

an'agram *(n.)* words formed by the transposition of letters of words or phrases, எழுத்து மாற்று முறையில் ஆக்கப்படும் புதுச்சொல்; **anagrammat'ic, anagrammat'ical** *(adjs.);* **anagramm'atism** *(n.);* **anagramm'atise** *(v.t. & i.).*

anal'ogy *(n.)* process of reasoning from similar causes, agreement, similarity, ஒப்புமை, ஒத்த உறவு, இணையொப்பு; **anal'ogous** *(adj.).*

an'alyse *(v.t.)* to examine the constitution of something by breaking up, பகுப்பாய்வு செய், கூறு படுத்தி நோக்கு; **analyt'ic, analyt'ical** *(adjs.).*

anal'ysis *(n.)* detailed examination of something by breaking it into parts, பகுப்பாய்வு; **an'alyst** *(n.).*

an'archy *(n.)* the absence of government, confusion, ஆட்சி யில்லா நிலை, குழப்பம், ஒழுங்கின்மை; **an'archist** *(n.).*

anath'ema *(n.)* a cursed thing, something hated, சபிக்கப்பட்ட ஒன்று, வெறுக்கத்தக்கது.

anat'omy *(n.)* dissection, the science of the structure of the body, அறுத்துப் பார்த்தல், உடற்கூறியல்; **anat'omist** *(n.).*

an'cestor *(n.)* forefather, மூதாதையர், முன்னோர்; **ances'tral** *(adj.);* **an'cestry** *(n.).*

an'chor *(n.)* heavy piece of iron with hooks for holding ship to the bottom of the water, நங்கூரம்; also *(v.t. & i.).*

an'chorage *(n.)* a place for anchoring ships, duty charged for anchoring, நங்கூரம் பாய்ச்சுமிடம், நங்கூரத் தீர்வை.

an'cient *(adj.)* pertaining to times long ago, very old, தொன்மையான, பழமையான.

an'cients *(n.pl.)* those who lived in ancient times, தொல்குடியினர்.

ancill'ary *(adj.)* subservient, auxiliary, அதிகாரத்திற்குட்பட்ட, துணை.

an'ecdote *(n.)* a short entertaining account of some incidents, a short story, சுவையான வாழ்க்கைக் குறிப்புகள், நிகழ்ச்சிக் குறிப்புகள், சிறுகதை.

an'ecdota *(n.pl.)* unpublished details of history, வெளிவராத பல வர லாற்றுக் குறிப்புகள்.

anent' *(prep.)* concerning, தொடர் பாக.

anew' *(adv.)* freshly, again, புதிதாக, மீண்டும்.

an'gel *(n.)* a messenger sent by God, a very good or beautiful person, தேவதை, நல்லவர், அழகானவர்; **ange'lic** *(adj.).*

an'ger *(n.)* hot displeasure, bitter feeling, சினம், கடுஞ்சினம்; **ang'ry** *(adj.);* **ang'rily** *(adv.).*

an'gle *(n.)* space between two meeting lines or planes, corner, a point of view, கோணம், மூலை, பார்வை, நோக்கு; **ang'ular** *(adj.);* **angu-lar'ity** *(n.).*

ang'ry *(adj.)* hot, கோபமான, சின முள்ள.

ang'uish *(n.)* severe mental pain or bodily pain, agony, மனத்துயர், உடல்வலி, துயரம்.

animadvert' *(v.i.)* pass criticism, blame, மதிப்பிட்டு உரை, குற்றஞ் சாட்டு; **animadver'sion** *(n.).*

an'imal *(n.)* an organism other than man endowed with life, sensation and voluntary motion, விலங்கு; also, *(adj.).*

animal'cule *(n.)* a microscopic animal, சிற்றுயிரி, நுண்ணுயிரி.

an'imate *(v.t.)* to give life to, to make lively, encourage, உயிரூட்டு, எழுச்சியூட்டு, தூண்டு; also *(adj.),* **anima'tion** *(n.).*

animos'ity *(n.)* strong dislike, enmity, கடும்வெறுப்பு, கொடும்பகை.

an'imus *(n.)* a strong feeling against, an animating force, கொடும்பகைமை, உள்ளுணர்வு.

an'iseed *(n.)* an aromatic seed, பெருஞ்சீரகம், சோம்பு.

ank'le *(n.)* the joint connecting the foot and leg, கணுக்கால்.

ank'let *(n.)* an ornament for the ankle, சிலம்பு, கொலுசு, தண்டை.

ann'als *(n.pl.)* annual records, historical record of events year by year, ஆண்டுக் குறிப்பு, ஆண்டுவாரியான வரலாற்றுக் குறிப்புகள்; **ann'alist** *(n.).*

annex' *(v.t.)* to add or to attach, to take possession of, ஒட்டு, இணை, கைப்பற்று, also *(n.),* **annexa'tion** *(n.).*

annex'e *(n.)* supplementary building, addition to document etc., இணைப்புக் கட்டடம், பிற்சேர்க்கை.

anni'hilate *(v.t.)* to destroy completely, ஒட்டுமொத்தமாக அழி, பூண்டோடு அழி; **annihila'tion** *(n.).*

annivers'ary *(n.)* yearly celebration, commemoration, ஆண்டு விழா, நினைவு விழா.

ann'otate *(v.t. & i.)* to add notes, explanation etc., to comment, உரையெழுது, குறிப்பெழுது, விளக்கம் எழுது; **annota'tion** *(n.).*

announce' *(v.t. & i.)* intimate, to make known publicly, தெரிவி, அறிவி.

annoy' *(v.t.)* irritate, to disturb, அலைக்கழி, எரிச்சல் உண்டாக்கு, துன்புறுத்து; **annoy'ance** *(n.).*

ann'ual *(adj.)* happening every year, yearly, ஆண்டுதோறும் நிகழ்கின்ற; also *(n.);* **ann'ually** *(adv.).*

annu'ity *(n.)* yearly grant, ஆண்டு மானியம்; **annu'itant** *(n.).*

annul' *(v.t.)* abolish, to declare not valid and cancel, நீக்கு, செல்லுபடியாகாதென்று அறிவி, இரத்து செய்; **annul'ment** *(n.).*

ann'ular *(adj.)* ring shaped, circular, வளைய வடிவமான, வட்டமான.

annun'ciate *(v.t.)* to announce, தெரிவி, அறிவிப்பு செய்; **annuncia'tion** *(n.).*

anom'aly *(n.)* irregularity, abnormality, ஒழுங்கின்மை, முரண்பாடு; **anom'alous** *(adj.).*

anon' *(adv.)* immediately, soon, உடனடியாக, விரைவில்.

an'onym *(n.)* an unknown person, an assumed name, பெயர் தெரியாத ஒருவர், புனைபெயர்.

anon'ymous *(adj.)* without knowing a name, பெயர் அறியப்படாத.

an'swer *(v.t. & i.)* reply, be responsible, to be blamed for, பதில் கூறு, விடையளி, பொறுப்பேற்றுக் கொள், குற்றத்தை ஒத்துக்கொள்; also *(n);* **an'swerable** *(adj.).*

ant *(n.)* a small hard working insect, எறும்பு.

antag'onism *(n.)* unfriendliness or active oppositions, பகைமை, எதிர்ப்பு; **antag'onise** *(v.t.);* **antag'onist** *(n.);* **antagonis'tic** *(adj.).*

antarc'tic *(adj.)* of south pole regions, தென்துருவப் பகுதி சார்ந்த.

antece'dence *(n.)* priority, previous happening, முதன்மை நிலை, முன் நிகழ்வு.

antechamber, anteroom *(n.)* a small room leading to a large hall, இடைக்கூடம், உள்ளறை.

an'tedate *(v.t.)* to put a date earlier than the actual date, உண்மையான தேதிக்கு முற்பட்ட ஒரு தேதியை இடு, முற்படத் தேதி குறி; also *(n.).*

an'telope *(n.)* a kind of deer-like animal, மறிமான்.

antemerid'ian *(n.)* before noon, முற்பகல்.

antenn'a *(n.)* sensory organ of an animal, ariel, உணர்கொம்பு, உணர் கம்பி, வானலை கம்பி.

anter''ior *(adj.)* more to the front, prior, before, முன்பக்கமான, முந்திய, முன்னர்.

an'them *(n.)* any song of praise, வணக்கப்பாடல், வாழ்த்துப் பா.

an'ther *(n.)* part of stamen containing pollen, மகரந்தப்பை.

anthol'ogy *(n.)* collection of chosen poems, passages etc., தொகை நூல்.

an'thrax *(n.)* an infectious disease, கால்நடைகளுக்கு ஏற்படும் சீழ்க் கட்டி.

an'thropoid *(adj.)* resembling man, மனித வடிவிலான.

anthropol'ogy *(n.)* the study of human society, customs, beliefs etc., மானிடவியல், மாந்தவியல் .

anti'cipate *(v.t.)* to foresee, expect, கருது, எதிர்பார்; **anticipa'tion** *(n.).*

anticlim'ax *(n.)* any sudden descent or drop, உச்ச நிலை இழிவு, திடீர் வீழ்ச்சி.

anticyc'lone *(n.)* a system of winds blowing round and out from an area of high pressure, காற்றழுத்தப் பகுதி யிலிருந்து வெளி வீசும் சூறாவளி, எதிர்ச் சூறாவளி.

an'tidote *(n.)* medicine used to act against poison, நச்சுமுறி மருந்து.

antip'odes *(n.pl.)* any two places exactly opposite to each other on earth, நேரெதிர் முகடுகள்.

antiq'ue *(adj.)* existing since ancient times, தொல்பொருள் சார்ந்த; also *(n.).*

an'tiquary *(n.)* one who studies or collects the remains of ancient times, பழம்பொருள் ஆய்வாளர், பழம் பொருள் சேகரிப்பவர்; **antiqua'rian** *(adj.).*

antiq'uity *(n.)* ancientness, the remains of ancient times, தொன்மை, பழம் பெருமை, பழமைச்சின்னம்.

antisep'tic *(adj.)* preventing infection, தொற்றுக்கிருமியை அழிக்கும், நச்செதிரான, புரை எதிர்.

antith'eism *(n.)* opposition to believe in God, நாத்திகம்.

ant'ler *(n.)* branched horn of an animal of the deer family, கலைமானின் கிளைக் கொம்பு.

an'tonym *(n.)* a word opposition in meaning to another word. எதிர்ச் சொல்.

an'us *(n.)* the lower opening of the alimentary canal, ஆசன (கழி)வாய்.

an'vil *(n.)* an iron or steel block on which metal objects are hammered into shape, பட்டடைக்கல், அடைகல்.

anxi'ety *(n.)* a state of uneasiness, worry, strong desire, பரபரப்பு, கவலை, ஆர்வம்.

anxi'ous *(adj.)* uneasy, worried, பரபரப்பான, கவலையுடைய.

apace' *(adv.)* speedily, விரைவாக.

apart' *(adv.)* aside, at a little distance, ஒரு பக்கமாக, நீங்கி.

apart'ment *(n.)* a separate room in a house, தனி அறை.

apart'ments *(n.pl.)* flat, அடுக்குமாடி வீடுகள்.

ap'athy *(n.)* lack of emotion or enthusiasm, உணர்ச்சியின்மை, ஆர்வமின்மை, அக்கறையற்ற நிலை; **apathet'ic** *(adj.).*

a'pe *(n.)* tailless monkey which can stand and walk in an almost erect position, வாலிலாக் குரங்கு.

ap'erture *(n.)* an opening, துளை.

ap'ex *(n.)* peak, the highest point or tip, சிகரம், உச்சி, முகடு.

aph'orism *(n.)* axiom, a short statement of a principle, adage, வெளிப்படையான உண்மை, கொள்கை, முதுமொழி.

ap'iary *(n.)* a place where bees are kept, தேனீப் பண்ணை; **ap'iarist** *(n.).*

apiece′ *(adv.)* to each, for each, தனித் தனியே, ஒவ்வொருவருக்கும்.
apiol′ogy *(n.)* the branch of science that deals with bees, தேனீயியல்.
apol′ogy *(n.)* an open confession for having done something wrong etc., குற்றத்தை ஒப்புக்கொண்டு வெளிப் படையாக மன்னிப்புக் கேட்டல்; **apol′ogize** *(v.t.)*.

ap′oplexy *(n.)* sudden loss of the power to feel, move etc., usually caused due to damage to a blood vessel in the brain, வலிப்பு நோய், கைகால் வெட்டி இழுத்தல்; **apoplec′tic** *(adj.)*.

apos′trophe *(n.)* a mark to show case or used to show that a letter or letters have been omitted from a word, உடமைப் பொருள் விகுதிக் குறியீடு, எழுத்தெச்சக் குறியீடு.
appal′, appall′ *(v.t.)* horrify, to discourage with fear, அச்சுறுத்து, திகைக்க வை; **appall′ing** *(adj.)*.
appara′tus *(n.)* instrument, tool etc., needed for a specific purpose, ஆய்வுக் கருவி.
appa′rent *(adj.)* clear, visible, appearing but not necessarily real, தெளிவான, வெளிப்படையான, கண்ணுக்குப் புலனாகிற, போலி யான.
appari′tion *(n.)* ghost, the sudden appearance of something super-natural, பேய், ஆவியுருத் தோற்றம், பொய்த் தோற்றம்.
appeal′ *(v.i.)* plead, to call upon, to be attractive, மேல் வழக்குத் தொடு, முறையிடு, கவரும் முறையில் இரு.
appeal′ *(n.)* a request, a quality which arouses sympathy or attraction, representation of a case from a lower to a higher court, வேண்டுகோள், கவர்ச்சி, இரக்கத்தை ஏற்படுத்தும் தன்மை, மேல் வழக்கு முறையீடு; **appeal′ing** *(adj.)*.

appear′ *(v.t.)* to become able to be seen, to become known, கண் ணுக்குப் புலப்படு, வெளிப்படு.

appear′ance *(n.)* the act of coming into sight, an appearing before the public, outward aspect, தோற்றம், காட்சியளித்தல், வெளித்தோற்றம்.

appease′ *(v.t.)* to pacify, to calm or satisfy, தேற்று, அமைதிப்படுத்து.

appell′ant *(n.)* one who makes an appeal, மேல் வழக்குத் தொடர்பவர்; also *(adj.)*, **appella′tion** *(n.)*.

append′ *(v.t.)* affix, subjoin, add, ஒட்டு, சேரு, இணை.
appen′dix *(n.)* addition, supplement, small process developed from the surface of an organ usually from the bowels, இணைப்பு, பிற்சேர்க்கை, குடல்வால்.
apper′tain *(v.i.)* to belong to, to relate to, உரித்தாய் இரு, சார்ந்திரு, பொருத்தமாயிரு.
appe′tite *(n.)* a natural desire for food, drink etc., passion, பசி, நாட்டம்; **appetis′ing** *(adj.)*; **appetis′er** *(n)*.
applaud′ *(v.t. & i.)* to praise or show approval by clapping the hands, கைதட்டிப் பாராட்டுத் தெரிவி.
applause′ *(n.)* approval expressed by clapping, cheering, shouting etc., கைதட்டிப் பாராட்டுதல், மகிழ்ச்சி ஆரவாரம்.

appli′ance *(n.)* apparatus, instrument, துணைக்கருவி.

app′licant *(n.)* one who applies, விண் ணப்பதாரர்.
applica′tion *(n.)* a formal request, the act of fixing the mind, the act of applying the principles etc., விண்ணப்பம், மனத்தை ஒன்றச் செய்தல், கோட்பாட்டைப் பயன் படுத்துதல்; **appli′cable** *(adj.)*.

apply′ *(v.t. & i.)* make request, to be suitable, to fix the mind on, விண் ணப்பம் செய், பொருந்து, மனத்தை ஈடுபடுத்து.
appoint′ *(v.t. & i.)* to place in a job, to make appointments, designate, allot, தேர்வு செய், பணியமர்த்து, விதித்துக் கொடு.

appoint'ment *(n.)* the act of appointing, engagement, பணியமர்த்துதல், சந்திப்புத் திட்டம்.

appor'tion *(v.t.)* distribute, divide, பகுத்துக் கொடு, பிரித்துக் கொடு.

appose' *(v.t.)* to put side by side, place opposite or near, அருகருகாய் வை, எதிர்த்து நில்.

appraise' *(v.t.)* to set a price on, to judge the quality of, to estimate the quantity, விலை மதிப்பிடு, தரம் கண்டறி, அளவை அறுதியிடு; **apprais'er** *(n.)*.

appre'ciate *(v.t. & i.)* to rise in value, to value, to recognise, பிறர் மதிப்பில் உயர், மதிப்பிடு, உணர்; **apprecia'tion** *(n.)*; **appre'ciable** *(adj.)*.

apprehend' *(v.t. & i.)* understand, to seize, to lay hold of, to fear, to learn by experience, அறிந்து கொள், கைப்பற்று, கைது செய், எதிர் நோக்கி அஞ்சு, பட்டறிவின் மூலம் அறி; **apprehen'sion** *(n.)*; **apprehen'sive** *(adj.)*.

appren'tice *(n.)* a beginner who is learning a trade, occupation etc., under an agreement, பணிப் பயிற்சி பெறுபவர்; also *(v.t.)*, **appren'tice-ship** *(n.)*.

apprise' *(v.t.)* to notify, inform, அறிவிப்பு செய், தெரிவி.

approach' *(v.i. & t.)* to come or go near, to advance, அணுகு, முன்னோக்கிச் செல்; **approach'able** *(adj.)*.

approba'tion *(n.)* approval, good opinion, permission, commendation, ஒப்புதல், பாராட்டு, அனுமதி, ஏற்றுக் கொள்ளுதல்.

appro'priate *(v.t.)* to use for oneself, to take to oneself, to put aside for a particular purpose, பயன்படுத்திக் கொள், உரிமையாக்கிக் கொள், குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கிக் கொள்; also *(adj.)*; **appropria'tion** *(n.)*.

approv'al *(n.)* favourable attitude, sanction, ஒப்புதல், அனுமதி.

approve' *(v.t. & i.)* to admit, to justify, authorize to have a favourable opinion, அனுமதி அளி, உறுதிப் படுத்து, சான்றளி, உடன்படு.

approv'er *(n.)* one who approves, one who turns prosecutor's witness and confesses a crime, ஒப்புக்கொள் பவர், குற்றத்தை ஒப்புக் கொண்ட சாட்சி.

approx'imate *(adj.)* more or less correct, closely resembling, to come near, கிட்டத்தட்ட சரியான, பெரிதும் ஒத்திருக்கிற, ஏறக்குறைய; also *(v.i. & t.)*; **approxima'tion** *(n.)*.

appurt'enance *(n.)* something which belongs to a person or thing, உடைமைப் பொருள், துணைப் பொருள்.

ap'ricot *(n.)* a small yellowish orange coloured fruit, ஒரு வகை இலந்தைப் பழம்.

aprior'i *(adv.)* from cause of effect or from a generalization to particular instance, காரண – காரிய முறையிலான, பொது – சிறப்பு வகையிலான.

ap'ron *(n.)* an article of dress worn on the front to keep the dress clean or to protect them from injury, பாதுகாப்பு மேலாடை, தொழில் துறை மேலாடை.

apropos' *(adv. & prep.)* at the right time, with regard to, to the purpose, சரியான நேரத்தில், பொருட்டாக, காரணமாக.

apt' *(adj.)* suitable, quick to learn, liable, தகுந்த, நாட்டமுடைய, தகுதியுள்ள.

ap'titude *(n.)* suitableness, talent, natural tendency towards a particular action or effect, பொருத்தம், திறமை, நாட்டம்; also **apt'ness** *(n.)*.

aquar'ium *(n.)* a glass tank or building containing tanks for keeping fish - like water animals and plants;

நீர்வாழ் உயிரினங்களையும் நீர்த் தாவரங்களையும் வளர்க்கும் கண்ணாடித் தொட்டி, நீர்வாழ் உயிர்க் காட்சி நிலையம்; **aquaria, aquariums** *(pls.)*

a'queduct *(n.)* a channel like large pipe for conveying the water supply for the city, கட்டுக்கால்வாய்.

a'quiline *(adj.)* curved like an eagle's beak, கழுகின் மூக்குப் போன்ற.

a'rable *(adj.)* fit for ploughing, உழுது பயிரிடத்தக்க, சாகுபடி செய்யத்தக்க; also *(n.)*.

arb'iter *(n.)* referee, a judge, நடுவர், நீதிபதி.

arb'itrary *(adj.)* not governed by rules, absolute, விதிமுறைகளற்ற, தன்னிச்சையான, மனப்போக்கான, கொடுங்கோன்மையான.

arb'itrate *(v.t. & i.)* to act as an arbitrator in a dispute, தீர்ப்பு வழங்கு; **arbitra'tion, arb'itrator** *(ns.)*.

arb'or, arb'our *(n.)* a place shaded by trees, a seat in the garden, சோலை, கொடி வீடு.

arbor'eal *(adj.)* pertaining to or like a tree, மரங்களோடு தொடர்புடைய.

arc *(n.)* a curved line or object, வில்.

arcade' *(n.)* a passage or road under a row of arches, an avenue of trees, வில் வளைவுகளை உடைய பாதை, பந்தலிட்ட நடைபாதை, சோலை.

arch¹ *(n.)* curved structure shaped like an arc, வளைவு, வில் வளைவு அமைப்பு ; also *(v.t. & i.)*.

arch² *(adj.)* chief, mischievous, cunning, முதன்மையான, குறும்பான, தந்திரமான.

archaeol'ogy *(n.)* the scientific study of the life and culture of ancient peoples, தொல்லியல், தொல் பொருளியல்; **archaeolog'ical** *(adj.)*; **archaeol'ogist** *(n.)*.

archa'ic *(adj.)* ancient, no longer in common use, old-fashioned, தொல் பெரும், பழமையான, நாகரிகமற்ற, வழக்கிழந்த; **archa'ism** *(n.)*.

arch'bish'op *(n.)* chief bishop, தலைமைக் குரு, பேராயர்.

archer *(n.)* a bow man, the constellation sagittarius, வில்லாளர், தனுசு இராசி.

arch'ery *(n.)* the art of shooting with a bow and arrow, விற்கலை.

arch'etype *(n.)* original pattern, prototype, மூலமாதிரி, ஆதியுரு.

archipel'ago¹ *(n.)* a group of islands, தீவுக்கூட்டம்.

Archipel'ago² *(n.)* a sea having many small islands, ஏஜியன் கடல், பல தீவுகளுள்ள கடல்.

arch'itect *(n.)* one who designs a building, any similar designer, கட்டடக் கலைஞர், வடிவமைப்பாளர்.

arch'itecture *(n.)* the science of designing buildings, கட்டடக் கலையியல், கட்டட வடிவமைப்பு.

arc'hives *(n.pl.)* a place where public records, old documents etc., are kept, the records kept in such a place, ஆவணக்காப்பகம், ஆவணங்கள்.

Ar'ctic *(adj.)* of north polar regions, வடதுருவப் பகுதியைச் சார்ந்த; also *(n.)*.

ard'ent *(adj.)* eager, affectionate, red-hot, ஆர்வமுடைய, அன்பான, சூடேறிச் சிவந்த.

ard'our *(n.)* devotion, passion, intense heat, மிகு நாட்டம், பாச உணர்ச்சி, கடும் வெப்பம்.

ardu'ous *(adj.)* difficult, hard to achieve, steep, கடினமான, எளிதில் அடைய முடியாத, செங்குத்தான; **arduousness** *(n.)*.

ar'ea *(n.pl.)* the extent or size of a surface, பரப்பு, பரப்பளவு.

are'ca *(n.)* a kind of palm tree, கமுகு மரம்.

aren'a *(n.)* any place for public show, contest etc., அரங்கு, களரி.

ar'gue *(v.i. & t.)* discuss, try to prove by giving reasons, வாதிடு, சான்றா தாரம் காட்டி நிலைநாட்டு; **ar'gument** *(n)*; **argumen'tative** *(adj.)*.

ar'id *(adj.)* unfertile, உலர்ந்த, வறண்ட, வளமற்ற; **arid'ity, ar'idness** *(ns.)*.

aright' *(adv.)* properly, நேராக, சரி யான முறையில்.

arise' *(v.i.)* to get up, rise up, எழுந் திரு, தோன்று.

aristoc'racy *(n.)* government by the nobles or persons of rank, பிரபுக்கள் (கோமான்கள்) ஆட்சி.

a'ristocrat *(n.)* one of the ruling nobles, மேற்குடியாளர், பிரபு; also *(adj.)*.

arith'metic *(n.)* the science of dealing with numbers and counting, எண் கணக்கு; **arithmet'ical** *(adj.)*.

arm *(n.)* the part of the body between the shoulder and the hand, anything projecting from something larger, any weapon, மேற்கை, கிளை, ஆயுதம்.

armad'a *(n.)* a fleet of warships or warplanes, கப்பற்படைத் தொகுதி, வமானப்படைத் தொகுதி.

arm'ament *(n.)* all the military forces and equipment of a nation, போர்த் தளவாடங்கள்.

arma'ture *(n.)* armour, part of a dynamo, கவசம், மின்னாக்கிப் பகுதி, கவரகம்.

arm'istice *(n.)* a temporary stopping of warfare by mutual agreement, தற்காலிகப் போர் நிறுத்தம்.

arm'let *(n.)* an ornamental band for the upper arm, a small branch of river or sea, மேற்கை அணி, கடகம், குடாக் கடல், கிளை நதி.

arm'our *(n.)* a metal suit worn as a protection against injury while fighting, போர்க்கவசம்.

arm'oury *(n.)* the place where weapons are manufactured or kept, ஆயுதக் கிடங்கு.

arm'pit *(n.)* the space under the arm at the shoulder, அக்குள்.

arms *(n.pl.)* weapons, போர்க் கருவிகள்.

arm'y *(n.)* a military - unit, a body of persons organized for some specific reasons, படை, சேனை.

arom'a *(n.)* sweet smell, fragrance, நறுமணம்; **aroma'tic** *(adj.)*.

arouse[1] *(n.)* past tense of arise.

arouse[2] *(v.t.)* to awaken, stimulate, எழுப்பு, தூண்டு; also *(n.)*.

around' *(adv. & prep.)* in a circle, on all sides, here and there, வட்டமாக, எல்லாப் பக்கங்களிலும், இங்கு மங்குமாக.

a'rrack *(n.)* an alcoholic drink, சாராயம்.

arraign' *(v.t.)* to accuse, குற்றம் சாட்டு, பழிசுமத்து; **arraign'ment** *(n.)*.

arrange' *(v.t. & i.)* to put in some sort of order, to plan, to settle, வரிசைப் படுத்து, திட்டமிடு, ஒழுங்குபடுத்து; **arrange'ment** *(n.)*.

a'rrant *(adj.)* very bad, மிகவும் மோச மான.

a'rras *(n.)* a wall hanging of tapestry, திரைச்சீலை, ஓவியத்திரை.

array' *(n.)* regular order, garments, அணிவகுப்பு, வரிசை, ஆடை; also *(v.t.)*.

arrears' *(n.pl.)* that which remains unpaid or undone, that which is behind, நிலுவை, பிற்பட்டிருத்தல்.

arrest' *(v.t.)* to capture by the power of law, to stop, கைது செய், தடுத்து நிறுத்து; also *(n.)*; **arrest'ive** *(adj.)*.

arriv'al *(n.)* the act of arriving, வரு தல், வந்து சேருகை.

arrive' *(v.i.)* come to the end of the journey, to reach at any place, வந்து சேர், சென்றடை.

a'rrogance *(n.)* the quality of having self-importance, அகந்தை, இறு மாப்பு, திமிர்.

a'rrogant *(adj.)* proud, taking too much importance for oneself, செருக்கான, தன்முனைப்பான; **a'rrogance** *(n.)*.
a'rrogate *(v.t.)* to demand unduly, செருக்கு, தகாத உரிமை பேசு; **arroga'tion** *(n.)*.
a'rrow *(n.)* a kind of pointed weapon, a sign used to indicate direction or position, அம்பு, அம்புக்குறி.
a'rrowroot *(n.)* roots of a kind of plant from which a starchy food is made, கூவைக்கிழங்கு.
ars'enal *(n.)* a place for manufacturing or storing weapons, படைவீடு.
arsen'ic *(n.)* a very poisonous chemical element, அரிதார நஞ்சு.
ars'on *(n.)* the crime of purposely setting fire to anything to get money (from insurance), வேண்டுமென்றே தீ வைத்தல்.
art *(n.)* the study of painting and sculpture, aptitude, products of creative work, கலை, கலைத்திறன், கலைப்படைப்பு ; **art'ful** *(adj.)*.
art'ery *(n.)* a tube that carries blood from the heart to all parts of the body, தமனி; **arte'rial** *(adj.)*.
arth'ritis *(n.)* inflammation of the joints, மூட்டுவலி, மூட்டு அழற்சி.
arti'cle *(n.)* an object, a particular commodity, a complete piece of writing in a newspaper, magazine etc., any one of the words **a**, **an**, or **the** used as objective in English, ஒரு பொருள், கட்டுரை, சட்ட உறுப்பு, பொதுச் சுட்டுச்சொல்.
arti'culate *(v.t. & i.)* to pronounce clearly, to put together by joints, to be jointed, தெளிவாகப் பேசு, மூட்டுகளால் இணை, இணைந்து சேர்.
articula'tion *(n.)* the way in which a person speaks or pronounces, a putting or joining together, தெளிவான பேச்சு அல்லது உச்சரிப்பு, இணைப்பு.
art'ifice *(n.)* a device, trick, fineness, கருவி, சிறு சூழ்ச்சி, கைவேலைப்பாடு; **artif'icer** *(n.)*.
artifi'cial *(adj.)* not natural, not real, செயற்கையான, போலியான.
artill'ery *(n.)* large guns, the branch of the army that manages the gun, the study that deals with the use and management of guns, பீரங்கி, பீரங்கிப்படை, பீரங்கிப் பயன்பாடு பற்றிய அறிவு.
artisan' *(n.)* a craftsman, a skilled worker, கைவினைக் கலைஞன், சிறுகருவித் தொழிலாளி.
art'ist *(n.)* a person who is skilled at some particular thing, one who is skilled in any of the fine arts, நுண் கலைஞர்; **artis'tic** *(adj.)*.
asafe'tida, asafoe'tida *(n.)* a resinous gum, பெருங்காயம்.
asbes'tos *(n.)* a thread like fire - proof material, கல்நார்.
ascend' *(v.i. & t.)* to rise or slope upwards, to move upward, ஏறு, மேலே செல், முன்னோக்கிச் செல்.
ascen'dency *(n.)* governing power, superiority, மேலாட்சி, மேலாதிக்கம்.
ascent' *(n.)* the act of climbing, shape upwards, advancement as in rank, popularity etc., மேலே ஏறுதல், மேட்டுப் பாதை, முன்னேற்றம், உயர்வு.
ascertain' *(v.t.)* to find out, determine, கண்டுபிடி, அறுதியிடு, உறுதிப்படுத்து; **ascertain'able** *(adj.)*.
asceti'c *(n.)* one who avoids pleasure or comfort for religious purposes, துறவி; also *(adj.)*; **ascet'icism** *(n.)*.
ascribe' *(v.t.)* to attribute, assign, காரணமாகக் குறிப்பிடு, சாட்டிக் கூறு; **ascrip'tion** *(n.)*.
ash *(n.)* a hard-wood tree, powdery remains of anything burnt, அசோக மரம், சாம்பல்.
ashamed' *(adj.)* humiliated, feeling shame, reluctant, தலைகுனிவான, வெட்கமுற்ற.

ash'es *(n.pl.)* the remains of a human being after cremation, the unburned particles and remains after a thing has been burnt, சுடலைச் சாம்பல், சாம்பல், நீறு.

ash'lair, ash'ler *(n.)* a building stone shaped ready for use, மேவு கல் அல்லது கட்டுமானக் கல்.

ashore' *(adv. & adj.)* on or to the shore, on or to the land, கரையில், தரை தட்டி.

aside'[1] *(adv.)* away, apart, on or to one side, விலகி, ஒரு பக்கமாய்.

aside'[2] *(n.)* words spoken aside, விலகிநின்று பேசும் மொழி.

as'inine *(adj.)* like an ass, unintelligent, கழுதைபோன்ற, முட்டாளான.

ask *(v.t & i.)* to put a question, to make a request, வினவு, வேண்டு.

askance', askant' *(adv.)* obliquely, with a side glance, with suspicion, பக்கவாட்டில், சாய்வாக, ஒருக் கணித்து, சாடையாக.

askene' *(adv.)* not straight, to one side, ஒரு பக்கமாகச் சாய்ந்து.

asleep' *(adj. & adv.)* sleeping, numb, in a sleeping state, உறங்குகிற, மரத்துப் போன, உறங்கிய நிலையில்.

asp *(n.)* a small poisonous snake, a kind of tree, விரியன் பாம்பு வகை, ஒரு வகை மரம்.

as'pect *(n.)* view, glance, appearance, நோக்கு, பார்வை, தோற்றம்.

asperity *(n.)* roughness, sharpness, harshness, முரட்டுத்தன்மை, சிடுசிடுப்பு, கடுமை.

asper'sion *(n.)* calumny, slander, false rumour, பழிதூற்றுதல், அவதூறு.

as'phalt *(n.)* a mixture containing tar, ஒருவகை நிலக்கீல், கருங்காரை.

asphyx'ia *(n.)* suffocation, மூச்சுத் திணறல்.

as'pirant *(n.)* one who seeks with eagerness, one who tries hard, விழைபவர், கடுமுயற்சியாளர்.

aspira'tion *(n.)* a breath, ambition, மூச்சு, பேரவா.

aspire' *(v.i.)* to seek eagerly, to aim at high things, to try very hard to reach, அடைய விரும்பு, சிறந்தனவற்றை அடைவதை நோக்கமாகக் கொள், பெருமுயற்சி செய்.

ass *(n.)* a donkey, a stupid person, கழுதை, முட்டாள்.

assail' *(v.t.)* to attack suddenly, திடீரெனத் தாக்கு, முற்றுகையிடு.

assail'ant *(n.)* one who attacks, தாக்குபவர், எதிரி.

assass'in *(n.)* a murderer, who attacks without warning, கொலையாளி கொலைகாரன்.

assassina'tion *(n.)* a murder for political reasons, படுகொலை; **assass'inate** *(v.t.)*.

assault' *(n.)* severe attack, கடுமையான தாக்குதல்; also *(v.t. & i.)*.

assay' *(n.)* testing the purity and quality of metals, உலோகங்களின் மாற்று அறிதல், மதிப்பீடு, நோட்டம்; also *(v.t.)*.

assem'blage *(n.)* a collection, the act of fitting together (as parts of a machine), the result of such fitting, திரட்டுதல், கூட்டம், ஒருங்கிணைத்தல், தொகுதி.

assem'ble *(v.t. & i.)* collect, to fit together the parts of a machine, to meet together, to convene, திரட்டு, எந்திரத்தின் உறுப்புகளை ஒருங்கிணை, ஒன்று கூடு, ஒருங்கிணை.

assem'bly *(n.)* a meeting convened by authority for the discussion of political affairs, a meeting of persons, fitting together of parts, மக்களவை, கூட்டம், ஒருங்கிணைத்தல்.

assent' *(n.)* a written or oral statement, permission, concurrence, உடன்பாடு, அமைதி, இசைவு; also *(v.i.)*.

assert' *(v.t.)* to declare positively, to insist upon a right etc., உறுதியாக அறிவி, உரிமை கோரு, வற்புறுத்து; **asser'tion** *(n.)*; **assert'ive** *(adj.)*.

assess′ *(v.t.)* to fix an amount to be paid as tax, to decide the value, power etc., வரி மதிப்பீடு செய், விலை மதிப்பிடு, மதிப்பிடு.

assess′ment *(n.)* an official valuation of property for the purpose of taxation, மதிப்பீடு, வரி மதிப்பீடு; **assess′or** *(n.)*.

ass′et *(n.)* anything useful or valuable, an advantage, பயனுடைமை, மதிப்புடைமை.

assets *(n.pl.)* anything owned, சொத்து.

assev′er, assev′erate *(v.t.)* to declare solemnly, ஆணையிட்டு உறுதி கூறு; **assevera′tion** *(n.)*.

assidu′ity *(n.)* concentration in what one is doing, கடமையில் கருத்தூன்றுதல்; **assid′uous** *(adj.)*.

assign′ *(v.t & i.)* to give to someone as his share or duty, to appoint for a particular purpose, ஒதுக்கீடு செய், குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பணி ஒதுக்கீடு செய்.

assignee′ *(n.)* one to whom a right is legally transferred, பிரதிநிதி.

assign′ment *(n.)* transferring the right, a deed authorizing such transfer, duty assigned to someone, anything allotted, உடமை மாற்று, உடமை உரிமை ஆவணம், ஒதுக்கீடு செய்தல், ஒதுக்கீடு, பகுப்பீடு.

assim′ilate *(v.t. & i.)* to digest, to make alive, to become similar, செரிமானம் செய், ஒன்றுபோலாக்கு, தன்னினமாக்கு; **assimila′tion** *(n.)*.

assist′ *(v.t.)* to help, உதவி செய், கைகொடு; also *(n.)*.

assist′ance *(n.)* help, aid, உதவி.

assist′ant *(n.)* one who assists, உதவியாளர்.

asso′ciate *(v.t. & i.)* to join or connect in the mind, combine, unite, தொடர்புபடுத்தி எண்ணு, சேர், கூடு.

asso′ciate *(n.)* a member of an institute etc., without full status, companion, partner, ஆய்வு உதவியாளர், உடன்பணியாற்றுபவர், பங்காளி, கூட்டாளி; also *(adj.)*.

associa′tion *(n.)* union, partnership, connection of persons, சங்கம், கூட்டு, தொடர்பு.

assort′ *(v.t. & i.)* arrange in sorts, to be of the same sort, to separate into classes, வகைப்படுத்து, இனம் பிரி, வகைப்படு, வகை பிரி; **assort′ed** *(adj.)*, **assort′ment** *(n.)*.

assuage *(v.t.)* to sooth, diminish, வலியை மட்டுப்படுத்து, தணி; **assua′sive** *(adj.)*.

assume′ *(v.t. & i.)* to take for granted, to accept, to be pretentious, மேற்கொள், கருதிக்கொள், பாவனை செய்; **assumed′, assum′ing** *(adjs.)*.

assump′tion *(n.)* the act of assuming, a postulate, கருதுதல், கருதுகோள்; **assump′tive** *(adj.)*.

assur′ance *(n.)* a guarantee, confidence, வாக்குறுதி, காப்பீடு, நம்பிக்கை.

assure′ *(v.t.)* to state positively, to give confidence, வாக்குறுதி அளி, நம்பிக்கையூட்டு; **assured** *(adj.)*.

asterisk *(n.)* a star shaped mark used as a reference or distinction, உடுக்குறி; also *(v.t.)*.

astern′ *(adv.)* behind a ship, backward, கப்பலின் பின்புறமாக, பின்னால்.

asth′ma *(n.)* a disease which makes breathing difficult, மூச்சிழுப்பு நோய், ஈளை.

astir′ *(adj. & adv.)* in the move, active, out of bed, இயங்குகின்ற, சுறுசுறுப்பான, படுக்கையிலிருந்து எழுந்து.

aston′ish *(v.t.)* to strike with sudden surprise, terror etc., மலைப்பு ஏற்படுத்து, திகைக்க வை.

aston′ishment *(n.)* sudden surprise, amazement, வியப்பு, மலைப்பு, திகைப்பு; **astonishing′** *(adj.)*.

astound′ *(v.t.)* to strike with sudden surprise, to amaze, திகைக்க வை, அதிர்ச்சியூட்டு; **astound′ing** *(adj.)*.

as′tral *(adj.)* pertaining to stars, நட்சத்திரங்களுக்குரிய.

astray′ *(adv.)* away from the right path, நெறிதவறி, பாதை மாறி.

astride′ *(adv.)* with legs on each side of, with legs stretched far apart, பக்கத்திற்கொரு கால் போட்டு, கால்களை விரித்து.

astrin′gent *(adj.)* sharp, contracting, துவர்ப்பான, இறுக்குகிற; also *(n.)*.

astrol′oger *(n.)* one who foretells the events by the positions and aspects of star, சோதிடர்.

astrol′ogy *(n.)* the study of the relative position of the planets in order to tell the future, சோதிடம்.

astro′naut *(n.)* a person trained to go in rockets, விண்வெளி வீரர்.

astron′omer *(n.)* an expert in the science of heavenly bodies, வானியல் அறிஞர்.

astrono′my *(n.)* the science of heavenly bodies like stars, planets etc., வானியல்.

astute′ *(adj.)* shrewd, cunning, கூரறிவுடைய, தந்திரமான.

asun′der *(adv.)* a part into pieces, துண்டாக.

asyl′um *(n.)* a place for the protection of destitutes or defective persons, புகலிடம், சரணாலயம்

ath′eism *(n.)* the belief that there is no God, நாத்திகம்; **ath′eist** *(n.)*, நாத்திகன், நாத்திகவாதி.

athena′eum *(n.)* a school of law, literature etc., science club, a library or reading room, இலக்கியப் பள்ளி, அறிவியல் கழகம், நூலகம், படிப்பகம்.

ath′lete *(n.)* a person who is good at sports, விளையாட்டு வீரர், உடற்பயிற்சி வல்லுநர்.

athlet′ics *(n.)* sports, games, physical exercises etc., விளையாட்டுப் போட்டி, உடற்பயிற்சி.

athwart′ *(prep. & adv.)* across, sidewise, wrongly, குறுக்கே, ஒரு பக்கமாக, ஏறுமாறாக.

at′las[1] *(n.)* a book of maps, நிலப்பட ஏடு.

V.3.

at′las[2] *(n.)* the top vertebra of the neck, பிடர் எலும்பு.

at′mosphere *(n.)* the air surrounding the earth, any surrounding, வளி மண்டலம், சூழல்; **atmosphe′ric** *(adj.)*.

atoll′ *(n.)* a ring - shaped coral island, பவழத் திட்டு.

at′om *(n.)* the tiniest possible part of an element, அணு.

atone′ *(v.i.)* to make amends for wrong doing, குற்ற ஈடு செய், கழுவாய் தேடு; **atone′ment** *(n.)*.

atro′cious *(adj.)* evil, extremely cruel, மிகக் கொடிய, அடாத, கொடூரமான.

atro′city *(n.)* any wicked act, கொடூரம், அடாத செயல்.

atro′phy *(n.)* a wasting away of the body and part of it because of insufficient nourishment, சத்துணவின்றி உடல் நலிதல்.

attach′ *(v.t. & i.)* to correct, fix, to belong, இணை, பொருத்து, ஒட்டவை, உரித்தாக்கு.

attache′ *(n.)* a junior ambassador in an embassy, தூதரகத்தைச் சார்ந்த இளநிலை அலுவலர்.

attach′ment *(n.)* the act of attaching, anything attached, close affection, பிணைத்தல், பிணைப்பு, பாசப் பிணைப்பு; **attached′** *(adj.)*.

attack′ *(v.t. & i.)* to begin a fight, to make a sudden attempt, to hurt somebody, தாக்கு, எதிர்ப்புத் தெரிவி; also *(n.)*.

attain′ *(v.i. & t.)* to gain through efforts, to succeed in achieving, முயன்று பெறு, நிறைவேற்று; **attain′able** *(adj.)*; **attain′ment** *(n.)*.

attain′dar, attain′der *(n.)* a punishment through which one experiences the loss of civil rights, குடியுரிமை இழப்பு; **attaint′** *(v.t.)*.

attain′ments *(n.pl.)* acquired skill, knowledge, ஈட்டப்பட்ட ஆற்றல், கூராக்கப்பட்ட அறிவு.

attempt' *(v.t.)* to try, to venture upon, முயற்சி செய்; also *(n.)*.
attend' *(v.t. & i.)* to accompany, to wait on, to pay attention, to be present, உடன்செல், உடனிரு, கவனம் செலுத்து, வருகை செய்.
atten'dance *(n.)* number of persons present, the act of attending, presence, வந்தவர் எண்ணிக்கை, வருதல், உடன் செல்லுதல், கவனித்தல், வருகை.
atten'dant *(adj.)* accompanying, serving, உடன் செல்லும், பணி செய்யும்; also *(n.)*.
atten''tion *(n.)* concentration of the mind, politeness, care, கவனம், மரியாதை, காப்பு; **attent'ive** *(adj.)*.
atten'uate *(v.t. & i.)* to make or become thin, to dilute, to lessen, மெலிதாகச் செய், தளர்த்து, குறை; also *(adj.)*.
attest' *(v.t.)* to certify, to support the truth of, சான்றளி, சான்றொப்பமிடு.
attesta'tion *(n.)* an official declaration in support of a fact, அறிசான்று.
att'ic *(n.)* a room or rooms in the highest storey of a building, மேன் மாடக் கூடம்.
attire' *(n.)* dress, உடை; also *(v.t.)*.
att'itude *(n.)* a way of thinking, acting or feeling etc., மனப்பான்மை, மனப் போக்கு, மனப்பாங்கு.
attorn'ey *(n.)* a lawyer, one who is legally appointed by another to act for him, வழக்கறிஞர், வழக்குரைஞர், மாற்றுரிமையர்.
attract' *(v.t. & i.)* to get the attention of, to cause to come towards, கவர், ஈர்க்கவை, மயக்கு; **attrac'tion** *(n.)*.
attrac'tive *(adj.)* pleasing, good-looking, அழகான, கவர்ச்சியான.
attrib'ute *(v.t.)* assign, to consider as belonging to, கற்பித்துக் கூறு, உடமையாக்கிக் கொள்; also *(n.)*; **attrib'utable** *(adj.)*; **attribu'tion** *(n.)*.
attri'tion *(n.)* abrasion, any weakening in due course, உராய்வு, தேய்வு.
auction *(n.)* a public sale of items one by one to the person who offers the highest price, ஏலம், also *(v.t.)*; **auc'tioneer** *(n.)*.
auda'cious *(adj.)* bold, daring, fearless, துணிச்சலான, அச்சமற்ற, துடுக்கான.
auda'city *(n.)* boldness, துணிவு.
audi'ble *(adj.)* able to be heard, காதில் விழத்தக்க; **audibil'ity** *(n.)*.
audi'ence *(n.)* the persons gathered for watching or listening to a performance, கேட்போர் கூட்டம்.
aud'it *(n.)* an official examination of financial accounts, a final statement of accounts, வரவு செலவுத் தணிக்கை, தணிக்கை அறிக்கை; also *(v.t. & i.)*; **aud'itor** *(n)*.
audi'tion *(n.)* a test given to a singer, actor, etc., the sense of hearing, பாடகர் அல்லது நடிகர் தேர்வு, கேட்டாய்தல்; also *(v.t. & i.)*.
auditor'ium *(n.)* a building or hall where the audience sit, மன்றம், மன்றக் கூடம்.
aug'er *(n.)* a tool for boring holes in wood, துரப்பணம்.
aught' *(adv.)* in any manner, எப்படியாகிலும்; also *(n.)*.
augment[1] *(v.t. & i.)* to make bigger, increase, பெரிதாக்கு, மேலும் வளர், **augmenta'tion** *(n.)*.
augment[2] *(n.)* a prefixed vowel, சாரியை.
aug'ur *(n.)* one who foretells by watching the action of birds, celestial bodies etc., பறவைப் பலன், விண்மீன் பலன்; also *(v.t. & i.)*.
aug'ury *(n.)* omen, சகுனம்.
august' *(adj.)* majestic, respectable, கம்பீரமான, பெருமைக்குரிய.
Aug'ust *(n.)* Eighth month of the English year, ஆங்கில ஆண்டின் எட்டாவது மாதம்.

aunt *(n.)* father's or mother's sister, father's brother's wife, mother's brother's wife, தந்தை அல்லது தாயின் சகோதரி (அத்தை, சித்தி), தந்தையின் சகோதரன் மனைவி (பெரியம்மா, சின்னம்மா), தாய் மாமன் மனைவி (மாமி).

aur'a *(n.)* an assumed emanation, ஒளி வட்டம்.

aur'eola *(n.)* circle of light depicted round the head, தலைசூழ் ஒளி வட்டம்.

aurif'erous *(adj.)* producing or containing gold, பொன் விளைகிற, பொன்னையுடைய.

aur'ist *(n.)* a specialist in disorders of the ear, காது நோய் வல்லுநர்.

auror'a *(n.)* the dawn, luminous bands of light seen in the sky near the north / south poles, வைகறை, முனை ஒளி.

aurum *(n.)* gold, பொன்.

aus'pice *(n.)* good signs got from watching the birds, புட் குறி, நன்னிமித்தம், நல்ல சகுனம்.

auspi'cious *(adj.)* prosperous, encouraging, lucky, வளமான, உகந்த, மங்கலமான, நற்சகுனமான.

austere' *(adj.)* strict, simple and plain, கண்டிப்பான, எளிமையான, ஆடம்பரமற்ற; **auste'rity** *(n.)*.

authen'tic *(adj.)* real, having genuine authority, நம்பத்தகுந்த, அதிகார பூர்வமான; **authenti'city** *(n.)*; **authen'ticate** *(v.t.)*.

auth'or *(n.)* the writer of a book, play, article, poem etc., the beginner of anything, நூலாசிரியர், கட்டுரை ஆசிரியர், எழுத்தாளர், படைப்பாளி, முன்னோடி.

autho'rity *(n.)* power or right to do something, a group of persons acting together, an expert, அதிகாரபூர்வமான உரிமை, அதிகாரக்குழு, வல்லுநர்; **authorita'tive** *(adj.)*.

autobiog'raphy *(n.)* writing the story of one's own life, தன்வரலாறு.

autoc'racy *(n.)* absolute power over others, dictatorship, ஏகாதிபத்தியம், சர்வாதிகாரம், தன் - விருப்பு ஆட்சி; **aut'ocrat** *(n.)*; **autocrat'ic** *(adj.)*.

auto'graph *(n.)* a signature or letter in one's own handwriting, an original manuscript, தற்கையெழுத்து, மூலப் படி, கையெழுத்துப்படி; also *(adj.)* & *(v.t.)*.

automat'ic *(adj.)* self-moving, self-acting, mechanical, தானியங்கு, தானே செயல்படும், எந்திரமயமான; also *(n.)*; **automa'tion** *(n.)*.

automobile' *(n.)* a motor car, பொறி வண்டி.

auton'omous *(adj.)* having the right of self-government, தன்னாட்சி உரிமையுடைய, தன்னுரிமை பெற்ற.

auton'omy *(n.)* the right of a country or institution to govern itself, தன்னாட்சி உரிமை, தன்னுரிமை.

autop'sia, autop'sy *(n.)* a medical examination of a dead body to determine the cause of death, பிணப் பரிசோதனை.

aut'umn *(n.)* the seasons of the year when leaves change colour and fall, இலையுதிர் காலம்; **autum'nal** *(adj.)*.

auxil'iary *(adj.)* assisting, additional, உதவியான, கூடுதலான; also *(n.)*.

avail' *(v.t. & i.)* to be of use or value, to take advantage of, பயனாகு, உதவியாயிரு, பயன்படுத்திக் கொள்; also *(n.)*.

avail'able *(adj.)* within one's reach, usable, கிடைக்கக்கூடிய, பயன்படுத்தக்கூடிய; **avail'ability** *(n.)*.

av'alanche *(n.)* a fall of snow and ice sliding down from a mountain, பனிப்பாறைச் சரிவு.

av'arice *(n.)* greediness, பேராசை; **avari'cious** *(adj.)*.

avenge' *(v.i. & t.)* to punish someone for the wrong he has done, பழி வாங்கு; **aveng'er** *(n.)*.

av'enue *(n.)* a wide passage, a road often planted on each side with trees, அகன்ற பாதை, இரு மருங்கும் மரங்களடர்ந்த சாலை.

aver' *(v.t.)* to assert, to declare to be true, உறுதி செய், உண்மையென அறிவி; **aver'ment** *(n.)*.

av'erage *(n.)* the numerical result obtained by adding several amounts together and dividing the total by the number of amounts, சராசரி; also *(v.i.)* & *(adj.)*.

aver'sion *(n.)* a feeling of dislike, reluctancy, வெறுப்பு, தயக்கம்; **averse'** *(adj.)*; **avers'ely** *(adv.)*.

avert' *(v.t.)* to turn from, to prevent, திசை திருப்பு, தடுத்து விடு.

av'iary *(n.)* a place for breeding, rearing and keeping of birds, பறவைப் பண்ணை.

avia'tion *(n.)* the science of manufacturing and operating air planes heavier than air craft, வானூர்தி இயக்கவியல்.

av'iator *(n.)* pilot, வானூர்தி ஓட்டி.

avid'ity *(n.)* great eagerness, பேராவல்; **av'id** *(adj.)*.

avoca'tion *(n.)* a side business done in addition to one's own regular work, துணைத்தொழில்.

avoid' *(v.t.)* to keep away from, to try to escape from, தவிர், விலக்கு, தட்டிக் கழி; **avoid'ance** *(n.)*, **avoid'able** *(adj.)*.

avouch' *(v.t. & i.)* to say firmly, to establish, to guarantee, உறுதியாகக் கூறு, நிறுவு, வாக்குறுதி அளி.

avow' *(v.t.)* to state openly, to admit, ஒப்புதல் கூறு, குற்றத்தை ஏற்றுக் கொள்; **avow'ed** *(adj.)*.

await' *(v.t. & i.)* to wait or look for, to expect, to be ready, காத்திரு, தயாராக இரு.

awake' *(v.t. & i.)* stimulate, rouse from sleep, தூண்டு, தூக்கத்தினின்றும் விழித்தெழு, எழுச்சியூட்டு.

awaken'ing *(n.)* the act of becoming aware, விழிப்புணர்ச்சி, எழுச்சி; also *(adj.)*.

award' *(v.t.)* to award, adjudge, பரிசளி, தீர்ப்புக் கூறு; also *(n.)*, பரிசளிப்பு.

aware' *(adj.)* knowing off, sensible, முன்னுணர்ந்த, எச்சரிக்கையான.

awful *(adj.)* dreadful, அச்சம் தருகிற.

awhile' *(adv.)* for a short time, சிறிது காலம்.

awk'ward *(adj.)* clumsy, embarrassing, uncomfortable, சீர்கேடான, தர்மசங்கடமான, மனக்குழப்பமான; **awk'wardness** *(n.)*.

awl *(n.)* a small pointed tool for making holes in leather, குத்தூசி.

ax, axe *(n.)* a tool for cutting or chopping wood, கோடரி.

ax'iom *(n.)* universally accepted principle, statement etc., an established principle, அடிப்படைக் கருத்து, வெளிப்படை உண்மை, நிறுவப்பட்ட கொள்கை.

ax'is *(n.)* real or imaginary line on which a body rotates, அச்சு; **axial** *(adj.)*.

a'xle *(n.)* the pin or rod on which the wheel rotates, அச்சாணி, இருசு.

ay'ah *(n.)* maid servant, பணிப் பெண்.

a'zure *(adj.)* sky-blue, நீலவான வண்ண.

B

bab'ble *(v.i. & t.)* to talk foolishly, to talk indistinctly, to tell secrets, பிதற்று, அரைகுறையாகப் பேசு, (இரகசியத்தை) உளறு; also *(n.)*; **bab'bler** *(n.)*.

babe, baby *(n.)* an infant, a young child, குழந்தை.

bab'el *(n.)* a confused mixture of sounds, noise and confusion, வெற்றாரவாரம், குழப்பம்.

baboon *(n.)* a kind of dog-faced ape, ஒருவகைப் பெரிய குரங்கு.
bab'yhood *(n.)* infancy, குழந்தைப் பருவம், மழலைப் பருவம்.
baby (see babe).
baby sitter *(n.)* a person who looks after the child while its parents are out, பெற்றோர் வெளியே சென்றிருக்கும் பொழுது குழந்தையைக் கவனிக்கும் ஆயா.
bach'elor *(n.)* an unmarried man; one who has received the first University degree, திருமணமாகாத ஆடவர், இளங்கலைப் பட்டதாரி; also *(adj.)*.
back *(n.)* the part of the body opposite to the front, the hinder part of anything, முதுகு, பின்பக்கம்; also *(adj.)*, *(adv.)*, *(v.t. & i.)*.
back'bite *(v.t. & i.)* to speak evil of a person in his absence, புறங்கூறு, புறணி பேசு; also *(n.)*; **back'biting, back'biter** *(ns.)*.
back'bone *(n.)* the vertebral column, firmness and strength of character, முதுகெலும்பு, பண்புறுதி, ஆதாரம்; **back'boned** *(adj.)*.
back'ground *(n.)* the distant part of a landscape, part of a picture behind the principal figures of it, environment, பின்னணி, சூழல்.
back'ward *(adj. & adv.)* keeping back, unwilling, dull, slow, towards the back, பிற்பட்ட, பின்தங்கியுள்ள, விருப்பமற்ற, மந்தமான, தாமதமான, பின்புறமாக; **back'wardness** *(n.)*.
back'water *(n.)* a stretch of water near the sea or river, where it does not move very much, காயல், உப்பங் கழி; also *(adj.)*.
back'yard *(n.)* an open enclosed space at the back of the house etc., புழக் கடை, கொல்லைப்புறம்.
ba'con *(n.)* salted and dried flesh of pigs, பதப்படுத்தப்பட்ட பன்றி இறைச்சி; **bac'ony** *(adj.)*.
bacter'ium *(n.pl.)* a microscopic organism, ஒருவகை நுண்ணுயிரி; **bacter'ial** *(adj.)*. pl. **bacteria.**

bad *(adj.)* not good, கெட்ட, also *(n.)*.
badge *(n.)* distinctive mark or sign showing rank, occupation, membership etc., அடையாளச் சின்னம், சிறப்புச் சின்னம்.
badg'er[1] *(n.)* a kind of burrowing animal, வளைகரடி.
badg'er[2] *(n.)* a hawker, அங்காடி வணிகர்.
badg'er[3] *(v.t.)* to annoy, pester, தொந்தரவு செய், துன்புறுத்து.
bad'minton *(n.)* an outdoor game played with shuttlecock and rockets, பூப்பந்தாட்டம்.
baf'fle *(v.t. & i.)* to defeat, to make useless, bar progress of, confuse, தோற்கடி, பயனற்றதாக்கு, முன்னேற்றத்தைத் தடை செய், முட்டுக்கட்டை போடு, திணறவை, குழப்பு.
baf'fle *(n.)* an obstruction device to hold back or to turn aside the flow of fluid, பாய்மத் தடுப்பு.
bag[1] *(n.)* a sac or pouch, பை, also *(v.i. & t.)*.
bag[2] *(n.)* cow's udder, பசுவின் மடி.
bag[3] *(v.i. & t.)* budge, to capture or kill in hunting, வீங்கு, வேட்டையாடிப் பிடி.
bag[4] *(v.t.)* cut the corn with a hook, தானியத்தை அறுவடை செய்.
baga'telle[1] *(n.)* a board game like billiards, 'பில்லியர்டு' போன்ற ஒரு வகை மேடைக்கோல் பந்தாட்டம்.
baga'telle[2] *(n.)* மிகமிகச் சிறிய தொகை, சிறுபாட்டு.
bagg'age *(n.)* luggage, பயணமூட்டை.
bag'pipe *(n.)* a musical wind instrument, ஒருவகை இசைக்கருவி.
bail[1] *(n.)* one who gets an untried prisoner from custody by becoming surety for his appearance in the court, பிணை, ஜாமீன்; also *(v.t.)*, **bail'ment** *(n.)*.
bail[2] *(n.)* partition bar separating horses in an open stable, one of the cross pieces over stumps in cricket, குதிரைலாயத் தடுப்புக் கட்டை, கிரிக்கெட் முளைக் கட்டை.

bail³ *(n.)* half-hoop shaped support to prevent the wagon from tilting, hoop handle, வண்டி குடைசாயாமல் தடுக்கும் அரைவளையம், வளைபிடி.

bail⁴, **bale** *(v.t. & i.)* throw water out of boat, கப்பலுக்குள்ளிருந்து நீரை இறைத்துவிடு.

bail'ey *(n.)* the outer wall or the outer court designed for defensive purpose, கோட்டைப் பாதுகாப்புச் சுவர், இடைவெளி முற்றம்.

bail'iff *(n.)* a sheriff's deputy who serves warrants, writs etc., an estate or farm manager, அமீனா, நிலக் கிழாரின் கண்காணி.

bait *(n.)* temptation, food on a hook for catching fish etc., halt in journey for rest, luncheon taken on a journey, அவாவூட்டும் பொருள், தூண்டில் இரை, கண்ணி, இளைப்பாறுதல், இடைத்தங்கல் உணவு; also *(v.t. & i.)*.

baize *(n.)* a coarse woolen cloth often dyed green, முரட்டுக் கம்பளி.

bake *(v.t. & i.)* to cook by the heat of the sun or of fire, தணலில் அல்லது வெயிலில் வாட்டு, வறட்டு; **baking, ba'ker** *(ns.)*.

bak'ery *(n.)* a place used for baking, a place where bread, cakes etc., are sold, ரொட்டி சுடும் இடம், ரொட்டிக் கடை.

bal'ance *(n.)* a weighing apparatus, equilibrium, seventh sign of zodiac, libra, remainder, the thing left behind, தராசு, துலாக்கோல், சம நிலை, துலா இராசி, மிச்சம், சீரை.

bal'ance *(v.t. & i.)* equalise, neutralise, be equal, சமன்படுத்து, சீர்தூக்கிப் பார், சமமாயிரு.

bal'cony *(n.)* a platform built out from the wall of a building, an upper floor in a theatre, மாடி முகப்பு, மாடி யிருக்கை; **bal'conied** *(adj.)*.

bald' *(adj.)* without hair, வழுக்கை யான; **bald'ness** *(n.)*.

balder'dash *(n.)* nonsense, foul language, அறிவற்ற பேச்சு, கீழ்த்தரமான பேச்சு, இழிமொழி.

bald'ric *(n.)* a cross belt for suspending sword, dagger etc., வாள், கத்தி முதலியவற்றைத் தொங்கவிடப் பயன்படும் தோள் வார்ப்பட்டை.

bale¹ *(n.)* a large package of compressed material, பெருங்கட்டு.

bale² *(n.)* misery, evil, தீமை, அழிவு, கேடு; **bale'ful** *(adj.)*.

bale'³ *(v.t. & i.)* see bail⁴.

bale'fire *(n.)* an alarm fire, சொக்கப் பனை.

balk¹ *(n.)* land left unploughed, தரிசு நிலம்.

balk² *(n.)* hindrance, a blunder, தடை, தவறு; also *(v.t. & i.)*.

balk'³ *(n.)* a cross beam in a roof, குறுக்கு விட்டம்.

balk⁴ *(v.i.)* to indicate by signs from the shore to fishermen at sea about the direction of the fishes, மீனிருக்கும் பகுதியைக் கடலில் இருப் போருக்குச் சைகை மூலம் உணர்த்து.

ball¹ *(n.)* anything round or roughly round in shape, பந்து; also *(v.t. & i.)*.

ball² *(n.)* a formal social dance, ஒருவகைக் குழு நடனம்.

ball'ad *(n.)* a song that tells a story in short stanzas, கதைப் பாடல்.

ball'ast *(n.)* something heavy like stone placed in a ship etc., to give balance, gravel, firmness, கப்பல் எடைப் பாரம், சாணைக்கல், கப்பிக்கல், உறுதிப்பண்பு; also *(v.t.)*.

ball'et *(n.)* a kind of group dance, பாலே நடனம்.

ball'ot *(n.)* a way of secret voting by putting a ticket or paper into a box, மறைமுக வாக்களிப்பு ; also *(v.i.)*.

balm' *(n.)* an ointment used in healing or soothing pain, நோவகற்றும் களிம்பு.

bal'sam *(n.)* an aromatic liquid resin obtained from trees, a kind of plant, மரப்பிசின், குங்கிலியம், காசித் தும்பை; also *(v.t.)*.

balus'ter *(n.)* column of support for rail, கைப்பிடியைத் தாங்கும் தூண்; **baluster'ed** *(adj.)*.

bamboo' *(n.)* a tropical tall grass with hollow stem, மூங்கில்; also *(adj.)*, *(v.t.)*.

bamboo'zle *(v.t.)* to cheat, to confuse completely, ஏமாற்று, குழப்பு.

ban' *(n.)* prohibition by law and order or by public opinion, தடையுத்தரவு; also *(v.t. & i.)*.

bana'na *(n.)* a kind of plantain, ஏற்றன் வாழை, நேந்திரம் பழம்.

band' *(n.)* a strip of cloth, metal etc., by which loose things are tied together, தளைக்கயிறு, வார்; also *(v.t. & i.)*.

ban'dage *(n.)* a narrow strip of material used in dressing wounds, காயத்துக்கு அல்லது முறிவுக்குப் போடும் கட்டு; also *(v.t.)*; **ban'daging** *(n.)*.

bandann'a *(n.)* a handkerchief or scarf, கைக்குட்டை, கழுத்துப் பட்டைக்கான சிறு சால்வை.

ban'dicoot *(n.)* a kind of large rat, பெருச்சாளி.

ban'dit *(n.)* an outlaw, a robber, சட்டத்தை மீறுபவன், வழிப்பறிக் கொள்ளைக்காரன்.

bandoleer', bandolier' *(n.)* a cross belt for carrying cartridges, தோட்டாக்கள் வைத்துக்கொள்ளப் பயன்படும் தோள் வார்ப்பட்டை.

ban'dy[1] *(n.)* a hockey stick, பந்தடிக்கும் வளைகோல்; also *(v.t. & i.)*.

ban'dy[2] *(adj.)* curved, bent outwards at the knee, வளைந்த, வளைந்த கால்களையுடைய.

bane' *(n.)* ruin, cause of evil, poison, அழிவு, கேட்டிற்கான காரணம், நஞ்சு; **baneful** *(adj.)*; **bane'fulness** *(n.)*.

bang'[1] *(n.)* the front hair cut across the forehead, முன்னுச்சி மயிரை வெட்டுதல்; also *(v.t.)*.

budg'et *(n.)* financial estimate prepared for the future, வரவு செலவுத் திட்டம்.

buff[1] *(n.)* a kind of thick leather, உறுதியான ஒருவகைத் தோல்.

buff[2] *(n.)* a light yellow colour, வெளிர் மஞ்சள் நிறம்.

buff'alo *(n.)* an animal of the ox family, எருமை.

buff'er *(n.)* a shock absorber, அதிர்ச்சி தாங்கி, அடிதாங்கி.

buff'et[1] *(n.)* a blow with the hand or fist, கையால் அடித்தல்; also *(v.t. & i.)*.

buffet[2] *(n.)* a refreshment room, சிற்றுண்டிச் சாலை.

buffoon[1] *(n.)* one who amuses others by funs and tricks, கோமாளி; **buffoon'ery** *(n.)*.

bug *(n.)* a small blood sucking insect, மூட்டைப்பூச்சி.

bug'bear *(n.)* an imaginary fear, வீண் அச்சம்.

bu'gle *(n.)* a musical wind instrument with a coiled tube, எக்காளம், ஊதுகொம்பு; also *(v.i. & t.)*.

build *(v.t. & i.)* construct, put together, கட்டு, ஒன்றாக இணை; **build'ing, buil'der** *(ns.)*; **built** *(p.t. & p.p.)*.

built *(p.p. & p.t.)* see build.

bulb *(n.)* an electric light container, an onion - like root of a particular plant, மின்குமிழ், வெள்ளைப் பூண்டு.

bul'bul *(a.)* a singing bird of the tropical region, பாடும் பறவை வகை.

bulge *(v.i. & t.)* to swell out, வீங்கு, புடை; also *(n.)*, **bul'gy** *(adj.)*.

bulk *(n.)* a large mass, volume, size etc., பேரளவு; **bulky** *(adj.)*.

bull[1] *(n.)* the male of the animal of the ox family, காளை.

bull² *(n.)* speculation for the rise in share, பங்கு விலையேற்றம்.
bull'dog *(n.)* a kind of dog meant for bull hunting, வேட்டை நாய்.
bull-dozer *(n.)* a powerful tractor used for levelling the earth by removing rocks, stumps of tree etc., நிலச்சமன் பொறி.
bull'et *(n.)* a piece of lead fired from a gun, துப்பாக்கிக் குண்டு.
bull'etin *(n.)* an official news report, செய்தி அறிவிப்பு வெளியீடு.
bull'ion *(n.)* uncoined gold or silver in bars, தங்கக் கட்டி, வெள்ளிக்கட்டி.
bull'ock *(n.)* casterated bull, வண்டிக் காளை, மட்டக்காளை, காயடிக்கப் பட்ட எருது.
bull's-eye *(n.)* a small lantern with a thick piece of glass, the centre of a target, கனத்த கண்ணாடியுடைய கைவிளக்கு, இலக்கு மையம்.
bull'y *(n.)* a rough fellow who frightens others, பிறரை மிரட்டும் கொடியவன்; also *(v.t.)*.
bulrush *(n.)* a large rush that grows in water or on wet land, நீண்ட நாணல் செடி வகை.
bul'wark *(n.)* a fort built for defence, anything that defends or protects, அரண், கொத்தளம், தடுப்புச் சுவர்.
bum'ble-bee *(n.)* a kind of large bee that makes a humming sound, பெரிய வண்டு வகை.
bump *(n.)* a swelling caused by a blow, அடித்ததால் ஏற்பட்ட வீக்கம், ஊமையடி; also *(v.t. & i.)*.
bum'per¹ *(n.)* a tumbler filled to the brim, விளிம்பு வரை நிரப்பப்பட்ட குவளை.
bumper² *(n.)* a bar used in automobiles to lessen the effect of collision, முட்டுத்தாங்கி.
bumper³ *(adj.)* plentiful, large, பேரள வான், பெரிய.
bump'kin *(n.)* a rough fellow with no good manners, பாங்கற்றவன், நய மற்றவன்.
bump'tious *(adj.)* boastful, தற் புகழ்ச்சி பேசும், இறுமாப்புடைய.
bun *(n.)* round shaped bread, a round mass of hair, சிறிய ரொட்டி வகை, மயிர்ச் சுருள் கற்றை.
bunch *(n.)* a group of things growing or tied together, கொத்து.
bund *(n.)* an embankment, அணை கரை.
bun'dle *(n.)* a number of things tied together, கட்டு.
bung *(n.)* a stopper or cork used to close a hole, துளையடைக்கும் தக்கை.
bung'alow *(n.)* single storeyed house, ஒற்றை மாடி வீடு.
bung'le *(v.i. & t.)* do a work in a clumsy way, அரைகுறை வேலை செய், சீரற்ற முறையில் வேலை செய்; also *(n.)*; **bungler** *(n.)*.
bun'ion *(n.)* a swelling on the toe, கால் பெருவிரல் வீக்கம்.
bunk *(n.)* a sleeping-berth in a ship or train, கப்பல் அல்லது இரயிலில் துயிலிடம்.
bunkum *(n.)* senseless talk, பொரு ளற்ற பேச்சு.
bunny *(n.)* a pet name for rabbit, முயலின் செல்லப் பெயர்.
bunting¹ *(n.)* cloth used for making flags or other decorations, தோரணத் துணி.
bunting² *(n.)* sub family of a bird, பறவை உட்குடும்பம்.
buoy *(n.)* a floating object fixed by an anchor, to guide the course of the ships, an object that keeps a person floating above water, கப்பலுக்கு வழிகாட்டும் அடையாளக் கருவி, மிதவை; also *(v.t.)*; **buoy'ancy** *(n.)*; **buoy'ant** *(adj.)*.
bur, burr *(n.)* the prickly seed case of certain plants, முள் விதையுறை.
burd'en *(n.)* that which is carried, a load, something difficult to bear, சுமை, கடினமான பொறுப்பு; *also* *(v.t.)*; **burd'ensome** *(adj.)*.

bureau *(n.)* a chest of drawers used for keeping things, a public office or administration, இழுப்பறை மேசை, அலுவலகம், துறை.

bureau'cracy *(n.)* a centralized system of administration in which officials have complete control of the government, பணித்துறை ஆட்சி, ஆளும் வகுப்பு; **bureaucrat** *(n.)*.

burg'lary *(n.)* the crime of home breaking with a view to stealing, கொள்ளையடிப்பதற்காக வீட்டை உடைத்து உள்ளே புகுதல், கன்னமிடுதல்; **burg'lar** *(n.)*; **bur'gle** *(v.i. & t.)*.

bu'rial *(n.)* (see bury).

burlesque' *(n.)* an imitative presentation of something, நையாண்டி.

burl'y *(adj.)* stout, strong, வலிமையான, முரடான.

burn[1] *(v.i. & t.)* set on fire, தீ வை, **burnt** *(pt. & pp.)*.

burn[2] *(n.)* a sore made by fire, தீப்புண்.

burn[3] *(n.)* a small stream, சிற்றாறு, கால்வாய்.

burnish *(v.t. & i.)* make bright by rubbing, தேய்த்துப் பளபளப்பாக்கு.

burnt *(p.t. & p.p.)*, (see burn).

bu'rrow *(n.)* a nest made in the ground by small animals like rabbits, நிலவளை, நிலப் பொந்து; also *(v.i. & t.)*; **bu'rrower** *(n.)*.

burs'ar *(n.)* treasurer in an educational institution, பொருளாளர்; **bur'sary** *(n.)*.

burst *(v.t. & i.)* to break open suddenly, explode, திடீரென்று வெடி, சிதறச் செய்.

burty *(adj.)* large, strong, பெரிய, உறுதியான.

bury *(v.t.)* put the dead body in the grave, put something under ground and cover up, பிணத்தைப் புதை, மண்ணில் புதைத்து வை; **burial** *(n.)*.

busby *(n.)* a furcap worn by soldiers during ceremonial occasions, படைவீரர்களின் கம்பளித் தொப்பி.

bush *(n.)* a short plant with many branches, புதர், குற்றுச் செடி; **bush'y** *(adj.)*.

bush'el *(n.)* a measure of eight gallons, பறை, மரக்கால்.

busi'ness *(n.)* one's occupation or profession, வணிகம், தொழில்.

bust *(n.)* upper part of the human body above the waist, இடுப்புக்கு மேல் உள்ள பகுதி.

bustard *(n.)* a swift running bird like crane, வேகமாக ஓடும் கொக்கினப் பறவை.

bustle *(v.i. & t.)* move hurriedly and excitedly, விரைந்து செல், பரபரப்பாக ஓடு; also *(n.)*.

bus'y *(adj.)* actively engaged, சுறுசுறுப்பான.

butch'er *(n.)* one who kills animals for food, கசாப்புக் கடைக்காரர்.

but'ler *(n.)* the male servant incharge of the dining room, head-cook, தலைமைச் சமையல்காரர்.

butt *(n.)* thick end of a weapon or tool, the extreme end of anything, ஆயுதத்தின் அல்லது கருவியின் தடித்த முனை.

butt'er *(n.)* yellow fatty substance obtained by churning cream, வெண்ணெய்.

butt'erfly *(n.)* an insect with beautifully coloured wings, வண்ணத்துப் பூச்சி.

butt'ermilk *(n.)* the liquid left after removing the butter, மோர்.

butt'on *(n.)* a knob used as a fastener used in clothing, a round device used for pulling or pushing, பொத்தான்; also *(v.t. & i.)*.

butt'ress *(n.)* an outside support to a wall to make it stronger, உதை சுவர்.

bux'om *(adj.)* fleshy, good-looking, கொழுகொழுவென இருக்கும், அழகிய.

buy *(v.t.)* purchase, விலைக்கு வாங்கு; **buy'ing, buy'er** *(ns.)*; **bought** *(p.t.)*.

buzz *(n.)* a humming sound, தேனீ ஒலி; also *(v.t. & i.)*; **buzz'er** *(n.)*.
buz'zard *(n.)* a bird like falcon, பருந்து வகைப் பறவை.
by'gone *(adj.)* over and past, நடந்து முடிந்த, பழைமையான.
byre *(n.)* a cattle-house, மாட்டுத் தொழுவம்.
by'stander *(n.)* a spectator, அருகில் நிற்பவர், பார்வையாளர்.
by-election *(n.)* an election held at a time apart from the regular one, இடைத் தேர்தல்.
by(e)-law *(n.)* a special law made by a particular concern, துணை விதி.
by'road *(n.)* a side road, பக்க வழி.
by'word *(n.)* a proverb, a common saying, a person or thing considered a significant example, பழமொழி, முன்மாதிரி.

C

cab *(n.)* a public carriage, a hired vehicle, உந்து வண்டி, வாடகை வண்டி.
cabal' *(n.)* secret plot, சதி, சதிக் கூட்டம்; also *(v.t.)*.
cab'aret *(n.)* entertainment provided by the restaurant for its customers, ஆடல் பாடல்களை நடத்தும் உணவு விடுதி.
cab'in *(n.)* a hut or small house, a room in a ship, சிறு அறை , கப்பல் அறை.
cab'inet *(n.)* a piece of furniture with set of shelves or chest of drawers, a private room, council of ministers, நிலைப்பெட்டி, தனியறை, அமைச் சரவை.
ca'ble *(n.)* a strong rope, a telegraphic wire laid under the ground or under the sea, a message sent by such a wire. வடக்கயிறு, மின்வடம், கட லடித் தந்திக் கம்பி, நிலத்தடித் தந்திக் கம்பி, தந்திச் செய்தி; also *(v.i. & t.)*.
caboriolet *(n.)* a carriage drawn by horse, குதிரை வண்டி.
cache *(n.)* a secret store house for food, treasure etc., பதுக்கிடம்.
cach'et *(n.)* seal, marks of authenticity, முத்திரை, அடையாளக் குறியீடு.
cachinna'tion *(n.)* laughing loudly, உரத்த சிரிப்பு, வெடிச்சிரிப்பு; **cachinnate** *(v.i.)*; **cachinnatory** *(adj.)*.
cac'kle *(n.)* a shrill sound made by a fowl, கொக்கரிப்பு ; also *(v.i. & .t)*.
cacoph'ony *(n.)* ugly sound of words or music, அருவருப்பான சத்தம், வெறுப்பொலி, **cacoph'onous** *(adj.)*.
cactus *(n.)* tropical plant covered with prickles, கள்ளி முள்ளுச் செடி.
cad *(n.)* a low mean person, an ill-bred person, இழிவானவன், பண்பற்ற வன், போக்கிரி.
cadaver'ous *(adj.)* of corpse-like, deadly pale, பிணம் போன்ற, வெளிறின.
ca'dence *(n.)* modulation of sound, ஒலியின் ஏற்ற இறக்கம்.
cadet *(n.)* pupil of a military school, இராணுவப் பயிற்சி மாணவன், மாணவர் பயிற்சிப் படை.
cadge *(v.i. & t.)* get by begging, peddle, அண்டிப் பிழை, கூவி விற் பனை செய்; **cadg'er** *(n.)*.
cadre *(n.)* a regimental establishment, position or rank, படைப்பிரிவு , பதவி நிலை.
caf'e *(n.)* a coffee house, சிற்றுண்டிச் சாலை.
caffeine *(n.)* a chemical compound found in coffee and tea plants, ஒரு வகை உப்புச் சேர்மம்.
cage *(n.)* a room or frame work for keeping animals and birds, any lock up, கூண்டு, கம்பி அடைப்பு; also *(v.t.)*.
cain *(n.)* fratricide, உடன்பிறந் தோரைக் கொலை செய்பவன்.
cairn *(n.)* a heap of stones, pyramid of stones set up as a memorial, கற் குவியல், கல்லறை.
cais'son *(n.)* ammunition chest, water tight case used in laying foundation

under water, போர்த்தடவாளப் பெட்டி, (கடலினடியில் அடித்தளம் அமைக்க உதவும்) நீர்புகாப் பெட்டி.

cajol'e *(v.t.)* persuade something by flattering, போலியாகப் புகழ்ந்து வசப்படுத்து, பசப்பு; **cajol'ery, cajol'ement** *(ns.)*.

calabash' *(n.)* a drinking or cooking vessel made from a fruitshell, சுரைக் குடுக்கை.

calam'ity *(n.)* a terrible event, great ruin, பெருந்துயரம், பேரிழப்பு.

calcareous *(adj.)* containing calcium, சுண்ணாம்பு கலந்த.

calcina'tion *(n.)* conversion of metals into powder by burning or roasting, நீற்றுதல்; **cal'cine** *(v.t. & i.)*.

calculate *(v.t. & i.)* work with numbers, estimate, எண்ணு, கணக்கிடு, கருது; **calcula'tion** *(n.)*; **calcula'ted** *(adj.)*.

cal'culator *(n.)* a device used for calculation, கணிப்பான்.

cal'endar[1] *(n.)* a list of the days, weeks and months of the year, நாள்காட்டி.

cal'ender[2] *(n.)* a rolling - machine for pressing cloth, paper etc., துணி, காகிதம் போன்றவற்றை அழுத்தி மெருகிடும் உருளைப் பொறி.

calf[1] *(n.)* young one of the cow, கன்று; **calves** *(n.pl.)*.

calf[2] *(n.)* back part of the human leg before the knee, பின்னங்கால் சதை, கெண்டைச் சதை; **calves** *(n.pl.)*.

cal'ibre *(n.)* internal diameter of a cylindrical body as that of a gun, mental or moral capacity, குழல் உள்வட்டம், பண்பாற்றல், திறமை; **cal'ibrate** *(v.t.)*; **calibred** *(adj.)*.

cal'ico *(n.)* printed cotton cloth, அச்சிடப்பட்ட பருத்திதுணி.

ca'liph *(n.)* official head of Islam, இஸ்லாமியச் சமயத் தலைவர்.

calk *(n.)* a sharp iron piece set to the shoe to prevent from slipping, இலாடம்; also *(v.t.)*.

call *(v.i. & t.)* give a name to, say in a loud voice meant to reach distant hearer, summon, rouse from sleep, visit, to invite to accept a position, பெயரிடு, கூவு, அழை, விழித்தெழு, சென்றுபார், பதவியேற்க அழை; also *(n.)*; **calling** *(n.)*.

callig'raphy *(n.)* handwriting as an art. கையெழுத்துத் திறன்.

calling *(n.)* a profession or trade, வாழ்க்கைத் தொழில்.

call'iper *(n.)* an instrument for measuring the diameter of tubes, bullets etc., இடுக்கிமானி.

call'ous *(adj.)* unsympathetic, hardened in feeling, இரக்கமற்ற, மரத்துப்போன; **call'ousness, callos'ity** *(ns.)*.

calm *(adj.)* quiet and peaceful, அமைதியான, அசைவற்ற; also *(v.t. & i.)*; **calm'ness** *(n.)*.

cal'umny *(n.)* a false accusation, misrepresentation; பொய்க்குற்றச் சாட்டு, வீண்பழி; **calum'niate** *(v.t.)*; **calum'niator** *(n.)*; **calumnious** *(adj.)*.

calves (see calf[1,2])

calx *(n.)* powdery remains left after the burning of a metal or mineral, புடமிடப்பட்டபின் எஞ்சும் நீறு, புடநீறு.

camber *(n.)* a slight upward bend, மேலோட்டமான வளைவு, மேட்டுப் பகுதி; also *(v.t.)*.

cam'bric *(n.)* fine linen fabric, மென்மையான வெண்ணிற இழைத் துணி.

came (see come).

cam'el *(n.)* a hornless animal with humped back, ஒட்டகம்.

cameo *(n.)* a precious stone carved with a raised design, the art of so carving, செதுக்குமணி, செதுக்கு வேலை.

cam'era *(n.)* an apparatus used for taking photographs, ஒளிப்படக் கருவி.

cam'ouflage *(n.)* the way of hiding things to deceive an enemy, any

disguise, எதிரியின் கண்ணில் படாமல் மறைத்து வைத்தல், உரு மறைப்பு. also *(v.t.)*.

camp *(n.)* temporary outdoor shelter, பாசறை, கூடாரம்; also *(v.i. & t.)*.

campaign *(n.)* series of military or political operations, organized work, போர்நடவடிக்கை, அரசியல் நடவடிக்கை, திட்டப்பணி.

cam'phor *(n.)* a crystalline strong - smelling substance, கர்ப்பூரம்.

cam'pus *(n.)* premises of an office or institution, வளாகம்.

can[1] *(n.)* container for holding liquids, குவளை; also *(v.t.)*, **can'ned** *(adj.)*.

can[2] *(v.aux.)* be able , be possible, தகுதிவாய்ந்திரு, ஆற்றல் அல்லது திறமை பெற்றிரு; **could** *(p.t.)*.

canal *(n.)* an artificial water way, any channel, கால்வாய்; **can'alize** *(v.t.)*.

canard' *(n.)* a false story, rumour, புரளி , வதந்தி.

canar'y *(n.)* a yellow-coloured singing bird, a kind of wine, மஞ்சள் வண்ண வானம்பாடி, ஒருவகை மது.

can'cel *(v.t. & i.)* cross out, remove, do away with, கோடிட்டுத் தள்ளுபடி செய், விலக்கு, இல்லாததாக்கு, நீக்கு, இரத்து செய்; **cancellation** *(n.)*.

can'cer[1] *(n.)* a malignant tumour, புற்று நோய்; **can'cerous** *(adj.)*.

can'cer[2] *(n.)* a crab, a zodiacal sign, நண்டு, கடக இராசி.

candelabrum *(n.)* a lamp-stand for branching lights, அலங்காரக் கொத்து விளக்குத் தண்டு.

candes'cent *(adj.)* glowing, ஒளி வீசுகிற; **candes'cence** *(n.)*.

candid *(adj.)* honest, truthful, frank, நேர்மையான, ஒளிவு மறைவற்ற, தெளிவான; **can'dour** *(n.)*.

can'didate *(n.)* one who offers himself for a position or for an examination, பணிமுயல்வர், தேர்வர், வேட்பாளர்; **candidature** *(n.)*.

(n.).

can'dle *(n.)* a stick of wax with wick for lighting, மெழுகுவத்தி.

can'dour *(n.)* frankness, honesty, கள்ளம் கபடமற்ற தன்மை, நேர்மை.

can'dy *(n.)* crystallized sugar, கற்கண்டு; also *(v.t. & i.)*.

cane *(n.)* an easily bent stem of large grass like plant, பிரம்பு, கம்பு; also *(v.t)*, **can'y** *(adj.)*.

canine *(adj.)* of or like a dog, நாய்போன்ற, நாய்க்குரிய, கோரை.

can'ister *(n.)* a box of wood, tin etc., பெட்டி.

cank'er *(n.)* ulcer, a kind of disease in plants or animals, குடற்புண், தாவர நோய்.

cann'el *(n.)* bituminous coal, புகைமிகு நிலக்கரி.

can'nibal *(n.)* a man who eats human flesh, an animal that eats its own breed, மனிதனைத் தின்னும் மனிதன், தன்னினத்தை உண்ணும் விலங்கினம்; **cannibalis'tic** *(adj.)*; **cann'ibalism** *(n.)*.

cann'on *(n.)* a large tubular gun, பீரங்கி.

cannonade' *(n.)* a continued firing with cannons, இடைவிடாத பீரங்கித் தாக்குதல்.

canny *(adj.)* shrewd, circumspect, கூரறிவுடைய, தந்திரமான.

canoe' *(n.)* a small boat, சிறு படகு.

can'on[1] *(n.)* law or regulation, சட்டம், பொது ஒழுங்கு.

can'on[2] (see canyon).

can'opy *(n.)* an overhead covering or shelter, an ornamental covering over a statue, throne etc., மேற்கவிகை, மேற்கட்டுமானம்; also *(v.t.)*.

cant[1] *(n.)* a hypothetical speech, vocabulary peculiar to a class, பகட்டான பேச்சு, பாசாங்குப் பேச்சு, குழூஉக்குறி.

cant[2] *(n.)* an inclination, slanting surface, சரிவு, தளச்சாய்வு; also *(v.t. & i.)*.

cantank'erous *(adj.)* bad-tempered, ill-natured, முன்கோபமுடைய, ஏறுமாறான.

cantata *(n.)* a choral composition of music which describes a story, கதைப்பாட்டு, இசையமைப்பு.
canteen′ *(n.)* a place where food and drink are sold, உணவகம்.
can′ter *(n.)* an easy gallop, சிறிய பாய்ச்சல்; also *(v.i. & t.)*.
cantilever *(n.)* a projection from wall for supporting heavy structure like balconies, வளைசட்டம், பிடிமானம்.
cantle *(n.)* piece, slice, வெட்டுத் துண்டு.
canton′ment *(n.)* a region occupied by soldiers, படையாளிகள் தங்கும் பாளையம்.
canty *(n.)* brisk, cheerful, சுறுசுறுப் பான, மகிழ்ச்சியான.
can′vas *(n.)* a kind of coarse cloth used for various purposes, கித்தான் துணி.
canvass *(v.t. & i.)* ask for, ask for support, scrutinize, கோரு, ஆதரவு நாடு, ஆராய்ந்து பார்; also *(n.)*.
can′yon *(n.)* a deep valley with steep rocky sides, இடுங்கிய செங்குத்தான பள்ளத்தாக்கு.
caoutchouc *(n.)* unvulcanized rubber, கெட்டிப்படுத்தப் படாத இரப்பர்.
cap *(n.)* a small hat, covering of any kind, குல்லாய், தொப்பி, மேல்மூடி.
capabili′ty *(n.)* ability, capacity, இயலும் தன்மை, திறமை.
cap′able *(adj.)* possessing ability, able to do things well, திறமையுடைய, செயலாற்றல் உடைய.
capa′cious *(adj.)* spacious, having the capacity of holding, இடமகன்ற, கொள்ளக்கூடிய; **capa′citate** *(v.t.)*.
capa′city *(n.)* ability to do things well, power of receiving or containing, திறமை, செயலாற்றல், கொள்ளளவு.
cap- a-pie′ *(adv.)* from head to foot, அடி முதல் முடி வரை.
cape¹ *(n.)* a narrow piece of land jutting out into the sea, நிலமுனை.
cape² *(n.)* short sleeveless upper garment, கையற்ற குட்டையான மேற் சட்டை.
caper *(n.)* frisky jump, துள்ளல், பாய்ச்சல்; also *(v.i.)*.
capill′ary *(adj.)* of hair- like fineness, மயிரிழை போன்ற; **capillarity** *(n.)*.
capi′tal *(n.)* a chief city, money invested, capital letter, தலைநகரம், முதலீடு, பெரிய எழுத்து; also *(adj.)*, **cap′italize** *(v.t.)*.
ca′pitalism *(n.)* possession or influence of capital or fund used in production, முதலாளித்துவம்; முத லுடைமை; **capi′talist** *(n.)*.
capita′tion *(n.)* tax or fee per head, allowance for each person, தலை வரி, தலை எண்ணிக்கை.
capituate *(v.i.)* surrender to the enemy on terms, to yield, சரணடை, கீழ்படிங்கு; **capitulation** *(n.)*.
cap′on *(n.)* a young casterated cock, விதையடிக்கப்பட்ட சேவல்; **capon′ize** *(v.t.)*.
caprice′ *(n.)* an unaccountable change of mind, an unreasonable idea, நிலையின்மை, மனம்போன போக்கில் நடந்து கொள்ளுதல்; **capri′cious** *(adj.)*.
cap′ricorn *(n.)* tenth sign of zodiac, மகர இராசி.
capsicum *(n.)* large chilli, குடமிளகாய் வகை.
capsize′ *(v.t. & i.)* to overturn, தலை கீழாக மறி, குடைகவிழச் செய்.
capsule *(n.)* a gelatin case for holding medicines, the seed case of a plant, உறை மருந்து, காப்புறை.
cap′tain *(n.)* chief commanding officer of a ship, navy etc., a leader, கப்பல் தலைவன், படைத் தளபதி, தலைவன்; also *(v.t.)*; **cap′taincy** *(n.)*.
cap′tion *(n.)* a short title, a heading, legal arrest, தலைப்பு, கைப்பற்றுதல்.
captious *(adj.)* critical, fault-finding, திறனாய்வு செய்யும், குற்றங் குறை காணும் இயல்புடைய.

cap'tivate *(v.t.)* to fascinate, உள்ளத்தைக் கவர்.
cap'tive *(n.)* a prisoner, சிறைக்கைதி; also *(adj.)*, **captivity, cap'tor** *(ns.)*.
cap'ture *(v.t.)* to seize, arrest, secure, கைப்பற்று, சிறைப்பிடி, கைக்கொள்; also *(n.)*.
car *(n.)* an automobile, மோட்டார் வண்டிவகை.
ca'ramel *(n.)* burnt sugar used for colouring, a sweetmeal, கரு வெல் லம், தித்திப்புப் பண்டம்.
ca'rat *(n.)* a measure used in weighing precious stones, 1/24 th part of pure gold, விலையுயர்ந்த கற்களை அளக் கும் அலகு, பொன்னின் முழு மாற்றின் 1/24 பங்கு.
ca'ravan *(n.)* a group of travellers, merchants etc., a van, பயணிகள், வணிகர் குழாம், பயண ஊர்தி.
carb'ine *(n.)* a short gun, கைத் துப் பாக்கி.
carb'uncle[1] *(n.)* a variety of bright red gem, மாணிக்கம்.
carb'uncle[2] *(n.)* a kind of tumour, அரசப் பிளவை.
carburett'er / carburett'or *(n.)* part of an engine that mixes air with petrol vapour, பெட்ரோலும் காற்றும் கலக்கப் பயன்படும் கருவி.
carca'se, carc'ass *(n.)* dead body of an animal, விலங்கு இறப்புடல்.
card[1] *(n.)* a small piece of stiff paper, அட்டை.
card[2] *(n.)* toothed instrument for combing wool etc., கம்பளி போன்ற வற்றில் சிக்கெடுக்கும் சீப்பு; also *(v.t.)*.
card'amom *(n.)* a spice, ஏலக்காய்.
cardboard *(n.)* a thick pasteboard, தடிப்பட்டை.
card'iac *(adj.)* pertaining to heart, இதயம் சார்ந்த; also *(n.)*.
cardigan *(n.)* a warm overcoat, கம்பளி மேற்சட்டை.
card'inal *(adj.)* fundamental, chief, அடிப்படையான, முதன்மையான, முக்கியமான.

care *(n.)* caution, protection, anxiety, responsibility, எச்சரிக்கை, பாது காப்பு, கவனம், பொறுப்பு, மேற் பார்வை; also *(v.i. & t.)*, **careful** *(adj.)*.
career' *(n.)* course or mode of life, an occupation or profession, வாழ்க்கை நெறி, வாழ்க்கைத் தொழில், தொழில் வாழ்வு.
care'ss *(n.)* a gentle affectionate touch or gesture, அன்புடன் தட்டிக் கொடுத் தல், கொஞ்சுதல்; also *(v.t.)*.
ca'ret *(n.)* a mark ^ placed below a line to denote a word left-out, எழுதியதில் விடுபட்டுப் போனதைச் சேர்க்க வேண்டிய இடத்தைக் குறிக்கும் ^ அடையாளம்.
carg'o *(n.)* goods carried by a ship, கப்பல் சரக்கு.
caricature' *(n.)* a drawing that makes fun of something or someone, exaggeration, கேலிச் சித்திரம், மிகைப்படுத்துதல்; also *(v.t.)*.
caries *(n.)* decay of tooth or bone, பற்சொத்தை, எலும்புச் சிதைவு; **cari'ous** *(adj.)*.
cark *(n.)* burden, worry, கவலை, **carking** *(adj.)*.
carminative *(n.)* a remedy for flatulence, வாயு மருந்து; also *(adj.)*.
carm'ine *(n.)* a bright red colour, கருஞ் சிவப்பு நிறம்; also *(adj.)*.
carn'age *(n.)* great slaughter, massacre, படுகொலை.
carn'al *(adj.)* sensual, புலனுணர்வு சார்ந்த.
carnation *(n.)* rosy pink colour, a flower of that kind, இளஞ்சிவப்பு நிறம், ஒருவகைச் சிவப்புப் பூ.
carnelian *(n.)* a dull-reddish stone, இளஞ்சிவப்பு மணிக்கல் வகை.
carn'ival *(n.)* any festival, கேளிக்கை, திருவிழா.

carniv'orous *(adj.)* flesh-eating, ஊனுண்ணுகிற; also *(n.)*; **carniv'ore** *(n.)*..

ca'rol *(n.)* a song of joy or praise, மகிழ்ச்சிப் பாட்டு, வாழ்த்துப் பாடல், also *(v.t.)*.

carouse' *(v.i.)* drink freely and be happy, மிதமிஞ்சி மதுவருந்தி மகிழ்ந்திரு; also *(n.)*, **carou'sal** *(n.)*.

carp[1] *(n.)* a pond fish, குளத்து மீன் வகை.

carp[2] *(v.i.)* indulge in fault-finding, குற்றம் காணுவதில் முனைப்பாக இரு, குறை கூறு.

carp'enter *(n.)* an artificer who works on wood, தச்சன்; also *(v.i. & t.)*, **carpentry** *(n.)*.

car'pet *(n.)* a woven ornamental covering for the floor, தரைவிரிப்பு, கம்பளம்; also *(v.t.)*.

ca'rriage *(n.)* a vehicle for carrying, the act of carrying, cost of carrying, வண்டி, சுமத்தல், சுமைகூலி.

ca'rrier (n.) one who or that which carries, சுமை தூக்கும் மனிதர், சுமை எடுத்துச் செல்லப் பயன்படும் பொருள், சுமைதூக்கி, நோய் கடத்தி.

ca'rrion *(n.)* decayed animal flesh, அழுகின பிணம்; also *(adj.)*.

ca'rry *(v.t. & i.)* bear along, move or take from one place to another, சுமந்து செல். எடுத்துச் செல், கொண்டு செல்; **ca'rrying** *(adj.)*.

cart *(n.)* a two wheeled vehicle, வண்டி; also *(v.t. & i.)*.

cart'ilage *(n.)* a firm elastic tissue, குருத்தெலும்பு.

cartoon' *(n.)* a comic drawing that makes people laugh or think, வேடிக்கைச் சித்திரம், கேலிச் சித்திரம்; also *(v.t.)*, **cartoonist** *(n.)*.

cart'ridge *(n.)* charge of explosive for a gun, தோட்டா, துப்பாக்கி ரவை.

carve *(v.t. & i.)* make or shape by cutting, செதுக்கு வேலை செய், சிற்ப வேலை செய்; **carv'ing** *(n.)*.

cascade *(n.)* a small waterfall, சிற்றருவி, நீர்வீழ்ச்சி.

cascara *(n.)* a laxative, ஒரு மலமிளக்கி மருந்து.

case[1] *(n.)* a box, covering, பெட்டி, உறை; also *(v.t.)*.

case[2] *(n.)* a particular event or matter, state of affairs, a suit in a court of law, a patient, a grammatic form, குறிப்பிட்ட நிகழ்ச்சி அல்லது செய்தி, நிலை, வழக்கு, நோயாளி, வேற்றுமையுருபு.

case'ment *(n.)* hinged window frame, சன்னல் சட்டம்.

cash *(n.)* money in the form of coins or bank-notes, பணம், ரொக்கம்; also *(v.t.)*, **cashier** *(n.)*.

cash'ew *(n.)* a kind of tree giving kidney-shaped nuts, முந்திரி மரம்.

cashier[1] *(n.)* see cash.

cashier[2] *(v.t.)* dismiss from service, பணிநீக்கம் செய்.

casi'no *(n.)* public building where music, dance etc., are performed, பொதுக் கேளிக்கைக் கூடம்.

cask *(n.)* a barrel, பீப்பாய்

cas'ket *(n.)* an ornamental box for holding valuables, பேழை.

casse'role *(n.)* a heat-proof vessel in which food is kept, உணவைச் சூடாக வைத்திருக்கும் பாத்திரம், சுடுகலன்.

cass'owary *(n.)* kind of large bird related to ostrich, நெருப்புக் கோழி போன்ற பறவை.

cast *(v.t. & i.)* throw, exercise the vote, abandon, calculate, to mould, எறி, வாக்களி, கைவிடு, கணக்கிடு, வார்ப்பிடு; also *(n.)*.

castanets *(n. pl.)* a pair of small pieces of wood used to struck in time with dancing, கைத்தாளக் கட்டை.

cast'away *(adj.)* abandoned, கைவிடப் பட்ட, ஒதுக்கப்பட்ட; also *(n.)*.

caste *(n.)* a class or division of society, சாதி.

caster, cas'tor *(n.)* wheels on the legs of furniture, மரச்சாமான்களை நகர்த்துவதற்காக இடப்படும் உருளை, ஆமணக்கு.

castiga'tion *(n.)* severe punishment, கடுந்தண்டனை; **cas'tigate** *(v.t.)*.
casting[1] *(n.)* throwing, எறிதல்.
casting[2] *(n.)* moulding, வார்ப்படம்.
cast-iron *(n.)* a mixture of iron and carbon, வார்ப்பிரும்பு.
cas'tle *(n.)* a fortified place or mansion, அரண்மனை, மாளிகை, கோட்டை.
cas'tor oil *(n.)* oil extracted from castor seeds, ஆமணக்கெண்ணெய்.
castrate *(v.t.)* make impotent by removing sex glands, காயடி.
cas'ual *(adj.)* unexpected, happening by chance, எதிர்பாரா வகையில், தற்செயலான; also *(n.)*.
ca'sualty *(n.)* one who is seriously injured, a serious accident, உயிராபத்து நிலையிலுள்ளவர், கடும் விபத்து; **casualties** *(pl.)*
casuarin'a *(n.)* a kind of tree, சவுக்கு மரம்.
cat *(n.)* a domestic animal, பூனை.
cat'aclysm *(n.)* political or social revolution, அரசியல் புரட்சி, சமுதாயப் புரட்சி.
cat'acomb *(n.)* an underground tomb, பாதாளக் கல்லறை.
cat'alepsy *(n.)* a disease with recurrent fits, மூடுசன்னி; **catalep'tic** *(adj.)*.
cat'alogue *(n.)* a list; பட்டியல், அட்டவணை;. also *(v.t.)*.
cat'apult *(n.)* ancient engine for throwing stones, arrows etc., a small forked stick used by children for throwing stones, கல், அம்பு போன்றவற்றை வீசும் பழங்கால விசைப் பொறி, கவண்.
cat'aract[1] *(n.)* a great waterfall, அருவி.
cat'aract[2] *(n.)* a disease of the eye, கண்புரை.
catarrh *(n.)* an inflammation of the nose, discharge of mucus, மூக்கடைப்பு, சளி.
catas'trophe *(n.)* a disastrous event, பேரழிவு; நிலைதடுமாற்றம், **catastrophic** *(adj.)*.

V.5.

catch *(v.t. & i.)* to capture, be entangled, seize and hold, understand with sense, கைப்பற்று, பிடி, அகப்படு, தடுத்து நிறுத்திப் பிடி, நன்கு புரிந்து கொள்; also *(n.)*, **caught** *(p.t. & p.p.)*.
catchword *(n.)* word so used as to draw attention, தூண்டுசொல், இலக்குச் சொல்.
catch'y *(n.)* attractive, easily caught up, கவர்ச்சியான, எளிதில் கவரக் கூடிய.
cat'echism *(n.)* the prayer book giving instructions, a religious summary, அறிவுரை கூறும் சமயநூல், சமயத் தத்துவங்களின் தொகுப்பு.
catego'rical *(adj.)* plain, positive, unconditional, தெளிவான, உறுதியான, திட்டவட்டமான.
cat'egory *(n.)* a class or order, வகை, இனம், பிரிவு.
caten'ary *(n.)* a curve formed by chains hanging freely between two points, சங்கிலி வளைவு; **catenate** *(v.t.)*.
cat'er *(v.i.)* supply food, to provide for, உணவு வழங்கு, வசதிசெய்து கொடு.
cat'erpillar *(n.)* an insect in its worm-like stage, an insect with dense hair, கம்பளிப் புழு.
cat'erwaul *(v.i.)* scream like a cat, பூனைபோல் கத்து; also *(n.)*.
catgut *(n.)* string made from animals' intestines, நரம்பிழை.
cathed'ral *(n.)* the main church in a district under the charge of a bishop, கிறித்துவத் தலைமைக் கோயில்.
cath'olic *(adj.)* relating to Roman Catholics, ரோமன் கத்தோலிக்கருக்குரிய; also *(n.)*.
cat'nap *(n.)* a brief sleep in chair etc., பூனைத்தூக்கம், குட்டித் தூக்கம்.
cat's-eye *(n.)* a precious stone, a reflector stud used on highways, வைடூரியம், எதிரொளிப்பு ஆடி.
cat's-paw[1] *(n.)* a dupe, ஏய்க்கப்பட்டவன்.

cat's-paw² *(n.)* a light wind, இளம் காற்று.
catt'le *(n.pl.)* farm animals such as cows, sheep etc., that eat grass, கால்நடை, ஆடுமாடு.
cauc'us *(n.)* local committee for a party organization, a private political body meeting, உள்ளூர் அரசியல் கட்சி, கட்சிக் கூட்டம்.
caud'al *(adj.)* like a tail, வால் போன்ற.
caught *(v.t. & i.)* (see catch).
caul'dron, cal'dron *(n.)* a large hollow boiling vessel, கொப்பரை.
cause' *(n.)* reason, matter, motive, law suit, காரணம், விளைவு, நோக்கம், வழக்கு; **causa'tion, causality** *(ns.)*; **causa'tive** *(adj.)*.
cause'way *(n.)* a raised pathway or road, தரைப் பாலம்.
caus'tic *(adj.)* burning, sarcastic, severe, எரிக்கிற, எரிச்சலூட்டுகிற, கடுமையான; **caut'erize** *(v.t.)*; **caut'ery** *(n.)*.
cau'tion *(n.)* attention to safety, warning against danger, carefulness, பாதுகாப்பு உணர்வு எச்சரிக்கை, விழிப் புணர்வு; also *(v.t.)*; **cau'tious** *(adj.)*.
cavalcade' *(n.)* procession of army men on horse back, குதிரைவீரர் அணிவகுப்பு.
cav'alry *(n.)* soldiers on horse back, குதிரைப்படை; **cavalier'** *(n.)*.
cave (n) an underground opening, a hollow place in a rock or hillside, குகை.
cav'eat *(n.)* process to suspend proceedings in the court, a warning, நீதிமன்ற நடவடிக்கை நிறுத்தம், எச்சரிக்கை.
cav'ern *(n.)* a large cave, பெரிய குகை, குடைவு; **cav'erned** *(adj.)*.
cav'ernous *(adj.)* hollow, பள்ளமான.
cav'il *(n.)* a trivial objection, அற்பத் தடை; also *(v.i.)*.
cavity *(n.)* hollow space within a solid body, உட்குழிவு, பொந்து.
cease' *(v.i. & t.)* stop doing, come to bring to an end, நிறுத்து, முடித்து விடு.
cease-fire *(n.)* ordering the troops to stop war, போர்நிறுத்தம்.
ced'ar *(n.)* an evergreen tree belonging to the pine family, தேவதாரு வகை மரம்.
cede *(v.t.)* surrender the kingdom to another ruler, give up, admit, விட்டுக் கொடு, துற, இணங்கு.
ceil'ing *(n.)* some material lining given below the roof, the maximum limit of anything, உள்கூரை, உச்சவரம்பு; also *(v.t.)*.
cele'brate *(v.t. & i.)* to commemorate, make known, duly perform rite, ceremony etc., கொண்டாடு, பாராட்டு, சடங்குகளை நிறைவேற்று; **cel'ebrated** *(adj.)*; **celebration** *(n.)*.
celeb'rity (n) a famous or well-known person, புகழ்பெற்றவர்.
cele'rity *(n.)* quickness in action, விரைவு, சுறுசுறுப்பு.
celes'tial *(n.)* heavenly, விண்ணுலகு சார்ந்த, தெய்விகமான.
celi'bacy *(n.)* unmarried state of life, திருமணத்தைத் துறந்த நிலை; **celibatarian, celibate** *(ns. & adjs.)*.
cell *(n.)* a small private room or compartment, a small hollow place, a microscopic unit of living organism, unit of an electric battery, தனியறை, கண்ணறை, உயிரணு, மின்கலம்; **cell'ular** *(adj.)*.
cell'ar *(n.)* an underground room, நிலவறை, பாதாளக்கிடங்கு; also *(v.t.)*.
cellu'loid *(n.)* a kind of plastic substance which is highly inflammable, ஒருவகை நெகிழ்மம்.
cel'sius *(n.)* a unit of measuring heat, வெப்ப அலகு.
cement' *(n.)* a kind of mortar, a cohesive substance, சிமெண்டு, சாந்து, பசை, கற்காரை; also *(v.t.)*.

cem'etery *(n.)* burial ground, இடுகாடு, சுடுகாடு.
cen'otaph *(n.)* monument to a person buried elsewhere, நினைவுச் சின்னம்.
cen'ser *(n.)* a vessel in which incense is burnt for worshipping, தூபக் கரண்டி; **cense'** *(v.t.)*.
cen'sor *(n.)* person assigned with the right of judging the quality of the films, plays etc., for the protection of public morals; one who examines letters etc., to prevent the leakage of secrets, தணிக்கையாளர்; also *(v.t.)*, **cens'o'rial** *(adj.)*; **censorship** *(n.)*.
cen'sure *(n.)* expression of disapproval, a scolding, blame, கண்டனம், குற்றச்சாட்டு, பழிப்பு; also *(v.t.)*, **cen'surable** *(adj.)*.
cen'sus *(n.)* an official enumeration of the population of a country, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு.
cent *(n.)* one hundred as a standard number, hundredth part of a dollar, நூறு, டாலரின் நூற்றில் ஒரு பங்கு.
cen'taur *(n.)* an imaginary animal with human body and horse's head, குதிரை முகமும் மனித உடலும் கொண்ட கற்பனை வடிவம்.
centenar''ian *(n.)* one who is 100 years old, நூறு வயதானவர்; also *(adj.)*.
centen'ary *(adj.)* of a hundred years, நூறாண்டுகள் நிறைந்த; also *(n.)*.
centenn'ial *(adj.)* completing hundred years, happening once in hundred years, நூறாண்டுக்கொரு முறை நிகழும், நூறாண்டுகள் நிறைந்த; also *(n.)*.
cen'tipede *(n.)* multi-footed wingless crawling creature, பூரான்.
centre, cen'ter *(n.)* the middle point or part, மையம்; **cen'tral** *(adj.)*, **cen'tralize** *(v.t. & i.)*.
centrif'ugal *(adj.)* tending to move away from the centre, மைய விலகு.
centrip'etal *(adj.)* tending to move centrewards, மையநோக்கு.
cen'tuple *(n.)* hundred times, நூறு மடங்கு; also *(adj.)* & *(v.t.)*.
cen'tury *(n.)* a hundred, நூறு.
ceram'ics *(n.)* a kind of fine pottery, பீங்கான்; **ceramic** *(adj.)*.
cer'eal *(adj.)* pertaining to edible grain, தானியம்; also *(n.)*.
ce'remony *(n.)* formal act or series of acts performed on important occasions, a formal function, சமயச் சடங்கு, விழா; **ceremonial, cere-mon'ious** *(adjs.)*.
cero'graphy *(n.)* the art of carving on wax, மெழுகுச் செதுக்கு வேலை.
cert'ain *(adj.)* sure to happen, indisputable, not described, உறுதியான, முடிவான, ஏதோ ஒரு, குறிப்பிட முடியாத சில; **cert'ainly** *(adj.)*; **cert'ainty** *(n.)*.
certif'icate *(n.)* a testimonial, a written declaration, சான்றிதழ், உறுதிச்சீட்டு; **cert'ify** *(v.t.)*.
cess *(n.)* kind of tax, வரி.
cessa'tion *(n.)* ceasing, இடைநிறுத்தம்.
ce'ssion *(n.)* giving up, surrendering, விட்டுக் கொடுத்தல், ஒப்படைத்தல்.
cess'pool *(n.)* a sunk in which drainage matters are collected, சாக்கடைப் பள்ளம்.
chafe *(v.i. & t.)* to rub against, imitate, to make or become sore by rubbing, உரசித் தேய், எரிச்சலூட்டு, தேய்த்துப் புண்ணாக்கு.
chafer *(n.)* a kind of beetle, ஒருவகை வண்டு.
chaff[1] *(n.)* the outer covering of the grain, worthless matter, உமி, பதர், பயனற்ற பொருள்.
chaff[2] *(v.t.)* to tease with, ஏளனமாகப் பேசு.
chagrin *(n.)* acute disappointment, vexation, பெருத்த ஏமாற்றம், மனச் சோர்வு.
chain *(n.)* connection of link, a number of things coming one after another, சங்கிலி, தொடர் வரிசை; also *(v.i.)*.

chair *(n.)* a seat with legs and back, an official seat like professorship, நாற்காலி, பதவி இருக்கை; **chairman** *(n.)*.

chaise *(n.)* a light open vehicle drawn by horse, சாரட்டு வண்டி.

chalk *(n.)* a soft white lime used for writing on a board, சாக்குக்கட்டி, சுண்ணக்கட்டி; also *(v.t.)*.

chall'enge *(n.)* inviting to a contest, fight etc., சவால், அறைகூவல், மறுப்பு; also *(v.t.)*.

cham'ber *(n.)* a private room, assembly, office of the judge or lawyer, தனி அறை, கூடம், சட்ட மன்றத்தில் வழக்கறிஞர் அறை.

chameleon *(n.)* a species of lizard which can change its colour, பச்சோந்தி.

cham'ois *(n.)* a kind of deer, ஒரு வகை மலை மான்.

champ *(v.t. & i.)* to chew, make a chewing or biting noise. சுவை, பல்லை நறநறவென்று கடி, சப்புக் கொட்டு; also *(n.)*.

champion *(n.)* an athlete who has defeated all the competitors, one who fights, argues etc., for another with a cause, வெற்றி வீரன், பரிந்து பேசுபவன்; also *(v.t.)*; **championship** *(n.)*.

chance *(n.)* possibility or probability, an unexpected event, வாய்ப்பு, நிகழ் தன்மை, நிகழ்திறம், எதிர்பாரா நிகழ்வு; also *(v.i. & t.)*.

chancellor *(n.)* highest official of a university, பல்கலைக்கழக வேந்தர்.

chandelier *(n.)* branching frame work hanging from the ceiling as a support for several lights, கொத்து விளக்குச் சட்டம்.

chandler *(n.)* a dealer in candle, soap etc., மெழுகு திரி, சோப்பு முதலியன விற்கும் வணிகர்.

change *(n.)* alteration, petty cash, மாற்றம், சில்லறை; also *(v.i. & t.)*.

channel *(n.)* water way, sea current, passage, band of frequencies in a transmission set, கால்வாய், கடல் கூட்டு, ஒலி–ஒளி பரப்பின் அலை வரிசை.

chant *(n.)* sacred song, singing slowly and softly. ஒருவகைத் துதிப்பாடல்; also *(v.i. & t.)*

cha'os *(n.)* utter confusion, complete disorder, குழப்பம், கலவரம்; **chao'tic** *(adj.)*

chap[1] *(n.)* a young boy, fellow, சிறுவன், இளைஞன்.

chap[2] *(n.)* a crack in the skin, knock. தோல் வெடிப்பு, பனி வெடிப்பு, தட்டுதல்.

chap'el *(n.)* a place of worship for Christians attached to an institution, hospital etc., நிறுவனம், மருத்துவ மனை முதலான இடங்களில் அமைந்துள்ள கிறித்துவ வழி பாட்டிடம்.

chap'eron *(n.)* a lady attendant incharge of an unmarried girl on social occasions. இளம் பெண்ணின் துணை மாது; **chap'eronage** *(n.)*; also *(v.t.)*.

chap-fallen *(adj.)* dejected, சோர்ந்த, வாட்டமுற்ற.

chaplain *(n.)* a clergy man or woman in a chapel, கிறித்தவ சமய வினைஞர்.

chap'man *(n.)* travelling vendor of small wares, சிறு வணிகன்.

chap'ter *(n.)* one of the divisions of a book, இயல்.

char[1] *(v.t. & i.)* make or become black by burning, கரியாக்கு.

char[2] *(n.)* a kind of fish, ஒரு வகை மீன்.

cha'racter *(n.)* mental or moral qualities, a personality in play, story, film etc., distinctive mark, an alphabet or other mark, பண்பு, இயல்பு, கதை மாந்தர், குறியீடு; **cha'racterize** *(v.t.)*; **characteri'stic** *(adj.)*; **characteriza'tion** *(n.)*.

char'coal *(n.)* a black carbonaceous substance produced by burning wood partly, கரிக்கட்டை.

charge *(v.t. & i.)* to accuse, to set a price, command, rush forward and attack, to fill or supply with explosive, electricity etc., குற்றஞ் சாட்டு, விலை குறி, கட்டளையிடு, மோது, தாக்கு, வெடிமருந்தை நிரப்பு; also *(n.)*; **chargeable** *(adj.)* **charger** *(n.)*.

char'ger[1] *(n.)* see charge.

char'ger[2] *(n.)* a large flat dish, தாம்பாளம்.

char'ger[3] *(n.)* a war horse, போர்க் குதிரை.

cha'riot *(n.)* a horse vehicle, a vehicle used in ancient fighting, தேர், இரதம்; **charioteer'** *(n.)*.

charity *(n.)* kindness, generosity, love to one's fellow men, institution for helping the helpless, the help so given, இரக்கம், தயாளம், தாராள மனப்பான்மை, அன்பு நிலையம், அறநிலையம், அறம்; **cha'ritable** *(adj.)*.

charl'atan *(n.)* one who pretends to have knowledge or skill, திறமை யுள்ளவன் போல் அல்லது அறிவுடையவன் போல் பாசாங்கு செய்பவன்.

charm *(n.)* fascination, pleasing features, magic power, கவர்ச்சி, மனப்பண்பு, அழகு, மந்திரசக்தி, தாயத்து; also *(v.t.)*.

chart *(n.)* a map of the sea, sheet of paper having diagrammative or graphical in representations, கடல் விளக்கப்படம், விளக்க அட்டவணை.

chart'er *(n.)* a deed conferring certain rights and privileges, ஆட்சியுரிமை, ஆவணம்; also *(v.t.)*.

char'y *(adj.)* cautious, எச்சரிக்கை யான.

chase[1] *(v.t.)* run after to catch or drive away, துரத்திப்பிடி, also. *(n.)*.

chase[2] *(v.t.)* to engrave, செதுக்கு.

cha'sm *(n.)* a deep and wide opening or crack in the earth, பூமி வெடிப்பு.

chaste *(adj.)* pure in thought, word and deed, abstaining from irregular or from all sexual intercourses, சிந்தனைத் தூய்மையுடைய, வாக்குத் தவறாத, வாய்மையுடைய, ஒழுக்க முடைய, கற்புநெறி தவறாத; **cha'sten** *(v.t.)*; **cha'stity** *(n.)*.

chastise' *(v.t.)* punish severely by beating, அடித்துத் திருத்து.

chat *(n.)* a friendly talk, an informed talk, நட்பான பேச்சு, அளவளாவுதல்; **chatty** *(adj.)*.

chatt'el *(n.)* movable property, அசையும் சொத்து.

chatter *(v.i. & t.)* talk too much, to talk idly, talk quickly and foolishly: தொணதொணவென்று பேசு, பயனின்றிப்பேசு, படபடவென்று பேசு; also *(n.)*.

chauv'inism *(n.)* aggressive patriotism, நாட்டுவெறி, மேலாதிக்கம்.

cheap *(adj.)* low in price, விலை மலிந்த, மலிவான; **cheap'en** *(v.t. & i.)*.

cheat *(v.t. & i.)* deceive, to defraud. ஏமாற்று, மோசடி செய்; also *(n.)*.

check *(n.)* sudden arrest of motor. stoppage, control, examination, restraining agency, cross lined pattern, இயக்கத் தடை, நிறுத்தம், கட்டுப்பாடு, சோதனை, கட்ட வடிவம்; also *(v.t. & i.)*.

cheddar *(n.)* a kind of cheese, ஒரு வகை பாலாடைக் கட்டி.

cheek *(n.)* each side of the face below the eye, கன்னம்.

cheer *(n.)* shout of applause, joy, மகிழ்ச்சி ஆரவாரம், மகிழ்ச்சி; **cheer'ful** *(adj.)*; also *(v.t. & i.)*.

cheese *(n.)* solid food made from curded milk. வெண்ணெய்; **chees'y** *(adj.)*.

cheet'ah *(n.)* a kind of leopard, சிறுத்தைப்புலி.

chem'istry *(n.)* science of the elements and the laws of combinations and behaviour under various conditions, வேதியியல்; **chem'ical** *(adj.)*; **chem'ist** *(n.)*.

cheque *(n.)* a written order to bank to pay money to bearer or named person, காசோலை.

cheq'uer *(n.)* pattern consisting of square coloured alternately, a chess board, பல நிறக் கட்டங்கள் மாறி மாறி வரும் அமைப்பு, சதுரங்கப் பலகை.

cheq'uered *(adj.)* marked by changes of good and bad fortunes, இன்ப துன்பங்கள் மாறி மாறி வரும் நிலை யுடைய.

che'rish *(v.t.)* to protect lovingly, keep in the heart or mind, பேணிப் போற்று, மனமார விரும்பு.

che'rry *(n.)* a sort round stone-fruit, tree bearing it, சிவந்த கனிவகை. கனி தரும் மரம்.

chess *(n.)* a game played by two persons on 64 squares, சதுரங்கம்.

chest[1] *(n.)* the part of the body containing heart and lungs, மார்பு.

chest[2] *(n.)* a large strong box with drawers. பேழை. பெட்டகம்.

chest'nut[1] *(n.)* the nut of a kind of fruit tree, the tree bearing it, ஒருவகை மரக் கொட்டை, வாதாங்கொட்டை மரம்.

chest'nut[2] *(n.)* a reddish brown horse, தவிட்டு நிறக் குதிரை.

chevalier *(n.)* a soldier, குதிரைவீரன்.

chew *(v.t. & i.)* to masticate, grind with teeth, சுவை, மெல்லு, பல்லால் அரை.

chicane' *(n.)* a trick, a cunning action, ஏய்ப்பு, மோசடி, சூழ்ச்சி.

chick'en *(n.)* young one of a hen, கோழிக்குஞ்சு.

chick'en-pox *(n.)* an infectious disease causing red itching spots in the skin, சின்னம்மை.

chic'ory *(n.)* root of plant ground and used with coffee powder, the plant. காப்பிப் பொடியுடன் கலக்கும் ஒரு வகை வேர்ப்பொடி, அவ் வேரை யுடைய மரம்.

chide *(v.t. & i.)* to scold, find fault with, கடிந்துகொள், திட்டு, குற்றம் காணு.

chief *(n.)* a leader or head of a department, business, tribe etc., துறைத் தலைவர், முதல்வர், இனத் தலைவர்; also *(adj.)*; **chief'tain** *(n.)*.

chiffon *(n.)* a thin variety of silk, மெல்லிய துணிவகை.

chil'blain *(n.)* itching sore on hand and feet caused by cold weather, பனி வெடிப்பு.

child *(n.)* a baby, குழந்தை; **chil'dren** *(n.pl.)*.

child'ish *(adj.)* silly, like a child. அற்பமான, சிறுபிள்ளைத்தனமான.

childlike *(adj.)* innocent, frank, simple, கள்ளங்கபடமற்ற, ஒளிவு மறைவற்ற, எளிமையான.

chill *(n.)* unpleasant coldness, கடுங் குளிர், also *(adj.)*.

chill'y[1] *(adj.)* sensitive to cold, குளிரால் நடுங்குகிற.

chill'y[2] *(adv.)* in cold manner, ஆர்வம் குறைந்த.

chilly[3] *(n.)* dried capsicum, வற்றல் மிளகாய்.

chime *(n.)* sound of tuned bells, மணியோசை; also *(v.i. & t.)*.

chime'rical *(adj.)* fanciful, baseless, கற்பனையான, நம்பமுடியாத; **chimer** *(n.)*.

chim'ney *(n.)* an outlet for smoke, heated air etc., a glass round the flame of the lamp, விளக்குப் புகைபோக்கி, புகை போக்கிக் குழாய்.

chimpanzee' *(n.)* the most man-like of the apes, மனிதக் குரங்கு.

chin *(n.)* part of the face below the mouth, மோவாய்ப் பகுதி.

china'ware *(n.)* a kind of earthenware first made in China, பீங்கான் கலன்கள்.

chink[1] *(n.)* a crack or narrow opening, பிளவு, குறுகிய துளை, ஓட்டை.

chink[2] *(n.)* ringing sound as of coins, கலீர் என்ற ஓசை.

chip *(n.)* a small piece, bit or slice, சிறு துண்டு, செதுக்குத் துண்டு, சுள்ளி; also *(v.t. & i.)*.

chirp *(n.)* short sharp sound as of sparrow, கிறீச்சொலி, அகவலோசை; also *(v.i. & t.)*; **chirpy** *(adj.)*.

chis'el *(n.)* a cutting tool for working on wood, stone etc., வெட்டுளி; also *(v.t.)*.

chit *(n.)* a brief note, a voucher, சிறு குறிப்பு, சீட்டு, பணக்குறிப்புச் சீட்டு.

chiv'alrous *(adj.)* brave, generous, வீரமுடைய, பெருந்தன்மையான.

chiv'alry *(n.)* ideal qualities of a knight, வீரம், வீரர்தம் இயல்பு.

chock *(n.)* a wedge, ஆப்பு, முட்டுக் கட்டை

choice *(n.)* act or power of choosing, preference, தெரிவு, முன்னுரிமை; also *(adj.)*; **choose** *(v.t. & i.)*.

choir *(n.)* organized team of singers, பாடகர் குழு.

choke *(n.)* suffocation, a block, a device in a car engine, மூச்சுத் திணறல், தடை, அடைப்பு, தடுப்பி; also *(v.t. & i.)*.

chol'era *(n.)* an infectious disease of the bowels, வாந்திபேதி.

choose (see choice).

chop *(v.t. & i.)* cut with an axe or a heavy edged tool, mince, கோடரி போன்ற கருவியினால் வெட்டித் துண்டுபோடு, கொத்து; also *(n.)*.

chop-sticks *(n.)* two small sticks used by Chinese instead of a knife, fork etc., சீனர்கள் உணவருந்தப் பயன் படுத்தும் இரு சிறு குச்சிகள்.

choral *(adj.)* pertaining to choral song, குழு இசைக்குரிய.

chord *(n.)* the straight line connecting any two points on a curve or the ends of an arc, any string-like structure, நாண், நரம்பு.

Cho'reography *(n.)* designing of dance, ஆடலமைப்புக் கலை, நட்டுவம்.

chor'us *(n.)* a group of singers or choir, something said simultaneously by a number of people, பாடற்குழு, பலர் ஒன்றாகக் குரலெழுப்புதல், சேர்ந் திசை.

choul'try *(n.)* a public rest house, சத்திரம், சாவடி.

Christ *(n.)* The Jesus, இயேசு.

Chri'sten *(v.t.)* admit to a Christian church by baptism, திருமுழுக்குச் செய்து கிறித்தவ சமயத்தில் இணைத் தல்; name, பெயரிடு.

Christian'ity *(n.)* the Christian religion, கிறித்துவ சமயம்; **Christian** *(adj.)*.

Christ'mas *(n.)* anniversary of the birth of Christ held on 25th December, கிறித்துமஸ் பண்டிகை.

chron'ic *(adj.)* lasting for a long time, severe, நாட்பட்ட, முற்றிய.

chron'icle *(n.)* continuous recording of events in the order of time, கால வரிசையில் தொகுக்கப்பட்ட நிகழ்ச்சிக் குறிப்புகள்; also *(v.t.)*.

chronol'ogy *(n.)* the science of fixing the order of events, காலக் குறிப் பியல்; **chronolo'gical** *(adj.)*.

chronom'eter *(n.)* an accurate form of time-measuring instrument, கால மானி.

chubb'y *(adj.)* plump, fat, பருத்த, கொழுத்த.

chuck[1] *(n.)* a gentle blow, a careless throw, செல்லமாகத் தட்டிக் கொடுத் தல், அலட்சியமாகத் தூக்கியெறிதல்; also *(v.t.)*.

chuck[2] *(n.)* call of fowl, கொக்கரிப்பு, also *(v.i.)*.

chuc'kle[1] *(n.)* quiet laugh, வாய்க் குள்ளேயே சிரித்தல், உள்ளூர நகைத்தல்; also *(v.i.)*.

chuc'kle[2] see chuck.[2]

chum *(n.)* intimate or close friend, நெருங்கிய நண்பன்; also *(v.i.)*; **chum'my** *(n.)*.

chunk *(n.)* a thick piece of anything cut off, பாளம், கெட்டித் துண்டு.

church *(n.)* public building of worship for Christians, கிறித்தவக் கோயில்.

churl *(n.)* a bad mannered fellow, பண்பற்றவன்; **churl'ish** *(adj.)*.

churn *(n.)* butter making vessel from the curd, தயிர் கடையும் மத்து;also *(v.i. & t.)*.

chute *(n.)* a slope made for conveying things to lower levels,பொருள்களை உருட்டிவிட உதவும் சரிவு, சாய்சரிவு.

cic'atrice *(n.)* a scar, வடு, தழும்பு.

cigar *(n.)* tobacco - leaf rolled in the form of cylinder for smoking, சுருட்டு.

cigarette *(n.)* a roll of finely cut tobacco enclosed in a thin paper, சிகரெட்டு, வெண் சுருட்டு.

cinchon'a *(n.)* a kind of tree yielding quinine and other drugs, கொய்னா மரம்.

cinc'ture*(n.)* belt, girdle, இடைவார், சுற்று வளையம்; also *(v.t.)*.

cin'der *(n.)* burnt-out coal, wood etc., கொள்ளிக்கட்டை, தணல்கரி; **cin'dery** *(adj.)*.

cinemat'ograph *(n.)* an apparatus used for projecting motion picture, திரைப்படக்கருவி; **cinemat'ographic** *(adj.)*.

cinera'tion *(n.)* a furnace meant for cremation, பிண உலை.

ciph'er/cyph'er *(n.)* the symbol 0, person or thing of little importance, a secret code of writing, சுழி, குறியீடு 0, மதிப்பற்ற மனிதன் அல்லது பொருள், குறிப்புக் குறியீடு; **ciphering** *(adj.)*.

cir'cle *(n.)* a figure bounded by one line, a group of persons having the same or similar interests, வட்டம், வளையம், கூட்டுக் குழு.

circ'uit *(n.)* a going round, journey round, சுற்று, சுற்றுவழி, சுற்றுப் பயணம்; **circu'itous** *(adj.)*.

circ'ular *(n.)* a written, printed or cyclostyled announcement, சுற்றறிக்கை; also *(adj.)*.

circ'ulate *(v.i. & t.)* to go round in a circle, to pass around, வளைந்து செல், பரப்பு, சுற்றிச் செல்.

circula'tion *(n.)* movement from and back to a starting point, சுற்றோட்டம். சுழற்சி; **circ'ulatory** *(adj.)*.

circumci'sion *(n.)* a religious rite of the Jews and Muslims, சுன்னத்துச் சடங்கு; **circumcise** *(v.t.)*.

circum'ference *(n.)* the outline of a circle, சுற்றளவு, வட்டத்தின் பரிதி.

circumlocu'tion *(n.)* an indirect or round about way of speaking, சுற்றி வளைத்துப் பேசுதல்; **circumlocu'tory** *(adj.)*.

circumnav'igate *(v.t.)* to sail round the world, கப்பலில் சுற்றுப்பயணம் செய்.

circumscribe *(v.t.)* to draw a line around to make limits for, confine, சுற்றிக் கோடு போடு, வட்டமிடு, வரம்பு கட்டு, கட்டுப்படுத்து.

cir'cumspect *(adj.)* cautious, taking everything into consideration, எச்சரிக்கையான, விழிப்போடு சிந்திக்கிற; **circumspection** *(n.)*.

circ'umstance*(n.)* a condition or stage connected with an act or event, one's state of affairs, சூழ்நிலை, தொடர்புடைய செய்தி; **circumstan'tial** *(adj.)*.

circumvent' *(v.t.)* to find a way of overcoming by trickery, ஏமாற்று, சூழ்ச்சிமூலம் வெல்; **circumven'tion** *(n.)*.

cir'cus *(n.)* a round building for acrobatic performance, games etc., மனிதர்களும் விலங்குகளும் செய்யும் வீரச் செயல்களையும், வேடிக்கைகளையும் காட்டும் அரங்கம்.

cistern *(n.)* a large tank or natural reservoir for storing water, நீர்த் தேக்கிடம்.

cit'adel *(n.)* a fortress, கோட்டை.

cite *(v.t.)* to appear in a law court, mention as an example, நீதி மன்றத்தில் கொண்டு நிறுத்து, மேற்கோளாகக் காட்டு.

cit'izen *(n.)* member or inhabitant of a country, குடிமகன்; **cit'izenship** *(n.)*, குடிமையியல்.
citron *(n.)* lemon-like fruit, நாரத்தங் காய்; **citric** *(adj.)*.
city *(n.)* a large town, மாநகரம்.
civ'et *(n.)* a kind of spotted cat from whose anal gland a strong perfume is got, புனுகுப்பூனை, புனுகு.
civ'ics *(n.)* the study of the duties of a citizen, குடியுரிமையியல்; **civ'ic** *(adj.)*.
civ'il *(adj.)* pertaining to the ordinary people (not military or religious) of a country, concerned with cases which are not criminal, குடிமக்களுக் குரிய, ஒருவரது தனிப்பட்ட சட்ட உரிமைகள் குறித்த, பொதுவியல் சார்ந்த.
civil'ian *(n.)* one not serving in the army, படைத்துறை சாராத அலுவலர்.
civil'ity *(n.)* good manners, politeness, நன்னடத்தை, பண்பு நயம்.
civiliza'tion *(n.)* advanced stage of social development, civilized people and their way of life. நாகரிகம், நாகரிக நிலை, வாழ்க்கை முறை; **civilize** *(v.t.)*
clad (see clothe)
claim *(n.)* a right to demand something, உரிமை கொண்டாடுதல்; also *(v.t.)* **claim'able** *(adj.)*.
claim'ant *(n.)* one who makes a legal claim, சட்டப்படி உரிமை கோருபவர்.
clairvoy'ance *(n.)* abnormal power of seeing something what is out of sight, deep insight, தொலையுணர்வு, உள்ளுணர்வு; **clairvoy'ant** *(adj.)*
clam'ber *(v.i.)* climb up with difficulty, பற்றிப் பிடித்து ஏறு.
clam'our *(n.)* loud cry, any loud noise, உரத்த கூப்பாடு, கூச்சல், ஆரவாரம்; also *(v.t.)*, **clam'orous** *(adj.)*
clamp *(n.)* a device used to fasten things together or to strengthen them, இறுக்கி, பற்றி; also *(v.t.)*
clan *(n.)* a group of people or a number of families under a chief, இனம்; **clanship** *(n.)*
clandes'tine *(adj.)* done secretly, கள்ளத்தனமான, ஒளிவு மறைவான.
clang *(n.)* sound made by the clash of metals, உலோகங்கள் மோதுவதால் ஏற்படும் ஒலி; also *(v.i.)*; **clang'our** *(n.)*; **clang'ourous** *(adj.)*
clank *(n.)* sharp sound as of chain shaken, சங்கிலியோசை; also *(v.i. & t.)*
clap *(v.t. & i.)* strike the palms together, கைதட்டு; also *(n.)*; **clapping** *(n.)*.
cla'ret *(n.)* a kind of red wine, ஒரு வகை செம்மது.
cla'rify *(v.t. & i.)* to make or clear, தெளிவுபடுத்து; **clarifica'tion** *(n.)*
cla'rinet, cla'rionet *(n.)* wooden wind instrument with keys and holes, துளைக்கருவி வகை
cla'rion *(n.)* a kind of trumpet used in war, எக்காளம்.
cla'rity *(n.)* clearness, the state of being easy to use, hear etc., தெளிவு.
clash *(n.)* a serious disagreement, a quarrel, interference due to events happening at the same time, கருத்து வேறுபாடு, மோதல், கைகலப்பு, முரண்பாடு; also *(v.t. & i.)*
clasp *(v.t. & i.)* to hold tightly together, இறுகப் பற்று, இடுக்கிப்பிடி; also *(n.)*
class *(n.)* a group of people or things that are alike in same way, kind, a group of persons learning together, school lesson, college lecture etc. rank or grade, ஒரே வகை, வகுப்பு, பாடம், தரம்.
class'ic *(adj.)* of highest importance, having to do with the work of unique merit, தனிச்சிறப்புடைய, தனிச் சிறப்புக்குரிய செயல் சார்ந்த; also *(n.)* **classics** *(n.)*; **classical** *(adj.)*
class'ify *(v.t.)* arrange into classes, வகைப்படுத்து; **classifica'tion** *(n.)*

clatt'er *(n.)* loud sound as of many objects striking against each other, noisy talk, கடகடவெனும் ஒலி, உரத்த பேச்சு.

clause *(n.)* part of a sentence having a subject and a verb, part of an agreement, will, act etc., வாக்கியத்தின் பிரிவு வகை, ஒப்பந்தக் கூறு, சட்டவிதியின் கூறு, கிளவியம்.

claw *(n.)* pointed hooked nail of a beast or bird, விலங்கு அல்லது பறவையின் நகம்; also *(v.t.)*

clay *(n.)* a kind of soft sticky earth, களிமண்.

clean *(adj.)* perfect, pure, not dirty, தூய்மையான, மாசு படியாத, துப்புரவான, அழுக்கற்ற; also *(adv.)*; **cleanse** *(v.t.)*

clear *(adj.)* easy to see, hear or understand, distinct, not guilty, complete, தெளிவாகப் புலனாகும், வெளிப்படையான, குற்றமற்ற, முழுமையான.

clear-cut *(adj.)* definite, திட்டவட்டமான

clear'ing *(n.)* piece of land cleared for cultivation, the act of removing, exchanging of bank cheques, drafts etc., சாகுபடிக்கேற்றபடி திருத்தப்பட்ட நிலப்பகுதி, காசோலை, கட்டளைக் காசோலை போன்றவற்றின் கணக்குத் தீர்வு.

cleav'age (see cleave²)

cleave¹ *(v.i.)* stick to, ஒட்டிக்கொள், ஊடுருவு,

cleave² *(v.t. & i.)* split, divide by force, பிள, பிரி; cleav'age *(n.)* **cleft** *(p.t.&p.p.)*

cleft (see cleave²)

clematis *(n.)* a creeping plant, ஒரு வகைப் புதர்க்கொடி.

clem'ency *(n.)* merciful treatment, readiness to forgive, இரக்க நடவடிக்கை, மன்னிக்கும் இயல்பு; **clem'ent** *(adj.)*

clench, clinch *(v.t. & i.)* to press together to grasp or grip firmly, to fasten or rivet a nail, ஒன்றாகச் சேர்த்து அழுத்து, உறுதியாகப் பற்று, ஆணியால் அறை; also *(n.)*.

cler'gy *(n.)* the priests of a church, பாதிரியார், ஆயர்.

clerk *(n.)* an official who deals with letters, accounts etc., எழுத்தர், **cle'rical** *(adj.)*

clev'er *(adj.)* quick in understanding, learning etc., skilful, அறிவுக் கூர்மையுடைய, திறமையான; **clev'erness** *(n.)*.

click *(n.)* a short sharp sound, 'கிளிக்' கென்ற ஒலி; also *(v.i)*

cli'ent *(n.)* a customer, one who receives professional advice, வாடிக்கையாளர், தொழில் முறை அறிவுரை பெறுபவர், கட்சிக்காரர்; **cli'entele** *(n.)*

cliff *(n.)* steep rock, steep side of a mountain, செங்குத்தான பாறை, நெடும் பள்ளத்தாக்கு.

clim'ate *(n.)* the condition of weather, தட்ப வெப்பநிலை; **climat'ic** *(adj.)*

clim'ax *(n.)* event of greatest interest, an exciting finish, உச்ச கட்ட நிகழ்ச்சி, ஆவலைத் தூண்டும் முடிவு.

climb *(v.t. & i.)* to mount, to go up or towards the top, ஏறு, உச்சிக்குச் செல்; also *(n.)*

cli'mber *(n.)* one who or that which climbs, படர் கொடி, ஏறுபவர்.

clime *(n.)* a country and its climate, நாடும் அதன் தட்பவெப்ப நிலையும்.

clinch (see clench)

cling *(v.t.)* to stick close to, to hold fast to something firm, பற்றிக்கொள், கடைப்பிடி; **clung** *(p.t. & p.p.)*.

clin'ic *(n.)* a place where medical treatment or advice is given, a teaching centre for medical students, மருத்துவமனை, மருத்துவப் பயிற்சி மையம்; **clin'ical** *(adj.)*

clink *(n.)* a sharp singing sound, கணகண வெனும் ஒலி; also *(v.i. & t.)*.

clip¹ *(v.t.)* fasten tightly, இறுக்கமாக இணை; also *(n.)*

clip² *(v.t.)* cut off with the scissors, omit, கத்திரி, வெட்டு; also *(n.)*
clique *(n.)* a group of persons who have joined together for a common purpose (usually for some mean purpose) சதித்திட்டக் குழு, தன்னலக் குழு; **cliquy** *(adj.)*
cloak*(n.)* a loose outer garment, a mask, தளர் மேலாடை, முக்காடு; also *(v.i. & t.)*
clock¹ *(n.)* an instrument showing the time other than a watch, சுவர்க் கடிகாரம்.
clock² *(n.)* an ornament sewn on the sides of the socks, காலுறையில் தைக்கப்படும் பின்னல் வேலைப் பாடு.
clod *(n.)* a thick lump of earth, a stupid fellow, மண்ணாங்கட்டி, முட்டாள்.
clog *(n.)* a shoe with wooden sole, wooden chappal, hindrance, மர மிதியடி, முட்டுக்கட்டை;**clogg'y** *(adj.)*
clois'ter *(n.)* a monastery or nursery, துறவிமடம், கன்னிமடம்.
close' *(v.t. & i.)* to shut, finish, to come to an end, come nearer to, reduce intervals in, நெருங்கு, மூடு, முற்றுவி, முடிவுக்குவா, இடைவெளியை நீக்கு.
close² *(adj.)* near in time, place etc., mean, tight, having a narrow difference between, அருகமைந்த, குறுகிய, இறுக்கமான, இடைவெளி யற்ற; also *(adv. & n.)*
clos'et *(n.)* a small private room, lavatory, cupboard, தனியறை, கழிப் பிடம்.
clo'sure *(n.)* end, something which closes, முடிவு, முடிவடையும் ஒன்று.
clot *(v.t. & i.)* make or become thick, உறையச்செய்.
clothe *(n.)* a woven fabric of cotton, wool etc.,நெய்யப்பட்ட துணி; also *(v.t.)*, **clad** *(p.t. & p.p.)*
clothes*(n.pl.)*garments, ஆடை, **clothe** *(v.t.)*, **clothing** *(n.)*
cloud *(n.)* floating mass of mist in the sky, anything dark or gloomy, மேகம், இருள், தெளிவற்ற நிலை;also *(v.t. & i.t.)*; **cloud'y** *(adj.)*.
clout¹ *(n.)* piece of clothing for patching, rag, ஒட்டுத்துணி, கந்தை.
clout² *(n.)* a blow, குத்து.
clout³ *(n.)* a mark shot at by archers, இலக்கு.
clove *(n.)* the dried flower bud of a tropical tree, கிராம்பு, இலவங்கம்.
cloven (see cleave²)
clown *(n.)* the buffoon in a circus or play, an ill-bred fellow, கோமாளி, இழிவான நடத்தையுள்ளவன்; **clown'ish** *(adj.)*.
cloy *(v.t.)* to make disgusted with excess of food or pleasure, மித மிஞ்சிய உணவால் அல்லது மகிழ்ச்சியால் திகட்டச்செய்.
club¹*(n.)* a heavy stick used as a weapon, a stick used in certain games, கதை, குண்டாந்தடி.
club² *(n.)* a body of persons meeting for entertainment etc., the place where people meet, கூடு, சங்கம்;also *(v.t. & i.)*
clue *(n.)* any sign or piece of evidence that helps to solve a mystery, puzzle etc., இரகசியத்தை அல்லது புதிரை அறிய உதவும் துப்பு, வழிகாட்டும் குறிப்பு.
clump *(n.)* a group of trees or shrubs, மரங்களின் தொகுதி, புதர்க்கூட்டம்.
clum'sy *(adj.)* awkward, tactless, அலங்கோலமான, திறமையற்ற.
clung *(n.)* (see cling).
clus'ter *(n.)* a bunch, a closely-packed group, கொத்து, தொகுதி; also *(v.t.&i.)*.
clutch¹ *(v.t. & i.)* to hold firmly, to seize, இறுகப்பற்று, பிடி; also *(n.)*.
clutch² *(n.)* a device in an engine,பற்றி.
clutter *(n.)* confused mass, disorganized state of untidiness, ஒழுங்கின்றித் தாறுமாறாகக் கிடக்கும் நிலை, குப்பைக்கூளம்; also *(v.i. & t.)*.
coach¹ *(n.)* a four - wheeled carriage. railway carriage,நான்கு சக்கர மூடு

வண்டி, இரயில்பெட்டி; also *(v.i. & t.)*.

coach[2] *(n.)* one who teaches or trains, பயிற்றுநர்; also *(v.i. & t.)*

coag'ulate *(v.i. & t.)* to go hard or lumpy, உறையச் செய், திரள்; **coagulation, coag'ulant** *(ns.)*

coal *(n.)* a black solid fuel, நிலக்கரி.

coalesce' *(v.i.)* to combine together to form one, ஒன்றாக இணை; **coali'tion** *(n.)*

coali'tion *(n.)* union of parties, கூட்டிணைவு, கூட்டு, கூட்டணி.

coarse *(adj.)* rough, rude, not fine, கரடுமுரடான, சொரசொரப்பான, செப்பமற்ற.

coast *(n.)* side or border of land next to the sea, கடலோரப்பகுதி; **coast'al** *(adj.)*

coat *(n.)* a kind of outer garment with sleeves, any layer covering the outside, the hair or wool of an animal, ஒரு வகை மேல்சட்டை, விலங்கின் மயிர்; **coating** *(n.)*.

coax *(v.t.)* gain over by cajoling. இச்சகம் பேசி இணங்கவை.

cob'alt *(n.)* a silver - white metal, a blue colouring got from it, ஒரு வகை வெண் உலோகம், இவ்வுலோகத்திலிருந்து உருவாக்கப்படும் நீல வண்ணம்.

cob'ble[1] *(n.)* a rounded stone metal for paving, உருளைக்கல், தளக்கல்.

cob'ble[2] *(v.t.)* to patch or mend, ஒட்டுப் போடு, சரிசெய்; **cobb'ler** *(n.)*

coble *(n.)* a small fishing boat, சிறு மீன் பிடிப் படகு .

cob'ra *(n.)* a kind of poisonous snake, நல்லபாம்பு.

cob'web *(n.)* spider's net work, சிலந்தி வலை.

cocaine' *(n.)* a drug used as local anaesthesia, கொகெய்ன் எனப்படும் உணர்வகற்றும் மருந்து.

cock[1] *(n.)* male of a domestic animal, சேவல்.

cock[2] *(n.)* a lever in the gun, துப்பாக்கியின் நெம்புகோல் பகுதி அல்லது துப்பாக்கிக் குதிரை.

cock[3] *(n.)* a small pile of hay, வைக்கோல் போர்.

cockatoo' *(n.)* a kind of parrot, ஒரு வகைக் கிளி.

cockatrice *(n.)* a monster-like serpent, (மந்திரக் கதையில் வரும்) நச்சுக் கண் பாம்பு.

cockboat *(n.)* a small boat, சிறு படகு.

coc'kle[1] *(n.)* a weed among corns, களை.

coc'kle[2] *(n.)* an edible shell fish, உணவு மீன் வகை.

coc'kle[3] *(n.)* a wrinkle, சுருக்கம்; also *(v.i. & t.)*

coc'kle[4] *(n.)* a small boat, ஆழமற்ற சிறு படகு.

cock'pit[1] *(n.)* accommodation for pilot in an aircraft, விமான ஓட்டியின் இருக்கைப் பகுதி.

cock'pit[2] *(n.)* place for cockfight, area of any fight, சேவல் போர் நடக்குமிடம், சண்டைக் களம்.

coco, cocoa[1] *(n.)* a tropical palm tree bearing coconut, தென்னை மரம்.

coc'oa[2] *(n.)* a drink or chocolate made from the powder of coco seeds, கோக்கோ.

coconut, cocoanut *(n.)* the nut of the tropical palm tree with edible white lining enclosing a clean liquid, தேங்காய்.

cocoon *(n.)* a case of silk spun by the larva of some insects, பட்டுப்பூச்சியின் கூடு.

cod *(n.)* a kind of large sea fish, பெரிய கடல் மீன் வகை.

cod'dle *(v.t. & i.)* to pet, செல்லமாக வளர்; also *(n.)*

code *(n.)* a set of well arranged laws, a way of signalling or sendng secret messages using words, letters etc., சட்டத்தொகுப்பு, குழூஉக்குறி; **cod'ify** *(v.t.)*; **codifica'tion** *(n.)*

cod'lin, cod'ling *(n.)* a kind of apple, ஒரு வகை ஆப்பிள்.

co-educa'tion *(n.)* education of girls and boys together, இருபால் கல்வி.

coeq'ual *(adj.)* of the same rank, ஒரே நிலையிலுள்ள, ஒத்த, சமமான.

coerce *(v.t.)* force or compel to do something, வற்புறுத்து, கட்டாயப் படுத்து; **coercion** *(n.)*, **coer'cive** *(adj.)*

coev'al *(adj.)* of the same age or time, ஒரே காலகட்டத்திலுள்ள.

coexist' *(v.i.)* to exist at the same time, ஒரே காலத்தவராக இரு.

coff'er *(n.)* a large box for holding valuables, பேழை, கருவூலம்.

coff'in *(n.)* a burial chest for the dead body, சவப் பெட்டி.

cog *(n.)* a small boat, பரிசல்.

co'gent *(adj.)* forcible, convincing. believable, பொருத்தமான, முரண் பாடற்ற, நம்பத்தகுந்த; **co'gency** *(n.)*

co'gitate *(v.i. & t.)* think deeply, meditate, ஆழ்ந்து சிந்தி, தியானம் செய்; **co'gitable** *(adj.)* **cogita'tion** *(n.)*.

cog'nate *(adj.)* having the same source of origin, having the same nature etc., ஒரே மூலத்திலிருந்து பிறந்த, ஒத்த இயல்புடைய, ஒத்த வகையான.

cog'nizance *(n.)* being aware, knowledge, recognition, அறிந்து கொள்ளும் தன்மை, அறிவு, புரிதல்; **cognitive, cog'nizable** *(adjs.)*; **cog'nize** *(v.t.)*

coher'ent *(adj.)* clear in thought or speech, logical, சிந்தனைத் தெளி வுடைய, ஒத்திசைவுடைய, தருக்க ரீதியான.

cohe'sion *(n.)* the act of sticking together, tendency to stick, ஒட்டும் செயல், ஒட்டும் பண்பு; **coher'ent, cohes'ive** *(adjs.)*

coil *(v.t. & i.)* twist into spiral or circular shape, சுருள்; also *(n.)*

coin[1] *(n.)*, a piece of metal money, நாணயம்; also *(v.t. & i.)*

coin[2] *(v.t. & i.)*, invent a new word, புதிய சொல்லை உருவாக்கு; **coin'age** *(n.)*.

coincide *(v.i.)*, to happen at the same time, to be like or the same as, to agree, ஒரே நேரத்தில் நிகழ், ஒத்திடு, இணங்கு, இணை; **coin'cident** *(adj.)*, **coin'cidence** *(n.)*.

coir *(n.)* outside fibre of the coconut, தேங்காய் நார்.

coke *(n.)* a carbonaceous fuel obtained from coal, கல்கரி.

col'ander, cull'ender *(n.)* a bowl with perforated bottom used as a vegetable strainer, காய்கறி வடிதட்டு.

cold *(adj.)* low in temperature, unfriendly, தணுப்பான, நட்பற்ற; **cold'ness** *(n.)*.

cold-blooded *(adj.)* having blood with a temperature as the surrounding of the body, cruel, மாறு வெப்ப நிலை யுள்ள, கொடிய.

col'ic *(n.)* severe pain in the stomach, கடும் வயிற்றுவலி.

collab'orate *(v.i.)* to work together, இணைந்து செயலாற்று; **collabora'tion** *(n.)*.

collapse' *(v.i.)* to fall down, to break down, கீழே விழு, நொறுங்கு; also, *(n.)*; **collap'sable, collap'sible** *(adjs.)*.

coll'ar *(n.)* part of the garment at the neck, கழுத்துப்பட்டை

collate' *(v.t.)* compare in detail, gather and put in order, நுணுக்கமாக ஒத்து நோக்கு, தொகுத்து வரிசைப் படுத்து; **collator** *(n.)*.

collat'eral *(adj.)* side by side, indirectly contributing to conclusion, அருகருகேயான, உடனிகழ்ச்சி யான.

collation *(n.)* a light meal taken at unusual time, தனிப்பட்ட நேரத்தில் உண்ணும் சிற்றுண்டி.

coll'eague *(n.)* a fellow worker, உடன் பணியாளர்.
coll'ect *(v.t. & i.)* to bring together, to gather, ஒன்று சேர், தொகு; **collec'tor** *(n.)*; **collec'tively** *(adj.)*.
collec'torate *(n.)* office of the district collector, மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம்.
coll'ege *(n.)* a higher educational institution which is part of the university, கல்லூரி; **coll'egiate** *(adj.)*.
collide' *(v.i.)* to strike together with great force, விசையுடன் மோது, தாக்கு; **colli'sion** *(n.)*.
coll'ier *(n.)* one who works in a coal mine, a coal ship, நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி, நிலக்கரிக் கப்பல்; **coll'iery** *(n.)*
coll'iery *(n.)* a coal-mine, நிலக்கரிச் சுரங்கம்.
coll'ision (see collide)
collo'quial *(adj.)* conversational, informal, உரையாடல் முறையிலான, பேச்சு வழக்கிலுள்ள; **coll'oquy, coll'oquialism** *(ns.)*
collu'sion *(n.)* conspiracy for some evil purpose, கூட்டுச்சதி; **collude'** *(v.t.)*, **collu'sive** *(adj.)*
colon'[1] *(n.)* greater part of the large intestine, பெருங்குடல்.
col'on[2] *(n.)* a punctuation mark (:) முக்காற் புள்ளி.
colon'el *(n.)* an army officer who has the command of a regiment, படைப் பிரிவுத் தலைவர்.
col'ony *(n.)* a land where foreigners have settled, a group of persons living together, குடியேற்ற நாடு, குடியிருப்புப் பகுதி; **colonial** *(adj.)*; **col'onize** *(v.t. & i.)*; **coloniza'tion** *(n.)*,
coloss'us *(n.)* an immense statue, a huge person, மாபெரும் சிலை, பேருருவ மனிதன்; **coloss'al** *(adj.)*.
col'our *(n.)* any hue or tent, வண்ணம்.
colt[1] *(n.)* a young horse, inexperienced person, குதிரைக்குட்டி, கற்றுக்குட்டி.
colt[2] *(n.)* a kind of revolver, ஒருவகைச் சுழல் துப்பாக்கி.
col'ter, coulter *(n.)* the metal cutting part fixed to the blade of the plough, கலப்பையின் கொழுவிலுள்ள வெட்டிரும்புப் பகுதி.
col'umn *(n.)* a vertical row, a vertical series of lines in a page, a supporting pillar, பத்தி, தூண்.
com'a *(n.)* a long-continuing unconscious state, நீள் மயக்கம்.
comb[1] *(n.)* a toothed device used for dressing hair, wool etc., சீப்பு, also *(v.t. & i.)*
comb[2] *(n.)* the crest of some bird, சேவல் கொண்டை.
comb[3] *(n.)* beehive, தேன்கூடு.
com'bat *(n.)* contest, struggle, போட்டி, சண்டை; also *(v.t. & i.)*; **com'batant** *(n. & adj.)*.
combina'tion *(n.)* a union of things or people, amalgamation, இணைப்பு, ஒன்றிணைவு; **combine'** *(v.t. & i.)*
combustible *(adj.)* liable to catch fire, தீப்பற்றக்கூடிய,
combus'tion *(n.)* burning, எரிதல்.
come *(v.i.)* move towards or at a point, வா, நெருங்கு; **come** *(p.t.)*; **com'ing** *(n.)*.
comed'ian *(n.)* one who acts in comedies, a funny person, நகைச்சுவை நடிகர், வேடிக்கை மனிதர்.
com'edy *(n.)* a literary work with a pleasant or amusing end, any funny happening, இன்பியல் படைப்பு, நகைச்சுவை நாடகம், வேடிக்கை நிகழ்வு; **com'ic** *(adj.)*
come'ly *(adj.)* pleasant to look at, graceful, மனத்திற்கு உகந்த, அழகான, நயமான; also *(adv.)*.
com'et *(n.)* a heavenly body having a tail of light behind it as it moves, வால் நட்சத்திரம்.
com'fit *(n.)* a sweet meat, இனிப்புப் பண்டம்.
com'fort *(n.)* a pleasant condition of being physically or mentally

relaxed, case, ஆறுதல், வசதி, தேறு தல்; **com'fortable** *(adj.)*.

com'ics *(n.pl.)* children's book containing funny stories, adventures, etc., சித்திரப் படக் கதை.

comity *(n.)* courtesy, மரியாதை, மட்டு மதிப்பு.

com'ma *(n.)* a punctuation mark, காற் புள்ளி.

command' *(v.t. & i.)* to have authority over, to order, to control, அதிகாரம் செலுத்து, கட்டளையிடு, அடக்கு, கொண்டுசெலுத்து; also *(n.)*; **command'ment** *(n.)*

commandeer' *(v.t.)* to seize or force for military purpose during wartime, இராணுவச் சேவைக்காகக் கட்டாயப்படுத்து, கைப்பற்று.

comman'do *(n.)* division of an army, படைப்பிரிவு.

comman'ding *(adj.)* powerful, majestic, திறமையுள்ள, மேம்பட்ட.

commem'orate *(v.t.)* to honour by way of some celebrations, நினைவு விழாக் கொண்டாடு; **commemora'tion** *(n.)*.

commence' *(v.t. & i.)* begin, தொடங்கு; **commence'ment** *(n.)*

commend' *(v.t.)* to make remarks about, போற்று, புகழ்; **commen'dable** *(adj.)*

commen'surate *(adj.)* proportionate, corresponding, ஒத்த அளவுடைய, தகுந்த.

comm'ent *(v.i.)* criticize, add notes to make something clear, திறனாய்வு செய், விளக்கக் குறிப்பெழுது; also *(n.)*; **commentary** *(n)*.

comm'erce *(n.)* buying and selling of goods, the study of this, வணிகம், வணிகவியல்; **commer'cial** *(adj.)*.

commis'erate *(v.t.)* to feel pity, express sympathy, இரக்கம் கொள், தயை காட்டு.

comm'issary *(n.)* a deputy, an officer in charge of army's provisions, பொறுப்பாளர், படையின் உணவுத் துறைப் பிரிவுப் பொறுப்பாளர்.

commi'ssion *(n.)* brokerage, an official group appointed to report on specific matter, an official paper giving authority, தரகு, ஆணைக் குழு, ஆணைப்பத்திரம்; also *(v.t.)*

commit' *(v.t.)* entrust, undertake, பொறுப்பு ஒப்படை, உறுதிசெய்; **commit'ment** *(n.)*

committ'ee *(n.)* a group of persons chosen to deal with some special matter, குழு.

commode' *(n.)* chest of drawers, concealed chamber-pot stool, இழுப் பறை, கழிவுக்கலன்.

commod'ious *(adj.)* spacious, comfortable, இடமகன்ற, வசதியான.

commodi'ty *(n.)* an article of trade, வணிகச்சரக்கு, பொருள்.

comm'on *(adj.)* ordinary, belonging equally, shared by many, வழக்கி லுள்ள, பொதுவான, எல்லோருக் கும் உரிய, பொதுப்படையான.

comm'ons *(n.)* common people of the lower house of parliament, the House of Commons, நாடாளு மன்றத்தில் மக்களவை உறுப் பினர்கள், மக்கள் அவை.

Comm'onwealth *(n.)* an association of countries who have joined together for their common good, or republic, மக்கள் பொது உரிமை அரசு, குடியரசு.

commo'tion *(n.)* an excited movement, confusion, கிளர்ச்சி, குழப்பம்.

comm'unal *(adj.)* pertaining to a community, shared by many, சமூகத் திற்குரிய, பொதுப் பண்பாட்டிற் குரிய.

communi'icate *(v.t. & i.)* to inform, to set in touch with, தெரிவி, தொடர்பு கொள்.

communica'tion *(n.)* an information sent, a piece of information, a way of passing information from place to place, தகவல் அனுப்புதல், தகவல் தொடர்பு.

communique′ *(n.)* an official announcement, அலுவலக அறிவிப்பு.
commun′ity *(n.)* a group of people having the same religion, nationality etc., a sharing of something by many, சமுதாயம், ஒத்த பொதுப் பண்பு.
commute′ *(v.t.)* change, to exchange one thing for another, மாற்று, மாற்றிப் பெறு, மாற்றீடு செய்; **commuta′tion** *(n.)*.
comp′act *(adj.)* brief, dense, firmly packed together, சுருக்கமான, செறிவான, உறுதியாக இணைக்கப்பட்ட.
compan′ion *(n.)* a friend, an associate, நண்பன், தோழன், **companionship** *(n.)*.
com′pany *(n.)* a business firm, companionship, a number of persons joined together, வாணிபக் கழகம், தோழமை, கூட்டுறவு, நிறுமம்.
compare′ *(v.t. & i.)* to see how far things are alike or not alike, ஒப்பு நோக்கு, ஒப்பீடு செய்; **comparison** *(n.)*; **comparable, compa′rative** *(adjs.)*.
compart′ment *(n.)* a partition or division, தடுக்கப்பட்ட பகுதி, தனியிடம்; **compart** *(v.t.)*
com′pass *(n.)* a device to show directions, திசைகாட்டி.
compasses *(n.pl.)* an instrument for drawing a circle, கவராயம்.
compa′ssion *(n.)* pity or sympathy for the suffering of another, இரக்க உணர்வு, தயவு, பரிவு; **compa′ssionate** *(adj.)*.
compat′ible *(adj.)* in agreement with, suitable, associating happily together, ஒத்துப்போகக்கூடிய, பொருத்தமான, ஒத்தியங்கத்தக்க; **compatibil′ity** *(n.)*.
compat′riot *(n.)* a fellow countryman, ஒரே நாட்டினர்; also *(adj.)*.
compeer′ *(n.)* one who is equal to another, நிகரானவர், சமமானவர்.
compel′ *(v.t.)* force to do, கட்டாயப் படுத்து.
compen′dium *(n.)* a collection, a book containing collective informations, தொகுப்பு, செறிவுச் சுருக்கம்; **compen′dious** *(adj.)*.
compensa′tion *(n.)* something given for loss, injury etc., இழப்பீடு; **com′pensate** *(v.t. & i.)*.
compete′ *(v.i.)* enter into a contest, fight etc., போட்டியிடு; **competi′tion, competi′tor** *(ns.)*.
com′petent *(adj.)* capable, skilled in doing, திறமையுள்ள, செயலாற்றலுடைய.
compile′ *(v.t.)* to collect and arrange together in one place, தொகு, திரட்டு; **compila′tion** *(n.)*.
compla′cent *(adj.)* self satisfied, தன்னிறைவுடைய, மனநிறைவுடைய; **compla′cence/compla′cency** *(ns.)*.
complain′ *(v.i.)* to state grievance, pain or suffering, முறையிடு, குற்றஞ்சாட்டு; **complaint′, complainant** *(ns.)*.
com′plement *(n.)* that which completes, a complete number or quantity, the words of the predicate excluding the verb, நிரப்புப் பொருள், முழுமை எண், முழுமை இயல்பு, நிரப்புக் கூறு; **complemen′tary** *(adj.)*.
complete′ *(v.t.)* to bring to a finish, முழுமையாக்கு; **comple′tion** *(n.)*.
com′plex *(adj.)* composed of many parts, not simple, கூட்டான, சிக்கலான; **complex′ity** *(n.)*.
comple′xion *(n.)* appearance, colour etc., of the skin, மேனி வண்ணம், உடல் நிறம்.
com′plicate *(v.t.)* to make difficult, சிக்கலாக்கு, குழப்பு; **complica′tion** *(n.)*; **com′plicated** *(adj.)*.
complicity *(n.)* share in a crime, complexity, குற்றத்தில் பங்கு, சிக்கலான நிலை.
complimen′tary *(adj.)* flattering or praising, given free as a sign of respect, புகழும், பாராட்டும், மதிப்பளிப்பாகத் தரப்படும்; **com′pliment** *(n.)*.

comply' *(v.i.)* to act in accordance with the wish of someone else, to yield, consent. பிறர் விருப்பத்திற்கிணங்கச் செயலாற்று, இணங்கு, உடன்படு.

compon'ent *(n.)* element, ingredient, கூறான, உறுப்பான, கூறு, உறுப்பு, பகுதி; also *(adj.)*

compose' *(v.t. & i.)* set words to music, arrange the types, to form by combining, பாட்டியற்று, அச்சுக் கோத்து இணை, இணைத்து வரிசைப்படுத்து; **composi'tion, compos'itor** *(ns.)*

com'posite *(adj.)* made up of distinct parts or elements, இணைக்கப்பட்ட, கோவையான.

com'post *(n.)* a mixture of manures, கலப்பு உரம்.

composit'ion *(n.)* the act of compounding, thing composed, a literary piece written for language practice, mixtures. தொகுத்தல், திரட்டு, இசைப்பாட்டு, கட்டுரை, கலவை.

composure *(n.)* tranquility, மன அமைதி.

compound[1] *(n.)* chemical substance formed by the combination of two or more elements, சேர்மம், also *(v.t. & i.)* & *(adj.)*; **compound'er** *(n.)*.

com'pound[2] *(n.)* an enclosure, வளாகம்.

comprehend' *(v.t.)* understand fully, take into mind, முழுமையாகப் புரிந்து கொள், அறிந்துகொள்.

comprehen'sion *(n.)* the act or power of understanding, புரிதிறன், அறிதிறன்; **comprehen'sible** *(adj)*.

comprehen'sive *(adj.)* extensive, including many things, பரந்த, பலவற்றை உள்ளடக்கிய.

com'press *(v.t.)* to press together, contract, condense, ஒன்றாக அழுத்து, சுருக்கு, ஒடுக்கு; **compre'ssion, compressibil'ity** *(ns.)*.

comprise' *(v.t.)* contain, consist of, உள்ளடக்கு, கொண்டிரு.

V. 6.

com'promise *(n.)* settlement of dispute by mutual consent, சமரச உடன்பாடு; also *(v.t.)*.

comptroll'er *(n.)* an official who examines public accounts, கணக்குத் தணிக்கையாளர்.

compul'sion *(n.)* compelling a person to do something, கட்டாயப்படுத்துதல்; **compul'sory** *(adj.)*.

Compunc'tion *(n.)* a sence of guilt, pricking of conscience, குற்ற உணர்வு, மனச்சாட்சியின் உறுத்தல்; **compunc'tious** *(adj.)*.

compute *(v.t.)* count or calculate, எண்ணு, கணக்கிடு, மதிப்பிடு.

comput'er *(n.)* a calculating device, கணிப்பொறி, கணினி; **compute'rize** *(v.t.)*.

com'rade *(n.)* friend, companion, உற்ற நண்பன், தோழன்.

con *(v.t.)* learn by heart, மனப்பாடம் செய்.

concatena'tion *(n.)* a series of events or things linked together, சங்கிலித் தொடர் அமைப்பு; **concat'enate** *(v.t.)*.

conc'ave *(adj.)* curved inwards, உட்குழிந்த.

conceal' *(v.t.)* to keep secret, hide, மறைத்து வை, ஒளித்து வை; **conceal'ment** *(n.)*; **conceal'ed** *(adj.)*.

concede' *(v.t.)* give way to, surrender, விட்டுக்கொடு, ஒத்துக்கொள்.

conceit' *(n.)* a higher opinion of oneself, self importance, போலித் தற்பெருமை, இறுமாப்பு; **concei-t'ed** *(adj.)*.

conceive *(v.t. & i.)* to form or imagine in the mind, become pregnant, கருது, கருத்தரி; **conceiv'able** *(adj.)*.

concentrate *(v.t. & i.)* bring together to one point, strengthen a solution of reducing its volume, condense, ஒருமுகப்படுத்து, செறிவாக்கு, கெட்டியாக்கு; **concentra'tion** *(n.)*.

concen'tric *(adj.)* having the same centre, ஒரு மையமான.

con'cept *(n.)* a general notion about something, கருத்து, கருத்துப்படிவம்; **concep'tion** *(n.)*.

concep'tion *(n.)* forming an idea, beginning of pregnancy, கருத்துரு வாக்கம், கருத்தரித்தல்.

concern[1] *(n.)* anxiety, consideration, connection, கவலை, அக்கறை, தொடர்பு; also *(v.t.)*, **concer'ned** *(adj.)*, **concer'ning** *(prep.)*.

concern[2] *(n.)* a business or company, தொழில் நிறுவனம்.

concert *(n.)* agreement, a musical programme, ஒத்திசைவு, இணக்கம், இசைநிகழ்ச்சி ; also *(v.t.)*.

concert'ed *(adj.)* preplanned, harmonious, முன்னேற்பாடு செய்யப் பட்ட, இணைந்து செயலாக்கப்பட்ட.

conce'ssion *(n.)* act of yielding, the thing granted, discount, விட்டுக் கொடுத்தல், பொருளுதவி, சலுகை, கழிவு.

conch *(n.)* spiral shaped large shell, சங்கு.

concil'iate *(v.t.)* to develop friendship, pacify, நட்பை ஏற்படுத்து, சமாதானப் படுத்து; **conciliation, concili'ator** *(ns.)*, **concil'iatory** *(adj.)*.

concise' *(adj.)* brief but expressive, short, அடக்கமான, பொழிப்பான, சுருக்கமான.

conc'lave *(n.)* secret or private meeting, அந்தரங்கக் கூட்டம்.

conclude' *(v.t. & i.)* to make a decision, to bring to an end, சிந்தித்து முடிவு செய், முடிவுக்கு வா, செய்துமுடி.

conclu'sion *(n.)* determination, inference, முடிவு, தீர்மானம்; **conclus'ive** *(adj.)*.

concoct' *(v.t.)* to plot, prepare, invent, mix, சதி செய், இட்டுக்கட்டு, புனைந் தியற்று, வடித்திறு; **concoc'tion** *(n.)*.

conco'mitant *(adj.)* accompanying, co-existing, உடன் வருகிற, உடனியங்குகிற; also *(n.)*.

con'cord *(n.)* agreement, harmony, உடன்பாடு, ஒத்திசைவு; **concord'ance** *(n.)*.

conc'ourse *(n.)* crowd, a flocking together, கூட்டம், பெருந்திரள்.

concrete[1] *(n.)* a building material, கற்காரை.

concrete *(adj.)* solid, real, not abstract, திண்மையான, உண்மையான, பருப்பொருளான.

conc'ubine *(n.)* a woman who lives with a man without marriage, திருமணம் செய்யாமல் ஆணுடன் இணைந்து வாழும் பெண்.

concur' *(v.i.)* agree with, coincide, உடன்படு, பொருந்து, உடன்நிகழ்; **concu'rrence** *(n.)*.

conc'urrent *(adj.)* existing together, உடனிகழ்கிற.

concus'sion *(n.)* violent shaking or shock due to collision or explosion, மோதுதலால் அல்லது வெடிப்பதால் ஏற்படும் பேரதிர்ச்சி.

condemn' *(v.t.)* to give judicial decision against, to declare something unfit for use, குற்றவாளி யாக்கு, ஒதுக்கு; **condemna'tion** *(n.)*, **condemned'** *(adj.)*.

condense *(v.t. & i.)* press together, make it shorter, harden, சேர்த்து அழுத்து, ஒடுக்கு, சுருக்கு, கெட்டிப் படுத்து; **condensa'tion, conden'ser** *(ns.)*, **condensed'** *(adj.)*.

condescend' *(v.i.)* to forgo one's superiority, to act graciously, மன மிரங்கி அருள்செய், இரக்கம் காட்டு.

condign' *(adj.)* adequate, suitable, deserved, போதுமான, ஏற்ற, தகுதி வாய்ந்த.

condi'ment *(n.)* a thing used to add flavour to food, சுவையூட்டும் பொருள்.

condi'tion *(n.)* state, rank or position, terms of agreement, நிலை, தரம், பதவி நிலை, ஒப்பந்த விதி, கட்டுப் பாடு; also *(v.t.)*; **conditional** *(adj.)*.

condol'ence *(n.)* expression of sympathy at another's sorrow, pity, துக்கம் தெரிவி, இரக்கம், துயரம்; **condole'** *(v.i.)*.

condone *(v.t.)* to excuse, overlook, மன்னித்து விடு, கவனிக்காத மாதிரி விட்டுவிடு; **condona'tion** *(n.).*
conduce' *(v.i.)* help to produce, contribute to, செயல்துணையாக இரு, ஏதுவாக இரு; **condu'cive** *(adj.).*
conduct[1] *(n.)* behaviour, guidance, நடத்தை, வழித்துணை.
conduct[2] *(v.t. & i.)* to manage, behave, guide, lead, இயக்கு, நடத்து, வழி காட்டு, கொண்டு செலுத்து, கடத்து.
conduc'tor *(n.)* an official in charge of a bus etc., a thing that conducts, a guard, நடத்துநர், கடத்தி, வழிகாட்டி.
con'duit *(n.)* channel or pipe for carrying water, electric cables etc., நீர்க்குழல், வாய்க்கால், மின்கம்பிக் குழாய்.
cone *(n.)* a solid round at one end and pointed at the other. an ever green tree, கூம்பு , ஊசி இலை மரம்.
confab'ulate *(v.t.)* talk together, கூடிப்பேசு; **confabula'tion** *(n.).*
confec'tion *(n.)* a sweetmeat, இனிப்புப் பண்டம்.
confec'tioner *(n.)* dealer in sweets, pastry etc., தின்பண்டம் விற்பவர்.
confec'tionary *(n.)* sweet shop, sweet in general, மிட்டாய்க்கடை, தின் பண்டம்.
confed'eracy *(n.)* an alliance, a league, plot, நேச உடன்பாடு, சங்கம், சதி.
confed'erate *(n.)* one who has agreed to work with others, a supporter or follower, சதிக்குக் கூட்டு நிற்பவர், கூட்டாளி, கூட்டிணைப்பு உறுப் பினர்; also *(adj.)* & *(v.t. & i.).*
confer' *(v.t. & i.)* to grant, to consult each other, அளி, கலந்தாலோசி.
con'ference *(n.)* a formal meeting for exchange of ideas, discussions etc., மாநாடு, கலந்தாய்வுக் கூட்டம்.
confer'ment *(n.)* award, அளிப்பு .
confess' *(v.t. & i.)* to make known that one is guilty, to admit one's sins to a priest, குற்றத்தை ஒப்புக்கொள், பாவ மன்னிப்புக் கேள்.
confe'ssion *(n.)* acknowledgement of a crime or sin, குற்றத்தை அல்லது தவற்றை ஒப்புக்கொள்ளுதல், பாவ மன்னிப்புக் கேட்டல்.
confide' *(v.i. & t.)* entrust, tell private secrets to someone, முழுமையாக நம்பு, தனிப்பட்ட மறைபொருள் களை நம்பிச் சொல்.
confident' *(n.)* a reliable friend, நம்பிக்கைக் குரிய நண்பன்.
con'fidence *(n.)* self-reliance, trust or belief in someone's ability, தன்னம் பிக்கை, ஒருவரது திறமையில் உள்ள நம்பிக்கை; **con'fident** *(adj.).*
confiden'tial *(adj.)* private, secret, தனிப்பட்ட, மறைபொருளான, அந்தரங்கமான.
configura'tion *(n.)* shape or figure produced by the relative position of parts. வெளி வரை வடிவம்.
con'fine *(v.t.)* keep within limits, to shut up in a small place, to imprison, எல்லைக் குட்படுத்து, கட்டுப்படுத்து, அடைத்து வை, சிறைப்படுத்து; also *(n.).*
confine'ment *(n.)* child-birth, imprisonment, restriction, பிள்ளைப் பேறு, சிறைவாசம், கட்டுப்பாடு.
confirm' *(v.t.)* to strengthen, to make sure, நிலைநாட்டு, உறுதிப்படுத்து; **confirma'tion** *(n.).*
con'fiscate *(v.t.)* to seize as a punishment or penalty, பறிமுதல் செய்; **confisca'tion** *(n.).*
conflagra'tion *(n.)* a big fire, பெருந்தீ, ஊழித்தீ.
conflict' *(n.)* disagreement, struggle or contest, பூசல், முரண்பாடு, மோதல், சண்டை; also *(v.i.)*, **conflict'ing** *(adj.).*
con'fluence *(n.)* a flowing together or meeting place of two rivers, junction, நதிச் சங்கமம், சந்திப்பு, கூட்டு; **con'fluent** *(adj.).*

conform′(*v.t. & i.*) make similar, to act according to, to agree with, ஒத்ததாக ஆக்கு, இணங்கி நட, ஒத்துப்போ.

conform′ity (*n.*) harmony, agreement, ஒத்த நிலை, இணக்கம், பொருத்தம்.

confound′ (*v.t.*) scatter, surprise greatly, defeat, confuse, சீர்குலை, திகைப்பூட்டு, தோல்வியுறச் செய், குழப்பு; **confound′ed** (*adj.*).

confront′ (*v.t.*) meet face to face, oppose, நேருக்கு நேர் நில், எதிர்த்துத் தாக்கு.

confuse′ (*v.t.*) mistake one thing for another, put into disorder, குழப்பு, கலக்கு, தாறுமாறாக ஆக்கு; **confu′sion** (*n.*); **confused′** (*adj.*).

confute′ (*v.t.*) to prove to be false, தவறென்று நிரூபி, மறுத்துரை.

congeal′ (*v.t. & i.*) to freeze, solidify by cooling, உறையச்செய், குளிரூட்டிக் கெட்டியாக்கு.

conge′nial (*adj.*) suiting to one's nature, agreeable, sympathetic, ஒத்த இயல்புடைய, இணக்கமுடைய, மனதுக்கொத்த, உகந்த.

congen′ital (*adj.*) belong to one existing from birth, பிறவிக் கூறான.

conger (*n.*) a sea eel, விலாங்கு மீன்.

cong′eries (*n.pl.*) gathered mass, குவியல்.

congest′ion (*n.*) overcrowding, abnormal accumulation, நெருக்கடி, பெருந்திரள்; **congest′ed** (*adj.*).

conglom′erate (*adj.*) gathered together into a mass, உருண்டு திரண்ட, ஒன்றாகத் திரட்டப்பட்ட; **conglomera′tion** (*n.*).

congrat′ulate (*v.t.*) to express pleasure and joy, wish a person on any success, வாழ்த்து, மகிழ்ச்சி தெரிவி, பாராட்டு, **congratula′tion** (*n.*), **congrat′ulatory** (*adj.*).

con′gregate(*v.t. & i.*) to come together in a crowd, make into a lump, ஒருங்கு கூடு, ஒன்று திரட்டு.

congreg′ation (*n.*) a gathering, a religious assembly, கூட்டம், வழிபாட்டுக் கூட்டம்.

con′gress (*n.*) a formal meeting of people to make plans etc., a political organization in India, legislative body of the U.S.A, ஆலோசனைக் கூட்டம், இந்தியாவின் ஓர் அரசியல் கட்சி, அமெரிக்கச் சட்டப் பேரவை.

con′gruence (*adj.*) mutual correspondence in all respects, harmonious relations, சர்வசமம், முற்றிசைவு; **congruent, con′gruous** (*adjs.*); **congru′ity** (*n.*).

conjec′ture (*n.*) supposition, a guess, opinion formed without proof or evidence, உய்த்துணர்வு, சான்று, கற்பனை, ஊகம்; **conjec′tural** (*adj.*).

conjoint′ (*adj.*) joined together, attached, ஒன்றிணைந்த, பிணைக்கப்பட்ட; **conjoin** (*v.i. & t.*).

con′jugal (*adj.*) having to do with marriage, between husband and wife, மணவாழ்க்கைக்குரிய, கணவன்–மனைவிக்கிடையேயான.

con′jugate (*v.t. & i.*) inflect the verb, வினைச்சொல் வடிவங்களை ஆக்கு; **conjuga′tion** (*n.*).

conjunc′tion (*n.*) a joining word connecting sentences, clauses or words, a joining together, இணையிடைச் சொல், இணைப்பு.

conjunc′ture (*n.*) position of affairs at a particular time.

conjure′[1] (*v.t.*) to call on by a sacred name, கடவுளைக் கூவி அழை.

conjure[2] (*v.i. & t.*) do clever tricks, practise charms, செப்பிடுவித்தை காட்டு, தந்திரம் செய், மந்திரம் கூறு.

con′jurer (*n.*) a magician, செப்பிடுவித்தைக்காரன், மந்திரவாதி.

connect′ (*v.t. & i.*) join or be joined together, make coherent, இணை, சேர், பொருத்து, கூட்டு, ஒன்றுபடுத்து; **connect′ed** (*adj.*).

connec'tion *(n.)* something that connects or is connected, state of being joined, relationship, இணைப்பு, இணைக்கப்பட்ட பொருள் அல்லது நிலை, தொடர்பு.

conniv'ance *(n.)* secret approval to wrong doing, கண்டும் காணாமல் இருத்தல், மறைமுக ஆதரவு; **connive'** *(v.i.)*.

connoisseur' *(n.)* an expert judge of fine arts, நுண்கலை வல்லுநர்.

connotate' *(v.t.)* imply, signify, குறிப் பால் உணர்த்து, குறிப்பிடு; **connota'tion** *(n.)*.

connu'bial *(adj.)* having to do with marriage, matrimonial, திருமணம் தொடர்பான, கணவன்–மனைவிக் குரிய.

con'quer *(v.t. & i.)* to win by force, to defeat completely, கீழடக்கு, வெற்றி நாட்டு; **con'queror** *(n.)*.

con'quest *(n.)* victory, something won by force, வெற்றி, கீழடக்குதல்.

consanguinity *(n.)* relationship by blood, குருதி உறவு; **consang'uine** *(adj.)*.

con'science *(n.)* moral sense, inward feeling of right or wrong, மனச் சாட்சி, உளச்சான்று.

conscien'tious *(adj.)* guided by conscience, careful and honest, மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட, நேர்மையான; **con'scionable** *(adj.)*.

con'scious *(adj.)* awake, sensible, aware, சுயநினைவுடைய, உணர்ச்சி யுடைய, விழிப்புடைய; **con'sciousness** *(n.)*.

conscribe' *(v.t.)* compel by law to join the military service, படைத்துறைப் பணியில் சேரக் கட்டாயப்படுத்து; **conscript, conscrip'tion** *(ns.)*.

con'secrate *(v.t.)* make sacred, devote, get apart for a sacred or special purpose, புனிதமாக்கு, நேர்ந்திடு, திருப்பணிக்கு அல்லது குறிப்பிட்ட பணிக்கு என ஒதுக்கி வை.

consec'utive *(adj.)* coming in order, successive, வரிசையான, தொடர்ச்சி யான; **consecu'tion** *(n.)*.

consen'sus *(n.)* common agreement, unanimity, பொது ஒப்புதல், கருத்து ஒருமைப்பாடு.

consent' *(v.i.)* give permission, comply, அனுமதி அளி, இணங்கு.

con'sequence *(n.)* that which follows as a result, effect, விளைவு, பயன்; **con'sequent** *(adj.)*.

conserv'ancy *(n.)* a body of men or organization charged with safeguarding, பாதுகாப்புக் குழு.

conserva'tion *(n.)* protection, preservation, பாதுகாப்பு, பேணுகை.

conserv'ative *(adj.)* not accepting great or sudden changes, பழமை பேணும்; also *(n.)*.

conserve' *(v.t.)* preserve, protect from destruction, பேணு, அழிவினின்றும் பாதுகாப்பு அளி.

con'sider *(v.t. & i.)* to think seriously about, to take into account, ஆழ்ந்து சிந்தி, கருது.

consid'erable *(adj.)* large, important, worth-considering, பெரிய, முக்கிய மான, கருதத்தக்க.

consid'erate *(adj.)* thoughtful, courteous, சிந்திக்கிற, அன்பாதரவான.

considera'tion *(n.)* importance, reason, sympathy, முக்கியத்துவம், நோக்கம், சலுகை; **considering** *(prep.)*.

consign' *(v.t.)* hand over, to send by rail etc., deposit, ஒப்படை, அனுப்பு, செலுத்து; **consign'ment** *(n.)*.

consist' *(v.i.)* to be made up of, to be composed of, ஆக்கப்பட்டிரு, அமைந் திரு.

consist'ent *(adj.)* not contradictory, not changing, constant, முரண் பாடற்ற, மாறாத, நிலையான; **consist'ence** *(n.)*.

consola'tion *(n.)* the act of giving help or comfort in sorrow, ஆறுதல், தேறு தல்; **console'** *(v.t.)*.

consol'idate *(v.t. & i.)* to unite or combine, harden, condense, ஒன்றாக்கு, கெட்டிப்படுத்து, திண்மப் படுத்து; **consolida'tion** *(n.)*.

con'sonant *(n.)* any letter of the alphabet except a,e,i,o,u, மெய்யெழுத்து.

con'sort *(n.)* husband or wife, companion, கணவன், மனைவி, நண்பன்.

conspec'tus *(n.)* general view, பொதுக்கருத்து.

conspic'uous *(adj.)* catching the attention, clearly seen, கவனத்தை ஈர்க்கிற, தெளிவாகப் புலனாகிற.

conspir'acy *(n.)* a secret union for an evil purpose, இரகசியச் சதிக்கூட்டம்; **conspire'** *(v.i.)*.

con'stable *(n.)* a police man, காவலர்.

con'stant *(adj.)* never ending, unchanging, முடிவுறா, மாறா; **con'stancy** *(n.)*.

constella'tion *(n.)* a group of stars, விண்மீன் தொகுதி, இராசி.

consterna'tion *(n.)* terror, astonishment, பேரச்சம், திகில்.

constipa'tion *(n.)* irregularity in emptying the bowels, மலச்சிக்கல்; **con'stipate** *(v.t.)*.

constituency *(n.)* body of persons living in a voting district, வாக்காளர் தொகுதி; **constit'uent** *(adj.)*.

constit'uent *(n.)* a component part, member of a constituency, கூறு, வாக்காளர் குழு.

con'stitute *(v.t.)* form or make up, establish, உருவாக்கு, நிறுவு.

constitu'tion *(n.)* the way in which something is formed or made up, a system of laws, governing a country, அமைப்புக்கூறு, அரசியல் அமைப்புச் சட்டம்.

constrain' *(v.t.)* to force a person to act in a certain way, imprison, கட்டாயப் படுத்து, அடைத்து வை; **constraint'** *(n.)*.

constrict' *(v.t.)* to press together tightly, contract, இறுக்கு, சுருக்கு, ஒடுக்கு; **constriction** *(n.)*.

constric'tor *(n.)* one who or that which constricts, நெருக்கி இறுக்கும் ஒன்று, அமுக்கி.

construct' *(v.t.)* to build, arrange, கட்டமை, ஆக்கு, வரை.

construc'tion *(n.)* anything built, arrangement, கட்டடம், கட்டுமானம், அடுக்கமைப்பு; **construc'tive** *(adj.)*.

construe' *(v.t.)* interpret, explain the meaning of, analyse, மொழியாக்கம் செய்து கூறு, பொருள் விளக்கு, உய்த்துணர்.

con'sul *(n.)* representative of a foreign country, அயல்நாட்டுத் தூதர்.

con'sulate *(n.)* office of a consul, அயல்நாட்டுத் தூதரகம்.

consult' *(v.t. & i.)* ask advice of, seek information, கலந்தாலோசி, தகவல் தேடு; **consul'tant, consulta'tion** *(ns.)*.

consume' *(v.t. & i.)* use up, destroy by fire, spend, பயன்படுத்து, சுட்டெரி, செலவு செய்.

consum'er *(n.)* user of a product, நுகர்வோர்.

consumm'ate *(adj.)* of the highest perfection, முழுமையான, நிறைவான; also *(v.t.)*; **consumma'tion** *(n.)*.

consump'tion *(n.)* using up, the act of consuming, பயன்பாடு, நுகர்வு.

con'tact *(n.)* coming together, physical touch, connection, ஒன்றாக இணைதல், தொடுதல், தொடர்பு; also *(v.t.)*.

conta'gious *(adj.)* spreading easily, infectious, விரைவில் பரவுகிற, தொற்றுகிற; **conta'gion** *(n.)*.

contain *(v.t.)* to keep or have inside, hold in check, உட்கொண்டிரு, அடக்கு, தடுத்து நிறுத்து, கட்டுப் படுத்து.

contain'er *(n.)* vessel or box that contains, கொள்கலம்.
contam'inate *(v.t.)* pollute, மாசு படுத்து; **contamina'tion** *(n.).*
contemn' *(v.t.)* to look down on, to treat with disregard, ஏளனமாகக் கருது, இகழ்.
con'template *(v.t.)* to view mentally, to consider seriously, ஆழ்ந்து சிந்தி, ஆராய்ந்து நோக்கு; **contempla'tion** *(n).*
contem'porary *(adj.)* living at the same period of time, சமகாலத்தில் வாழ்ந்த, சமகாலத்திய.
contempt' *(n.)* lack of respect, a feeling of dislike, அவமதிப்பு, இகழ்ச்சி, வெறுப்பு; **contemp'tuous** *(adj.).*
contend' *(v.i. & t.)* strive, struggle with, fight against, முயற்சி செய், போராடு, சண்டையிடு; **contend'er** *(n.).*
con'tent *(adj.)* satisfied, well pleased, மனமகிழ்வுடைய, தன்னிறை வுடைய; **contentment** *(n.).*
conten'tion *(n.)* controversy, debate, வாக்குவாதம், பிணக்கு, விவாதம்; **content'ious** *(adj.).*
contents *(n.pl.)* things contained, list of subjects, அடக்கம், உள்ளடக்கம், பொருளடக்கம்.
con'test *(n.)* competition, struggle, போட்டி, சண்டை; also *(v.t.)*, **contestant** *(n.).*
con'text *(n.)* environment, particular situation, தறுவாய், சூழல், சந்தர்ப் பம்.
contig'uous *(adj.)* placed so near as to touch, adjoining, ஒட்டியுள்ள, அருகமைந்த; **contigu'ity** *(n.).*
con'tinent[1] *(n.)* one of the main divisions of land on the earth, கண்டம்; **continen'tal** *(adj.).*
con'tinent[2] *(adj.)* moderate, self-restrained, மிதமான, தன்னடக்க முடைய.
con'tingence/con'tingency *(n.)* the chance that something may happen, casual and petty expenses, தற்செயல் நிகழ்வு, எதிர்பாராச் செலவு, சில்லறைச் செலவு; **contin'gent** *(adj.).*
contin'gent[1] *(adj.)* see contingence.
contin'gent[2] *(n.)* a division of the defence force, படைப்பிரிவு.
contin'ual *(adj.)* uninterrupted, occurring on every occasion, தடையற்ற, இடைவிடாத, தொடர்ந்து நிகழும்; **contin'uance** *(n.).*
continu'ation *(n.)* the act of continuing, தொடர்ச்சி.
contin'ue *(v.t. & i.)* to keep on doing, to go on again after a break or pause, தொடர், மீண்டும் துவங்கு; **contin'ued** *(adj.).*
continu'ity *(n)* uninterrupted connection, இடையறாத தொடர்பு.
contin'uous *(adj.)* without interval or break, இடைவிடாத, தொடர்ச்சியான, முடிவற்ற.
contort' *(v.t.)* to turn or force violently, உருமாறும்படித் திருகி முறுக்கு; **contor'tion** *(n.).*
con'tour *(n.)* an outline, boundary, விளிம்புவரை, எல்லைக் கோடு.
con'traband *(n.)* things illegally imported or exported, கள்ளக் கடத்தல்.
contracep'tive *(adj.)* a device for preventing pregnancy, கருத்தடை; **contracep'tion** *(n.).*
con'tract *(v.t. & i.)* to become or make less, to enter into an agreement, சுருங்கு, உடன்படிக்கை செய்து கொள்; also *(n.).*
contra'ction *(n.)* a shrinking or shortening, சுருக்கம், குறுக்கம்.
contrac'tor *(n.)* one who works on contract, ஒப்பந்ததாரர்.
contradict' *(v.t. & i.)* say against, disagree with, மறுத்துப்பேசு, முரண்படு; **contradic'tion** *(n.); contra-dic'tory* *(adj.).*

con'trary *(adj.)* opposed in nature, எதிரிடையான, நேர்மாறான, முரணான.
contrast' *(v.t. & i.)* show the difference by comparing, oppose, ஒப்பிட்டு வேறுபடுத்திக் காட்டு, மாறுபடு; also *(n.)*.
contravene' *(v.t.)* conflict with, act against law, முரண்படு, சட்டத்தை மீறி நட; **contraven'tion** *(n.)*.
contrib'ute *(v.t. & i.)* pay a share, to give alongwith others, give to a common cause, பங்களி, வழங்கு, பொதுப் பணிக்கு உதவு; **contribu'tion** *(n.)*.
contrite *(adj.)* feeling sorry for the sins one has done, broken hearted, தன் தவறுக்காக மனம் வருந்துகிற, மனமுடைந்த; **contri'tion** *(n.)*.
contriv'ance *(n.)* scheme, invention, mechanical device, திட்டம், கண்டு பிடிப்பு, பொறி, கருவி; **contrive'** *(v.t. & i.)*.
control' *(v.t.)* hold in check, command, கட்டுப்படுத்து, இயக்கு, அடக்கி ஆள்; **controll'able** *(adj.)*.
con'troversy *(n.)* dispute, a wordy quarrel, கருத்துமுரண், சொற்போர்; **controver'sial** *(adj.)*, **con'trovert** *(v.t.)*.
conun'drum *(n.)* riddle, puzzle, விடுகதை, புதிர்.
contuse' *(v.t.)* cause injury, ஊமைக் காயம் ஏற்படுத்து; **contu'sion** *(n.)*, **contus'ive** *(adj.)*.
convales'cence (n.) gradual recovery from sickness, உடல் நல மீட்பு; **convales'cent** *(adj.)*.
convene' *(v.t. & i.)* to call people to a meeting, கூட்டத்திற்கு ஏற்பாடு செய், கூட்டத்திற்கு அழை; **conven'er** *(n.)*, **conven'able** *(adj.)*.
conven'ience *(n.)* the state or quality of being comfort, வசதி, வாய்ப்பு; **conven'ient** *(adj.)*.
con'vent *(n.)* a dwelling place where nuns live, கன்னிமாடம்.
conven'tion[1] *(n.)* conference, a meeting specially called, மாநாடு, சிறப்புக் கூட்டம்; **conven'tional** *(adj.)*.
conven'tion[2] *(n.)* practices established through ages or by majority, மரபு; **conventional** *(adj.)*.
converge' *(v.i. & t.)* come together to meet at one point, ஒரு புள்ளியைச் சென்றடை, ஒருமுகப்படு, குவி; **conver'gence, conver'gency** *(ns.)*; **conver'gent** *(adj.)*.
con'versant *(adj.)* having knowledge of, well-versed, பழகியறிந்த, தேர்ந்த, ஈடுபாடுள்ள.
conversa'tion *(n.)* familiar discourse between two or more persons, உரையாடல்.
converse'[1] *(v.i.)* talk together in a friendly way, கலந்து பேசு, உரையாடு; also *(n.)*.
con'verse[2] *(adj.)* opposite, contrary, மறுதலையான, முரணான; also *(n.)*.
con'version *(n.)* alternation, act of converting, மாற்றம், மாறுபாடு.
convert' *(v.t.)* to change from one state to another, ஒன்றை மற்றொன்றாக மாற்று; also *(n.)*, **conver'tible** *(adj.)*.
con'vex *(adj.)* curved outwards like the back of the spoon, குவிந்த, வெளி வளைவான.
convey' *(v.t.)* transmit, give ideas to others, to transfer, அறிவி, செய்தி வழங்கு, அனுப்பு, கொண்டு செல்; **convey'or** *(n.)*.
convey'ance *(n.)* carriage, ஊர்தி, வாகனம்.
con'vict[1] *(v.t.)* to prove guilty, குற்றவாளியெனத் தீர்ப்பளி; **convicted', conviction** *(n.)*.
con'vict[2] *(n.)* condemned criminal, தண்டனைக் கைதி.
convince' *(v.t.)* come to believe that something is true, நம்ப வை, உண்மையென்று நிரூபி, ஏற்கும்படி செய்; **convin'cible, convincing** *(adjs.)*.
convivial *(adj.)* having to do with a feast, sociable and friendly, விருந்துக்குரிய, கூடி மகிழும், நட்புக்குரிய.

convoca'tion *(n.)* meeting of the university at which degrees are conferred, assemly, பட்டமளிப்பு விழா, கூட்டம்; **convoke** *(v.t.)*.

con'volution *(n.)* one turn of a coil or spiral, சுருள்; **convolute** *(adj.)*.

convoy' *(n.)* escort, accompaniment of vehicle for the purpose of protection, மெய்க்காப்பு, பாதுகாப்பு வண்டித் தொடர்; also *(v.t.)*.

convulse *(v.t.)* affect by spasm or fits, to shake violently, வலிப்பு உண்டாக்கு, அதிர்ச்சியூட்டு, அச்சுறுத்து; **convul'sion** *(n.)*, **convul'sive** *(adj.)*.

con'y, con'ey *(n.)* a rabbit, முயல்.

cook *(v.t. & i.)* prepare food, சமையல் செய்; also *(n.)*.

cook'er *(n.)* cooking apparatus, அழுத்தக்கலன்.

cook'ery *(n.)* the art or practice of cooking, சமையல் கலை.

cool *(adj.)* moderately cold, not excited, remove heat from, குளிர்ந்த, தணுப்பான, அமைதியான; **coolant, cool'ness** *(ns.)*.

cool'ie, cooly *(n.)* a hired labourer, or porter, கூலியாள்.

coom *(n.)* coal dust, soot, கரி, ஒட்டடை.

coomb, combe *(n.)* steep short valley, சரிவான குறுகிய பள்ளத்தாக்கு.

coop *(n.)* a cage used for catching or keeping fowls or small animals, விலங்குகளை அடைத்து வைக்கும் பட்டி, கூண்டு; also *(v.t.)*.

coop'er *(n.)* maker or repairer of cages or small vessels, கூடை முடைபவர், கூண்டு செய்பவர், பழுதுபார்ப்பவர்; also *(v.t.)*.

co-operate *(v.i.)* act or work together, ஒத்துழை; **co-opera'tion** *(n)*.

co-operative *(adj.)* of co-operate, run on basis of economic co-operate, ஒத்துழைக்கிற, கூட்டுறவு முறையிலான.

co-op't *(v.t.)* elect a member to the committee by votes of existing members, பழைய உறுப்பினர்களின் வாக்கெடுப்புமூலம் புதிய உறுப்பினரைத் தேர்ந்தெடு; **co-optation** *(n.)*.

co-ord'inate *(adj.)* equal in rank, kind or importance, ஒத்த நிலையான, ஒத்த வகையான, ஒத்த தரமுடைய; also *(v.t.)*; **co-ordina'tion** *(n.)*.

coot *(n.)* a kind of web-footed water bird, கருநாரை.

cop'al *(n.)* a kind of resin, ஒரு வகைக் குங்கிலியம்.

coparcenary *(n.)* joint heirship, equal share, கூட்டுவாரிசுரிமை, சம பங்கு; **co-parcener** *(n.)*.

co-partner *(n.)* partner, பங்காளி, கூட்டாளி.

cope[1] *(n.)* hooded garment worn by clergymen, கிறித்துவப் பாதிரிமார் அணியும் மேலங்கி; also *(v.t.)*.

cope[2] *(v.i.)* compete with, manage, to handle skilfully, ஈடுகட்டு, எதிர்த்துச் சமாளி, திறமையாகக் கையாளு.

cop'ing *(n.)* the top row of stones in a wall, மதிலின் முகட்டுக் கல்லடுக்கு.

cop'ious *(adj.)* rich, abundant, வளமான, ஏராளமான; **copious'ness** *(n.)*.

copp'er *(n.)* a reddish metal, an element, செம்பு, ஒரு தனிமம்.

coppice, copse *(n.)* a wood of small trees grown for periodical cutting, குறுங்காடு.

copraphagous *(adj.)* feeding of dung, விலங்குக் கழிவுகளை உண்ணுகிற.

copula *(n.)* part of verb acting as a connecting link, இணைப்பு வினை.

copula'tion *(n.)* connection of predicate with subject, sexual union, எழுவாய்—பயனிலை இணைப்பு, சிற்றின்பப் பிணைப்பு, புணர்ச்சி; **cop'ulate** *(v.i.)*.

cop'y *(n.)* imitation, one of a number of the same book, reproduction, நகல், சரிபடிவம், படி, பகர்ப்பு; also *(v.t. & i.)*.

cop'yright *(n.)* exclusive right to print publish etc., பதிப்புரிமை; also *(adj.)*.

coquette *(v.i.)* allure, flirt, மயக்கு, மோகமூட்டு; **coquetry** *(n.).*
co'racle *(n.)* a kind of boat covered with skin, தோலால் மூடப்பட்ட கூடை வடிவப் படகு.
co'ral *(n.)* a hard substance of various colours formed by an organism in the sea. பவழம்; **coralline** *(adj.).*
corb *(n.)* a kind of box used in mines, கனிச் சுரங்கத்தில் பயன்படுத்தப்படும் கூடை.
corban *(n.)* an offering given to god, நேர்த்திப் பொருள், காணிக்கை.
corbel *(n.)* a projection from wall to support something, தண்டையக் கட்டு.
corb'ie *(n.)* a carrion crow, அண்டங் காக்கை.
cord *(n.)* rope of small diameter, நாண், இழை ; also *(v.t.).*
cord'ate *(adj.)* heart-shaped, இதய வடிவான.
cord'ial *(adj.)* warm, hearty, அன் பான, மனமார்ந்த; **cordial'ity** *(n.).*
cordite *(n.)* smokeless gun powder, புகையிலா வெடி மருந்து.
delet'erious *(adj.)* harmful, தீங்கு விளைவிக்கும்.
dele'tion (see delete).
delib'erate *(v.i. & t.)* weigh well in your mind, consider the reasons for and against, சீர்தூக்கு, நன்மை தீமை களை ஆராய்ந்து நோக்கு; also *(adj.)*; **deliberation** *(n.)*.
del'icacy *(n.)* fineness, nicety, நுண்மை, நேர்த்தி.
del'icate *(adj.)* fine, not strong, gentle, requiring careful handling, ஆழ மான, மென்மையான, கவனமாகக் கையாளவேண்டிய.
deli'cious *(adj.)* delightful, சுவை யான, மகிழ்ச்சி அளிக்கும்.
delight' *(n.)* great joy, gladness, மகிழ்ச்சி, களிப்பு; **delight'ful** *(adj.)*.
delimit *(v.t.)* to assign the boundaries, எல்லை வரையறு; **delimita'tion** *(n.)*.
delin'quency *(n.)* neglect of duty, crime, கடமை தவறுதல், குற்றச் செயல்; **delinq'uent** *(n.)*.
deli'rium *(n.)* mental disturbance due to illness, சன்னி, நோயினால் ஏற்படும் மூளைக்கோளாறு; **delirious** *(adj.)*.
deli'ver *(v.t.)* give a speech, distribute, transfer, liberate, give birth to a child, சொற்பொழிவாற்று, வழங்கு, கொண்டு சேர், விடுவி, குழந்தை பெறு; **delivery** *(n.)*.
dell *(n.)* a small valley, சிறு பள்ளத் தாக்கு.
del'ta *(n.)* of the form of a triangular piece of land, முக்கோண வடிவ முடைய ஆற்றின் கழிமுகப் பகுதி; **delta'ic** *(adj.)*.
delude' *(v.t.)* cheat, mislead, ஏமாற்று, தவறாக வழிகாட்டு.
delu'ge *(n.)* great flood, great amount of anything, பெருவெள்ளம், மிகை யளவு; also *(v.t.)*.
delu'sion *(n.)* a false belief, hallucination, மருட்சி, மயக்கம், தவறான கொள்கை; **delus'ive** *(adj.)*.
deluxe *(adj.)* elaborate, elegant of good quality, விளக்கமாகச் செய்யப் பட்ட, பண்பட்ட நாகரிகமுடைய.
delve *(v.t. & i.)* to dig, search, பள்ளம் தோண்டு, துருவிப்பார்; aslo *(n.)*.
demand *(v.t.)* claim as a right, require or call for, to ask firmly, கோரிக்கை, தேவை, உறுதியுடன் வேண்டுதல்; also *(n.)*.
demarcate *(v.t.)* mark the limits of, எல்லை வரையறு; **demarca'tion** *(n.)*.
demean' *(v.)* lower oneself in dignity, தன் மதிப்பைக் குறைத்துக் கொள்.
demean'our *(n.)* behaviour, நடத்தை, புறத்தோற்றம்.
demen'ted *(adj.)* insane, பைத்தியம் பிடித்த; **dement** *(v.t.)*.
deme'rit *(n.)* undesirable quality or point, விரும்பத் தகாத குணம், குறை, தவறு.
demi'god *(n.)* being half devil and half human, கடவுள் போன்றவர்.
demise *(n.)* death, இறப்பு, மரணம்.
demit *(v.t. & i.)* to resign a position voluntarily, தானாகவே பதவி விலகு, மணிமுடி துற.
demob'ilize *(v.i.)* disband the army after the war, இராணுவத்தைக் கலைத்து விடு; **demobiliza'tion** *(n.)*.
democ'racy *(n.)* a form of government in which the citizens have equal political rights, மக்களாட்சி; **demo'crat** *(adj.)*.
demog'raphy *(n.)* the science of statistics as of births, deaths etc., பிறப்பு, இறப்பு போன்றவற்றைக் கணக்கிடும் புள்ளிவிவரவியல்.
demol'ish *(v.t.)* crush to pieces, destroy, reduce to a lower grade, தகர், சிதை, தாழ்த்து; **demoli'tion** *(n.)*.
dem'on *(n.)* devil or evil spirit, பேய், பிசாசு.
demo'netize *(v.t.)* to deprive the value of a currency, பணமதிப்பைக் குறை.

dem'onstrate *(v.t. & i.)* to prove, establish a fact by reasoning or otherwise, தெளிவு படுத்து, சான்றுகளோடு நிறுவு, செயல் விளக்கம் அளி; **demon'strable** *(adj.)*; **demonstra'tion** *(n.)*.

demoralization *(n.)* spoiling the morals or morale of, ஒழுக்கச் சிதைவு, ஒழுக்கம் கெடுத்தல்; **dem'oralize** *(v.t.)*.

demur' *(v.t.)* hesitate, raise an objection, மறுப்புத்தெரிவி, தயக்கம் காட்டு; also *(n.)*.

demure' *(adj.)* quite-looking, reserved, அமைதியான, தன்னடக்கமுள்ள.

demu'rrage *(n.)* penalty paid for the failure in loading or unloading the goods from ships, rail wagons etc., கப்பல், இரயில் போன்றவற்றில் பொருள்களைக் குறித்த நேரத்தில் ஏற்றாததற்கு அல்லது இறக்காததற்குக் கொடுக்கப்படும் அபராதத் தொகை.

den *(n.)* a cave or hole where a wild beast shelters, குகை, காட்டு விலங்கு வாழ் பொந்து.

deni'al *(n.)* act of refusing, மறுப்பு.

den'izen *(n.)* inhabitant of a place; a person, animal or plant established permanently in a place, ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் மனிதன், விலங்கு அல்லது தாவரம்.

denomina'tion *(n.)* name or title, class or unit, a value, பெயர், பட்டம், இனப்பெயர், அலகு, மதிப்பு.

denomina'tor *(n.)* a number below the line in a fraction, வகுக்கும் எண்.

denote' *(v.t.)* mark out, signify, சுட்டு, குறிப்பிடு.

denounce' *(v.t.)* accuse publicly, condemn, வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டு, பழித்துரை; **denuncia'tion** *(n.)*.

dense *(adj.)* consisting of closely packed particles or constituent parts, stupid, அடர்த்தியான, தடித்த, மந்த புத்தியுள்ள; **density** *(n.)*.

dent *(n.)* a depression in a surface caused by an impact, குழி, வடு, பள்ளம்; also *(v.t.)*.

den'tal *(adj.)* pertaining to teeth, பல் தொடர்பான.

den'tist *(n.)* one who deals with the disease of the teeth, பல் மருத்துவர்.

denude' *(v.t.)* make naked, to strip of clothes covering etc., ஆடையகற்று, உறை நீக்கு.

denuncia'tion *(n.)* (see denounce).

deny' *(v.t.)* to refuse, to declare that something is not true, மறுப்புத் தெரிவி, உண்மையில்லை என்று அறிவி; **denial** *(adj.)*.

deo'dorize *(v.t.)* to remove the smell from, கெட்ட நாற்றம் நீக்கு.

depart *(v.i. & t.)* leave, go away from, புறப்படு, இடம் விட்டு அகல்; **depar'ture** *(n.)*, **depart'ed** *(adj.)*.

depart'ment *(n.)* a separate part or division of a great organization, துறை, பகுதி, பிரிவு.

depar'ture (see depart).

depend' *(v.i.)* to rely on, be suspended from, put trust in, சார்ந்திரு, தொங்கு, நம்பியிரு; **depen'dable** *(adj.)*.

depen'dant *(n.)* one who is supported by others, சார்ந்து வாழ்பவர்.

depen'dent *(adj.)* relying on support or help, சார்ந்திருக்கிற, ஆதரவை நாடுகிற.

depict' *(v.t.)* give a graphic representation of, explain in the form of picture, describe, சித்திரி, வரைந்து காட்டு, விளக்கிக்கூறு; **depic'tor** *(n.)*.

deplete' *(v.t.)* exhaust completely, to make smaller in amount, number etc., வெறுமையாக்கு, குறை; **deple'tion** *(n.)*.

deplore' *(v.t.)* to feel pity, to show regret, இரக்கம் காட்டு, வருத்தம் தெரிவி, புலம்பு; **deplo'rable** *(adj.)*.

deploy' *(v.t. & i.)* spread out to form a line, படைவீரர்களை அணிவகுத்து நிற்கச்செய்; also *(n.)*.

depopulate *(v.t.)* to reduce the population, மக்கள் தொகையைக் குறை.

deport' *(v.t.)* to send out of the country, behave on a specified way, நாடு கடத்து, நடந்து கொள்; **deporta'tion** *(n.)*.

deport'ment *(n.)* manner of action, way of behaving, நடத்தை, ஒழுக்கம்.

depose' *(v.t. & i.)* remove from office, testify under oath, பணி நீக்கம் செய், ஆணையிட்டுக் கூறச் செய்; **deposi'tion** *(n.)*.

deposit[1] *(n.)* money deposited in a bank account, something entrusted for safe-keeping, வங்கிக் கணக்கில் சேமிப்பு, பாதுகாப்புப் பொருள்; also *(v.t.)*.

depos'it[2] *(n.)* a layer of matter which settles down, படிவு, வண்டல்; also *(v.t.)*.

deposi'tion (see depose').

dep'ot *(n.)* a store house or ware house, கிடங்கு, ஊர்தி மனை.

deprave' *(v.t.)* corrupt morally, demoralize, ஒழுக்கம் கெடு, சீர்கெடு; **depra'vity** *(n.)*; **deprav'ed** *(adj.)*.

dep'recate *(v.t.)* to protest, disapprove, to speak against, எதிர்ப்புத் தெரிவி, மறுத்துரை, வாதிட்டுத் தடு; **depreca'tion** *(n.)*.

depre'ciate *(v.t. & i.)* to fall in value, to lower the worth of, belittle, விலை மதிப்பைக் குறை, மதிப்பிலிருந்து தாழ்ந்து விடு, குறை.

depreda'tion *(n.)* plunder, கொள்ளை, சூறையாடுதல்; **de'predate** *(v.t.)*.

depress' *(v.t.)* reduce the activity of, make sad, make dull, சோர்வடையச் செய், அழுத்து, மந்தமடையச் செய்; **depressed'** *(adj.)*; **depre'ssion** *(n.)*.

deprive' *(v.t.)* to take something away from, dispossess, கவர்ந்து கொள், பறி.

depth *(n.)* (see deep).

deputa'tion *(n.)* a group of persons chosen to represent and speak on behalf of others, பேராண்மை, பேராண்மைக் குழு.

depute' *(v.t.)* substitute somebody to take over a task etc., பதிலாளாக அனுப்பு; **depute'd** *(adj.)*.

de'puty *(n.)* a substitute, பிரதிநிதி, பதிலாள்.

derail' *(v.t.)* make the train leave the rails, இரயில் வண்டியைத் தண்டவாளத்தை விட்டு விலகச் செய்; **derail'ment** *(n.)*.

derange' *(v.t.)* put into confusion, disturb the order or regularity, குழப்பு, ஒழுங்கு குலை, சீர்கெடு; **derange'ment** *(n.)*.

derelic'tion *(n.)* neglect of duty, கடமையில் தவறுதல்; **derelict** *(adj.)* & *(n.)*.

deride' *(v.t.)* to laugh at, mock, எள்ளி நகையாடு, இகழ்; **derision** *(n.)*, **derisive** *(adj.)*.

deriva'tion *(n.)* the manner in which a thing's origin is traced, மூலத்திலிருந்து தருவித்தல்; **deri'vative** *(n.)* & *(adj.)*.

derive' *(v.t. & i.)* get or draw from, trace the beginning of something, தருவி, தொடக்கத்தை அல்லது மூலத்தைக் கண்டுபிடி.

dermatol'ogy *(n.)* study of the skin, தோலியல்.

dero'gatory *(adj.)* tending to damage one's dignity, நற்பெயரைக் கெடுக்கும், சிறுமைப்படுத்தும்; **derog'ate** *(v.i.)*.

derringer *(n.)* a short pistol, கைத் துப்பாக்கி.

descend' *(v.i. & t.)* come or go down, tend downwards, make a sudden attack on, to pass by inheritance, இறங்கு, கீழ் நோக்கிச் சரி, திடீரெனத் தாக்கு, மரபுவழியில் தோன்று.

descen'dant *(n.)* heir, சந்ததி, மரபு வழித் தோன்றல்.

descent' (see descend).

describe′ *(v.t.)* give a full account of, விவரி, வருணனை கூறு; **describ′able** *(adj.)*.
descrip′tion *(n.)* representation of something in words, விளக்கவுரை, வருணனை; **descrip′tive** *(adj.)*.
descry′ *(v.t.)* make out dimly, try to see or understand something from a distance, கண்டுணர், பார்த்துத் தெரிந்துகொள்.
des′ecrate *(v.t.)* to treat a sacred thing in an unworthy way, misuse, தூய்மை கெடு, புனிதம் கெடு, தவறான வழியில் பயன்படுத்து.
des′ert[1] *(v.t. & i.)* abandon, to go away from, கைவிடு, விட்டகல், தலைமறைவாகு.
des′ert[2] *(n.)* a large area of sandy barren place, பாலைவனம்.
des′ert[3] *(n.)* a reward, மதிப்புரிமை.
des′erve *(v.t. & i.)* be entitled to, be worthy of, to earn by well-doing, உரிமையுடையவராக இரு, ஏற்றவராக இரு, நல்லமுறையில் ஈட்டு; **deserv′ed, deserv′ing** *(adjs.)*.
des′icate *(v.t.)* to dry up, உலர்த்து.
desideration *(n.)* that which is needed or wanted, இன்றியமையாதது, மிகவும் விரும்பப்படுவது, தேவைப்படுவது.
design *(n.)* a plan, pattern, scheme, a purpose, உருவரைபடம், மாதிரி, வடிவ அமைப்பு, உள்நோக்கம்; also *(v.t. & i.)*.
des′ignate *(v.t.)* to appoint, assign for a particular purpose, denominate, பணி அமர்த்து, குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஈடுபடுத்து, பதவிப் பெயரிடு; also *(adj.)*.
designa′tion *(n.)* a distinguishing name, title etc., an appointment, specific indication, பதவிப்பெயர், சிறப்புப் பெயர், பணி அமர்வு, குறியீடு.
desire′ *(n.)* wish or eagerness, a request, விருப்பம், ஆசை, கோரிக்கை; also *(v.t.)*; **desirable, desirous** *(adjs.)*; **desirabil′ity** *(n.)*.
desist *(v.t.)* cease to proceed, discontinue, தவிர், ஒதுங்கு, செயலைத் தொடராமல் நிறுத்திவை; **desis′tance** *(n.)*.
desk *(n.)* a table with flat or sloping top for reading, writing etc., சாய்வு மேசை.
des′olate *(adj.)* deserted, laid waste, uninhabited, தனித்த, பாழான, ஆளரவமற்ற; also *(v.t.)*; **desola′tion** *(n.)*.
despair′ *(n.)* helplessness, discouragement, நம்பிக்கை இன்மை, ஏமாற்றம், ஊக்கமிழப்பு; also *(v.i.)*.
despatch *(v.t.)* to send an official business, to put an end to, to kill, to finish quickly, அலுவலகப் பணியாக அனுப்பு, முடிவு செய், கொன்று விடு, விரைவில் முடி; also *(n.)*.
desperado′ *(n.)* lawless fellow, a violent criminal, சட்டத்திற்கு அஞ்சாதவன், முரடன்.
des′perate *(adj.)* hopeless, having no fear of danger, furious, நம்பிக்கையற்ற, முரட்டுத் துணிச்சலுடைய, அஞ்சாத.
despicab′le *(adj.)* contemptible, mean, வெறுக்கத்தக்க, இழிவான.
despise′ *(v.t.)* to have a low opinion of, consider worthless, dislike, இழிவாகக் கருது, அசட்டை செய், வெறு; **despite** *(n.)*.
despite[1] *(prep.)* against, inspite of, எதிராக, இருப்பினும்.
despite[2] (see dispise′).
despoil′ *(v.t.)* to rob or plunder, to spoil completely, முழுவதும் கொள்ளையடி, அழித்துவிடு.
despond′ *(v.i.)* to lose courage or hope, to be depressed in mind, ஊக்கமிழ, நம்பிக்கை இழந்துவிடு, மனச்சோர்வு கொள்; **despond′ency** *(n.)*; **despon-d′ent** *(adj.)*.
des′pot *(n.)* an absolute ruler with unlimited powers, கொடுங்கோலன், வல்லாட்சியாளன்; **despotic** *(adj.)*; **des′potism** *(n.)*.

desser't *(n.)* a course of sweet, fruits etc., served at the end of a meal, முக்கிய உணவு உண்டபின் உண்ணும் தின்பண்டம், பழம் போன்றவை.

destina'tion *(n.)* end or goal, the predetermined end of a journey, இலக்கு, பயண இலக்கு, சேருமிடம்.

des'tine *(v.t.)* determine, to predetermine as a fate, அறுதியிடு, முன் முடிவு எடு.

des'tiny *(n.)* ultimate fate, விதி, மாற்றவியலா முடிவு.

des'titute *(adj.)* wanting, completely lacking in, இல்லாமையாகிய, ஆதர வற்ற, கைவிடப்பட்ட; **destitu'tion** *(n.)*.

destroy' *(v.t.)* to ruin, to make useless, knock to pieces, அழி, பயனற்ற தாக்கு, உடைத்தெறி, இடித்துத் தள்ளு; **destruction** *(n.)*, **destruc'tive** *(adj.)*.

desuetude *(n.)* disuse, பயனற்ற நிலை, வழக்கற்ற நிலை.

des'ultory *(adj.)* irregular, jumping from one thing to another, ஒழுங்கு முறையற்ற, தொடர்பற்ற.

detach *(v.t.)* disconnect, disunite, தொடர்பு நீக்கு, இணைப்பு மாற்று, பிரித்தெடு; **detach'ment** *(n.)*.

de'tail *(v.t.)* describe fully, particularize, விரிவாக விளக்கு, நுணுக்க மாகக் கூறு; also *(n.)*, **detail'ed** *(adj.)*.

detain' *(v.t.)* to withhold, to keep under guard, to restrain from proceeding further, நிறுத்திவை, பாதுகாவலில் வை, மேற்கொண்டு தொடராமல் தடுத்து நிறுத்து, கட்டுப்படுத்து; **detainment** *(n.)*.

detect' *(v.t.)* discover, find out, கண்டு பிடி, துப்பறி; **detec'tion, detec'tive** *(ns.)*.

detention' *(n.)* a keeping in custody, an enforced delay, பாதுகாவலில் வைத்தல், தடுப்புக்காவல், நிறுத்தி வைத்தல்.

detenu' *(n.)* one held in custody, தடுப்புக்காவல் கைதி.

deter' *(v.t.)* to discourage, prevent, restrain, அச்சமூட்டி நிறுத்து, செய லூக்கம் கெடு, தடை ஏற்படுத்து, பின்வாங்கச் செய்.

deterge *(v.t.)* to cleanse, துப்புரவு செய்.

deter'gent *(n.)* a cleansing substance, துப்புரவுப் பொருள்; aslo *(adj.)*.

deter'iorate *(v.t. & i.)* debase, to grow worse, impair, degenerate, இழிவு படுத்து, படிப்படியாகத் தரம்கெடச் செய், அழிகேடாக்கு, பழுதுபடச்செய், சீர்கெடு; **deteriora'tion** *(n.)*

determine *(v.t. & i.)* to come to a decision, to find out exactly, define, conclude, settle, ஒரு முடிவுக்குவா, தீர்மானி, வரையறு, முடிவு செய்; **determi'ned, determ'inable** *(adjs.)*; **determina'tion** *(n.)*.

dete'rrent *(adj.)* having the power or tendency to prevent, தடுக்கும் ஆற்ற லுடைய, தடை செய்யும் நோக் குடைய.

detest' *(v.t.)* to dislike intensively, வெறுத்து ஒதுக்கு. **detest'able** *(adj.)*, **detesta'tion** *(n.)*.

dethrone' *(v.t.)* to drive from the throne, பதவியிலிருந்து அகற்று. **dethrone'ment** *(n.)*.

de'tonate *(v.i. & t.)* to explode violently and noisily, வெடிக்கச் செய், வெடி வைத்துப் பின் அதிர் வேட்டுப்போடு; **detona'tion, deto'nator** *(ns.)*.

detour' *(n.)* a circuitous way, சுற்று வழி; also *(v.i. & t.)*.

detract' *(v.t. & i.)* to take away the reputation or value, நற்பெயரைக் கெடு, பழித்துக் கூறு; **detrac'tive** *(adj.)*.

detrain *(v.i. & t.)* to get down from the train, இரயில் வண்டியிலிருந்து இறங்கு.

det'riment *(n.)* damage, disadvantage, injury, இழப்பு, கேடு, தீங்கு; **detrimen'tal** *(adj.)*.

dev′astate *(v.t.)* to lay waste, plunder, destroy, பாழாக்கு, கொள்ளையடி, சூறையாடு, அழி; **devasta′tion** *(n.)*.

devel′op *(v.t. & i.)* to grow gradually, to expand, to use chemicals in a film in order to make the picture visible, மேம்படுத்து, படிப்படியாக வளர், விரி, ஒளிப்படச் சுருளைத் துலங்க வை; **devel′opment** *(n.)*.

dev′iate *(v.i.)* turn aside, deflect, diverge, differ, ஒரு பக்கமாகத் திரும்பு, விரிந்து செல், மாறுபடு, விலகு; **devia′tion** *(n.)*.

device′ *(n.)* a thing devised, a trick, a piece of machinery, an emblem, a motto, கண்டு பிடிப்பு, வழி, கருவி, அடையாளச் சின்னம், முத்திரை மொழி.

devil *(n.)* an evil spirit, wicked person, பிசாசு, கொடியவன்; **dev′ilish** *(adj.)*.

devoid′ *(adj.)* not processing, lacking, சிறிதும் இல்லாத, வெற்றான.

dev′oir *(n.)* duty, an act of due respect, கடமை.

devolve′ *(v.t. & i.)* to dedicate, to pass on the duties or responsibilities to others, ஈடுபடு, முறைப்படி தன் பணிகள் அல்லது பொறுப்புகளைப் பிறரிடம் மாற்றிக் கொடு.

devote′ *(v.t.)* to dedicate by a solemn act, to give up one's time, energy etc., to some purpose, நேர்ந்து விடு, பிறருக்காகச் செயல்படு.

devo′tion *(n.)* religious worship, dedication to love, work etc., பக்தி, கடவுள் பற்று, முழு ஈடுபாடு; **devot′ed, devo′tional** *(adjs.)*.

devour′ *(v.t.)* swallow up, destroy, to listen to, to absorb completely, விழுங்கு, அழிவு ஏற்படுத்து, கவனி, உட்கொள்.

devout′ *(adj.)* religious, holy, sincere, சமயப்பற்றுடைய, புனிதமான, முழு ஈடுபாடுடைய.

dew *(n.)* tiny drops of atmospheric moisture that condense after a warm day, பனித்துளி, பனி *(v.t.)*; **dew′y** *(adj.)*.

dew′lap *(n.)* a loose fold of skin hanging from the throat of oxen, dogs etc., விலங்குகளின் தொங்கு தாடை.

dexte′rity *(n.)* skill in using one's hands, cleverness, aptitude, கைத்திறன், அறிவுக்கூர்மை, நுட்ப அறிவு; **dex′terous** *(adj.)*.

diabete′s *(n.)* a disease characterized by an excessive discharge of urine, சர்க்கரை நோய், நீரிழிவு நோய்; **diabeti′c** *(adj.)*.

diaboli′c *(adj.)* of the devil, very wicked or cruel, பேய்த்தன்மை உடைய, கொடிய.

di′adem *(n.)* a kind of crown, an ornamental head band, மணிமுடி, தலைமுடி நாடா.

diaer′esis, dieresis *(n.)* the mark placed over the second of two consecutive vowels to indicate that it is pronounced in a separate syllable, இரு உயிரெழுத்துகள் தொடர்ந்து வரும்போது அவை ஒரே ஒலி யுடையவையல்ல என்பதைக் காட்ட இடப்படும் ஒலிக்குறியீடு.

diagnose′ *(v.t.)* recognize and identify the disease by thorough examination, நோய் அறி; **diagnosis** *(n.)*.

diag′onal *(adj.)* running from corner to corner, மூலை விட்டமான; also *(n.)*.

dia′gram *(n)* a sketch, drawing, chart etc., used to illustrate something, படம், வரைபடம், விளக்கப்படம்; also *(v.t.)*.

di′al *(n.)* any disk bearing number etc., used to give information, கடிகார முகப்பு, எண் முகப்பு; also *(v.t.)*.

di′alect *(n.)* any form of speech deviating from the standard speech, the form of a spoken language peculiar to a region, community etc., வட்டார வழக்கு.

di′alogue *(n.)* conversation, any passage in the form of conversation in a play, story etc., உரையாடல், பேச்சு வார்த்தை.

diam'eter *(n.)* a straight line drawn across the circle passing through the centre, வட்டத்தின் குறுக்களவு, விட்டம்; **diametric** *(adj.)*.

di'amond *(n.)* a bright precious stone, a shape like rhombus, வைரம், சாய்சதுரம் போன்ற வடிவம்.

dia'mond-Jubilee *(n.)* 60th anniversary, மணிவிழா, அறுபதாம் ஆண்டு விழா.

diaper *(n.)* baby's napkin, குழந்தைக் குரிய அணையாடை.

di'aphragm (n) a thin muscular wall separating the chest cavity from the abdominal cavity, any membrane or partition that separates one thing from another, மார்புப் பகுதியையும் வயிற்றுப் பகுதியையும் பிரிக்கும் இடைப்படலம், பிரி படலம்.

di'archy *(n.)* government by two independent persons, இரட்டை யாட்சி.

diarrhoe'a *(n.)* frequent and loose discharge from the bowels, வயிற்றுப் போக்கு.

diary *(n.)* a written record of the daily happenings, நாட்குறிப்பு.

diatribe *(n.)* a dispute, abuse, வசை கூறுதல், இழிந்த சொற்களால் திட்டுதல்.

dibble *(n.)* a pointed tool used to make holes in the ground for planting seeds, plants etc., கொத்துக்கருவி; also *(v.t.)*.

dice *(n. pl.)* small cubes used in the game of chance, பகடை; die *(n. sg.)*.

dickey, dicky *(n.)* back outside part of a motor car, உந்து வண்டியின் பின் புறப்பகுதி.

dicotyled'on *(n.)* a plant with two seed-leaves, இரு விதையிலைத் தாவரம்.

dictate *(v.t. & i.)* to deliver orally for another to take down, to state officially with authority, to command expressly, மற்றொருவர் கேட்டு எழுதும்படியாகக் கூறு, அதிகாரபூர்வமாகக் கூறு, ஆணையிடு; also *(n.)*; **dictation** *(n.)*.

V. 8.

dictat'or *(n.)* an all powerful ruler, வல்லாட்சியாளர், முழு அதிகாரம் பெற்றவர்.

dictat'orial *(adj.)* pertaining to a dictator, absolute, வல்லாட்சி யாளருக்குரிய, வல்லமையுடைய, முழு அதிகாரமுடைய.

dic'tion *(n.)* style of speaking or singing, manner of expression in words, பேச்சு நடை, பாடும் பாணி, சொல் வெளிப்பாட்டு முறை.

dic'tionary *(n.)* a book having the words of a language in alphabetical order along with their meanings, அகராதி, அகர முதலி, அகர வரிசை.

dic'tum *(n.)* a wise saying, assertion, மூதுரை, உறுதிமொழி.

didac'tic *(adj.)* morally instructive, அறிவுறுத்துகிற; **didac'tical** *(adj.)*.

Didac'tics *(n.)* the science of teaching, கற்பிக்கும் கலை.

die[1] *(v.i.)* to cease to live, இறந்து போ.

die[2] *(n.)* (see dice).

diet *(n.)* what a person usually eats and drinks, a course of recommended food or drink prescribed for health, உணவு முறை, பத்திய உணவு.

diff'er *(v.i.)* to be dissimilar, to be of opposite opinions, to debate in words, வேறுபடு, முரண்படு, வாதம் செய்.

difference *(n.)* dissimilarity, dispute, variation, the amount by which one quality or number is greater than another, வேறுபாடு, மாறுபாடு, கழித்து வந்த மீதி, மிச்சம்; **different, differen'tial** *(adjs.)*.

differen'tiate *(v.t. & i.)* to make unlike, to express a difference, distinguish between, வேறுபடுத்திக் காட்டு, வகைப்படுத்து, மாறுபாடு களைச் சுட்டு.

diffi'cult *(adj.)* hard, laborious, troublesome, unaccommodating, கடினமான, பெருமுயற்சியுடைய,

சிக்கலான, தொல்லைதரும்; **diffi-culty** *(n.)*.

diff'i'dence *(n.)* lack of self-confidence, bashfulness, தன்னம்பிக்கை இன்மை, செயல்கூச்சம்; **diffi'dent** *(adj.)*.

diffuse' *(v.t. & i.)* spread widely in all directions, scatter, பரவு, பரப்பு, பரவலாக்கு; also *(adj.)*.

dig *(v.t. & i.)* to turn up the earth or soil with a spade or other sharp equipment, நிலத்தைத் தோண்டு.

di'gest[1] *(v.t. & i.)* change the food in the stomach in suitable form so that it can be absorbed by the body, to take in and think over, செரிமானம் செய், கருத்தில் கொண்டு சிந்தி; **diges'tible** *(adj.)*.

digest[2] *(n.)* a compendium of literary, historical or other writings, இலக்கியத் தொகுப்பு, வரலாற்றுத் தொகுப்பு போன்றவை.

diges'tion *(n.)* power of digesting food, செரித்தல், செரிமானம்; **diges'tive** *(adj.)*.

di'git *(n.)* finger or toe, any of figures 0-9, the measure of a finger's breadth, விரல், 0–9 வரையுள்ள எண், இலக்கம், விரற்கிடை அளவு; **di'gital** *(adj.)*.

dig'nified *(adj.)* showing honour, stately, of high worth or rank, மதிப்பிற்குரிய, பெருமைக்குரிய, மேன்மைதாங்கிய, உயர்ந்த; **dig'nify** *(v.t.)*.

dig'nitary (n) a person holding a high dignified position, உயர்நிலையாளர்.

dig'nity *(n.)* worthiness, high repute, a high position, rank etc., மதிப்பு, மேன்மை, தகுதி, உயர்பதவி, உயர்நிலை.

digress' *(v.i.)* deviate from the main subject in talking or writing, கூற வந்த கருத்தை விட்டு விலகிச் செல்; **digre'ssion** *(n.)*.

dike, dyke *(n.)* earth bank, a wall constructed to prevent flooding by the sea or by the river, அணைக் கட்டு, செய்கரை; also *(v.t.)*.

dilap'idated *(adj.)* needing repair, shabby and neglected, பாழடைந்த, சீரழிந்த, இடிந்த; **dilapidate** *(v.t. & i.)*; **dilapida'tion** *(n.)*.

dilate' *(v.t. & i.)* make wider, enlarge, expand, விரிவாக்கு, பெரிதாக்கு, அகட்டு.

dila'tory *(adj.)* causing delay, late in doing things, காலம் கடத்தும், செயலில் காலதாமதம் ஏற்படுத்தல்.

dilemm'a *(n.)* any situation necessitating a chance between two unpleasant alternatives, awkward situation, தடுமாற்றம், சிக்கலான நிலை.

diletante *(n.)* an admirer of fine arts, நுண்கலை இரசிகர்; also *(adj.)*.

dili'gence *(n.)* earnestness in working, பணி ஊக்கம், தளரா ஊக்கம், சுறு சுறுப்பு; **dili'gent** *(adj.)*.

dilly' - dally *(v.i.)* to waste time in hesitating, தயக்கத்திலேயே காலத்தைக் கடத்து.

dil'ute *(v.t.)* to thin down or weaken a liquid by mixing with water or other liquid, நீர்த்த, அடர்த்தி குறைந்த; **dilution** *(n.)*.

dilu'vial *(adj.)* pertaining to flood, வெள்ளப் பெருக்கம் சார்ந்த; also *(n.)*.

dim *(adj.)* not bright and distinct, dull, மங்கிய, தெளிவற்ற; also *(v.t. & i.)*; **dim'ness** *(n.)*.

dime *(adj.)* the tenth part of an American dollar, அமெரிக்க டாலரின் பத்திலொரு பங்குள்ள நாணயம்.

dimen'sion *(n.)* measure in length, breadth etc., extent, size, அளவு, பரிமாணம்; **dimension'al** *(adj.)*.

dimini'sh *(v.t. & i.)* to make less or smaller, reduce, decrease, குறை, சுருக்கு, ஒடுக்கு; **diminu'tion** *(n.)*.

dim'issory *(adj.)* granting leave to go, sending away, புறப்பட அனுமதிக்கிற, அனுப்பும்.

dim'ple *(n.)* natural depression in the chin or cheek, a slight dent on any surface, கன்னக் குழிவு, சுழி; also *(v.i. & t.)*.

din *(n.)* a loud continuous noise, saying something repeatedly, இரைச்சல், திரும்பத் திரும்பக் கூறுதல்; also *(v.t.)*.

dine *(v.i. & t.)* to have the principal meal of the day, பகலுணவு உட்கொள்.

ding *(v.i.)* to ring, மணிஅடி; also *(n.)*.

ding'le *(n.)* a narrow secluded valley, ஒடுங்கிய பள்ளத்தாக்கு.

din'gy *(adj.)* soiled, not bright in colour, அழுக்கான, நிறம் மங்கிய.

din'ner *(n.)* the principal meal of the day, feast in a formal party, பகலுணவு, விருந்து.

din'osaur *(n.)* a giant reptile with four limbs and a long tapering tail, ஊரும் இனத்தைச் சார்ந்த ஒரு வகைப் பண்டைக்கால விலங்கு.

dint *(n.)* violence, a dent, பலத்த அடி, அடியால் ஏற்படும் வடு; also *(v.t.)*.

dip *(v.t. & i.)* immerse in any liquid for a short time, to slope down, நீர்மத்தில் தோய்த்தெடு, சரிவுறு; also *(n.)*.

diph'theria *(n.)* a dangerous throat disease, தொண்டையடைப்பான் நோய்.

diph'thong *(n.)* two vowel sounds pronounced as one syllable, இணையுயிர்.

diplom'a *(n.)* educational certificate issued by an authority conferring a degree, கல்லூரிப் பட்டச் சான்றிதழ்.

diplo'macy *(n.)* skilful management of international negotiations, skill or cleverness in dealing with people, இராச தந்திரம், அரசியல் செயல் திறன், மேலாண்மைத் திறன்; **diplomat'ic** *(adj.)*.

dipsoma'nia *(n.)* an abnormal craving for alcoholic drink, மதுவெறி.

dire *(adj.)* horrible, disastrous, கொடிய, அச்சம் தரும்.

direct' *(v.t)* guide, to aim, write the address, regulate, இயக்கு, இலக்கு நோக்கிச் செல், முகவரி எழுது, கட்டுப்படுத்து.

direct *(adj.)* straight, frank, immediate, exact, நேரான, நேரடியான, வெளிப்படையான, உடனடியான, சரியான.

direc'tion *(n.)* place or point to which one moves, looks etc., management, control, instruction for doing, using etc., இலக்கு, திசை, நிர்வாகம், கட்டுப்பாடு, வழிநடத்துதல், செயல் முறை விளக்கம், பயன்படுத்தும் முறை.

dire'ctive *(n.)* a general instruction issued by an institution, office etc., பொதுக்கட்டளை; also *(adj.)*.

director *(n.)* one who directs or controls, இயக்குநர்.

direc'torate *(n.)* office of a director, board of directors collectively, இயக்குநர் அலுவலகம், இயக்குநர் குழு.

direc'tory *(n.)* a kind of book giving names, addresses etc., of a specific group of persons, முகவரிப் புத்தகம், பெயர் போன்ற விவரங்களைக் கொண்ட குறிப்பு நூல்.

dirge *(n)*. funeral song, a lament, ஒப்பாரிப் பாடல், புலம்பல்.

di'rigible *(adj.)* that can be guided or controlled. வழிப்படுத்தக் கூடிய, கட்டுப்படுத்தக் கூடிய; also *(n.)*.

dirk *(n.)* a short dagger, குறுவாள்; also *(v.t.)*.

dirty *(adj.)* soiled, unclean, அழுக்கான, தூய்மையற்ற; **dirt** *(n.)*.

disa'ble *(v.t.)* to make unable, cripple, இயலாதவனாகச் செய், முடமாக்கு, ஆற்றல் இழக்கச் செய்; **disabili'ty** *(n.)*.

disabuse' *(v.t.)* to free from mistake, to set right a wrong belief, பிழை நீக்கு, தப்பெண்ணத்தைப் போக்கு.

disadvan'tage *(n.)* a draw back, an unfavourable situation, a handicap,

குறைபாடு, எதிரான சூழ்நிலை, இழப்பு, தீங்கு.

disaffec'tion *(n.)* absence of affection or good will, விருப்பமின்மை, நல்லெண்ணமின்மை.

disaffo'rest *(v.t.)* cut down trees and clean the forest, காட்டை அழி; **disafforesta'tion** *(n.).*

disagree' *(v.t.)* differ, quarrel, vary, கருத்து மாறுபடு, இணங்காதிரு, வேறுபடு; **disagree'ment** *(n.).*

disallow' *(v.t.)* to reject as untrue, to refuse permission, உண்மையல்லவென்று புறக்கணி, ஒப்புதலளிக்க மறு.

disannul' *(v.t.)* abolish, விலக்கு.

disappear' *(v.t.)* to vanish from sight, to go out of existence, கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்துவிடு, ஒழிந்து போ; **disappearance** *(n.).*

disappoint' *(v.t.)* spoil hope, to break one's promise, நம்பிக்கையை வீணாக்கு, ஏமாற்று.

disappoint'ment *(n.)* the state of being disappointed, ஏமாற்றம், மனச் சோர்வு.

disapproba'tion *(n.)* disapproval, dislike, அனுமதி மறுப்பு, விருப்பமின்மை.

disapprove' *(v.t. & i.)* reject, refuse to approve, தள்ளுபடி செய், ஏற்க மறு, மறுப்புத் தெரிவி.

disarm' *(v.t. & i.)* to take away weapons from, make unfriendly, ஆயுதப் பறிமுதல் செய், அமைதிச் சூழலை ஏற்படுத்து; **disarma'ment** *(n.).*

disarrange *(v.t.)* to put out of order, disturb the proper arrangement, வரிசைமுறை மாற்று, தாறுமாறாக்கு, நிலைகுலை; **disarrange'ment** *(n.).*

disas'ter *(n.)* any unfortunate event, mishap, துன்ப நிகழ்ச்சி, பேரிடர்; **disas'trous** *(adj.).*

disavow' *(v.t.)* deny, to say one knows nothing about a thing or person, மறு, தெரியாதென்று மறு, தொடர்பில்லையென்று கூறு.

disband' *(v.t. & i.)* to dismiss from military service, to break up an organization, படைத்துறைப் பணியிலிருந்து விலக்கு, இராணுவத்தைக் கலை; **disband'ment** *(n.).*

disbelieve *(v.t. & i.)* deny to believe, suspect, நம்ப மறு, ஐயம்கொள்; **disbelief'** *(n.).*

disburse *(v.t. & i.)* to pay out, to spend, பணம்கொடு, செலவழி; **disburse'ment** *(n.).*

disc/disk *(n.)* a flat thin round object, வட்டத் தட்டு.

discard' *(v.t. & i.)* discharge, dismiss, reject, abjure, தள்ளு, விலக்கு, நீக்கு, புறக்கணி, விட்டொழி; **dis'cord** *(n.).*

discern' *(v.t.)* distinguish, perceive, வேறுபாடு அறி, நுணுகி உணர்; **discern'ing** *(adj.);* **discern'ment** *(n.).*

discharge *(v.t. & i.)* dismiss, perform, to free from a load, fire a gun, allow to leave, வெளியேற்று, செயலாற்று, சுமை நீக்கு, பளு நீக்கு, விடுவி, துப்பாக்கியால் சுடு; also *(n.).*

disci'ple *(n.)* follower, one who believes in the teachings of another, சீடர், கொள்கையைப் பின்பற்றுபவர்.

disciplinarian *(n.)* one who enforces strict disciplines, ஒழுங்கு முறையாளர்; **dis'ciplinary** *(adj.).*

dis'cipline *(n.)* self control, orderliness, branch of knowledge or learning, தன்னடக்கம், கட்டுப்பாடு, ஒழுங்குமுறை, துறை; also *(v.t.).*

disclaim' *(v.t.)* to disown, refuse to acknowledge, give up all claims, உரிமை மறு, பொறுப்பேற்க மறு, சட்டப்படியான உரிமைகளைக் கைவிடு.

disclose' *(v.t.)* uncover, reveal, utter, discover, திறந்து காட்டு, வெளிப்படுத்து, தெரிவி, கண்டறி, **disclo'sure** *(n.).*

discol'our *(v.t. & i.)* to spoil the colour or shade, நிறம் மங்கச் செய்; **discolouration** *(n.).*

discom'fit *(v.t.)* to defeat, to frustrate, make uneasy, தோற்கடி, மன உளைச்சல் ஏற்படுத்து, திக்குமுக்காட வை; **discom'fiture** *(n.)*.

discom'fort *(n.)* absence of comfort, uneasiness, inconvenience, உடல் நலக்குறை, மன உலைவு, வசதியின்மை.

discompose' *(v.t.)* to disturb peace and quietness, unsettle, அமைதியைக் குலை, குழப்பு; **discompo'sure** *(n.)*.

disconcert' *(v.t.)* to frustrate, confuse, மன உலைவு ஏற்படுத்து, குழப்பு.

disconnect' *(v.t.)* disunite, detach, இணைப்பை நீக்கு, கழற்று, பிரித்து வேறாக்கு; **disconnec'tion** *(n.)*.

discon'solate *(adj.)* sorrowful, dejected, hopeless, துயர்மிக்க, தேற்ற இயலாத, நம்பிக்கையற்ற.

discontent *(n.)* a feeling of dissatisfaction, மனநிறைவின்மை, மனக்குறை; also *(adj.)*, **discontent'ment** *(n.)*.

discontin'ue *(v.t.)* to cease, stop, தொடர்பற்றுப் போகச் செய், பாதியில் நிறுத்து, இடையே நிறுத்து; **discontin'uance, discontinuity** *(n.)*.

dis'cord *(n.)* lack of harmony, disagreement, ஒவ்வாமை, கருத்து வேற்றுமை; **discord'ance** *(n.)*.

dis'count *(n.)* a deduction from the original price, தள்ளுபடி, கழிவு; also *(v.t.)*.

discount'enance *(v.t.)* to put to shame, to discourage, to refuse approval, நாணமுறச் செய், ஊக்கம் கெடு, உடன்பட மறு.

discou'rage *(v.t.)* to take away the courage of, dishearten, தன்னம்பிக்கை இழக்கச்செய், ஊக்கம்கெடு, மனமுடையச்செய்; **discourage'ment** *(n.)*.

dis'course *(n.)* a lecture, a speech, a long piece of writing on something important, விரிவுரை, ஆய்வுக் கட்டுரை.

discourt'esy *(n.)* lack of courtesy, அவமதிப்பு, பண்புக் குறைவு; **discourte'ous** *(adj.)*.

disco'ver *(v.t.)* to be the first to find out, realize, கண்டுபிடி, வெளிப்படுத்து, உணர்.

disco'very *(n.)* a finding, something which is discovered, கண்டுபிடிப்பு, கண்டறி பொருள் அல்லது உண்மை.

discre'dit *(n.)* disgrace, dishonour, loss of respect, இழிவு, கெட்டபெயர், மதிப்புக்கேடு, அவமதிப்பு; also *(v.t.)*; **discredi'table** *(adj.)*.

discreet' *(adj.)* cautious, careful about what one does, முன்னெச்சரிக்கையுடைய, விழிப்புடைய, செயலாற்றுகிற.

discrepan'cy *(n.)* disagreement, a mistake, பொருத்தமின்மை, முரண்பாடு; **discrep'ant** *(adj.)*.

discrete *(adj.)* separate, discontinuous, made of distinct parts, தனித்த, தொடர்ச்சியற்ற, வெவ்வேறு மாதிரிகளைக் கொண்ட.

discretion *(n.)* wise judgement, caution, பகுத்தறியும் அறிவு, நுண்மதிப்பீடு, விருப்புரிமை, முன்னெச்சரிக்கை; **discre'tionary** *(adj.)*.

discrim'inate *(v.t. & i.)* to dissolve the difference between, to show partiality, வேறுபாட்டைப் பகுத்தறி, ஒரு சார்பாக இரு; **discrimina'tion** *(n.)*.

discurs'ive *(adj.)* moving from one topic to another, தொடர்பின்றிப் பேசுகிற.

dis'cuss *(v.t.)* debate, argue, dispute, கலந்து பேசு, வாதாடு, சர்ச்சை செய்; **discu'ssion** *(n.)*.

disdain *(v.t.)* to think unworthy, ஏளனமாகக் கருது, இழிவாக எண்ணு, புறக்கணி; also *(n.)*.

disease' *(n.)* illness, illness in general, sickness, நோய்.

disembark' *(v.t. & i.)* to land from a ship or plane, கப்பலிலிருந்து கரை இறங்கு, விமானத்திலிருந்து தரையிறங்கு; **disembarka'tion** *(n.)*.

disemba'rrass *(v.t.)* to free from embarrassment, disentangle, தொல்லை களிலிருந்து விடுவி, மலைப்பு நீக்கு, சிக்கல் அகற்று.

disembody *(v.t.)* to free from bodily existence, to free from military service, உடலிலிருந்து அகற்று, படையைக் கலை.

disengage' *(v.t.)* separate, detach, to loose, பிரி, இணைப்புநீக்கு, தொடர்பு அறு, பிடி தளர்த்து.

disentangle *(v.t.)* to free from complexity, to free from knots, சிக்கல் அகற்று, குழப்பத்திலிருந்து விடுவி.

disfav'our *(v.t.)* to show dislike, displeasure, வெறுப்புக்காட்டு, ஆதரவு அளிக்காதிரு; also *(n.)*.

disfi'gure *(v.t.)* to spoil the beauty or appearance of, உருக்குலை, அழகு கெடு; **disfigure'ment** *(n.)*.

disfran'chise *(v.t.)* to take away the right to vote, வாக்குரிமை மறு, குடியுரிமைகளைப் பறி.

disgorge' *(v.t.)* to vomit, to throw out violently, to give up something wrongly obtained, வாந்தியெடு, வெளித்தள்ளு, தவறான வழியில் கிடைத்ததைத் திருப்பிக் கொடு.

disgrace' *(n.)* the state of being out of favour, dishonour, தயவு இழப்பு, அவமதிப்பு, இகழ்வு, சிறுமை; also *(v.t.)*; **disgrace'ful** *(adj.)*.

disgrunt'led *(adj.)* dissatisfied, moody, மனக்குறையுடைய, சிடுசிடுப்பான.

disguise' *(v.t.)* to hide the identity by changing the appearance, to hide, மாறுவேடமணி, மறைத்துவை; also *(n.)*.

disgust' *(n.)* strong dislike, abhorrence, கடும் வெறுப்பு, அருவருப்பு; **disgusting** *(adj.)*.

dish *(n.)* any vessel which is hollow or concave, prepared food held so, கிண்ணம், உணவு வகை; also *(v.t.)*

disharm'ony *(n.)* absence of unity, ஒற்றுமையின்மை, ஒவ்வாத்தன்மை.

dishear'ten *(v.t.)* discourage, to depress the spirits of, ஊக்கமிழக்கச் செய், உற்சாகம் கெடு, ஆக்கம் கெடு.

dishev'el *(v.t.)* to cause hair, clothing etc., to become orderless and untidy, பரட்டைத் தலையான, தாறுமாறான; **dishev'elled** *(adj.)*.

dishonest *(adj.)* faithless, நேர்மையற்ற, நாணயமற்ற; **dishone'sty** *(n.)*.

dishon'our *(n.)* loss of reputation, respect etc., discredit, disgrace, மானக்கேடு, அவமதிப்பு, சிறுமை; also *(v.t)*; **dishono'urable** *(adj.)*.

disillusion *(v.t.)* to take away the false but pleasant beliefs, கற்பனை மயக்கத்திலிருந்து விடுவி, போலி நம்பிக்கையை நீக்கு; also *(n.)*.

disincline' *(v.t.)* to produce aversion in, be unwilling, வெறுப்பு ஏற்படுத்து, விருப்பமற்றிரு; **disincli-na'tion** *(n.)*.

disinfect' *(v.t.)* to destroy the harmful bacteria, that cause diseases, நோய் நுண்மங்களை அழி, நோய்க்கிருமிகளைத் தடு.

disinfec'tant *(n.)* anything that destroys the disease causing germs; தொற்றுநீக்கி, நச்சுக்கொல்லி, கிருமிநாசினி; also *(adj.)*.

disinherit *(v.t.)* to prevent from inheriting something, மரபுவழி உரிமையைப் பறி.

disin'tegrate *(v.t. & i.)* to break into pieces, சிதை, சிதறச்செய், பல துண்டுகளாகும்படி உடை, கூறு போடு.

disinter *(v.t.)* take out from the grave, புதைகுழியிலிருந்து தோண்டியெடு.

disin'terested *(adj.)* unbiased, impartial, சார்பற்ற, நடுநிலையான, தன்னலமற்ற.

disjoint'ed *(adj.)* out of joint, not well connected, இணைப்பற்ற, இயைபற்ற, தாறுமாறான; **disjoint** *(v.t.)*.

disk (see disc).

dislike *(n.)* aversion, displeasure, பெரு வெறுப்பு, விருப்பின்மை; also *(v.t.)*.

dislocate *(v.t.)* displace, to put out of joint, இடம் மாற்றிவை, நிலைகுலை, இணைப்பு நீக்கு.

dislodge *(v.t.)* to remove from the place of rest, இடம்பெயரச் செய், அகற்று.

disloyal *(adj.)* not loyal, unfaithful, நம்பிக்கையற்ற, உண்மையற்ற; **disloyal'ty** *(n.)*.

dismal *(adj.)* sorrowful, gloomy, துயர் மிக்க, இருண்ட.

dismantle *(v.t.)* disorganize, to pull down, சின்னாபின்னமாக்கு, இடித்து வீழ்த்து.

dismay *(n.)* state of being discouraged, great fear, பேரச்சம், ஊக்கமிழப்பு .

dismember *(v.t.)* divide; cut the limbs from the body, துண்டாடு, கைகால் களை வெட்டி நீக்கு.

dismiss *(v.t.)* to remove from office, வேலை நீக்கம் செய்.

dismount *(v.t. & i.)* to get down from a horse, குதிரையிலிருந்து கீழே இறங்கு.

disobedience *(n.)* the act of refusing to obey, கீழ்ப்படியாமை; **disobedient** *(adj.)*.

disobey' *(v.t.)* refuse to carry out or unwilling to do what is commanded, ஆணைக்குக் கீழ்ப்படிய மறு, மதிப்புக் காட்டத் தவறு.

disoblige' *(v.t.)* refuse to do what a person asks, உதவ மறு, கோரிக் கையை மறு.

disorder' *(n.)* disturbance, irregularity, lack of order, அமைதியின்மை, குழப்பம், சீர்கேடு, ஒழுங்கின்மை; also *(v.t.)*; **disordered** *(adj.)*.

disorganize *(v.t.)* to put out of order, throw into confusion, ஒழுங்குமுறை மாற்று, சீர்குலை, தாறுமாறாக்கு.

disown' *(v.t.)* refuse to own, refuse to recognize, கைவிடு, ஏற்க மறு, உரிமை கொண்டாட மறு; **disownment** *(n.)*.

dispa'rage *(v.t.)* bring discredit on, to speak hurtfully about, மதிப்புக் குறைவு ஏற்படுத்து, அவதூறு சொல்.

dispa'rity *(n.)* inequality, difference, ஏற்றத்தாழ்வு, பெரும் வேறுபாடு.

dispa'ssion *(n.)* calmness, impartiality, அமைதி, நடுநிலை உணர்வு; **dispa'ssionate** *(adj.)*.

dispatch (see despatch).

dispel' *(v.t.)* drive away, to remove, விரட்டு, அகற்று.

dispen'sable *(adj.)* not necessary, able to be done without, கட்டாயத் தேவையில்லாத.

dispen'sary *(n.)* a place where medicines are dispensed, a place where medical advice is given, மருந்தகம், மருத்துவமனை.

dispense' *(v.t. & i.)* distribute, prepare medicines and give out, பகிர்ந்து வழங்கு, மருந்து தயாரி, விரட்டு; **dispensa'tion** *(n.)*.

disperse' *(v.t. & i.)* scatter in different directions, disseminate, நாலாதிசைகளிலும் சிதறச் செய், கலைந்து செல், பரப்பு; **dispers'al, disper'sion** *(ns.)*.

dispeople *(v.t.)* depopulate, குடிமக்களை வெளியேற்று.

dispi'rited *(adj.)* discouraged, disheartened, உற்சாகமற்ற, மனச் சோர்வுடைய; **dispi'rit** *(v.t.)*.

displace' *(v.t.)* to put out of place, replace, வேறிடத்தில் வை, இடம் மாற்றி வை; **displace'ment** *(n.)*.

display' *(v.t.)* to set out for show, exhibit, reveal, காட்சிக்காக வை, வெளிப்படுத்து; also *(n.)*.

displease' *(v.t.)* annoy, to make angry, மனவருத்தம் ஏற்படுத்து, கோப மூட்டு; **displea'sure** *(n.)*; **displea'sing** *(adj.)*.

displume *(v.t.)* strip off feathers, இறகு உதிர்.

disport' *(v.i.)* display oneself sportively, relax, விளையாடி மகிழச் செய்.

dispos'al *(n.)* the act of getting rid of something, dealing with, management, விட்டொழித்தல், செய்து முடித்தல், செயலாட்சி; **dispose'** *(v.t. & i.)*.

disposi'tion *(n.)* arrangement, plan, natural tendency, ஒழுங்கமைவு, திட்டநிலை, இயல்பான போக்கு.

dispossess' *(v.t.)* deprive off, turn out from position, உடைமைகளைப் பறி முதல் செய், இருப்பிடத்திலிருந்து வெளியேற்று.

dispropor'tionate *(adj.)* too big or too small in relation to something else, அளவு ஒவ்வாத, ஏறுமாறான; **disproportion** *(n.)*.

disprove' *(v.i. & t.)* to prove to be wrong, தவறென்று நிரூபி, பொய் யென்று நிறுவு.

dispute' *(v.i. & t.)* to argue about, quarrel, discuss, resist, சண்டையிடு, மறுத்துக்கூறு, முரண்படு, தடை சொல்; also *(n.)*; **dis'putant, disputa'tion** *(ns.)*; **dis'putable** *(adj.)*.

disquali'fy *(v.t.)* make unfit for some purpose, தகுதியிழக்கச் செய், தகுதி யற்றவராக்கு.

disqui'et *(n.)* uneasiness, worry, அமைதியின்மை, கவலை; also *(v.t.)* & *(adj.)*.

disqui'sition *(n.)* long discussion on a subject, விரிவான ஆய்வுரை.

disregard' *(v.t.)* pay no respect, ignore, மரியாதை கொடுக்காதிரு, புறக்கணி, அசட்டை செய்; also *(n.)*.

disrepute *(n.)* bad name, discredit, நற்பெயர் இழப்பு, மானக் கேடு, பெருமை கெடுதல்; **disreputa'ble** *(adj.)*, **disreputa'tion** *(n.)*.

disrespect' *(n.)* want of respect, rudeness, மரியாதைக் குறைவு, நய மற்ற பண்பு; **disrespectful** *(adj.)*.

disrupt' *(v.t.)* break with force, separate forcibly, தகர்த்தெறி, பிள; **disrup'tive, disrup'tion** *(ns.)*.

dissatisfac'tion *(n.)* discontent, மனக் குறை.

dissatis'fy *(v.t.)* fail to satisfy, displease, மனக்குறை ஏற்படுத்து, மகிழ்ச்சி கெடு.

dissect' *(v.t.)* cut into pieces for the purpose of examination, examine part by part, criticize in detail, ஆய்விற்காகக் கூறுபோடு, விளக்க மாகத் திறனாய்வு செய்; **dissec'tion** *(n.)*.

dissem'ble *(v.t. & i.)* to hide one's true feelings, fail to reveal the fact, தன் னுணர்ச்சியை மறை, உண்மையை வெளிப்படுத்தத் தவறு.

dissem'inate *(v.t.)* scatter widely, sow in various places, பரப்பு, பரவலாக விதை; **dissemination** *(n.)*.

dissen'sion *(n.)* ill feeling arising from differences in opinion, கருத்து முரண்பாட்டினால் எழும் மனப் பிளவு.

dissent' *(v.t.)* refuse to agree, think differently, ஏற்க மறு, கருத்து முரண்படு; also *(n.)*.

disserta'tion *(n.)* a discourse or long piece of writing, ஆய்வேடு.

disserv'ice *(n.)* a harmful action, injury, கேடு, தீங்கு.

dissever *(v.t.)* divide into equal parts, இரு சமகூறாகப் பிரி.

dissimi'lar *(adj.)* unlike, ஒத்திராத, மாறுபட்ட.

dissimulate *(v.t.)* pretend not to feel or see, பாசாங்கு செய்.

diss'ipate *(v.t. & i.)* disappear, scatter, to use up carefully, மறைந்துவிடு, சிதறடி, வீணாக்கு; **dissipa'tion** *(n.)*.

disso'ciate *(v.t.)* discernment in thought, to take no part in, தொடர்பு நீக்கு, பங்கு பெறாதிரு, பிரிந்து போ.

diss'olute *(adj.)* not strict in manners, நெறி தவறும்.

dissolve *(v.t. & i.)* make or become liquid by putting it in a liquid, disappear, to put an end to, கரை, மறைத்து விடு, முடித்து வை; **dissolution** *(n.)*.

diss'onant *(adj.)* incongruous, இசை யொவ்வா, பொருந்தாத; **diss'onance** *(n.)*.

dissuade' *(v.t.)* advise not to do something, divert, கருத்தை மாற்று, வாதிட்டுச் செயலைத் தடு.

dis'taff *(n.)* a stick on which yarn was wound in spinning by hand, நூற்புக் கழி.

dis'tance *(n.)* extent of space between two things, remoteness, coldness of manners, இடைவெளி, தூரம், தொலைவு, நெருங்கிப் பழகாத தன்மை.

distant *(adj.)* far away, remote, not intimate, தொலைவான, நெருக்க மற்ற.

distaste' *(n.)* dislike, slight aversion, விருப்பமின்மை, வெறுப்பு, ஆர்வ மின்மை.

distem'per[1] *(n.)* an ailment of physical or mental health, political disorder, உளநோய், மனநோய், அரசியல் குழப்பம்; also *(v.t.)*.

distem'per[2] *(n.)* a method of painting in plaster, வண்ணப்பூச்சு; also *(v.t.)*.

distem'per[3] *(n.)* a dog disease, நாயின் நோய்.

distend' *(v.t. & i.)* cause to grow bigger by pressure, விரிவுறச் செய், நீட்டு.

distil' *(v.i. & t.)* flow in drops, vapourize, or condense, get something in pure state, சொட்டச்செய், ஆவியாக்கு, குளிரச்செய், காய்ச்சி வடி, தூய்மைப்படுத்து; **distilla'tion** *(n.)*.

distil'lery *(n.)* a factory where distilling is carried on, காய்ச்சி வடிக்கும் தொழிலகம்.

distinct' *(adj.)* clearly seen, unlike, individual, தெளிவாகத் தெரிகிற, வேறான, தனிப்பட்ட.

distinc'tion *(n.)* outstanding ability, mark of honour, eminence, individuality, தனித்தன்மை, நன் மதிப்பு, பெருமை, தனிச்சிறப்பு.

disting'uish *(v.t. & i.)* differentiate, characterize, recognize, to win fame, வேறுபடுத்து, அடையாளம் கண்டு பிடி, புகழ்பெறு; **disting'uished** *(adj.)*.

distort' *(v.t.)* put out of shape, misrepresent, to turn from the true meaning, உருக்குலை, திரித்துக் கூறு, கருத்தை மாற்றிக் கூறு.

distract *(v.t.)* divert, draw attention from, complicate, எண்ணத்தை மாற்று, கவனத்தைத் திருப்பு, சிக்கலுண்டாக்கு; **distrac'tion** *(n.)*.

distrain' *(v.i.)* seize movable properties for debt or non-payment of tax, கடனுக்காக அல்லது வரி பாக்கிக்காக உடைமைகளைக் கைப்பற்று; **distrain'ment** *(n.)*.

distress' *(n.)* severe pain, sorrow, dangerous position, கடும்வலி, மனக் கவலை, இடையூறு, ஆபத்து; also *(v.t.)*; **distress'ful** *(adj.)*.

distrib'ute *(v.t.)* give share of to each of a member, divide into parts, to spread widely, பகிர்ந்து கொடு, கூறு கூறாக்கு, பரப்பு; **distribution** *(n.)*.

dis'trict *(n.)* a division of a state, மாவட்டம்.

distrust' *(n.)* lack of trust or confidence, suspicion, நம்பிக்கை யின்மை, சந்தேகம், ஐயம்; also *(v.t.)*.

disturb' *(v.t.)* confuse, make anxious, make unsettle, interrupt, குழப்பு, கிளர்ச்சி செய், ஒழுங்கற்றதாக்கு, இடையிட்டுத் தடு; **disturbance** *(n.)*.

disunite' *(v.t.)* separate, பிரி, பிளவு ஏற்படுத்து; **disunion** *(n.)*.

disuse' *(n.)* the state of being not in use, வழக்காறின்மை, பயன் பாடின்மை.

ditch *(n.)* a long narrow sink to drain water, வடிகால், குழி, பள்ளம்; also *(v.t.)*.

dither *(v.i.)* shake involuntarily from fear, அச்சத்தால் நடுங்கு; also *(n.)*.

ditto *(adv.)* likewise, அதேபோன்று; also *(n.)* & *(adj.)*.

ditty *(n.)* a short simple song, சிறு பாடல்.

diurn'al *(adj.)* of each day, நாளுக் குரிய.

diuretic *(n.)* a medicine used to excite discharge of urine, சிறுநீர் தூண்டு மருந்து.
div'agate *(v.i.)* go aimlessly, deviate from the right way, அலைந்து திரி, திசைமாறி நட; **divaga'tion** *(n.).*
dive *(v.i.)* to throw oneself into the water in the headfirst position, நீரில் தலைகுப்புறப் பாய்; also *(n.).*
diver *(n.)* one who dives to work under water, a kind of diving bird, நீரில் மூழ்குபவர், முத்துக் குளிப்பவர், நீர்மூழ்கிப் பறவை.
diverge *(v.t.)* proceed in different directions, deviate, விலகிச் செல், திசை திருப்பு; **diver'gence / diver'gency** *(ns.)*; **diver'gent** *(adj.).*
diverse' *(adj.)* unlike in nature or quality varied, மாறுபட்ட தன்மையுள்ள, பலவகையான.
diver'sion *(n.)* deviation, recreation, திருப்பம், பொழுதுபோக்கு.
divers'ity *(n.)* unlikeness, variety, வேற்றுமை, பல்வகைத் தன்மை.
divert' *(v.t.)* turn aside, draw off attention, entertain, cause to change direction, போக்குக் காட்டு, கவனத்தைத் திருப்பு, வேடிக்கை காட்டு, திசை திருப்பு.
div'est *(v.t.)* strip off clothes, ஆடையகற்று, உரி.
divide' *(v.t. & i.)* separate into parts, to share among, split, கூறுகளாகப் பிரி, பங்கிடு, வகு.
di'vidend *(n.)* the number to be divided by the divisor, share of profit, வகுபடு எண், ஆதாயப் பங்கு வீதம்.
divina'tion *(n.)* skilful forecast, good guess, முன்னுணர்தல், சரியான ஊகம்; **divine** *(v.i. & t.).*
divine¹ *(adj.)* devoted to God, pertaining to God, தெய்வத்தன்மை வாய்ந்த; **divi'nity** *(n.).*
divine² (see divination).
divisi'ble *(adj.)* capable of being divided, வகுக்கக்கூடிய; **divisibil'ity** *(n.).*
divi'sion *(n.)* process of dividing, sharing, disagreement, enumeration of parts, boundary, வகுத்தல், பங்கிடுதல், பங்கு, ஒற்றுமையின்மை, வகைப்படுத்துதல், வரம்பு.
divi'sor *(n.)* a number that divides another without remainder, வகுக்கும் எண்.
divorce' *(n.)* judicial separation of marriage relationship, விவாகரத்து, மணவிலக்கு; also *(v.t.).*
divot *(n.)* piece of land filled with matted roots of grass etc., புல்வெளி.
divulge *(v.t.)* make known, let out, அறியச் செய், வெளிப்படுத்து; also *(n.).*
dizzy *(adj.)* unsteady, giddy, குழம்பிய, தலை சுற்றுகிற.
do *(v.t. & i.)* perform any action, complete, செயலைச் செய், செய்து முடி; also *(v. refl.)*, & *(n.)*; **done** *(p.p.).*
do'cile *(adj.)* easily manageable, submissive, சமாளிக்கத்தக்க, கீழ்ப்படிதலுள்ள; **do'cility** *(n.).*
dock¹ *(n.)* a basin where ships may be loaded, unloaded or repaired, கப்பல் துறை; also *(v.t.).*
dock² *(n.)* an enclosure in a criminal court for the accused person or criminal, குற்றவாளிக் கூண்டு, கைதிக் கூண்டு.
dock³ *(n.)* fleshy part of animal tail, வாலடிப் பகுதி; also *(v.t.).*
dock'et *(n.)* a label stuck on goods showing its contents, a written statement of legal judgements, உள்ளடக்கக் குறிப்புச் சீட்டு, நீதிமன்றத் தீர்ப்பறிக்கை; also *(v.t.).*
doc'tor¹ *(n.)* a medical man, holder of the Ph.D. degree in any faculty, மருத்துவர், முனைவர்.
doc'tor² *(v.t. & i.)* adulterate, falsify, கலப்படம் செய், போலியாக்கு.
doc'trine *(n.)* belief or set of beliefs which is taught, தத்துவம்.
doc'ument *(n.)* a written statement giving information, proof, evidence

etc., ஆவணம்; also *(v.t.)*; **documenta'tion** *(n.)*.

dodder *(v.i.)* nod as a result of old age, முதுமையால் தலைநடுங்கு, பதறு.

dodge *(v.t. & i.)* to move to and fro, move quickly, use mean tricks. அங்குமிங்கும் திரி, வெட்டி விலகு, தந்திரமாகப் போக்குக்காட்டு, தட்டிக் கழி; also *(n.)*; **dodg'er** *(n.)*.

doe *(n.)* female of deer, hare, rabit etc., பெண்மான், பெண் முயல்.

doer *(n.)* one who does anything, செய்பவர்.

doff *(v.t.)* take off hat clothing etc., ஆடையகற்று, தொப்பியை எடு.

dog[1] *(n.)* a four-footed domestic animal, நாய்; also *(v.t.)*.

dog[2] *(n.)* a mechanical device, ஒரு வகைக் குறடு; also *(v.t.)*.

dogg'ed *(adj.)* refusing to give in, unyielding, சிடுசிடுப்பான, விடாப் பிடியான.

doggerel *(n.)* mean and bad verse, இழிசுவைப் பாடல்; also *(adj.)*.

dog'ma *(n.)* doctrinal system, நிலை நாட்டப்பட்ட கொள்கை; **dogmatic** *(adj.)*; **dog'matism** *(n.)*.

doily *(n.)* small fancy napkin placed below finger-glass, உணவுத் தட்டுக்கு அடியில் விரிக்கப்படும் சிறிய துணி.

doldrums *(n.)* dullness, parts of the ocean near the equator where there are calm and rough winds, காற்றுத் தேக்கம், நிலநடுக்கோட்டிற்கு அருகே உள்ள காற்றோட்டப் பகுதி.

dole *(n.)* charitable distribution, payment or relief claimable by the unemployed, அறப்பங்கீடு, வேலை யில்லாதவர்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகை; **dole'ful** *(adj.)*.

doll *(n.)* a toy baby for a child, பொம்மை.

doll'ar *(n.)* the standard unit of currency in several countries, அமெரிக்க நாட்டு நாணயம்.

dollop *(adj.)* shapeless lump or food, குறிப்பிட்ட வடிவமற்ற துண்டு அல்லது உணவுப்பொருள்.

dolmen *(n.)* a stone table, கல்மேடை.

dol'orous *(adj.)* distressing, miserable, துன்பமிக்க, வேதனை மிகுந்த.

dol'phin *(n.)* a type of sea-animal with beak-like snout, கடல் விலங்கு வகை.

dolt *(n.)* dull fellow, முட்டாள், அறிவற்றவன்.

domain' *(n.)* region under rule, sphere of influence, an area of interest or knowledge, ஆட்சிப்பரப்பு, ஆதிக்க எல்லை, செயல் களம்.

dome *(n.)* roof-top or tower-top, குவிமாடம்.

domest'ic *(adj.)* pertaining to the house, of one's own country, living with man, வீட்டிற்குரிய, உள்நாட்டிற்குரிய, வீட்டில் வளர்க்கும்.

nom'ad *(n.)* wanderer, நாடோடி; **nomad'ic** *(adj.)*.
no'menclature *(n.)* a system of name, பெயரிடு முறை.
nom'inal *(adj.)* existing only in name, formal, பெயரளவிலான, முறைக் கான.
nom'inate *(v.t.)* to propose a name for an office, பெயர் குறிப்பிடு; **nomina'tion** *(n.)*.
nom'inative *(n.)* the subject of a verb, எழுவாய்; also *(adj.)*.
nominee' *(n.)* a person proposed to fill a place, பெயர் குறிக்கப்பட்டவர்.
non'agenarian *(n.)* one who is ninety years old, தொண்ணூறு வயது உடையவர்.
non'agon *(n.)* plane figure of nine sides, ஒன்பது பக்கங்களுள்ள வடிவம்.
nonce *(n.)* the present occasion, தற் சமயம்.
non'chalant *(adj.)* not having enthusiasm, unconcerned, ஆர்வ மற்ற, அக்கறையற்ற.
noncommit'tal *(adj.)* not committing one to any point of view or course of action, தன் கருத்தை ஆணித்தரமாகக் கூறாத, பொறுப்பேற்க விரும்பாத, விலகி நிற்கிற.
non-coopera'tion *(n.)* refusal or failure to cooperate, ஒத்துழையாமை.
non'descript *(adj.)* not easily described, indeterminate, எளிதில் விவரிக்க இயலாத, வகைப்படுத்த முடியாத, அறுதியிட முடியாத.
non *(pro.)* no one, ஒருவருமிலர்.
nonen'tity *(n.)* non-existence, a person of no account, இல்லாமை, இல்லாத பொருள், மதிப்பற்றவர்.
nonplus' *(n.)* state of perplexity, deadlock, குழப்பநிலை, திகைப்பு, தடு மாற்றம், மலைப்பு; also *(v.t.)*.

non'sense *(n.)* lack of sense, absurdity, அறிவின்மை, பொருளற்றது.
non-stop *(adj.)* continuing without a stop, நிற்காமல் ஓடும்; also *(adv.)*.
noo'dle[1] *(n.)* a stupid fellow, அறிவிலி, முட்டாள்.
noo'dle[2] *(n.)* strip of paste made with flour, உணவு வகை.
nook *(n.)* sheltered corner, மூலை, இடுக்கு; **nook'y** *(adj.)*.
noon *(n.)* midday, twelve o'clock in the day, நடுப்பகல், உச்சி வேளை, பகல் 12 மணி.
noose *(n.)* a running loop, snare, சுருக்கு, கண்ணி; also *(v.t.)*.
norm *(n.)* a rule, authoritative, standard pattern, விதி, விதி முறை, உரு மாதிரி.
nor'mal *(adj.)* ordinary, natural, erect, சாதாரணமான, இயல்பான, செங்குத்தான; also *(n.)*.
north *(n.)* the direction to the left of a person facing the rising sun, வடக்குத் திசை, வடதிசை; also *(adj.)* & *(adv.)*.
north'ern *(adj.)* lying in or near the north, வடக்கிலுள்ள, வடதிசைக் குரிய.
north'ward *(adj.)* towards north, வடக்கு நோக்கின.
nose *(n.)* the organ of smell, மூக்கு; also *(v.t. & i.)*.
nose'gay *(n.)* a bunch of sweet-smelling flowers, பூச்செண்டு.
nostal'gia *(n.)* home sickness, வீட்டு ஏக்கம்.
nos'tril *(n.)* one of the two openings of the nose, மூக்குத் துளை.
nos'trum[1] *(n.)* quack medicine, போலி மருந்து.
nos'trum[2] *(n.)* idealistic scheme, சிறந்த திட்டம்.
not'able *(adj.)* worthy of note, remarkable, கவனிக்கத்தக்க, குறிப் பிடத்தக்க; **notabil'ity** *(n.)*.
not'ary *(n.)* a legal officer authorized to attest documents, ஆவண எழுத்துப் பதிவாளர்.
nota'tion *(n.)* representation of numbers, quantities etc., by symbols, எண் குறிப்பு, குறியீடு.
notch *(n.)* V-shaped cut, V-வடிவ வெட்டு, வெட்டுக்குறி.
note *(n.)* a sign or piece of writing to draw some one's attention, a brief comment, a currency paper, symbol for musical sound, குறிப்பு, சீட்டு, காகித நாணயம், இசைக் குறியீடு; also *(v.t.)*.
not'ed *(adj.)* famous, well known, புகழ்பெற்ற, பெயர்பெற்ற.
note'worthy *(adj.)* worthy of notice, குறிப்பிடத் தக்க, புகழ்வாய்ந்த.
no'thing *(n.)* no thing, not anything, ஒன்றும் இல்லை.
not'ice *(n.)* an announcement, intimation, attention, warning, அறிவிப்பு, அறிக்கை, கவனம், எச்சரிக்கை; also *(v.t.)*.
notifica'tion *(n.)* notice given, adverti'sement, information, அறிக் கைப் பத்திரம், விளம்பர அறிவிப்பு, தகவலறிவிப்பு ; **no'tify** *(v.t.)*.
no'tion *(n.)* an idea, a desire for something, belief, கருத்து, எண்ணம், ஆசை, கொள்கை.
notor'ious *(adj.)* known for something bad, தீமைக்குப் பெயர்போன, கெட்ட பெயரெடுத்த; **notori'ety** *(n.)*.
nought *(n.)* nothing, cipher, ஒன்றுமில்லை, சூனியம், சுழி.
noun *(n.)* the word used to denote the name of a person, place or thing, பெயர்ச்சொல்.
nour'ish *(v.t.)* to feed, nurture, உணவு ஊட்டு, வளர்த்து, ஊக்கமூட்டு, ஊட்டம்கொடு; **nouri'shment** *(n.)*.
nov'el *(adj.)* new, strange, unusual, புதிய, புதுமை வாய்ந்த, புதினம், முன்னர் அறிந்திராத; also *(n.)*.
novelette *(n.)* small ,novel, குறு புதினம்.
nov'elist *(n.)* a novel writer, நாவலா சிரியர், புதின ஆசிரியர்.
nov'elty *(n.)* newness and strangeness, புதுமை.

Novem'ber *(n.)* the eleventh month of the English year, ஆங்கில ஆண்டின் பதினோராவது மாதம் – நவம்பர்.

nov'ice *(n.)* a beginner, learner, probationer, தொடக்க நிலையாளர், புதிதாகக் கற்பவர், கற்றுக்குட்டி, தகுதி காண் பருவத்தினர்.

now *(adv.)* at the present time, இப்பொழுது.

now'adays *(adv.)* in these times, at present, இந்நாள்களில், இக்காலத்தில்.

no'where *(adv.)* not in any place, எங்குமில்லாமல்.

no'wise *(adv.)* in no way, எவ்விதத்திலுமில்லாமல், எவ்வகையிலுமில்லாமல்.

nox'ious *(adj.)* hurtful, poisonous, bad, தீங்குடைய, நச்சுத்தன்மை வாய்ந்த, கெடுதலான.

noz'zle *(n.)* a narrow mouth of an apparatus, தூம்புவாய், கருவி மூக்கு.

nu'ance *(n.)* delicate shade of difference in colour, tone etc., வண்ணச் சாயலில் நுட்ப வேறுபாடு, கருத்து வகையில் நுட்ப வேற்றுமை.

nu'bile *(adj.)* marriageable, திருமண வயதடைந்த.

nu'ciform *(adj.)* nut-shaped அண்டி வடிவ, கொட்டை வடிவ.

nu'cleus *(n.)* core of the atom, kernel, centre, அணுக்கரு, உட்கரு, மையக் கரு.

nude *(adj.)* naked, ஆடையற்ற; **nu'dity** *(n.)*.

nudge *(v.t.)* touch slightly with elbow to draw attention privately, இரகசியமாக மெல்லச் சுரண்டிக் கவனத்தைத் தன்பக்கம் இழு.

nu'gatory *(adj.)* trifling, ineffective, அற்பமான, மதிப்பற்ற, பயனற்ற.

nugg'et *(n.)* rough lump of native gold, தங்கப் பாளம்.

nui'sance *(n.)* something annoying or troublesome, தொல்லை, தொந்தரவு, நச்சரிப்பு.

null *(adj.)* of no effect, பயனற்ற, பொருளற்ற.

nul'lify *(v.i.)* invalidate, cance பயனற்றதாக்கு, செல்லுபடியற் தாக்கு, நீக்கு, ரத்து செய்.

nulli'para *(n.)* a married woman wh has never given birth to a child, barren woman, மகப்பேறில்லா பெண், மலடி.

nul'lity *(n.)* state of being null an void, பயனற்ற நிலை, செல்ல நிலை.

numb *(adj.)* not able to feel or move மரத்துப்போன, உணர்வற்ற, விறை துப்போன; also *(v.t.)*.

num'ber *(n.)* a numeral, aggregat எண், மொத்தம்; also *(v.t.)*.

num'eral *(adj.)* pertaining to a number, எண்ணுக்குரிய ; also *(n.)*.

nu'merary *(adj.)* belonging to certain number, எண்ணுக்குரிய.

numera'tion *(n.)* the act of numbering, எண்ணுதல், எண்மானம்.

num'erator *(n.)* one who numbers, th upper number of a vulgar fractior கணக்கிடுபவர், பின்னத்தின் மே இலக்கம்.

numerical *(adj.)* denoting number எண்ணைக் குறிக்கிற.

num'erous *(adj.)* many, abundant ஏராளமான, எண்ணற்ற, மிகுதி யான.

numismati'cs *(n.)* the collection an study of coins, நாணய ஆராய்ச்சி.

num'skull *(n.)* a stupid fellow மூளையில்லாதவன், மூடன்.

nun *(n.)* a female member of religious community, கிறித்தவ பெண் துறவி.

nun' nery *(n.)* a convent, a house fo nuns, கன்னிமடம்.

nup'tial *(adj.)* matrimonial, திருமண சார்ந்த; also *(n.)*.

nurse *(n.)* a person who looks afte sick or injured, a female attendan who looks after infants, நோயாள களைப் பேணுபவர், செவிலி, தாதி also *(v.t. & i.)*.

nurs'ery *(n.)* an apartment fo children, a place where young plant are grown, குழந்தைகள் காப்பகம்

நாற்றுப் பண்ணை, செடிப் பண்ணை.

nurse'ling *(n.)* an infant, a young plant, சிறு குழந்தை, நாற்று.

nur'ture *(n.)* upbringing, nourishment, training, வளர்ப்பு முறை, ஊட்டம், பயிற்சி; also *(v.t.)*.

nut[1] *(n.)* the hard seed inside a fruit, கொட்டை, கொட்டைப் பருப்பு; also *(v.t.)*.

nut[2] *(n.)* a small round metal piece with a hole into which a screw fit's, மரை.

nut'crackers *(n.)* a device for cracking nuts, பாக்குவெட்டி.

nut'meg *(n.)* a kind of aromatic nut, ஜாதிக்காய்.

nu'trient *(adj.)* nourishing, ஊட்டச் சத்துடைய.

nu'triment *(n.)* nourishment, food, ஊட்டம், உணவு.

nutrition *(n.)* nourishment, the scientific study of nutrition, ஊட்ட உணவு, ஊட்டச்சத்து பற்றிய அறிவு; **nutri'tious** ; **nu'tritive** *(adjs.)*.

nut'shell *(n.)* the hard shell of a nut, கொட்டையின் ஓடு, சுருக்கம்.

nyctalo'pia *(n.)* night blindness, மாலைக்கண், இராக்குருடு.

nylon *(n.)* synthetic material used for fabrics, ropes, etc., நைலான் எனப் படும் செயற்கை இழை.

nymph *(n.)* Goddess of wood, water etc., வனதேவதை, நீர்மோகினி.

O

oaf *(n.)* deformed child, a stupid or clumsy person, கோணல் உருக் குழந்தை, அறிவிலி , முட்டாள்.

oak *(n.)* a deciduous forest tree, சிந்தூர மரம்.

oak'um *(n.)* loose hemp got by unravelling old rope, நார் நாராகப் பிரித்த பழங்கயிறு.

oar *(n.)* a long piece of wood with a flat end for rowing a boat, துடுப்பு; also *(v.t. & i.)*.

oa'sis *(n.)* a spot in desert where water is found and plants grow, பாலை வனச் சோலை.

oat *(n.)* a type of cereal plant, its grain, ஒருவகைத் தானியம்.

oath *(n.)* solemn promise to be loyal, a declaration in the name of God, உறுதிமொழி, சத்தியம்.

ob'duracy *(n.)* hard-heartedness, stubbornness, கல் நெஞ்சம், பிடி வாதம்; **ob'durate** *(adj.)*.

obed'ience *(n.)* submission to authority, willingness to obey orders, கீழ்ப்படிதல், ஆணைக்கு இணங்குதல்; **obedient** *(adj.)*.

obeis'ance *(n.)* an act of reverence or homage, தலைவணங்குதல், பணிவு.

obese'ness *(n.)* fleshiness, ஊளைச் சதை, கொழுப்பு; **obese'** *(adj.)*; **obesity** *(n.)*.

obey *(v.t. & i.)* to do what one is told to do, comply with, கீழ்ப்படி, சொற்படி நட, இணங்கு.

obit'uary *(n.)* an announcement of a person's death, மரண அறிவிப்புச் செய்தி; also *(adj.)*.

ob'ject *(n.)* material thing, anything that can be seen or felt, aim, word dependent on verb, பொருள், கருத்து, நோக்கம், செயப்படு பொருள்.

object' *(v.i. & t.)* oppose, to give a reason against, எதிர்ப்புத் தெரிவி, தடை சொல், மறுப்புக் கூறு; **objection** *(n.)*.

objectionable *(adj.)* offensive, disapproved of, தண்டனைக்குரிய, ஒப்புதல் பெறாத.

objec'tive *(adj.)* relating to an object, external to the mind, accusative, பொருள் தொடர்பான, மனத்திற்கு அப்பாற்பட்ட, புற உலகத்திற்குரிய, செயப்படுபொருளான; also *(n.)*.

objure' *(v.t.)* charge under oath, ஆணையிட்டுக் குற்றம் சுமத்து; **objura'tion** *(n.)*.

oblate' *(adj.)* spherical, நீள் உருண் டையான.

obla'tion *(n.)* a sacrifice or offering, பலி, படையல்.
obliga'tion *(n.)* binding promise, debt of gratitude, favour, கடமைப்படுதல், நன்றிக்கடன், உதவி; **obligatory** *(adj.)*.
oblige' *(v.t.)* bind morally or legally, compel, கடமைப்படு, நன்றிக்கடன் செலுத்து, வலியுறுத்து.
obliging *(adj.)* kind, helpful, அன்புடைய, உதவும் பண்புள்ள.
oblique' *(adj.)* slanting, indirect, சாய்வான, மறைமுகமான; **oblique'ness** *(n.)*.
oblit'erate *(v.t.)* to blot out, destroy, துடை, அழி, போக்கு; **obliter'ation** *(n.)*.
oblivi'on *(n.)* forgetfulness, negligence, மறத்தல், அசட்டை; **oblivious** *(adj.)*.
ob'long *(adj.)* rectangular, நீள் சதுரமான, நாற்கட்ட வடிவம்.
obloquy *(n.)* abuse, disgrace, அவதூறு, நிந்தை.
obno'xious *(adj.)* causing dislike or offence, வெறுப்பூட்டும், அருவருப்பான, தீமை விளைவிக்கும்.
oboe *(n.)* a type of wood wind musical instrument, மரத்தாலான துளை இசைக் கருவி.
obscene' *(adj.)* indecent, lewd, ஒழுக்கமற்ற, இழிந்த; **obscen'ity** *(n.)*.
obscure' *(adj.)* not easily understood, not well-known, not clear, புரிந்து கொள்ள முடியாத, மறைவான, தெளிவற்ற , மங்கலான; also *(v.t.)*; **obscurity** *(n.)*.
ob'sequies *(n.pl.)* funeral rites, ஈமச்சடங்கு.
obsequious *(adj.)* servile, submissive, humble, இழிவான, பணிவான, மதிப்பை விட்டுத் தாழும்.
observ'ance *(n.)* act of observing rite, custom etc., சமயச் சடங்குகளை மேற்கொள்ளுதல்.
obser'vant *(adj.)* watchful, good at noticing, எச்சரிக்கையுள்ள, கூர்ந்து கவனிக்கிற.
observa'tion *(n.)* the act of noticing and watching, a remark, உற்று நோக்குதல், கவனித்தல், குறிப்பு.
observ'atory *(n.)* a place for observing and studying the stars, weather etc. through telescopes, வானிலை ஆய்வுக்கூடம், வானாராய்ச்சி நிலையம், கூற்றுநோக்ககம்.
observe' *(v.t. & i.)* to watch carefully to obey, to make a remark, உற்று நோக்கு, பின்பற்று, குறிப்புக் கூறு.
obsess' *(v.t.)* to fill the mind completely, கருத்தூன்று, மனத்தை ஆட்டிப் படை.
o'bsolete *(adj.)* out of date, gone out of use, பழமைப்பட்ட, வழக்கொழிந்த.
ob'stacle *(n.)* something which prevents progress, hindrance, முன்னேற்றத் தடை, இடையூறு.
obstetr'ics *(n.)* midwifery, மகப்பேறு மருத்துவம்.
ob'stinacy *(n.)* stubbornness, முரண்டு, பிடிவாதம், அடம்; **ob'stinate** *(adj.)*.
obstre'perous *(adj.)* noisy, turbulent, இரைச்சலான, ஆரவாரமுடைய.
obstruct' *(v.t.)* to hold back, hinder, தடுத்து நிறுத்து, தடு; **obstruction** *(n.)*; **obstructive** *(adj.)*.
obtain' *(v.t. & i.)* attain, acquire, procure by effort, அடை, பெறு, முயன்றுபெறு ; **obtain'able** *(adj.)*.
obtrude' *(v.t.)* to force upon unduly, intrude, பலவந்தமாகத் திணி, உரிமையின்றித் தலையிடு; **obtru'sion** *(n.)*.
obtuse' *(adj.)* dull, blunt, மந்தமான, மழுங்கிய.
ob'verse *(n.)* the face of the coin, நாணயத்தின் முகப்புப்பக்கம்.
ob'viate *(v.t.)* to prevent, to free from difficulty, remove, விலக்கு, தவிர், அகற்று.
obvious *(adj.)* easily seen or understood, plain, தெளிவாகத் தெரிகிற, வெளிப்படையான.

occ'asion *(n.)* a special time, a particular event, an opportunity, cause or reason, குறிப்பிட்ட நேரம், நிகழ்ச்சி, வாய்ப்பு , காரணம்.

occa'sional *(adj.)* occurring at times, அவ்வப்போது நிகழும், தற்செயலாக நிகழும்.

oc'cident *(n.)* the west, மேற்கு, மேல் திசை.

occult *(adj.)* supernatural, hidden, இயற்கை மீறிய, மறைபொருளாய்; also *(v.t.)*.

occ'upant *(n.)* a tenant, possessor, குடியிருப்பவர் , உரிமையாளர்.

occupa'tion *(n.)* a person's job or work, possession, பணி, தொழில், அலுவல்.

oc'cupy *(v.t.)* to take up space or time, to dwell in, to possess, இடம்பிடி, நிரப்பு, தங்கு, கைப்பற்று.

occur' *(v.t.)* happen, come to mind , நேரிடு, நிகழ், மனத்தில் தோன்று.

occur'rence *(n.)* a happening or event, நிகழ்ச்சி.

ocean *(n.)* the sea water that covers most of the earth's surface, மாக்கடல், சமுத்திரம்.

o'chre *(n.)* a kind of pale yellow clay used for colouring, காவிமண்.

oc'tagon *(n.)* a plane figure having eight sides and angles, எண்முகி, எண்கோண வடிவம்.

oc'tave *(n.)* a group of eight, a stretch of eight notes in music, எட்டன் தொகுதி, எட்டாம் சுரம்.

Octo'ber *(n.)* the tenth month of the English year, ஆங்கில ஆண்டின் பத்தாவது மாதம், அக்டோபர்.

octogenar'ian *(adj.)* aged between eighty and ninety, எண்பதிற்கும் தொண்ணூறுக்கும் இடைப்பட்ட வயதினரான; also *(n.)*.

oc'topus *(n.)* eight armed cuttle fish, எட்டுக் கால்களையுடைய கடல்வாழ் உயிரினம்.

oc'ular *(adj.)* actually seen, pertaining to the eye, கண்ணால் கண்ட, கண் தொடர்பான.

odd *(adj.)* unusual, that cannot be divided exactly by 2, unmatched, strange, விந்தையான, ஒற்றைப் படையான, தொடர்பில்லாத, புதுமையான.

odd'ity *(n.)* something strange , odd person or thing, புதுமை, விந்தை மனிதன், வியப்பான நிகழ்ச்சி.

odds *(n.pl.)* inequality, superiority, சமமின்மை, ஏற்றத் தாழ்வுகள்.

ode *(n.)* a short poem, சிறு பாட்டு, ஒரு பாடல் வகை.

od'ium *(n.)* dislike, enmity, வெறுப்பு, பகைமை.

o'dour *(n.)* smell, நறுமணம்; **o'dorous** *(adj.)*.

offence' *(n.)* a crime, a wrong - doing, குற்றம், தவறு.

offend' *(v.t. & i.)* to upset, to be unpleasant, சினமூட்டு, வெறுப்புண்டாக்கு.

offen'sive *(adj.)* displeasing, insulting, rude, சினமூட்டும், அவமதிக்கும், கடுமையான.

of'fer *(v.t. & i.)* to put forward, volunteer, propose, bid, முன் வை, மனமுவந்து கொடு, முன்மொழி, விலை கேள்; also *(n.)*.

of'fering *(n.)* a gift given during religious service, படையல், காணிக்கை, கொடை.

off'hand *(adj.)* said or done without thinking, முன்பின் ஆராயாது கூறின; also *(adv.)*.

of'fice *(n.)* a place where clerical or administrative work is done, a room or building for a particular purpose, employment, அலுவலகம், தொழிலகம், பதவி.

of'ficer *(n.)* one who holds an office, அலுவலக அதிகாரி.

offi'cial *(n.)* functionary, public servant, அதிகாரி, அரசு அலுவலர்; also *(adj.)*.

offici'ate *(v.t.)* to perform the duty or service of an office, அலுவலகக் கடமையாற்று, செயலாற்று.

offici'ous *(adj.)* fond of interfering, வலிந்து தலையிடும் இயல்புடைய.
off'ing *(n.)* off the shore, அடி வானத்துக் கடல்.
offset[1] *(v.t.)* compensate for, ஈடுசெய், also *(n.)*.
off'set[2] *(n.)* a process of printing, அச்சு முறை.
off'shoot *(n.)* a shoot from the main branch of the plant, சிறுகிளை.
off'spring *(n.)* one's child, குழந்தை, சந்ததி.
oft, often *(adv.)* frequently, அடிக்கடி.
o'gle *(v.t. & i.)* to glance with love, கடைக்கண்ணால் பார்; also *(n.)*.
ogre *(n.)* a man-eating giant in fairy tales, மனிதனைக் கொன்று தின்னும் அரக்கன்.
oil *(n.)* a combustible liquid which does not mix with water, எண்ணெய்; also *(v.t. & i.)*, **oily** *(adj.)*.
oil'monger *(n.)* an oil dealer, எண்ணெய் வணிகன்.
oint'ment *(n.)* a medical substance rubbed on the skin to heal injuries etc., களிம்பு, பூச்சு மருந்து.
old *(adj.)* pertaining to age, aged, not new, வயது சார்ந்த, வயதான, பழமையான, பழைய.
oleaginous *(adj.)* oily, எண்ணெய்ப் பிசுக்குடைய.
olfac'tory *(adj.)* pertaining to smelling, முகர்ச்சிக்குரிய.
oligarchy *(n.)* government by a few, சிலபேர் ஆட்சி.
olive *(n.)* an evergreen tree which gives oil, the yellowish green colour of the fruit, ஆலிவ் மரம், மஞ்சள் கலந்த பச்சை நிறம்.
olympic *(adj.)* pertaining to international athletic competitions, உலகளாவிய விளையாட்டுப் போட்டிக் குரிய.
o'mega *(n.)* the last letter of the Greek alphabet, கிரேக்க நெடுங்கணக்கின் கடைசி எழுத்து, ஒமேகா.
o'melet *(n.)* an egg preparation, முட்டைத் தோசை, முட்டை ஊற்றப்பம்.
o'men *(n.)* sign or indication of something good or bad, சகுனம், குறி; also *(v.t.)*.
om'inous *(adj.)* of ill omen, likely to bring trouble, கெட்ட சகுனமுடைய, தீய விளைவுகளை ஏற்படுத்தும்.
omis'sion *(n.)* something that had been left out or forgotten, negligence, விடுபாடு, புறக்கணிப்பு, அசட்டை.
omit *(v.t.)* to leave out, neglect, forget, விட்டுவிடு, புறக்கணி, தவிர், மற.
om'nibus *(n.)* a large vehicle for the public, பேருந்து.
omnip'otent *(adj.)* having absolute power, எல்லாம் வல்ல; also *(adj.)*, **omnip'otence** *(n.)*.
omnipre'sent *(adj.)* present everywhere, நீக்கமற நிறைந்த.
omnis'cient *(adj.)* knowing everything, எல்லாம் உணர்ந்த; also *(n.)*.
omni'vore *(n.)* one who or that which feeds on all kinds of food, அனைத்துண்ணி; **omniv'orous** *(adj.)*.
once *(adv.)* for one time only, at anytime, at a time in the past, ஒரு முறை, எப்போதாவது, முன்னொரு.
on'coming *(adj.)* nearing, approaching, அடுத்து வரும், நெருங்குகிற; also *(n.)*.
one *(n.)* the first of the numeral, ஒன்று; also *(adj.)*.
one'ness *(n.)* singleness, unity, ஒருமை, ஒற்றுமை.
one'rous *(adj.)* hard to bear, பொறுப்பு மிக்க, பளுவான.
one'sided *(adj.)* partial, unjust, ஒரு சார்புடைய, நடுநிலையற்ற.
on'ion *(n.)* a plant with an edible bulb, வெங்காயம்.
on'looker *(n.)* one who looks on, a witness, பார்வையாளர், காண்போன், சாட்சி.
onomatopoe'ia *(n.)* formation of words by imitation of sounds, ஒலிக்குறிப்புச் சொல்.
on'rush *(n.)* strong forward movement, திடீர்ப் பாய்ச்சல்.
on'set *(n.)* brisk start, an assault, சுறுசுறுப்பான தொடக்கம், தாக்குதல்.

on'shore *(adj.)* going towards or happening on the shore, கடற்கரையோர, கரையோரம் நிகழ்கிற.
on'slaught *(n.)* a fierce attack, கடுமையான தாக்குதல்.
on'us *(n.)* a burden, responsibility, சுமை, கடமை, பொறுப்பு.
on'ward *(adj.)* going forward, முன்னோக்கிச் செல்கிற; also *(adv.)*.
o'nyx *(n.)* a kind of precious stone with layers of different colours, கோமேதகம்.
oodles *(n.pl.)* super abundance, மிகையளவு.
ooze *(v.t. & i.)* to flow gently and slowly, கசி , ஒழுகு, வடி; also *(n.)*.
opacity *(n.)* lack of transparency, ஒளி ஊடுருவாத தன்மை, மங்கல்.
o'pal *(n.)* a type of bluish - white precious stone, மணிக்கல் வகை.
opaque' *(adj.)* not transparent , ஒளி ஊடுருவாத.
open' *(v.t. & i.)* unclose, begin, திற, தொடங்கு; also *(adj.)*.
op'ener *(n.)* something that opens, திறப்பவர், திறக்க உதவும் பொருள்.
open'-hearted *(adj.)* frank, plain, sincere, ஒளிவு மறைவற்ற, கள்ளங் கபடமற்ற, வெளிப்படையான, நேர்மையான.
opening *(n.)* a clear or open space, a hole, beginning a ceremony, to mark the beginning, opportunity, திறப்பு, துளை, தொடக்கம், திறப்பு விழா, வாய்ப்பு.
op'era *(n.)* a musical drama theartre, இசை நாடகம்.
operate *(v.t. & i.)* work, act, perform a surgery, வேலைசெய், இயக்கு, அறுவை சிகிச்சை செய்.
opera'tion *(n.)* action, working process, procedure, surgical treatment, செயல், செயல்பாடு, நடவடிக்கை, அறுவை சிகிச்சை.
operat'or *(n.)* one who operates, இயக்குபவர்.
operetta *(n.)* a short musical drama, ஓரங்க இசை நாடகம்.
ophthal'mic *(adj.)* pertaining to the eye, கண் சார்ந்த.
op'iate *(n.)* a drug causing drowsiness, அபின் கலந்த தூக்க மருந்து.
opine *(v.t.)* think , to have an idea, எண்ணு, கருது.
opin'ion *(n.)* what one thinks, notion, a belief, judgement, நினைப்பு, எண்ணம், கருத்து, நம்பிக்கை, மதிப்பீடு.
opium *(n.)* a juice extracted from the poppy plant and used as medicine, அபின்.
oppon'ent *(n.)* one who opposes, rival, foe, எதிர்தரப்பாளர், போட்டியாளர், எதிரி.
opportune *(adj.)* coming at the right time, suitable, favourable, தக்க சமய, பொருத்தமான, ஏற்ற, சாதகமான, வாய்ப்பான; **opportunity** *(n.)*.
oppose *(v.t.)* stand or fight against, resist, compete with, எதிர்த்து நில், சண்டையிடு, தடுத்து நிறுத்து, போட்டியிடு; **opposed** *(adj.)*.
opp'osite *(adj.)* being right in front of, completely different, எதிரிலுள்ள, எதிரிடையான, முற்றிலும் மாறுபட்ட.
opposi'tion *(n.)* resistance, counteraction, the party opposing the ruling party, தடை, எதிர்ப்பு, எதிர்க்கட்சி.
oppress' *(v.t.)* to treat cruelly, to worry or depress, துன்புறுத்து, கொடுமைப் படுத்து, வருத்து, அடக்கு.
opprob'rium *(n.)* public disgrace, abuse, நிந்தனை, மானக்கேடு, அவதூறு, வசை; **opprobrious** *(adj.)*.
oppugn' *(v.t.)* fight against, oppose, எதிர்த்துப் பேசு, மறுத்துரை.
opt *(v.t.)* prefer to, select, விரும்பியதைத் தேர்ந்து எடுத்துக்கொள், விரும்பி எடு.
op'tative *(adj.)* expressing a wish or desire, விருப்பத்தை உணர்த்துகிற, ஆணையை வெளியிடுகிற.
op'tic *(adj.)* pertaining to the eye or one's ability to see, கண் சார்ந்த, பார்வைக்குரிய, கட்புலன் சார்ந்த, ஒளிசார்ந்த.

opti'cian *(n.)* manufacture or seller of spectacles or optical instruments, மூக்குக் கண்ணாடிகள் மற்றும் ஒளியியல் கருவிகள் செய்பவர், விற்பனையாளர்.

op'tics *(n.)* the science of vision and light, ஒளியியல்.

op'timism *(n.)* the doctrine that all is for the best, a positive approach, நன்மைவிளைவுக் கோட்பாடு, நல்லது காணும் அணுகுமுறை; **op'timist** *(n.)* ; **optimis'tic** *(adj.)*.

op'timum *(n.)* most favourable point, உகந்த நிலை, சாதகமான நிலை; also *(adj.)*.

op'tion *(n.)* right of choosing, preference, விருப்பத் தேர்வு, விருப்பம்.

op'tional *(adj.)* left to one's choice, not compulsory, விருப்பத்திற்கு விடப்பட்ட, கட்டாயமற்ற.

op'ulence *(n.)* great wealth, riches, பெருஞ்செல்வம், செழிப்பு, வளமை; **op'ulent** *(adj.)*.

opu'smag'num *(n.)* magnumopus, the great work of one's life, ஒருவர் தம் வாழ்நாளில் இயற்றிய நூல்களில் மிகப் பெரியதும் சிறந்ததுமான ஒன்று.

o'racle *(n.)* a holy place where a God was believed to give answers to the questions of the devotees, a very wise and knowledgeable person, தெய்வவாக்கு அல்லது அருள்வாக்கு கூறப்படும் இடம், சான்றோன், பேரறிவு உடையவன்.

or'al *(adj.)* pertaining to the mouth, verbal, taken in by the mouth, வாய்தொடர்பான, வாய்மொழியான, வாய்வழியாகக் கொடுக்கப்படும்.

o'range *(n.)* a tree yielding a juicy fruit, the reddish yellow colour of the fruit, ஆரஞ்சு, ஆரஞ்சு நிறம், also *(adj.)*.

orang-outang *(n.)* man like ape, வாலில்லாக் குரங்கு.

or'ation *(n.)* a formal public speech in fine language, சிறந்த சொற்பொழிவு; **oratori'cal** *(adj.)*.

or'ator *(n.)* a public speaker, eloquent speaker, சிறந்த பேச்சாளர், சொற்பொழிவாளர்.

orator'io *(n.)* a music drama on a sacred theme, புராண இசைச் சொற்பொழிவு, கதாகாலட்சேபம்.

or'atory[1] *(n.)* the art of public speaking, சொற்பொழிவுத் திறன்.

or'atory[2] *(n.)* a place for worship and prayer, ஆராதனைக் கூடம், வழிபாட்டுக் கூடம்.

orb *(n.)* anything in the shape of the sphere or globe, கோளம், உருண்டை; also *(v.t.)*.

or'bit *(n.)* the path in which something moves round a planet, star etc., the cavity of the eye, கோளப் பாதை, சுற்றுவழி, கண்குழி.

or'chard *(n.)* a garden of fruit trees, பழத்தோட்டம்.

or'chestra *(n.)* a group of musicians, choir, இசைக் கருவியுடன் பாடும் குழு, இசைக்குழு.

orchid *(n.)* a kind of plant having brightly coloured flowers, வண்ண மலர்ச் செடி வகை.

ordain' *(v.t.)* to appoint, to declare something to be law, பணியமர்த்து, சட்டப்படி உத்தரவிடு, சட்டத்தை அமல்படுத்து.

ordeal' *(n.)* a severe trial or test, a painful experience, கடுமையான முயற்சி, கடுஞ்சோதனை, கசப்பான அனுபவம்.

or'der *(n.)* command, an instruction, absence of crime, a group, kind or class, rank or position , a request to supply goods, ஆணை, கட்டளை, உத்தரவு, ஒழுங்கு, இனம், வகை, தரம், வரிசை, பதவி, மதிப்பு, பொருள் தேவை முறையீடு; also *(v.t.)*.

or'derly *(adj.)* well-arranged, to proper order, peaceful, வரிசை முறையான. முறைப்படியான, அமைதியான; also *(adv.)* & *(n.)*.

ord'inance *(n.)* a legal order, religious rite, அவசரச் சட்டம், சட்டம் ஒழுங்கு, சமயச் சடங்கு.

or'dinary *(adj.)* usual, normal, common, வழக்கமான, இயல்பான, பொதுவான.
ordnance *(n.)* military stores, artillery, cannon, ஆயுதக்கிடங்கு, பீரங்கிப் படை, துப்பாக்கி.
ore *(n.)* mineral substance from which metals are extracted, தாதுப் பொருள்.
or'gan *(n.)* part of the body or plant which has a special function, a large wind instrument, உடல் உறுப்பு, செடி உறுப்பு, ஊது இசைக்கருவி.
or'ganism *(n.)* living animal or plant having organs, உயிரி.
organiza'tion *(n.)* organised body working together for a purpose, society, the act of arranging, அமைப்பு, நிறுவனம், ஒழுங்கமைப்பு; **or'ganize** *(v.t.)*.
or'gy *(n.)* a wild drunken festivity, wild party or celebration, குடிவெறியாட்டம், களியாட்டம், வெறிக் கேளிக்கை; **orgies** *(n.pl.)*.
oriel *(n.)* a window that projects out, உப்பரிகை.
or'ient *(n.)* the east, கிழக்கு, கீழ்த் திசை.
orient'al *(adj.)* eastern, கீழ்த்திசைக் குரிய.
orienta'tion *(n.)* act of facing east, action of determining one's position, கிழக்கு முகமாகப் பார்த்தல், கிழக்கு நோக்குதல், மறுபயிற்சி.
o'rifice *(n.)* an opening, mouth of a thing, திறப்பு, துளை, வாய்ப்பகுதி.
or'igin *(n.)* the starting point, source, cause, தோற்றம், மூலம், காரணம்.
orig'inal *(adj.)* first, pertaining to the beginning, primitive. not copied, முதலாவதான, தொடக்கமான, புராதனமான, மூலப்படியான்; also *(n.)*.
original'ity *(n.)* the state of being original in thoughts, மூலஆற்றல், தன் படைப்புத் திறம்.
orig'inate *(v.t.)* produce, create, give a beginning, உருவாக்கு, புதியதாகப் படை, தோற்றுவி, **origina'tion** *(n.)*.
ori'on *(n.)* a constellation resembling the shape of man with belt and sword, கச்சையும் வாளும் தரித்த மனித உருவமுள்ள நட்சத்திரக் கூட்டம், மிருகசீரிடம்.
or'ison *(n.)* a prayer, வழிபாடு.
or'nament *(n.)* something that adds beauty, anything decorative, அணி, நகை, அலங்காரம்; also *(v.t.)*; **orn'amental** *(adj.)*.
ornithol'ogy *(n.)* study of birds, பறவையியல்.
oro'graphy *(n.)* description of mountains, மலையமைப்பியல்.
orol'ogy *(n.)* science of mountains, மலையியல்.
or'phan *(n.)* a child who has lost parents, அனாதை, பெற்றோரை இழந்தவன்; also *(v.t.)*.
or'phanage *(n.)* a home for orphans, அனாதை இல்லம்.
or'thodox *(adj.)* believing the established general opinion, customary, according to conventional beliefs, வைதிகக் கருத்துடைய, மரபு வழுவாத, சமய நம்பிக்கையுடைய, பழமையில் ஊறிய.
orthog'raphy *(n.)* study of letters and spellings, எழுத்திலக்கணம்.
os'cillate *(v.i.)* to swing backwards and forwards, be indeterminate, ஊசலாடு, உறுதியற்றிரு; **oscilla'tion** *(n.)*.
os'culate *(v.t.)* embrace, have contact, தழுவிமுத்தமிடு, தொடர்புகொள்.
osie'r *(n.)* a kind of willow twigs used in making baskets etc., கூடை முடையப் பயன்படும் ஒருவகைப் பிரம்பு.
os'prey *(n.)* the sea-eagle, கடல் பருந்து.
os'sify *(n.)* turn into bone, harden, எலும்பாக ஆக்கு, கெட்டிப்படுத்து; **ossifica'tion** *(n.)*.
osten'sible *(adj.)* not real, apparent, உண்மையல்லாத, வெளிப்படையான, தோன்றும்; **ostenta'tion** *(n.)*.
os'tler *(n.)* stable man at an inn, குதிரைலாயக் காப்போன்.

os'tracize *(v.t.)* refuse to accept in society, exile, சமூகத்திலிருந்து விலக்கு, நாடுகடத்து.
os'trich *(n.)* a large swift running bird which cannot fly, தீக்கோழி.
oth'er *(adj.)* not the same, different, the second of the two, மற்ற, வேறான, வேறொன்றான; also *(pron.)*.
oth'erwise *(adv.)* in a different way, in every other way except this, வேறொரு வழியில், மற்றொரு வழியில், இல்லாவிட்டால்.
otiose' *(adj.)* idle, done in a careless way, சோம்பலான, அக்கறையின்றிச் செய்யப்பட்ட.
otol'ogy *(n.)* science of the ear, காதியல்.
o'tter *(n.)* a water animal which eats fish, நீர்நாய்.
o'ttoman *(n.)* a low cushioned sofa, பஞ்சு இருக்கை.
our *(adj.)* belonging to us, நம்முடைய, எங்களுடைய.
ours *(pron.)* belonging to us, நம்முடையது, எங்களுடையது.
ourselves' *(pron,pl.)* only we and not others, நாங்களே.
oust *(v.t.)* to force out, put out of possession, வெளியேற்று, தள்ளு, அகற்று, நீக்கு.
out *(adv.)* not at home, not in or at a place, away from, வீட்டுக்கு வெளியே, வெளியே, புறத்தே, தொலைவில்; also *(adj.)* ; *(v.t. & i.)* and *(prep.)*.
out and out *(adj.)* thorough, complete, முழுக்க முழுக்க; also *(adv.)*.
out -bid' *(v.t.)* offer more than another in an auction, ஏலத்தில் விலையேற்று.
out'break *(n.)* a beginning, outburst, தோன்றல், வெடிப்பு.
out'burst *(n.)* sudden outward movement, வெடித்துப் பொங்குதல்.
out'cast *(n.)* one banished from society, one having no fixed place of abode, சமூகத்தில் தள்ளிவைக்கப் பட்டவன். நிரந்தர உறைவிடம் இல்லாதவன்.
out'caste *(n.)* one expelled from one's cast, சாதிநீக்கம் செய்யப்பட்டவன்; also *(adj.)* & *(v.t.)*.
out'come *(n.)* the result or effect, விளைவு, பயன்.
out'cry *(n.)* a loud cry, an uproar, கூக்குரல், கூச்சல்.
out'distance *(v.t.)* run far ahead in a race, ஓட்டப் பந்தயத்தில் முந்து.
out'do *(v.t.)* do better than, excel, மேம்படு, மிஞ்சு.
out'door *(adj.)* done in the open air, out of the house, வெளிப்புறத்தில் நடக்கும், வீட்டுக்கு வெளியே நடக்கும்.
out'er *(adj.)* exterior, farther from the centre, வெளிப்புறத்திலுள்ள, புறம்பான,' மையத்திலிருந்து விலகியுள்ள.
out'ermost *(adj.)* farthest from the centre or inside, மையத்திலிருந்து மிகவும் விலகியிருக்கிற, எல்லாவற்றிற்கும் வெளியேயுள்ள.
out'fit *(n.)* a collection of necessary things for particular occasion, குறிப்பிட்ட செலவுக்குத் தேவையான தளவாடப் பொருள்கள்.
out'flow *(n.)* a flowing out, வழிந்தோடுதல்.
out'going *(n.)* outward movement, expenditure, வெளியே செல்லுதல், செலவினம்; also (adj.).
outgrow' *(v.t. & i.)* grow faster than, மிகை வளர்ச்சி பெறு.
out'house *(n.)* a small house outside or near the main house, பெரிய வீட்டின் புறத்தே அமைந்த சிறுவீடு.
out'ing *(n.)* going out, a pleasure trip, வெளியே போதல், உல்லாசப் பயணம்.
outland'ish *(adj.)* foreign, strange, odd, அயல்நாட்டு, புதுமையான, விகாரமான.
outlaw *(n.)* a person punished by being refused the protection of law, a person in exile, a habitual criminal, சட்டப் பாதுகாப்பற்றவன், நாடு கடத்தப்பட்டவன், சமூகக் குற்றவாளி; also *(v.t.)*.

out'lay *(n.)* spending of money, expenditure, பணத்தைச் செலவிடுதல், செலவு.
out'let *(n.)* a way or passage outwards, வெளியேறும் வழி, துளை, வடிகால்.
outline *(n.)* the line showing the outer edge of an object, a rough plan or sketch, a short description, உருவரை, எல்லைக்கோடு, திட்டம், சுருக்கக் குறிப்பு; also *(v.t.)*.
out'live *(v.t.)* to live longer than, survive, அதிக காலம் வாழ்ந்திரு, உயிருடனிரு, எஞ்சியிரு.
out'look *(n.)* a person's view of life etc., view, watch, மனப்பாங்கு, நோக்கம், தோற்றம், விழிப்பு.
out'lying *(adj.)* distant, far from the centre, தொலைவிலுள்ள, மையப் பகுதியிலிருந்து மிகவும் தள்ளியிருக்கிற.
outmod'ed *(adj.)* out-of-date, பழங்காலத்திய, தற்காலத்திற்கு ஒவ்வாத.
outnum'ber *(v.t.)* exceed in numerical strength, எண்ணிக்கையில் அதிகப்படு.
out'patient *(n.)* a non resident patient who comes to the hospital for treatment, புறநோயாளி.
out''post *(n.)* a military post away from the main army camp, எல்லைக் காவல் பகுதி.
out'put *(n.)* the quantity of goods produced, உற்பத்தியளவு.
out'rage *(v.t. & i.)* to insult, abuse, injure by violence, புண்படுத்து, பழி தூற்று, வசைச் சொற்களால் ஏசு, கொடுமைப்படுத்து; also *(n.)*.
outright *(adv.)* completely, immediately, முழுமையாக, உடனடியாக; also *(adj.)*.
outrun' *(v.t.)* to run faster than, ஓட்டத்தில் முந்து.
out'set *(n.)* initial stage, beginning of something ,தொடக்க நிலை, எடுப்பு.
outshine' *(v.t. & i.)* to be brighter than, ஒளிவிட்டுப் பிரகாசி, புகழ்பெறு.
out'side *(n.)* the outer surface, the farthest limit, வெளிப்பக்கம், வெளிப்புறம்.
out'sider *(n.)* one not concerned with a matter in question, a stranger, தொடர்பற்றவர், அயலார், வெளியாள்.
out'size *(n.)* a very big size than usual, பெரிய அளவு..
out'skirts *(n.)* the outer parts of a city, புறநகர்ப் பகுதி.
outspo'ken *(adj.)* frank, plain, ஒளிவுமறைவற்றுப் பேசுகிற, வெளிப்படையாகப் பேசுகிற.
out'standing[1] *(adj.)* distinguished, தலைசிறந்த.
out'standing[2] *(adj.)* unpaid ,கணக்குத் தீர்க்கப்படாத, பாக்கி செலுத்தப் பெறாத.
outstrip *(v.t.)* to leave behind in running, excel, ஓட்டத்தில் முந்து, மேம்படு.
outvote' *(v.t.)* defeat by a larger number of votes in an election, அதிக வாக்குகள் பெற்றுத் தோற்கடி.
out'ward *(adj.)* external, directed towards the outside, obvious, வெளியே, புறத்தே, கண்ணுக்குப் புலனாகும்.
out'wards *(adv.)* towards outside, வெளிப்புறமாக.
out'weigh *(v.t.)* be heavier than, to be more important than, நிறை கூடு, எடை கூடு, மதிப்பில் மேம்படு, செல்வாக்குப் பெறு.
outwit' *(v.t.)* defeat cunningly, dupe, சூழ்ச்சியால் வெல், ஏமாற்று.
out'work *(n.)* a fort outside the main fortress, புற அரண்.
o'val *(adj.)* shaped like an egg, முட்டை வடிவ; also *(n.)*.
o'vary *(n.)* the female genital organ where eggs are formed, சூற்பை.
ova'tion *(n.)* rejoicing, applause, மகிழ்ச்சி ஆரவாரம், கைதட்டி ஆர்ப்பரித்தல்.
o'ven *(n.)* a furnace for cooking, அடுப்பு, உலை.
overact' *(v.t. & i.)* to act in an exaggerated way, மிகையாக நடி.
over'all *(adj.)* total, எல்லாவற்றையும் உள்ளிட்ட.

over awe' *(v.t.)* intimidate, subdue by terror, அச்சுறுத்து, அச்சுறுத்திப் பணிய வை.

overbear *(v.t.)* suppress, subdue by power or argument, அடக்கு, ஆணை யுரிமை வலிமை கொண்டு பணிய வை.

overbearing *(adj.)* haughty, வீறாப் புள்ள.

o'verboard *(adj.)* out of the ship into the water, கப்பலுக்கு வெளியே, கடலில்.

overbridge *(n.)* a bridge over the road, மேம்பாலம்.

overbur'den *(v.t.)* overload, கூடுத லாகப் பளு ஏற்று, கூடுதலாகச் சுமை ஏற்று.

overcast[1] *(adj.)* cloudy, மேகமூட்ட மான; also *(v.t.)*.

overcast[2] *(v.t.)* overcharge, sew coarsely, மேலும் விலை கட்டு, தைய லுக்குமேல் தையல் போடு.

overcharge' *(v.t.)* to charge too much, to over load. விலை யேற்று, மேலும் விலை கூறு, கூடுதலாகப்பளுவேற்று.

overcoat *(n.)* an upper coat, மேல் அங்கி.

overcome' *(v.t.)* conquer, get over, தோற்கடி, வெல்.

overcon'fidence *(n.)* excessive reliance, மிதமிஞ்சிய நம்பிக்கை, அளவுக்குமேல் நம்பிக்கை; **overcon'fident** *(adj.)*.

overdo' *(v.t.)* to do too much, carry things too far, அத்துமீறி நட, வரம்பு மீறிச்செயல்படு, மட்டுமீறு, கூடுத லாகச் சொல்.

overdose *(n.)* too great a dose. மிஞ்சிய அளவு.

overdraft *(n.)* the act of drawing money from the bank beyond one's credit, தனது வங்கிக் கணக் கிருப்புக்கு மேல் பணம் எடுத்தல், மேல் எடுப்பு, மிகைஎடுப்பு; **overdraw** *(v.t.)*.

overdue *(adj.)* due sometime ago, தவணைகடந்த.

overflow' *(v.t. & i.)* to flow over the edge or limits, பொங்கி வழி, கரைபுரண்டோடு, வெள்ளப் பெருக்கெடு; also *(n.)*.

overgrown *(adj.)* covered with plants that have grown too large or thick, grown too much, அளவுக்கு அதிக மாக வளர்ந்த, வேகமான வளர்ச்சி யுடைய; **overgrow'** *(v.t. & i.)*.

overhang' *(v.t.)* hang from above, to project, தொங்கு, நீட்டிக் கொண்டிரு.

overhaul' *(v.t.)* to examine thoroughly and repair, ஆய்ந்து பார், பழுது பார்.

overhead' *(adv.)* located above, aloft, தலைக்கு மேலே, உயரத்தில்.

overhear' *(v.t.)* to hear what was not intended to be heard, hear by accident, ஒட்டுக்கேள், உற்றுக்கேள், தற்செயலாகக் கேள்.

overjoy' *(v.t.)* give great joy, மகிழ் வுறச் செய், களிப்படையச் செய்.

overlap' *(v.t. & i.)* lie partly upon, to fold over, கவிந்திரு, படிந்திரு.

overload' *(v.t.)* to load too much, கூடுதலாகப் பளுவேற்று.

overlook' *(v.t.)* look down or from a higher point, and to fail to see, to pardon, inspect, disregard, கண்டும் காணாமலிரு, காணத்தவறு, கண் காணி, புறக்கணி.

overmatch' *(v.i.)* overcome, subdue, அடக்கு, பணிய வை.

overmuch *(adv.)* too much, மேலும் கூடுதலாக; also *(adj.)*.

overnight *(adv.)* during the night, முன்னிரவில், ஓரிரவிற்குள்; also *(adj.)* & *(n.)*.

overpow'er *(v.t.)* to defeat by greater strength, oppress, ஆற்றலால் அடக்கி ஆள், கீழடக்கு.

over'rate *(v.t.)* to rate or value too, highly, கூடுதலாக மதிப்பிடு.

overreach' *(v.t.)* to reach beyond, to cheat, எல்லை மீறு, ஏய்த்து விடு.

override *(v.t.)* ride on too much, trample down, cancel and do otherwise, set aside, மேலும் சவாரி செய், காலடியில் போட்டு மிதி, ரத்து

செய்துவிட்டுப் பிறிதொரு வழியைக் கையாளு, புறக்கணி.

overrule *(v.t.)* to set aside by using higher authority, reject, அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒதுக்கு, புறக்கணி.

overrun′ *(v.t.)* spread over, take possession of, invade and occupy, மீதுபடர், எல்லை மீறு, சூறையாடு, படையெடுத்துச் செல், கைப்பற்று.

overseas′ *(adj.)* pertaining to foreign countries, அயல்நாடு சார்ந்த; also *(adv.)*.

overseer′ *(n.)* a superintendent, கண்காணிப்பாளர்.

overshad′ow *(v.i.)* to throw a shadow over, to make less happy, நிழல் படியச் செய், இருட்டடி, மகிழ்ச்சியைக் குலை.

ov′ersight *(n.)* a failure to notice, neglect, கவனிக்கத் தவறுதல், புறக்கணிப்பு, கவனக்குறைவு.

overstate *(v.t.)* to exaggerate, மிகைபடக் கூறு.

overstep′ *(v.t.)* to go beyond, வரம்பு மீறு.

overt′ *(adj.)* open to view, not secret, வெளிப்படையான, மறைவற்ற.

overtake′ *(v.t.)* to pass while driving, வண்டி ஓட்டும்போது பிற வாகனத்தை முந்திச் செல், மாறு.

overthrow′ *(v.t.)* to defeat or force out, to throw down, தோற்கடி, கீழே தள்ளு.

overtime′ *(n.)* time spent in working beyond one's set number of hours etc., குறித்த வேலை நேரத்திற்கு மேல் அதிகப்படியாக வேலை செய்தல், மிகுநேரம்.

overture *(n.)* a proposal or offer, an introductory piece of music, பேச்சு வார்த்தை, முன்னீடு, துவக்க இசை.

overturn′ *(v.t. & i.)* to turn over, destroy, தலைகீழாகப் புரட்டு, கவிழ், பாழாக்கு.

overweening *(adj.)* thinking high of oneself, arrogant, தற்பெருமையுடைய, இறுமாப்புடைய.

overwhelm′ *(v.t.)* overcome, defeat utterly, flow over, அடக்கு, தோற்கடி, பொங்கு.

ovine *(n.)* sheep-like animal, ஆடு போன்ற விலங்கு.

ovip′arous *(adj.)* producing young ones by laying eggs, முட்டையிடும்.

o′vum *(n.)* an egg, கருமுட்டை

owe *(v.t. & i.)* bound to pay, be in debt to, oblige for, செலுத்த வேண்டியிரு, கடன்பட்டிரு, கடமைப்பட்டிரு; **owing** *(adj.)*.

owl′ *(n.)* a bird of prey that flies at night, ஆந்தை.

owle′t *(n.)* young owl, ஆந்தைக் குஞ்சு.

own *(adj.)* belonging to a certain person, individual, ஒருவருக்குச் சொந்தமான, தனிப்பட்ட; also *(v.t. & i.)*.

ox *(n.)* a male cow, காளை.

oys′ter *(n.)* an edible shell-fish, சிப்பி.

P

pace *(n.)* a single step, speed of movement, rate or manner of walking, ஒரு காலடி, நடைவேகம், சுவடு; also *(v.t. & i.)*.

pacifi′c *(adj.)* fond of peace, quiet, mild, அமைதி விரும்பும், சாந்தமான, அமைதியான.

pa′cify *(v.t.)* to make calm or peaceful, soothe, அமைதிப்படுத்து, சமாதானப் படுத்து, சினம் தணியச் செய்.

pack *(n.)* things tied together, parcel, herd, கட்டு, மூட்டை, மந்தை; also *(v.t. & i.)*; **pack′age** *(n.)*.

pac′ket[1] *(n.)* small package, சிறிய மூட்டை, சிறு கட்டு.

pack′et[2] *(n.)* a mail boat, அஞ்சல் படகு.

pact *(n.)* a formal agreement between the nations, a bargain or contract, உடன்படிக்கை, பேரம், ஒப்பந்தம்.

pad *(n.)* piece of soft stuff used to prevent damage by knocking, rubbing etc., a cushion, திண்டு, மெத்தை; also *(v.t.)*.

pad′dle *(n.)* a rowing device with broad blade at one end worked by hand, துடுப்பு.
pad′dy *(n.)* rice with the husk, நெல்.
pad′lock *(n.)* detachable lock with a hinged hook, தாழ்ப்பாள்.
pae′an *(n.)* song of victory or joy, வெற்றிப் பாடல், மகிழ்ச்சிப் பாடல்.
pa′gan *(n.)* one not believing in any of the major world religions, சமய நம்பிக்கை யில்லாதவன்; also *(adj.)*.
page[1] *(n.)* a personal attendant, கையாள், பணிச் சிறுவன்.
page[2] *(n.)* one side of leaf of a book, பக்கம்; also *(v.t.)*.
pa′geant *(n.)* a procession of tableau, dramatic scene etc., any brilliant show, பேரணி, வேடிக்கைக் கண் காட்சி.
pago′da *(n.)* sacred tower of Chinese or Indian type, கோயில் ,கோபுரம்.
paid (see pay).
pail *(n.)* a round open vessel for holding or carrying liquids, வாளி, தூக்கு.
pain *(n.)* mental or physical suffering, uneasiness, வருத்தம், உடல் வலி, நோவு; also *(v.t.)*; **pain′ful** *(adj.)*.
pains *(n.pl.)* pains of child-birth, trouble, மகப்பேற்று நோவு, மெய் வருத்தம்.
pains′taking *(adj.)* laborious, very careful, அதிகமாக உழைக்கும், முயற்சியுள்ள, மிகுந்த கவன முடைய, விழிப்புடைய.
paint *(n.)* a colouring matter in the form of liquid or paste, வண்ணப் பூச்சு, வண்ணம்; also *(v.t. & i.)*.
paint′er *(n.)* one who paints,வண்ணம் பூசுபவர்.
pair *(n.)* a set of two similar things, thing of two similar parts not used apart, இணை, இரட்டை, சோடி; also *(adj.)*; *(v.t. & i.)*.
pal *(v.i.)* make friends with, கூட்டாகப் பழகு, நட்பு ஏற்படுத்து; also *(n.)*.
pal′ace *(n.)* a castle, official residence of a sovereign, அரண்மனை, மாளிகை, கொலுமண்டபம்.
palaeolithic *(adj.)* belonging to the early stone age, பழைய கற்காலத் திற்குரிய.
palaeontol′ogy *(n.)* science of the ancient life of the earth, தொல் புவி யியல்.
palanquin, palankeen *(n.)* a light carriage carried on the shoulders of men, சிவிகை, பல்லக்கு.
pal′atable *(adj.)* pleasant to the taste, சுவையான.
pal′ate *(n.)* the roof of the mouth, அண்ணம்; **pal′atal** *(adj.)*.
pala′tial *(adj.)* grand, of a palace, பெரிய, அரண்மனை போன்ற.
pale′[1] *(adj.)* faintly coloured, whitish, மங்கிய நிறமுடைய, வெளிறின; also *(v.t. & i.)*.
pale[2] *(n.)* fence, enclosure, limit, stake, வேலி, வேலி அடைப்பு, எல்லை, வேலிக்கம்பி.
palisade′ *(n.)* a defensive barrier of pointed stakes, கிராதி, வேலி.
pall *(n.)* a dark cloth which covers a coffin at the funeral, சவப்போர்வை.
pall bearer *(n.)* one holding one side of a coffin, சவப்பெட்டித் தூக்கு பவன்.
pallet[1] *(n.)* a straw-bed, வைக்கோற் படுக்கை.
pallet[2] *(n.)* a small oval board used by the painter, வண்ணக் கலவைக் கிண்ணம்.
pal′liate *(v.i.)* lessen, mitigate pain, குறை, தணி; **pallia′tion** *(n.)*.
pal′lid *(adj.)* pale, faint, வெளிறிய, மங்கின.
pall′or *(n.)* unpleasant, paleness, சோகைநிறம்.
palm[1] *(n.)* the inner surface of the hand between the wrist and the fingers, a symbol of victory, உள்ளங்கை, வெற்றிச்சின்னம்.
palm[2] *(n.)* a kind of tall tree with branchless trunk, ஒற்றைத் தண்டு

மரம், பனை, தென்னை போன்ற மர வகை; **palm'y** *(adj.)*.
pal'mistry *(n.)* the art of telling the future from the lines of the palm, கைரேகை பார்த்துக் குறி சொல்லுதல்.
palmy'ra *(n.)* a kind of palm tree, பனைமரம்.
pal'pable *(adj.)* obvious, easily felt or noticed, தெளிவான, எளிதில் உணரத்தக்க அல்லது கவனிக்கும் படியான.
palpita'tion *(n.)* uncomfortable, rapid beating of the heart, நெஞ்சுத்துடிப்பு, பதைபதைப்பு ; **pal'pitate** *(v.t.)*.
palsy *(n.)* paralysis, insensibility, முடக்குவாதம், உணர்ச்சியின்மை; **pal'sied** *(adj.)*.
pal'ter *(v.i.)* dodge, trifle, shift, அலைக்கழி, அலட்சியம் செய், மாறாட்டம் பண்ணு.
paltry *(adj.)* of no value, mean, மதிப்பற்ற, இழிவான.
pam'per *(v.t.)* to treat with great kindness, செல்லம் கொடுத்துக் கெடு.
pamph'let *(n.)* thin paper-covered book, brochure, துண்டு வெளியீடு, சிறுநூல்.
pan *(n.)* a shallow cooking vessel, a shallow receptacle or tray, அகன்ற சட்டி, தாலம்; also *(v.t. & i.)*.
panac'ea *(n.)* a cure for every thing, சஞ்சீவி மருந்து.
pan'creas *(n.)* a gland near the stomach secreting a digestive fluid, கணையம்.
panegyr'isc *(n.)* a praising discourse, புகழுரை.
pan'el[1] *(n.)* distinct compartment of surface, thin board with pictures on it, சட்டத்தால் வேயப்பட்ட தட்டு.
panel[2] *(n.)* a list of the name of persons, பெயர்ப்பட்டியல்.
pang *(n.)* severe pain, painful spasm, கடு நோவு, முறுக்கிப் பிழியும் வலி.
pan'ic *(n.)* unaccountable general impulse, இனம் புரியாத அச்சம்; also *(adj.)*.

V-18.

panorama *(n.)* a wide view, a picture of several scenes, அகலக் காட்சி, பலவகைக் காட்சிப் படம்.
Pan'theon *(n.)* building with tombs or memorials of a nation's illustrious dead, நினைவுச் சின்னங்கள் கொண்ட கட்டடம்.
pan'ther *(n.)* a spotted carnivore, சிறுத்தைப் புலி.
pan'try *(n.)* a store room where provisions, plates and other dining table materials are kept, உக்கிராண அறை, கிடங்கு அறை.
pap *(n.)* soft and semi liquid food for infants, குழந்தைக்கான மெல் லுணவு அல்லது கூழ் உணவு.
pa'pacy *(n.)* the position or power of a Pope, போப்பாண்டவர் பதவி, போப்பாண்டவர் ஆட்சி.
pa'per *(n.)* material used for writing, printing, wrapping parcels etc., document, a written article, bank-notes, தாள், ஆவணம், கட்டுரை, வங்கிப் பணத்தாள்.
pap'ier-ma'che *(n.)* paper-pulp moulded into idols, toys, boxes etc., தாள் கூழ்ப்பொருள்.
papil'ion *(n.)* butter-fly, வண்ணத்துப் பூச்சி.
pap'illary *(adj.)* pertaining to pimples, covered with pimples, பரு சார்ந்த, பருக்கள் நிறைந்த.
pap'py *(adj.)* like pap, juicy, கூழ் போன்ற, சாறுடைய.
papy'rus *(n.)* an Egyptian reed once used to make paper, தாள்புல்.
par *(n.)* equality, normal level of standard, value etc., சரிசமம், தர நிலை, மதிப்பீடு.
par'able *(n.)* a story or fable intended to teach a lesson, நீதிக்கதை.
para'bola *(n.)* a figure formed by intersection of cone with plane parallel to its side, பரவளைவு.
par'achute *(n.)* an umbrella-like apparatus for descending from a balloon or an aircraft, விண்குடை.

parade' *(n.)* a military display, a line of people, vehicle etc., moving forward in order, அணிவகுப்பு, அணிவரிசை; also *(v.t. & i.)*.

par'adigm *(n.)* the inflexions of a word, இலக்கண வாய்பாடு.

par'adise *(n.)* heaven, a place or state of great delight, சொர்க்கம், விண்ணுலகம், பேரின்ப நிலை.

par'adox *(n.)* an apparent contradiction of a statement which is really true, முரணுரை போலத் தோன்றும் உண்மையான பேச்சுரை; **paradoxi'cal** *(adj.)*.

para'ffin *(n.)* a wax or oil distilled from shale and petroleum, பரபின் மெழுகு.

par'agon *(n.)* model of excellence, a pattern, சிறந்த மாதிரி, சிறந்த எடுத்துக்காட்டு.

par'agraph *(n.)* a division of a piece of writing marked by beginning the first sentence on a new line and usually leaving a short space at the beginning of the line, பத்தி; also *(v.t.)*.

par'allax *(n.)* apparent displacement of object, due to different positions of the observer, இடமாறு தோற்றம்.

par'allel *(adj.)* continuously equidistant and going in the same direction, இணையொத்த, ஒருபோகு; also *(n.)*.

par'allelism *(n.)* resemblance, comparison, ஒற்றுமை, உவமை, ஒப்பு.

parallel'ogram *(n.)* a form sided plane whose opposite sides are parallel, இணைகரம்.

paral'ogism *(n.)* a false reasoning, தவறான வாதம்.

par'alyse *(v.t.)* to affect with paralysis, make helpless, பக்கவாதத்தால் முடமாக்கு, முடக்கு, செயலிழக்கச் செய்; **paraly'sis** *(n.)*; **paralyt'ic** *(adj.)*.

para'mount *(adj.)* principal, above all others, தலைசிறந்த, முதன்மையான; also *(n.)*.

par'amour *(n.)* one with whom a married person has illegal sexual relations, மணமான ஒருவரின் தவறான ஒழுக்கம், கூடா ஒழுக்கம்.

par'apet *(n.)* a low wall along the edge of a bridge, balcony etc., கைப்பிடிச் சுவர்.

paraphernа'lia *(n.pl.)* collection of tools etc., for a job or hobby, one's own belongings, எடுபிடிச்சாமான்கள், உடைமைப் பொருள்கள்.

par'aphrase *(n.)* restatement of the sense of a passage in other words, பொழிப்புரை, விரிவுரை; also *(v.t. & i.)*.

par'asite *(n.)* an animal or plant which lives on another without giving anything in return, ஒட்டுண்ணி, புல்லுருவி, அண்டி வாழ்பவர்.

parasol' *(n.)* a small umbrella used as a protective against the sun, சிறு கைக்குடை.

par'boil *(v.t.)* boil partly, புழுக்கி வேக வை.

par'cel *(n.)* packet, portion, பொட்டலம், சிப்பம், கட்டு, பகுதி; also *(v.t.)*.

par''cena *(n.)* co-heir, பங்காளி, தாயாதி.

parch *(v.t. & i.)* to roast slightly, dry up, லேசாகப் பொரித்தெடு, வறட்டு, உலரச்செய்.

parch'ment *(n.)* a writing material prepared from the skin of the sheep, தோல் தாள்.

pard *(n.)* a leopard, சிறுத்தைப் புலி.

par'don *(v.t.)* forgive, set free from punishment, மன்னித்துவிடு, பிழைபொறு, பொறுத்துக்கொள்; also *(n.)*.

pare *(v.t.)* cut or peel off, வெட்டி எடு, செதுக்கியெடு, சீவு, உரித்தெடு; **pairing** *(n.)*.

parent *(n)* father or mother, தந்தை, தாய், பெற்றோர்.

paren'theses *(n.pl.)* brackets, அடைப்புக்குறி.

paren'thesis *(n.)* a word, phrase or sentence inserted within a sentence

between inverted commas, brackets etc., தனிநிலைத் தொடர்.

pa'rish *(n.)* division of a country with its own church and clergy man, கிறித்தவக் கோயில் வட்டாரம்.

par'ity *(n.)* the state of being equal or similar, சமத்துவம், சமநிலை.

park[1] *(n.)* an enclosed grass-field set apart for public enjoyment, பூங்கா; also *(v.t.)*.

park[2] *(n.)* a place where motor cars etc., can temporarily be left, வண்டி நிறுத்துமிடம்; also *(v.t.)*.

par'lance *(n.)* the manner of speaking, பேச்சு முறை.

par'ley *(n.)* a meeting between opposite parties with a view to making peace, பேச்சு வார்த்தை; also *(v.t. & i.)*.

par'liament *(n.)* the chief law-making assembly of a nation, நாடாளு மன்றம்.

parlour *(n.)* a sitting room or reception room, a public apartment, கூடம், வரவேற்பறை, பொதுமக்கள் அமரும் அறை.

par'lous *(adj.)* difficult to deal with, கையாளக் கடினமான.

par'ody *(n.)* something written as a humorous imitation, நகைச் சுவைச் சித்திரம், நையாண்டி நாடகம், நகைச்சுவை நாடகம்.

parole *(n.)* word of honour, solemn promise not to escape, சிறைக் கைதியின் வாக்குறுதியின் பேரில் அவனைத் தற்காலிகமாக வெளியே அனுப்புதல்.

paro'xysm *(n.)* a sudden attack of fits, pain, rage, passion etc., திடீர் வலி, கடும் வலி, முன்கோபம், அடக்க முடியாத ஆசை.

parr *(n.)* a young salmon, சால்மன் மீன்குஞ்சு.

par'ricide *(n.)* one who murders either or both of one's parents, the act of a parricide, பெற்றோரைக் கொலை செய்பவன், பெற்றோரைக் கொலைசெய்தல்.

par'rot *(n.)* a tropical bird that can imitate the various tones of the human voice, கிளி.

par'ry *(v.t. & i.)* to deflect, to avoid, திருப்பு, தவிர்; also *(n.)*.

parse *(v.t.)* to break a sentence down into parts describing the grammatical form, function, etc., சொல்லிலக்கணம் கூறு.

par'simony *(n.)* sparingness in spending money, miserliness, செட்டு, சிக்கனம், கஞ்சத்தனம்; **parsimonious** *(adj.)*.

pars'nip *(n.)* a biennial plant with an edible root, கிழங்கு வகைச் செடி.

par'son *(n.)* a clergy man or minister in charge of a parish, சமய குரு, பாதிரியார்.

part *(n.)* a portion or division of a whole, a share, a region or area, a character in a play, பகுதி, பங்கு, கூறு, நாடகப் பாத்திரம்; also *(v.t. & i.)*.

partake *(v.t.)* to have a part or share, பங்குகொள், பங்குபெறு.

par'tial *(adj.)* biased, not complete or total, ஒரு சார்பான, முழுமையற்ற, நிறையற்ற; **partial'ity** *(n.)*.

por′tal *(n.)* a large gateway or doorway, பெரிய நுழைவாயில், கோட்டைக் கதவு.

portcul′lis *(n.)* strong heavy grating that can be lowered to close a gateway, கோட்டை வாயிலை அடைக்கும் பொறி.

portend *(v.t.)* foretell the future, to give warning of, வருவது உரை, கடுமை காட்டி எச்சரிக்கை செய்.

por′tent *(n.)* an evil-omen, a warning, தீக்குறி, எச்சரிக்கை.

port′er[1] *(n.)* one whose job is to carry luggage in a railway station etc., சுமைதூக்கி.

porter[2] *(n.)* door-keeper, காவற்காரன்.

porter′age *(n.)* charge paid to a porter for carrying the luggage, சுமைகூலி.

portfo′lio *(n.)* a case for carrying papers, drawings etc., office of the minister of State, கோப்புகளை வைக்கும் பை, அமைச்சர் துறை.

por′tico *(n.)* a porch in front of the entrance to a building, நுழைமாடம், தலைவாயில்.

por′tion *(n.)* a part or share, பகுதி, பங்கு; also *(v.t.)*.

port′ly *(adj.)* stout and dignified, பருமனான, கம்பீரமான.

portman′teau *(n.)* a large leather bag, பெரிய தோல்பை.

por′trait *(n.)* a drawing, painting or photography, a written description of a person, place etc., படம், ஓவியம், ஒளிப்படம், சித்திரிப்பு; **portray** *(v.t.)*.

pose[1] *(v.t. & i.)* assume a position or attitude, put in a certain position to produce an effect, பாவனை செய், நிலைகொள், தோரணையுடன் நில்; also *(n.)*.

pose[2] *(v.t.)* puzzle with question or problem, சிக்கல் வினா எழுப்பு.

posh *(adj.)* smart, tiptop, அழகான, அலங்காரமான, பகட்டான, நாகரிகமான.

pos′it *(v.t.)* assume as fact, postulate, உண்மையெனத் துணி, கருதிக் கொள்.

position *(n.)* place where something or somebody is, one's place or rank in relation to others, a set of

circumstances, நிலை, பதவி, நிலைப்பாடு, பாங்கு; also *(v.t.)*.

posi'tive *(adj.)* real, definite, sure, affirmative, உண்மையான, அறுதியான, உறுதியான, நிச்சயமான.

poss'e *(n.)* body of constables, strong force, காவலர் தொகுதி, படை.

possess *(v.t.)* have as one's own , to take hold of, உடமையாக வைத்திரு, அனுபவி, கைப்பற்று.

possess'ion *(n.)* ownership, property, உடமைப் பொருள், சொத்து.

possessive *(adj.)* pertaining to ownership, உடமைக்குரிய, உரிய.

possible *(adj.)* able to be done, feasible, செய்யக்கூடிய, நிகழத்தக்க; **possibili'ty** *(n.)*.

post[1] *(n.)* long piece of wood, metal etc., fixed upright in the ground, a place of duty, position or appointment, தூண், கம்பம், பணியிடம், பதவி, பதவியமர்வு; also *(v.t. & i.)*.

post[2] *(n.)* the system of collecting and delivering letters, அஞ்சல்; also *(v.t & i.)*.

post'age *(n.)* postal charges for carrying letters etc., அஞ்சல் கட்டணம்.

post'chaise *(n.)* a carriage for taking postal articles, அஞ்சல் வண்டி.

postdate' *(v.t.)* affix a date later than the actual date, பின் நாளிடு.

post'er *(n.)* a large placard for sticking on wall etc., சுவரொட்டி, விளம்பரத் தட்டி.

post'erior *(adj.)* later in time or order, situated behind, பிற்காலத்திய, பிந்திய, பின்வருகிற, பின்புறம் அமைந்த.

posteri'ty *(n.)* future generations, வருங்காலத் தலைமுறை.

postern *(n.)* back door or gate, புறக்கடை, பின்வாயில்; also *(adj.)*.

post'haste *(adv.)* at top speed, மிக விரைவாக.

post'humous *(adj.)* happening after someone's death, இறப்பிற்குப் பின், மறைவுக்குப்பின்.

post'-merid'ian *(adv.)* p.m. after midday, a.m. antimeridian பிற்பகல்.

post'-mor'tem *(n.)* a medical examination of the dead body to find out the cause of death, பிணப் பினவாய்வு; also *(adj.)*.

postpone *(v.t. & i.)* put off to a later time, to delay, தள்ளிப்போடு, காலந் தாழ்த்து; **postpone'ment** *(n.)*.

post-pran'dial *(adj.)* after the meals, உணவு உண்டபின் நிகழ்கிற.

post'script *(n.)* a part added at the end of the letter after the writer has signed it, கடிதத்தின் பின் குறிப்பு.

pos'tulate *(n.)* assumption on the basis of reasoning, எடுகோள்; also *(v.i. & t.)*.

pos'ture *(n.)* the position of the body or mind, தோற்றப்பாங்கு, உளப் பாங்கு; also *(v.t. & i.)*.

pot (n) a metallic or earthen vessel for holding liquid, பானை, குடம்; also *(v.t. & i.)*.

po'table *(adj.)* drinkable, குடிக்கத் தகுந்த, அருந்தத்தக்க.

pot'ash *(n.)* an alkaline substance, வெடிஉப்பு, பொட்டாஷ்.

pot'ation *(n.)* drinking, a beverage, குடித்தல், அருந்துதல், குடிநீர் வகை.

pota'to *(n.)* a plant whose tubers are used as food, உருளைக் கிழங்கு.

potbelly *(n.)* fat stomach, பானை வயிறு.

po'tency *(n.)* power, சக்தி, ஆற்றல்.

po'tent *(adj.)* powerful, efficient, ஆற்றல் மிக்க, திறமையுடைய.

pote'ntial *(adj.)* capable of coming into being or action, latent, சக்தி வாய்ந்த, திறனுடைய, உள்ளார்ந்த ஆற்றலுடைய; **potential'ity** *(n.)*.

pother' *(n.)* choking smoke or cloud dust, noise, மூச்சுத் திணறவைக்கும் புகை, சந்தடி, கூச்சல்.

pot'house *(n.)* liquor shop, சாராயக் கடை.

po'tion *(n.)* a dose of liquid medicine or poison. மருந்தளவு, நஞ்சு.

pot'pourri *(n.)* mixture of dried rose petals and spices, நறுமணக் கலவை.

pot'sherd *(n.)* a piece of pot, மண் பானை யோடு.

pott'age *(n.)* a thick soup, porridge, கூழ்.
pot'ter *(n.)* one who makes earthen wares, குயவன்.
pot'tery *(n.)* earthenware, making of pots, மண்பாண்டம். மண்பாண்டத் தொழில், வனைதொழில்.
pouch *(n.)* a small bag, சிறுபை, also *(v.t. & i).*
poul'tice *(n.)* a dressing with soft mass of bread, linseed etc., put on the body to lessen pain, வலியைப் போக்க இடப்படும் மாக்கட்டு.
pou'ltry *(n.)* hens and such other brids, கோழி இன வளர்ப்புப் பறவைகள்.
pounce[1] *(n.)* a powder used to prevent ink spreading on paper, மை ஒற்றும் பொடி.
pounce[2] *(v.t. & i.)* make a sudden jump on, to seize with claws, திடீரென்று சாடிப் பிடி, நகங்களால் பற்றிப் பிடி; also *(n.).*
pound[1] *(n.)* a measure of weight, எடை அலகு.
pound[2] *(n.)* an enclosure or pen into which stray animals are kept, பட்டி; also *(v.t. & i.).*
pound[3] *(v.t.)* to powder, pulverise, பொடியாக்கு, மாவாக்கு.
pound'er *(n.)* a pestle, உலக்கை.
pour *(v.t. & i.)* cause liquid to flow, ஊற்று, கொட்டு.
pout *(v.t. & i.)* to push the lips out as a sign of displeasure, உதட்டைப் பிதுக்கிக் காட்டு; also *(n.).*
pov'erty *(n.)* the state of being poor, ஏழ்மை, வறுமை.
pow'der *(n.)* any substance made of dry particles or granules, தூள், பொடி, also *(v,t. & i.).*
power[1] *(n.)* ability to do or act, strength, influence, authority or control, திறமை, ஆற்றல், வலிமை, செல்வாக்கு, ஆட்சியுரிமை; **power-ful** *(adj.).*
power[2] *(n.)* product of a number by itself, பெருக்கடுக்கு.
pox *(n.)* an eruptive disease, அம்மை நோய், வைசூரி,
pra'ctical *(adj.)* able to be carried out, concerned with practice, effective, செயல் படுத்தத்தக்க, நடைமுறைக் குகந்த, பயனுடைய.
prac'tice *(n.)* habitual method, action or legal procedure, repeated exercise, பழக்கவழக்கமான முறை, செயல், சட்டமுறை, பயிற்சி,
prac'tise *(v.t. & i.)* perform habitually, carry out in action, பயிற்சி செய், நடைமுறைப்படுத்து. செயல்படுத்து.
practi'tioner *(n.)* one engaged in the profession of doctor, lawyer etc., மருத்துவ, வழக்குரை தொழிலர்.
pragmat'ic *(adj.)* practical, business-like, official, நடைமுறை வழக்கத்திற் குரிய, வணிக நோக்கிலான, அலுவல் முறையான; **prag'matism** *(n.).*
prai'rie *(n.)* meadow, புல்வெளி, மைதானம்.
praise *(v.t.)* commend the merits of, glorify, to express admiration of, புகழ்ந்து பேசு, மேன்மைப்படுத்து, போற்று, பாராட்டு; also *(n.).*
praise'worthy *(adj.)* deserving praise, போற்றத் தகுந்த, பாராட்டுக்குரிய.
prance *(v.i. & t.)* to walk in a showy or warlike manner, leap, behave in an arrogant way, பகட்டாக நட, துள்ளித் துள்ளி நட, இறுமாப்புடன் நடந்து கொள்; also *(n.).*
pran'dial *(adj.)* pertaining to dinner, உண்ணுதல் சார்ந்த.
prank[1] *(n.)* a trick, practical joke, குறும்பு, கேலி.
prank[2] *(v.t. & i.)* to dress in a showy way, adorn, பகட்டாக உடுத்து. அலங்கரி.
prate *(v.t. & i.)* to talk too much, to talk foolishly, அலட்டிக்கொள், உளறு. பிதற்று.
prat'tle *(v.t. & i.)* to talk about unimportant things, talk in a childish manner, வீண்பேச்சுப் பேசு, குழந்தை போல் பிதற்று; also *(n.).*
prawn *(n.)* an edible shell fish, இறால் மீன்.

pray *(v.t. & i.)* to worship, to ask earnestly, வழிபடு; மன்றாடிக் கேள், வேண்டிக்கொள்.

pray'er *(n.)* a solemn request to God, the act of praying, வழிபாடு, வழி படுதல்.

preach *(v.t. & i.)* deliver religious address, give moral advice, advocate, சமயச் சொற்பொழிவாற்று, சமய உரை நிகழ்த்து, அறிவுறுத்து, பரிந்து பேசு.

pream'ble *(n.)* introductory part of a deed, statute etc., முகவுரை, தொடக்கப் பகுதி.

precar'ious *(adj.)* risky or dangerous, uncertain, காப்பீடற்ற, நிலையற்ற, உறுதியில்லாத.

precau'tion *(n.)* care taken beforehand, முன்னெச்சரிக்கை, தடுப்பு நடவடிக்கை.

precede *(v.t. & i.)* go before in time, rank or importance, முந்து, முற்படு; **preceding** *(adj.)*.

prece'dence *(n.)* priority in time, superiority, antecedence, முந்துகை, முந்து நிலை, முந்துநிகழ்வு; **preced'ent** *(adj.)*.

pre'cedented *(adj.)* antecedent, previous, முன் நிகழ்ந்த, முன்மாதிரியான.

precen'tor *(n.)* one who leades a choir, இசைக்குழுத் தலைவன்.

pre'cept *(n.)* maxim, moral instruction, மூதுரை, நீதிநெறி விளக்கம்.

precep'tor *(n.)* teacher, instructor, ஆசிரியர், பயிற்சியாளர்.

pre'cinct *(n.)* an enclosed space, limit, boundary, எல்லைக்குட்பட்ட பகுதி, சுற்றெல்லை, வரம்பு.

pre'cious *(adj.)* of great value, costly, அருமையான, மதிப்புமிக்க, விலை உயர்ந்த.

pre'cipice *(n.)* steep descent, செங்குத்தான சரிவு.

precipitate *(v.t.)* throw down headlong, to urge on, தலைகுப்புற வீழ்த்து, விரைவுபடுத்து, வீழ்படி; **precipitation** *(n.)*.

precis' *(n.)* summary of a piece of writing, abstract, பொழிப்பு, சுருக்கம்.

precise *(adj.)* accurately expressed, exact, தெளிவாகக் கூறப்பட்ட, துல்லியமான; **precis'ion** *(n.)*.

preclude *(v.t.)* prevent, make ineffective by taking precautions, தடு, முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளின்மூலம் செயல் விளைவற்றதாக்கு.

precocius *(adj.)* matured mentally, ripe before natural course of time, வயதுக்கு மீறிய அறிவு முதிர்ச்சி உடைய, பிஞ்சிலே பழுத்த.

preconceive *(v.t.)* conceive beforehand, முன்னதாகவே உயத்துணர்.

precurs'or *(n.)* a forerunner, a person or thing that goes before as a sign of something to come, முன்னோடி, முன்வரு சேவகன்.

pred'atory *(adj.)* plundering upon others, கவர்ந்துண்ணும், கொள்ளையடித்து வாழும்.

predecessor *(n.)* a former holder of an office, an ancestor, முற்பதவியாளர், மூதாதை.

predes'tine, predestinate *(v.t.)* to decide beforehand, முன்கூட்டி முடிவு செய், முன்னுறுதி செய்.

predetermine *(v.t.)* to settle or decide beforehand, முன்னரே அறுதியிடு அல்லது முடிவுசெய்; **predetermina'tion** *(n.)*.

predica'ment *(n.)* an awkward or difficult situation, இக்கட்டான சூழல், இடர் நிலை.

predicate *(n.)* what is spoken in the sentence about the subject, பயனிலை.

predict *(v.t.)* to say in advance what will happen, நிகழவிருப்பனவற்றை முன்கூட்டியே கூறு, வருவது உரை; **prediction** *(n.)*; **predictable** *(adj.)*.

predilection *(n.)* a particular liking for something, குறிப்பிட்ட ஒன்றின்மீது ஏற்படும் கட்டுக்கடங்கா ஆசை.

predom'inant *(adj.)* having control over, greater in strength or number, noticeable, மேலாதிக்கமுடைய, அதிக வலிமையுடைய, அதிக எண்ணிக்கையுடைய, குறிப்பிடத்தகுந்த; **predominate** *(v.i.)*.

pre-emi'nent *(adj.)* outstanding, superior, மேம்பட்ட, சிறந்த, முதன்மையான; **pre-eminence** *(n.)*.

preen *(v.t.)* to arrange the feathers with beak, இறகுகளை அலகால் நீவிவிடு.

pre'face *(n.)* author's explanatory introduction to a book, நூலாசிரியரின் முன்னுரை; also *(v.t. & i.)*; **pref'atory** *(adj.)*.

pre'fect *(n.)* a student monitor, one set in authority over others, சட்டாம் பிள்ளை, கட்டுப்பாட்டு அலுவலர்.

prefer *(v.t.)* to choose rather, to like better, தெரிந்தெடு, விரும்பித் தேர்ந்தெடு, அதிகமாக விரும்பு; **preferable** *(adj.)*.

preference *(n.)* a liking for one thing rather than another, முன் விருப்பத் தேர்வு; **preferen'tial** *(adj.)*.

prefix *(n.)* a syllable or syllables put at the beginning of another word to adjust its meaning, முன்னொட்டு; also *(v.t.)*.

preg'nant *(adj.)* carrying the young one in the womb, full of ideas or meaning, கருத்தரித்த, கருத்துச் செறிவுடைய; **preg'nancy** *(n.)*.

prehensile *(adj.)* suitable for holding something, பற்றிப் பிடிக்கத் தக்க.

prehisto'ric *(adj.)* belonging to the time before recorded history, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய.

pre'judge *(v.t.)* to judge before knowing the facts, விசாரணையின்றித் தீர்ப்பளி, தீர விசாரிக்காமல் முடிவெடு.

prej'udice *(n.)* unfair opinion formed before considering the facts, முன் பின் ஆராயாமல் செய்யும் முடிவு, சார்பெண்ணம்; also *(v.t.)*.

prel'ate *(n.)* a bishop or clergy man of high rank, சமயகுரு, பேராயர்.

prelect' *(v.i.)* give lecture, சொற்பொழிவாற்று, விரிவுரையாற்று.

prelim'inary *(adj.)* coming before, introductory, தொடக்கத்திலுள்ள, ஆயத்த.

prelude *(n.)* an introductory piece, an event etc., that goes before, முன்னுரை, பீடிகை, முன்னிகழ்வு.

premature *(adj.)* ripe before the right or expected time, உரிய காலத்திற்கு முன்னரே பழுத்த, முன்முதிர்ச்சியுடைய.

premeditate *(v.t.)* to think out or plan in advance, முன்யோசனை செய், முன்னெச்சரிக்கையுடன் திட்டமிடு; **premedita'tion** *(n.)*.

pre'mier *(adj.)* first or leading in place or importantce, முதன்மையான, தலைமையான, பிரதம; also *(n.)*.

premiere *(n.)* the first public performance of a play, film etc., அரங்கேற்றம்,

prem'ise *(n.)* the basic fact on which a conclusion is formed, the starting point, அடிப்படை உண்மை, தருக்க ரீதியான உண்மை, தொடக்க நிலை; also *(v.t.)*.

premises *(n.p.)* the main building with its outer buildings, கட்டட வளாகம்.

premium *(n.)* a prize or reward, payment made in instalments for an insurance policy, பரிசு, ஊக்கத் தொகை, ஆயுள் காப்பீட்டுத் தவணைத் தொகை, முறிமம்.

premoni'tion *(n.)* a forewarning, முன்னெச்சரிக்கை, முன்னுணர்வு; **premoni'sh** *(v.t.)*.

preoc'cupy *(v.t.)* to engage or occupy beforehand, வேறு சிந்தனையில் ஆழ்ந்திரு, முன்னரே இடம் பிடி.

preordain *(v.t.)* determine before hand, முன்னதாக அறுதியிடு.

prepaid' *(adj.)* paid beforehand, முன்னதாகவே பணம் செலுத்திய.

prepar'ation *(n.)* readiness, equipment, composition, ஆயத்தம், கருவி,

உருவாக்குதல், கலவை; **prepara-tory** *(adj.)*.

prepare' *(v.t. & i.)* qualify, make ready, தகுதிப்படுத்து, ஆயத்தப் படுத்து; **prepara'tion, prepa'red-ness** *(ns.)*.

prepay *(adj.)* pay beforehand, முன்னதாகப் பணம் கொடு; **pre'payment** *(n.)*.

prepense' *(adj.)* having forethought, முன்யோசனையுடைய.

prepon'derance *(n.)* a heavier weight, ascendancy, அதிகப் பளு, ஏற்றம்; **prepon'derate** *(v.t. & i.)*; **prepon-derant** *(adj.)*.

preposi'tion *(n.)* a part of speech, உருபிடைச்சொல்.

prepos'terous *(adj.)* foolish, absurd, முட்டாள்தனமான, பொருளற்ற.

prerequisite *(n.)* thing required as previous condition for something else, முன்தேவை; also *(adj.)*.

prerogative *(n.)* special right, privilege, சிறப்பதிகாரம், தனி உரிமை.

pre'sage *(n.)* a presentiment, a bad omen, நிமித்தம், தீய சகுனம்.

prescribe *(v.t. & i.)* order, direct, lay down as a rule, கட்டளையிடு, வழிப் படுத்து, விதிப்படுத்து.

prescription *(n.)* remedy, written instruction about the medicine, மருந்துக் குறிப்புச்சீட்டு.

presence *(n.)* state of being in a place at the time, இருத்தல், முன்னிலை, ஓரிடத்தில் இருத்தல்; **pres'ent** *(adj.)*.

pres'ent[1] *(n.)* a gift, பரிசு,

pres'ent[2] *(n.)* the time at hand, இக் காலம், இந்நாள்,

pres'ent[3] *(adj.)* (see presence).

present *(v.t.)* to make a gift, submit, பரிசளி, பணிந்தளி, முன்வை; **presenta'tion** *(n.)*.

pres'entiment *(n.)* a feeling that something is going to happen soon, முன்னுணர்வு.

pres'ently *(adj.)* soon, உடனடியாக.

preserve *(v.t.)* keep in good condition, maintain, பதனமாக வைத்திரு, நல்ல நிலையில் வைத்திரு, பேணு; **preserva'tion** *(n.)*.

preside *(v.t.)* act as a chairman, to be in the place of authority, தலைவராகச் செயலாற்று, அதிகாரப் பதவி ஏற்றுக்கொள்.

pre'sidency *(n.)* term of office, a division of a country, presidentship, பதவிக்காலம், மாநிலம், தலைமைப் பதவி.

pre'sident *(n.)* head of a country, one who presides, குடியரசுத் தலைவர், தலைமை வகிப்பவர், தலைவர்; **presidential** *(adj.)*; **presidentship** *(n.)*.

press[1] *(v.t. & i.)* squeeze, push together with force, urge, அழுத்து, நெருக்கு, அமுக்கு, வற்புறுத்து, கட்டாயப் படுத்து.

press[2] *(n.)* a machine for compressing, a machine for printing, அழுத்தும் பொறி, அச்சு எந்திரம்.

pres'sure *(n.)* pressing force, strong demand, அழுத்தம், நெருக்குதல், தேவை வற்புறுத்தல்.

prest *(adj.)* neat, ready, நேர்த்தியான, ஆயத்தமான, உடன் செய்யத்தக்க.

pres'tige *(n.)* respect due to past achievement, நற்பெயர், மதிப்பு.

presume *(v.t. & i.)* suppose, take for granted, நினைத்துக் கொள், ஊகி, தானாக எண்ணிக்கொள்; **presump'tion** *(n.)*; **presump'tuous** *(adj.)*.

presuppose *(v.t.)* assume, infer, முன்னதாக நினைத்துக்கொள், ஊகி; **presupposi'tion** *(n.)*.

pretence *(n.)* a false show, பாசாங்கு, பகட்டு, போலி நடிப்பு; **preten'tious** *(adj.)*.

pretend' *(v.t. & i.)* make a false show, பாசாங்கு செய், போலியாக நடந்து கொள்.

preterna'tural *(adj.)* irregular, abnormal, ஒழுங்கற்ற, இயல்பு மீறிய, இயல்புக்கு மாறான.

pretext' *(n.)* an excuse, an assumed reason, பொய்க் காரணம், சாக்குப் போக்கு.

pret'ty *(adj.)* charming, graceful, பார்வைக்கு இனிய, மதிப்பான, அழகான.

pret'ty *(adv.)* very neatly, moderate, நேர்த்தியாக, மிதமான.

prevail *(v.t.)* over come, exist, be wide spread, வெற்றிபெறு, கையகப் படுத்து, வழக்கிலிரு, நடைமுறைப் படுத்து; **preva'lent** *(adj.)*.

prev'alent *(adj.)* existing, predominant, வழக்கிலிருக்கும், அதிக மாகக் காணப்படும்; **prev'alence** *(n.)*.

prevari'cate *(v.t.)* speak evasively, equivocate, பசப்பு, இருபொருள் படக் கூறிக் குழப்பு.

prevent *(v.t.)* keep away from, stop from happening, தடு, தடுத்து நிறுத்து.

preven'tion *(n.)* the act of preventing, தடுத்தல், நிறுத்துதல்; **preven'tive** *(adj.)*.

preview *(n.)* a previous view for rectification, பொதுமக்களின் காட்சிக்கு முன்னர் ஆய்வுக்காகப் பார்க்கப்படும் காட்சி.

pre'vious *(adj.)* former happening, earlier, முன்னருள்ள, முந்தைய, முன்பு நிகழும்.

previse' *(v.t.)* foresee, signify in advance, எதிர்நோக்கு, முன்னரே உய்த்துணர்; **prevision** *(n.)*.

prey *(n.)* a living thing killed and eaten by another, something taken by force, இரை, வலுக்கட்டாயமாகப் பறிக்கப்பட்ட பொருள்; also *(v.t.)*.

price *(n.)* cost of something, value, விலை, மதிப்பு.

prick *(v.t.)* pierce with a sharp point, cause sharp pain to , கூர்முனையால் குத்து, ஊசிமுனையால் குத்து, வலி ஏற்படுத்து.

pric'kle *(n.)* thorn, முள்; also *(v.t.& i.)*.

prick'ly *(adj.)* covered with thorns, pricking, முள் நிறைந்த, ஊசிபோல் குத்தும்.

pride *(n.)* self satisfaction, a thing or person of which one is proud , too high an opinion of one's own rank, qualities etc., தன்னிறைவு, பெருமை யளிக்கும் ஒருவர் அல்லது பொருள், இறுமாப்பு. தற்பெருமை; **proud** *(adj.)*.

priest *(n.)* a clergy man, சமயகுரு.

prig *(n.)* a narrow-minded man, a conceited fellow, குறுகிய மனப் பாங்குடையவன், இறுமாப் புடையவன்; **prig'gish** *(adj.)*.

prim *(adj.)* neat, avoiding anything irregular, அழகான, ஒழுங்கான, விறைப்பான.

prima *(adj.)* first, important, முதல், முதன்மை, முக்கிய.

prima'cy *(n.)* chief position, முதன்மை நிலை , தலைமைப் பதவி.

prima facie *(adj. & adv.)* on the first sight, முதல் பார்வையிலேயே, பார்த்த உடனேயே.

pri'mal *(adj.)* chief, primitive, முதன்மையான, பண்டைய, புராதன.

prim'ary *(adj.)* first in importance, rank etc., elementary, முதன்மை யான, முதலான, சிறப்பான, தொடக்க.

prime[1] *(adj.)* most important, chief, முக்கியமான, பிரதம, முதன்மையான.

prime[2] *(v.t. & i.)* fill with gun powder for firing charge, coat with bed paint, துப்பாக்கி வாயில் மருந்தடை, அடிப் படை வண்ணம் பூசு; **priming** *(n.)*.

primer *(n.)* a text book of elementary instruction, தொடக்கப் பாட நூல்.

prime'val *(adj.)* ancient, primitive, மிகப் பழமையான, பண்டைக் ககாலத்திய.

primitive *(adj.)* belonging to the earliest times of history, மிகப் பழைய காலத்தைச் சார்ந்த, பண்டைய.

primogen'iture *(n.)* the position of being the first-born child of the same parents, தலைப்பிள்ளை உரிமை.

primor'dial *(adj.)* primitive, original, தொடக்க காலத்திற்குரிய, முதல், ஆதியான.
prince *(n.)* son of a king, இளவரசன்.
prin'cess *(n.)* daughter of a king, இளவரசி.
prin'cipal *(adj.)* chief, first, important, தலைமையான, முதன்மையான, முதல்; also *(n.)*.
principality *(n.)* the domain territory of a prince, இளவரசனின் ஆட்சிக் குட்பட்ட பகுதி.
principle *(n.)* basic rule, law or doctrine, அடிப்படை நெறிமுறை, தத்துவம்; **prin'cipled** *(adj.)*.
print *(v.t.)* produce a mark by pressing on, அச்சடி; also *(n.)*.
pri'or *(adj.)* earlier in time or order, முந்தைய.
priority *(n.)* preferential treatment, சலுகை, முதன்மை.
prism *(n.)* a solid glass figure with triangular body, முப்பட்டகம்; **prismatic** *(adj.)*.
pris'on *(n.)* jail, சிறைச்சாலை; **imprison** *(v.t.)*.
pris'oner *(n.)* a captive, சிறைப் பட்டவன், கைதி.
pris'tine *(adj.)* primitive, original, தொல், தொன்மையான, பண்டைய, ஆதி.
privacy *(n.)* secrecy, freedom from observation, ஒளிமறைவு, அந்தரங் கம், பிறர் கவனிக்காத நிலை.
priv'ate *(adj.)* secret, personal, ஒளி மறைவான, அந்தரங்கமான, தனிப் பட்ட; **priv'ity** *(n.)*.
priva'tion *(n.)* lack of basic things in life, வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகள் இன்மை; **privat'ive** *(adj.)*.
privilege *(n.)* special right, favour or advantage, தனியுரிமை, சிறப் புரிமை.
priv'y[1] *(adj.)* hidden, for private use, மறைவான, தனிப் பயன்பாட்டிற் குரிய.
priv'y[2] *(n.)* a latrine, கழிப்பிடம்,
priv'y[3] *(n.)* one having share or interest in a legal case, வழக்கில் பங்குள்ள ஒருவர்.
prize *(n.)* a reward, that which is gained by an effort or merit, பரிசு, வெகுமதி.
probabili'ty *(n.)* chance, likelyhood, வாய்ப்பு, நிகழ்திறம்.
proba'ble *(adj.)* likely, supposable, எதிர்பார்க்கக்கூடிய, நேரிடக்கூடிய; also *(n.)*.
proba'tion *(n.)* testing of a person's ability to meet certain requirements or fitness for a position, தகுதிகாண் பருவம்; **prob'ational** *(adj.)*.
probe *(v.t. & .i)* to investigate with great thoroughness, ஆராய்ந்து பார், ஊடுருவிப்பார்.
prob'lem *(n.)* a question proposed for solution, a perplexing situation, a sum, பிரச்சினை, சிக்கல், குழப்பம், கணக்கு; **problematic** *(adj.)*.
probos'cis (n) the trunk of an elephant, a tubular sucking organ of some insects, worms etc., தும்பிக்கை, குழல்வாய்.
proced'ure *(n.)* the manner of proceeding in some process, way of doing something, நடவடிக்கை, செய் முறை; **procedu'ral** *(adj.)*.
proceed *(v.i.)* to move after stopping, to come from a source, தொடர்ந்து செல், வெளிப்படு.
proceed'ings *(n.)* action, process, செயல், நடவடிக்கைகள்.
pro'ceeds *(n.pl.)* the result derived from a transaction such as sale, venture etc., ஆதாயம் உழைப்பின் பயன்.
proc'ess *(n.)* procedure, progressive course of action, செயல் முறை, ஒழுங்கு, பணித் தொடர்ச்சி; also *(v.t.)*.
proces'sion *(n.)* a number of persons marching in a regular order, ஊர்வலம்.
proclaim' *(v.t.)* to announce officially, to show to be, பணித்துறை இசைவு

பெற்று வெளியிடு, விளம்பரம் செய், அறியச் செய்; **proclama'tion** *(n.)*.

procli'vity *(n.)* inclination towards something discreditable, விருப்பம், ஆசை, மனச்சார்பு.

procrastina'tion *(n.)* the act of postponing, the habit of deferring, காலந்தாழ்த்துதல், காலம் கடத்தும் இயல்பு.

pro'create *(v.t. & i.)* to produce young ones, bring into existence, சந்ததி களை உருவாக்கு, இனப் பெருக்கம் செய், உண்டுபண்ணு.

pro'ctor *(n.)* an agent, an official who maintains order, supervises examinations etc., முகவர், கல்வி நிலையக் கண்காணிப்பாளர், also *(v.i.)*.

procure *(v.t. & i.)* to obtain by effort, labour, purchase etc., முயற்சியால் பெறு, உழைப்பால் அடை, விலை கொடுத்து வாங்கு.

prod *(n.)* to dig with something pointed, கூர்மையான கருவியால் தோண்டு; also *(v.t.)*.

prodi'gal *(n.)* a spendthrift, one who spend money without necessity, ஊதாரித்தனமாகச் செலவு செய்பவன்,தேவை யின்றிச் செலவு செய்பவன், வீண் செலவாளி; also *(adj.)*.

prodi'gious *(adj.)* huge, immense, astonishing, மிகப் பெரிய, அளவுக் கதிகமான, வியக்கத்தக்க.

produce *(v.t. & i.)* to bring forth, generate, to cause, to manufacture, to yield, உண்டாக்கு, உருவாக்கு, காரணமாக்கு. உற்பத்திசெய், விளைவி; also *(n.)*.

produc'er *(n.)* one who or that which produces, உற்பத்தியாளர், தயாரிப் பாளர்.

prod'uct *(n.)* that which is produced, result, consequence, உற்பத்திப் பொருள், பயன், விளைவு.

produc'tion *(n.)* formation, product, உருவாக்கம், உற்பத்தி.

produc'tive *(adj.)* fertile, marked by abundant production, வளமான, அதிக உற்பத்தி தரக்கூடிய; **producti'vity** *(n.)*.

profane' *(adj.)* impious, irreverent worldly, கடவுள் நிந்தனை செய்யும், புனிதத் தன்மையற்ற, உலகச் சார்புடைய; also *(n.)*.

profess' *(v.t. & i.)* to make a public declaration of confess, வெளிப்படை யாக ஒத்துக்கொள், செய்த குற்றத்தை ஒத்துக்கொள்.

profes'sion *(n.)* an occupation requiring advanced training, தொழில்; **profes'sional** *(adj.)*.

profes'sor *(n.)* one who professes something, a teacher of the highest rank, பேராசிரியர்.

prof'fer *(n.)* an offer proposed for acceptance by another, அனுமதி பெறத் தெரிவிக்கப்படும் கருத்து.

profi'ciency *(n.)* expertness, skillfulness, improvement, அறிவுத்திறம், திறமை, மேம்பாடு; **profi'cient** *(adj.)*, *(n.)*.

pro'file (n) a side view, a sectional elevation, பக்கவாட்டுத் தோற்றம், வெட்டுத்தோற்றம்; also *(v.t.)*.

prof'it (n) advantages, benefit, இலாபம், பயன்; also *(v.t. & i.)*; **profi'table** *(adj.)*.

prof'ligate *(adj.)* abandoned, deprived, நெறிதவறிய, கைவிடப் பட்ட.

prof'luent *(adj.)* flowing smoothly and copiously, வழிந்து ஓடும்.

profor'ma *(n.)* a form, படிவம்.

profound' *(adj.)* deep, obscure, mysterious, humble, ஆழமான, தெளிவான, அற்புதமான, எளிய.

profuse' *(adj.)* lavish, liberal, மிகுதி யான, தாராளமான; also *(n.)*.

progenitive *(adj.)* reproductive, இனப்பெருக்கம் செய்யும்.

pro'gram *(n.)* **programme,** a list of events, a plan, நிகழ்ச்சி, திட்டம்; also *(v.t. & i.)*.

progress *(n.)* development, improvement, advancement, வளர்ச்சி, முன் னேற்றம், மேம்பாடு; also *(v.i.)*.

progres'sive *(adj.)* moving forward, reformative, முன்னேற்ற, புரட்சிக் கருத்துகளுடைய, புதுமைக் கருத்துகளுடைய; also *(n.)*.
prohibi't *(v.t.)* to prevent, to refuse to permit, விலக்கு, தடைசெய், அனுமதி மறு.
prohibi'tion *(n.)* an order or law preventing from doing thing, (மது) விலக்கு.
project' *(n.)* a scheme, plan, proposal, ஆய்வுத் திட்டம், திட்டம், முன்வரைவு.
projec'tile *(n.)* anything thrown forward, எறிபொருள்.
proli'ferate *(v.t. & i.)* to grow by multiplying new parts, புதிய பகுதி களைச் சேர்த்துப் பெரிதாக்கு,.
prolix' *(adj.)* tedious, tiresome, prolonged, பொறுமையைச் சோதிக் கும், சலிப்புத் தரும், மிக நீளமான.
prologue *(n.)* an introduction to a play, poem etc., நாடக முகவுரை, நாடகம் துவங்குமுன் இடம் பெறும் பாடல், தலைப்புப் பாடல்; also *(v.t.)*.
prolong' *(v.t.)* to extend the duration of, continue, draw out, காலம் நீட்டு, தொடரு, நீடிக்கச் செய்.
prolongation *(n.)* extension of time, an extension, கால நீட்டிப்பு, தாமதம்.
prolu'sion *(n.)* a prelude to a game or entertainment, வெள்ளோட்டம், விளையாட்டு முகமன், போட்டி முன்னுரை.
promenade' *(n.)* a leisurely walk taken for pleasure,, ஓய்வுலா
prom'inence *(n.)* conspicuousness, eminence, மேன்மை, சிறப்பு, **promi'nent** *(adj.)*.
prom'ise *(n.)* a vow, assurance, basis for expectation, சத்தியம், வாக்குறுதி, எதிர்பார்ப்பு; also *(v.t. & i.)*.
promisee' *(n.)* one to whom a promise is made, வாக்குறுதி பெறுபவர்.
prom'iser *(n.)* one who promises, வாக்குறுதியளிப்பவர்.
prom'issory *(adj.)* containing a promise, வாக்குறுதியை உடைய.
promote *(v.t.)* to advance, to raise, encourage, முன்னேற்பாடு செய், மேம்படுத்து, ஊக்குவி.
prom'oter *(n.)* one who or that which promotes, மேம்படுத்துபவர், உயர்த்து பவர்.
pro'nate *(adj.)* leaning, inclined, சாய்ந்த, சரிந்த; also *(v.t. & i.)*; **prona'tion** *(n.)*.
prone *(adj.)* inclined, bending forward, சரிந்த, முன்னோக்கி வளைந்த; **prone'ness**.
pronoun *(n.)* a word used in the place of a noun, சுட்டுப்பெயர்.
pronounce' *(v.t. & i.)* to articulate a sound or word, to utter formally, declare, உச்சரி, முறையாக அறிவி, அறிவிப்புச் செய்.
pronun'ciator *(n.)* one who pronounces, அறிவிப்பாளர், உச்சரிப் பவர்.
proof *(n.)* any process that establishes truth or fact, evidence, demonstration, experiment, சான்று, ஆய்வு, அச்சுப்படி also *(adj.)*; **prove** *(v.t. & i.)*.
prop *(v.t.)* to support, to lean against, ஆதரி, சாய்ந்திரு, தாங்கி நிறுத்து.
propagan'da *(n.)* any systematic widespread of ideas, doctrines, practices, etc., கொள்கை பரப்பல்.
pro'pagate *(v.t. & i.)* disseminate, circulate, generate, promote, பரப்பு, சுற்றறிக்கை விடு, உருவாக்கு, மேம்படுத்து; **propaga'tion** *(n.)*.
propel' *(v.t.)* to drive forward, push, force, முன்தள்ளு, தள்ளு, இயக்கி முன்னால் செலுத்து.
propel'ler *(n.)* one who or that which propels, முன்தள்ளி.
propend *(v.i.)* to lean forward, முன்னோக்கிச் சாய்வுறு; **propense** *(adj.)*; **propensity** *(n.)*.
prop'er *(adj.)* appropriate, correct, fitting, தகுந்த, சரியான, பொருத்த மான; also *(adv.)* & *(n.)*.
prop'erty *(n.)* anything owned, ownership, possessions, சொத்து, சொத்துரிமை, உடைமை.

prophecy *(n.)* prediction of any kind under the influence of divine guidance, குறிசொல்லுதல், வருவது உரைத்தல்; **proph'esy** *(v.t. & i.)*.

proph'et *(n.)* one who predicts future events, வருவதை முன்னுரைப்பவர்.

proponent *(n.)* one who makes a proposal, முன் மொழிபவர்.

proportion *(n.)* ratio, relation, size, விகிதம், தகவு , அளவு; also *(v.t.)*; **proportional** *(adj.)*.

propor'tionate *(adj.)* in proper ratio, தகுந்த வீதத்தில்.

propos'al *(n.)* a plan, scheme etc., prepared, an offer of marriage, திட்டம், திருமணப் பேச்சு; also *(v.t. & i.)*.

propri'etor *(n.)* one having an exclusive right to some property, உரிமையாளர்.

prosaic *(adj.)* resembling prose, dull, உரைநடை போன்ற, சோர்வு தரும்; **pro'saism** *(n.)*,

prose *(n.)* the ordinary form of written or spoken language *(v.t. & i.)*, உரைநடை.

pro'secute *(v.t. & i.)* to follow with a view to reaching, to practise, to follow legal proceedings, against, தொடர்ந்து பின்பற்று, செயல்படுத்து, சட்ட நடவடிக்கை எடு; **prosecu'tion** *(n.)*.

pros'ecutor *(n.)* one who prosecutes, வழக்கில் குற்றம் சாட்டும் கட்சி.

pros'ody *(n.)* the art of versification, யாப்பிலக்கணம்; **prosod'ical** *(adj.)*.

pros'pect *(n.)* an outlook, a looking forward, a scene, probable outcome, எதிர் நோக்குதல், விளைவுகளைக் கணித்தல், காட்சி நிகழ் வாய்ப்பு; also *(v.t. & i.)*, **prospec'tive** *(adj.)*.

prospec'tus *(n.)* a brief sketch or plan of some proposed literary, commercial or industrial details, தகவல் குறிப்பேடு.

pros'per *(v.t. & i.)* to favour, to flourish, to be successful, ஆதரவளி, செழிப்படையச் செய், வெற்றிபெறு.

prosper'ity *(n.)* successful progress, gain in anything desirable, முன்னேற்றம், வளமை, செழிப்பு, நல் வாய்ப்பு; **pros'perous** *(adj.)*.

pros'titute *(n.)* the woman who is engaged for sexual intercourse for pay, விலைமகள், பரத்தை; also *(v.t.)*.

prostitu'tion *(n.)* the act or trade of a prostitute, பரத்தமை.

pros'triate *(adj.)* lying with the face downward as a sign of humility, submissive, தலைகுனியும், அடிபணியும், also *(v.t.)*, **prostra'tion** *(n.)*.

protect *(v.t.)* defend, guard, to shield from injury, காப்பாற்று, பாதுகாப்பளி, காயம்படாமல் தடு; **protec'tion** *(n.)*; **protec'tive** *(adj.)*.

protege *(n.)* one under the protection of another, பாதுகாப்பில் இருப்பவர்.

pro'tein *(n.)* a body-building nitrogenous substance, புரதம்.

protest *(v.t. & i.)* to state positively, to speak strongly against, இடித்துரை, எதிர்ப்புத் தெரிவி; also *(n.)*,

prototype *(n.)* the original type after which anything is formed, a pattern, மூலமாதிரி, படிவம்.

protract *(v.t.)* to prolong, to draw a plan using a protractor, நீட்டு, அளவுப்படி திட்டம் வரை.

protra'ctor, protrac'ter *(n.)* a mathematical instrument for measuring angles, பாகைமானி.

protrude' *(v.t. & i.)* to thrust out, to project, முன்னால் நீட்டு, பிதுக்கு.

protu'berance *(n.)* a thing that protrudes, a projection, a swelling, நீண்டிருத்தல், நீள் பகுதி, (வீக்கம்).

proud *(adj.)* having high regard for oneself, magnificent, கர்வமுடைய, செருக்குடைய, இறுமாப்புடைய, தற்பெருமை பாராட்டுகிற.

prove *(v.t. & i.)* to ascertain the truth, establish, manifest, உண்மையைத் தெளிவி, நிறுவு, வெளிப்படுத்து.

prov'ender *(n.)* dry food for livestock, கால்நடைத் தீவனம்.

prov'erb *(n.)* a short saying in common use, a by-word, பழமொழி, முதுரை, **prover'bial** *(adj.)*.
provide' *(v.t. & i.)* to supply, furnish, to procure beforehand, அளி, கொடு, பெறு.
provid'ed *(conj.)* on condition, on these terms, கட்டளைகளின் பேரில்.
prov'idence *(n.)* foresight, timely care, skill in management, guidance of God or nature, முன் கவனம், உரிய கவனம், நிர்வாகத் திறன், கடவுள் அருள்; **providen'tial** *(adj.)*.
pro'vident *(adj.)* providing for future needs, economical, எதிர் காலத்திற் காகச் சேமிக்கும், சிக்கனமான.
prov'ince *(n.)* an administrative division of a country, sphere of action, மாநிலம், நாட்டின் நிர்வாகப் பரப்பு; **provin'cial** *(adj.)*.
provi'sion *(n.)* something prepared for the future, arrangement, edibles, a given condition, எதிர்காலச் சேமிப்பு, ஏற்பாடு, மளிகைச் சாமான், பலசரக்கு, குறிப்பிட்ட நிலை; also *(v.t.)*; **provisional** *(adj.)*.
proviso *(n.)* a clause in any statue, agreement, contract, சட்டப்பிரிவு, காப்புரை.
provoca'tion *(n.)* the cause of irritation, the act of provoking, எரிச்சலுக்கான காரணம், எரிச்ச லூட்டுதல்; **provoke'** *(v.t. & i.)*.
provok'e *(v.t. & i.)* to excite, to enrage, to produce anger, தூண்டு, கிளறி விடு, சினமேற்படுத்து.
prov'ost *(n.)* an official in charge, அலுவலர்.
prow'ess *(n.)* bravery, a valourous act, துணிச்சல், வீரம்.
prowl *(v.t. & i.)* to wander about in search of prey or plunder, இரை தேடி அலை, கொள்ளையிடப் பதுங் கிச் செல்.
proxim'ity *(n.)* the state of being next or nearness, அண்மை, அருகில்; **prox'imate** *(adj.)*.
prox'imo *(adv.)* in the month following the present, அடுத்த மாதத்தில்.
prox'y *(n.)* the function of a deputy, one empowered to act for another, பகராள், பதிலி.
prude *(n.)* one who is overly modest, நாணயம், ஒழுங்கு ஆகியவற்றில் கவனமாக இருப்பவர், கவனமாக இருப்பதாக நடிப்பவர்.
pru'dence *(n.)* careful management, judgement, முன் எச்சரிக்கை, அறிவு நுட்பம்; **pru'dent** *(adj.)*.
prune[1] *(n.)* a dried palm, ஒரு வகை உலர் பனை.
prune[2] *(v.t. & i.)* to cut away the unnecessary parts of a plant, to free from anything, overabundant, செடி யின் தேவையற்ற கிளைகளைக் கத் தரி, வேண்டாதவற்றைக் களை.
pry[1] *(n.)* a tool like crowbar for moving something by leverage, நெம்பு கோல் போன்ற கருவி; also *(v.t.)*.
pry[2] *(n.)* narrow inspection, a curious person, நுண்ணாய்வு செய்தல், அக் கறை காட்டுபவர்; also *(v.i.)*.
psalm *(n.)* a sacred song or hymn, கீதம், பக்திப் பாடல்.
psal'ter *(n.)* a book of sacred songs of hymns, பக்திப்பாடல் அடங்கிய நூல்.
pseu'donym *(n.)* a pen name or pseudoname, புனைபெயர்.
psy'che *(n.)* the human soul or mind, ஆன்மா, உள்ளம்; **psy'chic** *(adj.)*.
psychology *(n.)* the science of human mind, உளவியல்.
ptomaine *(n.)* a poisonous substance found in decaying animal or vegetable matter, அழுகும் பொருளி லுள்ள நச்சுப் பொருள்.
puberty *(n.)* the state of physical maturity at which persons are first capable of begetting children, முதிர்ச்சி நிலை.
pu'blic *(n.)* the people as a whole, பொதுமக்கள்; also *(adj.)*.
publica'tion *(n.)* any printed work placed on sale to the public, public

notification, நூல் வெளியீடு, பொது அறிவிப்பு.

publi'city *(n.)* the state of being commonly known any information that brings the attention of the public, விளம்பரம், பொதுமக்கள் கவனத் திற்கு வரும் செய்தி.

pub'lish *(v.t.)* announce, declare, to print and offer for sale, அறிவி, வெளிப்படுத்து, நூல் வெளியிடு.

pub'lisher *(n.)* one who publishes, நூல் வெளியீட்டாளர்.

puck'er *(v.t. & i.)* to draw or gather into small folds, மடித்து வை, சுருக்கிவை; also *(n.)*.

pud'ding *(n.)* a soft sweetened food, கூழ், களி.

pud'dle *(n.)* stagnant pool of water, a mass of clay, குட்டை, சகதி, சேறு.

pu'erile *(adj.)* juvenile, boyish, சிறுபிள்ளைத்தனமான, அற்பமான.

puff *(n.)* a soft bulging mass of material, a short quick breath, a soft pad for dabbing powder on the skin, a kind of food preparation full in the middle and gathered at the edges, மெத்தென்ற பொருள், பெருமூச்சு, முகத்தில் அழகுப் பொருளை ஒத்திக் கொள்ள உதவும் பொருள், பொதியப்பம்; **puff'y** *(adj.)*.

puf'fin *(n.)* a marine diving bird, ஒரு வகைக் கடற்பறவை.

pug¹ *(n.)* clay prepared by mixing it in the water for moulding bricks, செங்கல் அறுக்கத் தயாரிக்கப்படும் களிமண் கலவை; also *(v.t.)*.

pug² *(n.)* a small short-haired dog, குள்ளநரி; also *(v.t. & i.)*.

pug'ilist *(n.)* a boxer, மல்யுத்தம் செய்பவர்.

pugna'cious *(adj.)* inclined to fighting, சண்டைக் குணமுடைய.

puke *(v.i. & t.)* to vomit, வாந்தியெடு; also *(n.)*.

pull *(v.t. & i.)* to draw, to apply force to drag, to stretch, இழு, சக்தியுடன் இழு, நீட்டு; also *(n.)*.

pul'let *(n.)* a young hen, இளம் பெட்டைக் கோழி.

pul'ley *(n.)* a small wheel with a grooved rim in which a rope runs, கப்பி உருளை.

pul'monary *(adj.)* pertaining to the lungs, நுரையீரல் சார்ந்த.

pulp *(n.)* the soft juicy part of a fruit, a moist mass that sticks together, பழத்தின் சதைப் பகுதி, கூழ்; **pulp'y** *(adj.)*.

pul'pit *(n.)* a raised platform for speaking from, சொற்பொழிவு மேடை.

pulsa'tion *(n.)* a rhythmical beating, துடிப்பு, துடித்தல்.

pulse¹ *(n.)* the edible seeds of peas, beans etc., பருப்பு.

pulse² *(n.)* the regular beating in the arteries caused by the contractions of the heart, நாடித் துடிப்பு.

pul'verize *(v.t.)* to crush into powder or dust, பொடியாக்கு, மாவாக்கு, தூளாக்கு; **pulveriza'tion** *(n.)*.

pu'mice *(n.)* a spongy porous volcanic rock, எரிமலைக்கல்.

pum'mel *(v.t.)* to beat with fist, கை மடக்கிக் குத்து; also *(n.)*.

pump *(n.)* a mechanical device that forces a liquid, gas etc., into or draw it out of something by suction, எக்கி, குழாய்ப்பொறி; also *(v.t. & i.)*.

pump'kin *(n.)* a large yellow fruit and the tree bearing it, பூசனிக்காய், பூசனிச் செடி.

pun *(n.)* the humorous use of words, a play on words, சிலேடை நயம்; also *(v.i. & t.)*.

punch¹ *(n.)* a device pressed against a surface that is to be pierced, துளைக்கருவி; also *(v.t.)*.

punch² *(n.)* a sweetened drink, ஒரு வகைப் பானகம் குடிபொருள்.

punch³ *(n.)* the buffoon of a puppet show, பொம்மலாட்டக் கோமாளி.

punch⁴ *(n.)* a blow or thrust with the fist, கைமுட்டியால் குத்துதல்; also *(v.t.)*.

punc'tual *(adj.)* prompt, observing appointed time, காலம் தவறாத, காலந்தாழ்த்தாத, குறித்த நேரத்தைக் கடைப்பிடிக்கும்; **punctual'ity** (v.t).

punc'tuate *(v.t. & i.)* use certain standardized marks and signs in writing and printing, நிறுத்தற் குறியீடுகளை இடு; **punctua'tion** *(n.)*.

punc'ture *(n.)* the act of making perforation with a sharp point, துளையிடுதல், துளை; also *(v.t. & i.)*.

pu'ngent *(adj.)* producing a sharp sensation of taste and smell, painful, biting, stimulating, காரச் சுவையுள்ள, கார மணமுள்ள, புண்படுத்துகிற, மனத்தைக் காயப்படுத்துகிற, தூண்டுகிற; **pun'gency** *(n.)*.

punish *(v.t. & i.)* to cause to undergo pain or suffering for a wrong doing, தண்டி,. தண்டனையளி; **pun'ishment** *(n.)*; **pun'ishable** *(adj.)*.

pu'nitive *(adj.)* pertaining to punishment, தண்டனை தொடர்பான.

punt[1] *(n.)* a kind of flat-bottomed boat propelled with a pole, பரிசல்; also *(v.t. & i.)*.

punt[2] *(n.)* a type of kick in foot ball when the dropping ball is kicked before it hits the ground, கால் பந்தாட்டத்தில் பந்து தரையைத் தொடுமுன் காலால் உதைத்தல், also *(v.t. & i.)*.

punt[3] *(v.i.)* to gamble, சூதாடு.

pu'ny *(adj.)* of inferior size or strength, இளைத்த, வலிமையற்ற.

pup *(n.)* a young dog, நாய்க்குட்டி.

pu'pa *(n.)* an insect in its third stage of development between the larva and adult forms, கூட்டுப்புழுப் பருவம்.

pu'pil[1] *(n.)* the contractile part in the centre of the iris of the eye, கண்மணி, கருவிழி.

pupil[2] *(n.)* a learner, student, மாணவன், பயில்வோர்.

pur'chase *(v.t.)* to acquire by payment of money, to buy for price, விலை கொடுத்து வாங்கு; also *(n.)*.

pure *(adj.)* clean, unmixed, simple, absolute, real, guiltless, தூய்மையான, கலப்பற்ற, எளிதான, முழுமையான, உண்மையான, குற்றமற்ற.

pur'gative *(n.)* a laxative, மலமிளக்கி.

purge *(v.t. & i.)* purify, to empty the bowels, தூய்மைப்படுத்து, மலங்கழி; also *(n.)*.

puri'fy *(v.t.)* make pure, தூய்மைப் படுத்து.

puritan *(n.)* one who strictly observes the precise usage or purity in language, style etc., தூய்மைவாதி.

purity *(n.)* the condition of being pure, தூய்மை நிலை.

purl *(v.t. & i.)* to flow in ripples with a bubbling sound, சுழித்துக் கொண்டு ஓடு; also *(n.)*.

purloin *(v.t. & i.)* to steal, திருடு.

pur'ple *(n.)* a dark colour that is a blend of red and blue, ஊதா நிறம்; also *(adj.)*; also *(v.t. & i.)*.

pur'port *(v.t.)* significance, intention, முக்கியத்துவம், உள்நோக்கம்.

pur'pose *(n.)* intention, view, object, aim, உட்கருத்து, கருத்து, செயல் நோக்கம்.

purpose'ful *(adj.)* intentional, full of meaning, வேண்டுமென்றே செய்யப் பட்ட, கருத்துகள் நிறைந்த.

purse *(n.)* a small bag in which money is carried, பணப்பை, பணமுடிப்பு.

pursue *(v.t. & i.)* to chase, to proceed along, to try to find, to carry on, துரத்து, மேற்கொண்டு செய், கண்டறிய முயல், தொடர்.

pursuit *(n.)* an endeavour to attain, occupation, கடுமுயற்சி, தேடிப் பெறுதல், தொழில்.

purvey *(v.t. & i.)* to supply food or provisions, உணவளி, மளிகைப் பொருள்களைக் கொடுக்க ஏற்பாடு செய்.

pur'view *(n.)* the extent or range of activity, செயல், செயல்பரப்பு.

pus *(n.)* the yellowish-white substance found in sores produced by infection, சீழ்.

push *(v.t. & i.)* to press against so as to move it away, to follow up

vigorously, to expand, தள்ளு, முனைந்து செயலாற்று, விரிவாக்கம் செய்.

pusillan'imous *(adj.)* faint hearted, cowardly, மனத் திண்மையற்ற, கோழையான.

pus'tule *(n.)* a small pimple or blister, பரு, கொப்புளம்.

put *(v.t.)* to place, to impose, to set, வை, திணி, இடு.

putrefac'tion *(n.)* the decomposition of organic matter by bacteria, fungi etc., rottenness, கெட்டுப்போதல், அழுகுதல்; **putrefy** *(v.t. & i.)*.

pu'trid *(adj.)* decomposed, causing decay, கெட்டுப்போன, அழுகிய.

putt *(v.t. & i.)* to hit the ball in the golf game, so as to get it in a hole, பந்தைக் குழியில் வீழ்த்து; also *(n.)*.

put'ty *(n.)* a paste of finely powdered chalk and linseed oil, மெருகு சுண்ணம்.

puz'zle *(n.)* perplexity, a problem or toy to test mental ingenuity, குழப்பம், புதிர், புதிர்க்கணக்கு, புதிர் விளையாட்டு.

pyg'my, pigmy *(n.)* dwarf, குள்ளர்,

pylon *(n.)* a gateway, a tower serving as a gateway, எல்லை வாயில், எல்லைக் கோபுரம்.

pyorrhoea *(n.)* a discharge of pus from the gums, சீழ்ப்பல் நோய்.

pyr'amid *(n.)* a structure with a square base and four triangular sides, கூர்நுனிக்கோபுர வடிவம்.

pyre *(n.)* a funeral pile, a heap of combustible material. சிதை.

pyrotech'nics *(n.)* the art of making fireworks, a display of fireworks, பட்டாசு செய்யும் கலை, வாண வேடிக்கை.

py'thon *(n.)* a large nonpoisonous snake that crushes its prey, மலைப் பாம்பு.

Q

quack[1] *(n.)* the cry of a duck, வாத்தின் கத்தல்.

quack[2] *(n.)* one who pretends to have knowledge and skill in medicine, போலிமருத்துவர்.

quad'rangle *(n.)* a plane figure having four sides and four angles, நாற் கோணவடிவம்; **quadran'gular** *(adj.)*.

quad'rant *(n.)* a fourth part of a circle, an instrument used for measuring angles of altitudes , கால் வட்டம், கோணமானி.

quadrat'ic *(adj.)* pertaining to a square, சதுரத்திற்குரிய, இருபடிக் குரிய

quadren'nial *(adj.)* happening once in four years, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையான.

quadrilat'eral *(n.)* a plane figure having four sides, நாற்பக்க வடிவம்.

quadrille *(n.)* a square dance for four sets, ஒரு வகை நடனம்.

quad'ruped *(n.)* a four-footed animal, நாற்கால் விலங்கு.

quad'ruple *(adj.)* four-fold, நான்கு மடங்கான; also *(v.t. & i.)*.

quaff *(v.t. & i.)* drink deeply, swallow in large gulps, தாராளமாகக் குடி, கடைசிச் சொட்டு வரை உறிஞ்சு, ஒரே மடக்கில் விழுங்கு.

quag'mire *(n.)* soft marshy ground, சதுப்பு நிலம்.

quail[1] *(n.)* a small migratory bird, காடை.

quail[2] *(v.t. & i.)* to draw back in fear அஞ்சி நடுங்கு.

quaint *(adj.)* strange, unusual, விந்தையான, புதுமையான.

quake *(v.t.)* shake with cold or fear, குளிரால் விறைத்துப்போ, அஞ்சி நடுங்கு; also *(n.)*.

qualifica'tion *(n.)* skill, achievement etc., that fits a person for a job , fitness, தகுதி, தகைமை; **qualified** *(adj.)*; **qualify** *(v.t. & i.)*.

qualitative *(adj.)* pertaining to quality, இயல்பு சார்ந்த, பண்பறி.
quality *(n.)* worth, nature, property, மதிப்பு, இயல்பு, குணம், தன்மை.
qualm[1] *(n.)* nausea, வாந்தி, குமட்டல்.
qualm[2] *(n.)* feeling of conscience, மனச்சாட்சி உறுத்தல்.
quand'ary *(n.)* a state of difficulty, dilemma, இக்கட்டு, இடர்ப்பாடு, குழப்பநிலை.
quantity *(n.)* extent, weight or amount of something, பரப்பு, எடை, தொகை முதலான அளவு; **quantitative** *(adj.)*.
quantum *(n.)* amount, quantity, தொகை, மொத்த அளவு, சிப்பம்.
quar'antine *(n.)* separation from others to prevent the spread of disease, தொற்றுத் தடுப்புக் காப்பு.
quar'rel *(n.)* an angry dispute, சண்டை; also *(v.i.)*.
quar'relsome *(adj.)* fond of quarreling, சண்டைக்குப் போகும் இயல்புடைய.
quar'ry[1] *(n.)* a place in the ground from where stone is cut, கற்சுரங்கம்; also *(v.t.)*.
quar'ry[2] *(n.)* a hunted animal or bird, வேட்டை விலங்கு.
quarter *(n.)* one of four equal parts of something , கால்பங்கு; also *(v.t.)*.
quar'terly *(adj.)* happening once in every three months, காலாண்டிற்குரிய, மூன்று திங்களுக்கு ஒரு முறை நிகழும்.
quar'ters *(n.pl.)* lodging, தங்குமிடம்.
quart'z *(n.)* a kind of semi - precious stone found in rocks, படிகக்கல்.
quash *(v.t.)* make void, to stop or put an end to, இல்லாமலாக்கு, நிறுத்து.
qua'ver *(v.t. & i.)* speak in a shaking voice, குரல் நடுக்கத்துடன் பேசு.
quay *(n.)* a place where boats are loaded or unloaded, கப்பல் துறை, துறைமுக மேடை.
quea'sy *(adj.)* easily upset, sickish, எளிதில் உணர்ச்சி வயப்படுகிற, எளிதில் நிலைகுலைகிற, நோய் வாய்ப்படுகிற.
queen *(n.)* a female ruler, wife of a king, அரசி, இராணி.
queer *(adj.)* strange, unusual, peculiar, புதுமையான, விந்தையான, விநோதமான, தனிப்போக்குள்ள; also (v.t).
quell *(v.t.)* suppress, put down, அடக்கு, இல்லாமல் செய்.
quench *(v.t.)* satisfy, to put an end to, சமாதானப்படுத்து, தணியச்செய், இல்லாமலாக்கு.
quer'ulous *(adj.)* complaining, quarrelsome, குறை கூறுகிற, சண்டைக்கிழுக்கும்.
que'ry *(n.)* an inquiry, விசாரணை சந்தேக வினா; also *(v.t. & i.)*.
quest *(n.)* a search, தேட்டம், நாட்டம்; also *(v.t. & i.)*.
ques'tion *(n.)* a sentence that asks for an answer from some one, a problem, doubt, வினா, பிரச்சினை, ஐயப்பாடு; also *(v.t.)*; **ques'tionable** *(adj.)*.
questionnaire *(n.)* a written list of questions for obtaining informations for a survey or report, வினாப் பட்டியல்.
queue *(n.)* a line of people waiting for their turn, முறைவரிசை; also *(v.i. & t.)*.
quib'ble *(n.)* an unimportant or trivial objection or argument, சாக்குப் போக்குச் சொல்லுதல், உண்மையை மறைக்கும் புரட்டுப்பேச்சு; also *(v.i.)*.
quick[1] *(adj.)* done in a short time, swift, prompt, குறுகிய நேர, விரைவான, உடனடியான; **quick'en** *(v.t.)*; **quickness** *(n.)*.
quick[2] *(n.)* a very tender part of the body especially under the nails, நகத்துக்கடியே உள்ள சதைப்பகுதி.
quick'lime *(n.)* lime unmixed with water, சுட்ட சுண்ணாம்பு.
quick'sand *(n.)* loose wet sand that sucks anything that stands on it, புதைமணல்.
quick'silver *(n.)* mercury, பாதரசம்.
quies'cent *(adj.)* not in active state, அசைவற்ற, அமைதியான,

quiet *(adj.)* silent and still, calm, not bright, சந்தடியற்ற, அமைதியான, பகட்டற்ற; also *(v.t. & i.)*; **quietness** *(n.)*.

quill *(n.)* large feather of a goose made into a pen, sharp spine of certain animals, இறகுப்பேனா, பன்றிமுள்.

quilt *(n.)* a padded bed cover, இணைப்பு மெத்தை.

qui'nary *(adj.)* arranged in fives, ஐந்தடுக்கான.

quin'ine *(n.)* a bitter tasting drug got from cinchona bark, கொய்னா மருந்து.

quinquenn'ial *(adj.)* happening once in five year, lasting five years, ஐந்தாண்டுக்கொருமுறை நிகழும், ஐந்தாண்டுகளுக்கு நீடிக்கும்.

quinquen'nium *(n.)* the period of five years, ஐந்தாண்டுக் காலம்.

quintes'sence *(n.)* concentrated extract, வடிசாறு, சத்து.

quin'tuple *(adj.)* five fold, ஐந்து மடங்கான; also *(adj.)* & *(v.t.)*.

quip *(n.)* a smart remark, துடுக்குப் பேச்சு; also *(v.t.)*.

quire *(n.)* 24 sheets of paper, 24 தாள்கள் கொண்ட அளவு.

quit *(v.t.)* leave, to give up ones job, விலகு, விட்டு விடு, வெளியேறு.

quite *(adv.)* totally, completely, முழுவதிலும், முற்றிலும், அறவே.

quiv'er *(n.)* a narrow case of carrying arrows, அம்பறாத்தூணி.

quiver *(v.t.)* shake, tremble, நடுங்கு, துடி.

quixot'ic *(adj.)* having noble but impracticable aims, நடைமுறைக் கொவ்வாத, உயர் நோக்கங்களுடைய; also *(n.)*.

quiz *(n.)* a competition in which the participants, knowledge is tested by asking questions, வினாடி வினா; also *(v.t.)*.

quoit *(n.)* an iron disk, discus, குதிரைச் சில்லு, ஆழிப்படை; also *(v.t. & i.)*.

quon'dam *(adj.)* former , முந்திய.

quo'rum *(n.)* minimum number of members necessary at a meeting before any business can be done, கூட்டத்திற்குத் தேவையான குறைஎண், சிற்றெண்.

quota' *(n.)* the part share or amount to be given or received by each member of a group, பங்கு வீதம், உரிய பங்கு.

quotation[1] *(n.)* a passage cited, மேற்கோள்; also *(v.t.)*.

quota'tion[2] *(n.)* a price stated, an estimate of cost, விலைக்குறிப்பு, விலைப்புள்ளி விவரம்; also **quote** *(v.t.)*.

quo'tient *(n.)* the result of a division sum, ஈவு.

R

rab'bit *(n.)* a small long-eared burrowing animal, குழிமுயல்.

rab'ble *(n.)* a noisy disorderly crowd, ஒழுங்கில்லாத கூட்டம், கலகக்கூட்டம்.

rab'id *(adj.)* furious, mad, முரட்டுத் தனமான, தீவிர வெறிகொண்ட.

ra'bies *(n.)* a disease that causes madness in dogs, disease caused by the bite of mad dogs, நாயின் வெறி நோய், வெறிநாய்க்கடி

race[1] *(n.)* any one section of mankind having a particular set of characteristics, இனம்; **racial** *(adj.)*.

race[2] *(n.)* a competition in which speed is important, ஓட்டப் பந்தயம், பந்தயம்; also *(v.t. & i.)*.

race-course *(n.)* the ground on which the races are done, பந்தயத்திடல்.

rac'ialism *(n.)* race hatred, இன வெறுப்புக் கொள்கை.

rack[1] *(n.)* a shelf for holding articles, நிலையடுக்கு.

rack[2] *(n.)* a device for torturing victims by stretching their limbs, கை கால்களை இழுத்து வலியேற் படுத்தும் ஒரு சித்திரவதைக் கருவி; also *(v.t.)*.

rack[3] *(v.t. & i.)* to exert one's brain greatly, மூளைக்கு அதிகமாக வேலை கொடு, மூளையைக் குழப்பிக் கொள்.

rack[4] *(n.)* a fodder holder, தீனித் தொட்டி.

rack'et *(n.)* a frame with catgut or nylon for playing tennis, badminton etc., பந்தடி மட்டை.

ra'cy *(adj.)* vigorous, spirited, உணர்ச்சியைத் தூண்டுகிற, விறு விறுப்புடைய.

rad'ar *(n.)* Rado Detecting And Ranging, any of several systems used for detecting or reflecting objects, ரேடார்.

radd'le[1] *(v.t.)* interweave, முடைந்து பின்னு.

rad'dle[2] *(n.)* redochre, செங்காவி; also *(v.t.)*.

rad'ial *(adj.)* like the spokes of the wheel, ஆரவடிவிலான.

rhom'bus *(n.)* an equilateral parallelogram, சம இணைகரம்.

rhyme *(n.)* regular movement of verse or music in which stressed sound occur at definite intervals, ஒலி யியைபுடைய செய்யுள் அல்லது பாடல்.

rhy'thm *(n.)* a smooth flowing graceful patterns of sound in words, சந்தம், எதுகை.

rib[1] *(n.)* one of the carved bones enclosing the heart and lungs, vein of a plant leaf, விலா எலும்பு, நரம்பு.

rib[2] *(v.t.)* to tease, நையாண்டிசெய்.

rib'ald *(adj.)* vulgar, இழிசுவையாகப் பேசுகிற; also *(n.)*.

ribaldry *(n.)* vulgar jestry, great abuse, இழிசுவைப் பேச்சு, கீழ்த்தர மான வசை.

rib'bon *(n.)* a narrow strip of material used to tie things etc., நாடா.

rice *(n.)* a starchy grain used as staple food, அரிசி.

rich *(adj.)* wealthy, fertile, having great value, செல்வமுள்ள, வள மான, மதிப்புமிக்க; also *(n.)*.

rich'es *(n.)* wealth, செல்வம்.

rick *(n.)* a big pile of hay, வைக்கோல் போர்.

rick'ets *(n.)* a disease of children causing bending of bone, கணை.

rick'ety *(adj.)* unsteady, தளர்ந்த.

rickshaw *(n.)* a three wheeled carriage, ரிக்ஷா (மூவாழி) வண்டி.

rid *(v.t.)* make one free, to remove something from, விட்டொழி, நீக்கு.

rid'dle[1] *(n.)* a puzzle, விடுகதை புதிர்; also *(v.t. & i.)*.

rid'dle[2] *(n.)* a sort of tray with holes in the bottom used for sifting, சல்லடை.

ride *(v.i. & t.)* to sit on an animal, a car, cycle etc., and be carried along, ஏறிச்செல், ஓட்டிச் செல்; also *(n.)*; **rode** *(p.t.)*.

ridge *(n.)* raised edge where sloping surfaces meet, narrow elevation of land, mountain etc., விளிம்பு, வரம்பு, கரைமேடு.

rid'icule *(n.)* mockery, கேலி, ஏளனம்; also *(v.t.)*.

ridi'culous *(adj.)* deserving to be mocked at, ஏளனம் செய்யத்தக்க, நகைப்பிற்கிடம் தரும்..

rife *(adj.)* happening frequently, prevalent, அடிக்கடி நிகழும், பொது வழக்கிலுள்ள, நடைமுறையிலுள்ள.

riff-raff *(n.)* worthless people, இழிமக்கள், கீழ்மக்கள்.

rifle[1] *(n.)* a gun with a long barrel and grooved bore, துப்பாக்கி; also *(v.t.)*.

rifle[2] *(v.i. & t.)* to rob, கொள்ளையடி.

rift *(n.)* a split or crack, பிளவு, வெடிப்பு; also *(v.t.)*.

rig *(n.)* arrangement of sails etc., of a sailing ship, கப்பலின் பாய்மரம் முதலான தளவாடம்; also *(v.t. & i.)*.

right *(adj.)* on the side opposite to the left, straight, correct, suitable, வலது பக்க, நேரான, சரியான, பொருத்த மான; also *(n.)*.

right'eous *(adj.)* virtuous morally, justifiable, உண்மையான, நேர்மை யான, உரிமையுடைய.

rigid *(adj.)* stiff, not able to be moved, very strict, கட்டியான, விறைப்பான. கண்டிப்பான; **rigidity** *(n.)*.

rig'marole *(n.)* a confused talk, குழப்ப மான பேச்சு.

rigorous *(adj.)* severe, strict, கடுமை யான, கண்டிப்பான; rigour *(n.)*.

rill *(n.)* a small stream, சிற்றோடை.

rim *(n.)* the outer edge of a round object, விளிம்பு, ஓரம்; also *(v.t.)*.

rime *(n.)* thick white frost, வெண் பனி.

rind *(n.)* the skin of fruit, the bark of tree, பழத்தோல், மரப்பட்டை; also *(v.t.)*.

ring[1] *(n.)* a circle, a circular ornament worn on the finger, வளையம், மோதிரம்; also *(v.t. & i.)*.

ring[2] *(v.t.)* to make noise like the bell, மணியோசை எழுப்பு; also *(n.)*, **rang** *(p.t.)*; **rung** *(p.p.)*.

ring'leader *(n.)* one who leads a wicked gang, கலகத் தலைவன், கிளர்ச்சிக் கூட்டத்தின் தலைவன்.

ring'let *(n.)* a curled lock of hair, a small rig, மயிர்ச்சுருள், சிறு வளையம்.

ring-master *(n.)* one in charge of the performance of wild animals in a ring in a circus, வட்டரங்குக் கூடார வளையத்தில் வனவிலங்குகளை ஆட்டிப்படைப்பவர்.

ring'worm *(n.)* a kind of skin disease causing circular patches, படர் தாமரை நோய்.

rink *(n.)* a smooth floor or an area of ice for ice skating, curling etc., பனிச் சறுக்கு விளையாடும் தளம் அல்லது பகுதி.

rinse *(v.t.)* to cleanse lightly by dipping things in water, நீரில் அலசிக் கழுவு; also *(n.)*; **rinsing** *(n.)*.

ri'ot *(n.)* violent disorder, a noisy uncontrolled revelry, கலகம், கிளர்ச்சி, கலவரம்; also *(v.t.)*; **riotous** *(adj.)*.

rip[1] *(v.t. & i.)* to tear apart, கிழித்தெடு; also *(n.)*; **rip'per** *(n.)*.

rip[2] *(n.)* a useless horse, பயனற்ற குதிரை.

rip[3] *(n.)* a stretch of water in an estuary, கழிமுக நீர், அலைபரப்பு.

ripe *(adj.)* fully developed, ready for use, நன்கு பழுத்த, முற்றிலும் வளர்ந்து பயன் படுத்தத்தக்க; **ripeness** *(n.)*; **ripen** *(v.t. & i.)*.

riposte *(n.)* a sharp swift retort, சுடு சொல், பதிலடி, எதிர்ப்பேச்சு.

ripple[1] *(n.)* a little curling waves on water surface, சிற்றலை; also *(v.t. & i.)*.

ripple[2] *(n.)* a tool to separate seeds from flax etc., ஆளிச்செடி போன்ற வற்றிலிருந்து விதை நீக்கும் கருவி; also *(v.t.)*.

rise *(v.i. & t.)* stand up, get out of bed, increase, have as a starting point, எழுந்திரு, விழித்தெழு, பெருக்கு, ஏறு, உதயமாகு, முன்னேறத் துவங்கு; also *(n.)*; **rose** *(p.t.)*; **risen** *(p.p.)*; **rising** *(n.)*.

risibil'ity *(n.)* ability to laugh, சிரிப் பாற்றல்; **risible** *(adj.)*.

rising *(n.)* a revolt, something that rises, கிளர்ச்சி, கலகம், எழுச்சி, எழுதல்.

risk *(n.)* chance of danger, loss etc., ஆபத்து, இடர் வாய்ப்பு, இழப்பு அல்லது ஊறு நேரும் நிலை; also *(v.t.)*; **risk'y** *(adj.)*.

ris'sole *(n.)* fried cake, meat minced and fried. இறைச்சி மீன்வறை.

rite *(n.)* a religious solemn ceremony, சமயச் சடங்கு.

ritual *(n.)* form of rites performed during a religious ceremony, சமயச் சடங்கு முறை; also *(n.)*.

rival *(n.)* a competitor, போட்டியாளர்.

river *(n.)* a long running stream of natural water, ஆறு.

rivet *(n.)* one headed bolt for fastening metal plates together, தறியாணி; also *(v.t.)*.

riv'ulet *(n.)* a small stream or brook, சிற்றாறு.

road *(n.)* a long narrow piece of ground for travelling, பயணப் பாதை, பாதை.

road'ster *(n.)* a type of motor car, ஒரு வகை உந்து வண்டி.

roam *(v.i. & t.)* to wander, move from place to place without any fixed purpose, அலைந்து திரி, சுற்றித்திரி.

roan *(n.)* a kind of horse having mixed colours, பல வண்ணக் குதிரை; also *(adj.)*.

roar *(v.t. & i.)* to make a deep loud sound like a lion, to cry aloud, சிம்மக் குரல் எழுப்பு, முழங்கு, கர்ஜனை செய்; also *(n.)*.

roast *(v.t. & i.)* to bake in an oven or over a fire, அடுப்பில் வாட்டு.

rob *(v.t.)* steal by force, கொள்ளை யடி, பறி; also *(n.)*.

robber *(n.)* one who robs, கொள்ளைக் காரன், திருடன்.

rob'bery *(n.)* the act of robbing, கொள்ளை, திருட்டு.

robe *(n.)* a loose outer garment, மேலங்கி; also *(v.t. & i.)*.

rob'in *(n.)* a small European bird, மேலை நாட்டின் ஒரு சிறு பறவை.

rob'ot *(n.)* a machine with human figure which works like a human being, எந்திர மனிதன்.

robust *(adj.)* strong, healthy, வலிமை யான, உறுதியான, உடலுரமுடைய, ஆரோக்கியமான.

rock *(n.)* a large mass of stone, பாறை; **rock'y** *(adj.)*.

rock'et *(n.)* an electronic projectile which launches itself into space, ஏவுகணை.

rocking- chair *(n.)* a swinging chair, ஆடுநாற்காலி.

rocksalt *(n.)* a solid salt dug from mines, பாறையுப்பு, இந்துப்பு.

rod *(n.)* a wooden or metal stick, கம்பு, கழி, கம்பி.

rode (see ride).

rod'ent *(adj.)* any gnawing mammal, கொறித்துண்ணி.

roe[1] *(n.)* a kind of deer, ஒருவகை மான்.

roe[2] *(n.)* the eggs of a fish, மீன்முட்டை.

rogue *(n.)* a dishonest person, கயவன், சதிகாரன்.

roister *(v.i.)* be noisy in a merry-making, act in a boastful manner, கூத்தாடு, தற்பெருமை பறை சாற்று.

role *(n.)* one's part in anything, part to be performed by an actor, செயல் பங்கு, பங்கு, நடிகரின் பங்கு.

roll *(v.t. & i.)* to wind by turning over and over, move from side to side, சுருட்டு, உருட்டு, உருளு; also *(n.)*.

roll[1] *(n.)* anything that is rolled up, a long deep sound, உருளை, சுருள், அதிரொலி; also *(v.t. & i.)*.

roll[2] *(n.)* a list or register of names, பெயர்ப்பட்டியல், பெயர்ப் பதிவேடு.

rol'ler *(n.)* any cylindrical shaped thing, உருளை.

rol'lic *(n.)* a jovial behaviour, a noisy revelry, கும்மாளம், குதியாட்டம்; also *(v.i.)*.

ro'mance[1] *(n.)* an imaginary, exciting tale of adventures, the relationships, actions etc., of persons who are in love, வீரமிக்க கதை, காதல்; **roman'tic** *(adj.)*.

romp *(n.)* a frolic play, கும்மாளம் போட்டு ஆடும் விளையாட்டு; also *(v.i.)*.
rood[1] *(n.)* a measure of a land, நில அளவை.
rood[2] *(n.)* a large crucifix, பெரிய சிலுவை.
roof *(n.)* the top covering of a building, the highest part of something, கூரை, உயர்ந்த இடம்.
rook *(n.)* a crow like bird, ஒரு வகைக் காகம்.
rook *(n.)* a piece in chess, சதுரங்கக் காய்.
room *(n.)* a space in a building separated by walls, அறை, இடம்.
roost *(n.)* branch, pole etc., on which birds sit and rest at night, பறவை இரவில் உட்காரும், அல்லது உறங்கும் கொம்பு; also *(v.i.)*.
roost'er *(n.)* a male chicken, சேவல்.
root *(n.)* under ground part of a plant, source or origin, வேர், மூலம், தோற்றம்; also *(v.t. & i.)*.
rope *(n.)* a string cord, கயிறு; also *(v.t. & i.)*.
ro'quet *(n.)* a tool to strike the ball in tennis, பந்தடிமட்டை.
rosarium *(n.)* a rose-garden, ரோசாத் தோட்டம்.
rosary *(n.)* a string of beads used in counting prayers, உருத்திராக்க மாலை.
rose[1] *(n.)* a bush with thorns bearing beautiful sweet-smelling flowers, the flower, ரோசாச்செடி, ரோசாப்பூ; **ros'y** *(adj.)*.
rose[2] (see rise).
rosemary *(n.)* an ever-green shrub, பசுமைமாறா, நறுமணச்செடி.
rose'wood *(n.)* a hard darked wood used to make furniture, கருங்காலி மரம்.
rosin *(n.)* a solid resin, கெட்டிப்பிசின்.
roster *(n.)* a list of personnel or groups showing the turn or rotation of service, a list of names, வேலைமுறை ஏடு, பெயர்ப்பதிவேடு.
ros'trum *(n.)* a platform for public speaking, சொற்பொழிவு மேடை.
rot *(v.t. & i.)* decay by natural process, to go bad, அழுகிப் போ, அழிந்துபோ, பயனின்றிப்போ; also *(n.)*; **rot'ten** *(adj.)*.
rot'ary *(adj.)* turning like a wheel, சுழலும்.
rotate *(v.t. & i.)* go or turn round, revolve, சுற்று, சுழலு; **rota'tion** *(n.)*; **rota'tory** *(adj.)*.
rote[1] *(n.)* habitual course, repeating from memory, பழக்கம் காரணமான செயல் வகை மனப்பாடம் செய்ததை ஒப்பித்தல்.
rote[2] *(n.)* a kind of stringed musical instrument, ஒரு வகை நரம்பிசைக் கருவி.
ro'tund *(adj.)* round and fat, வட்டமான, உருண்ட; **rotundity** *(n.)*.
ro'tunda *(n.)* a circular building with a dome, கவிமாடம் உடைய வட்ட வடிவக் கட்டிடம்.
rouble *(n.)* a unit of currency in Russia, ரூபிள், ருஷிய நாட்டு நாணயம்.
rouge *(n.)* a cosmetic used for giving pink colour to the cheeks, கன்னத்தில் பூசும் ஒப்பனைப் பொருள்.
rough *(adj.)* not smooth, uneven, violent, finished without care, சொரசொரப்பான, நிரப்பில்லாத, கடுமையான, முரட்டுத்தனமான, கரடுமுரடான; **rough'ness** *(n.)*; **roughly** *(adv.)*.
round *(adj.)* shaped like a ball, circular, உருளை வடிவ, உருண்டையான, வட்டமான; also *(adv.)*; also *(v.t. & i.)*.
rouse *(v.t. & i.)* wake up , to stir or excite, துயிலெழுப்பு, தூண்டு.
rout *(n.)* a complete defeat resulting in utter confusion, முறியடிப்பு, தோல்வியால் நிலைகுலைதல்; also *(v.t.)*.
route *(n.)* a regular line of travel, a course to be followed, போக்குவரத்துப் பாதை, பாதை, வழிமுறை.
routine *(n.)* a fixed way of doing things, நிலையான நடைமுறை; also *(adj.)*.

rove *(v.t. & i.)* to wander without aim, அலைந்து திரி, சுற்றித்திரி.
ro'ver *(n.)* one who wanders, a robber, நாடோடி, கொள்ளைக்காரன்.
row[1] *(n.)* a line of persons or things, a loud noise, வரிசை, அணி ,அமளி; also *(v.t.)*.
row[2] *(v.t. & i.)* to move a boat with oars, துடுப்பு வலி.
rowd'y *(n.)* a rough person, முரடன், போக்கிரி; also *(adj.)*; **rowdy'ism** *(n.)*.
rower *(n.)* one who rows, துடுப்புக் காரன்.
royal *(adj)*. pertaining to a king or queen, அரசருக்குரிய, அரசிக்குரிய, அரச குடும்பத்திற்குரிய.
royalist *(n.)* a supporter of the rule of a king, அரசப் பற்றாளர், அரச ஆதர வாளி.
royal'ty[1] *(n.)* the position, dignity etc., of a king, அரச பதவி, அரசு ஆதிக்கம்.
royalty[2] *(n.)* an amount paid to the author of a book for commercialisation, நூலாசிரியருக்கு அளிக்கப் படும் உரிமைப் பங்கு வீதம், உரியம்.
rub *(v.t. & i.)* to pass something over the surface of another, erase, உரசு, உரசித் தேய், அழி.
rub'ber *(n.)* an elastic substance produced from the milky sap of various tropical plants, any instrument used in rubbing or cleaning, இரப்பர், அழிப்பான்.
rub'bish *(n.)* waste material, things thrown away as useless, குப்பை கூளம்.
rub'ble *(n.)* pieces of broken stone or rock, சரளைக் கல், உடைந்த பாறைத் துண்டு,
ruby *(n.)* a red variety of precious stone, கெம்புக்கல், மாணிக்கக்கல்.
ruck[1] *(n.)* ordinary persons or things, எளிய மக்கள், எளிய பொருள்.
ruck[2] *(n.)* uneven fold of cloth, தாறுமாறான மடிப்பு.
ruction *(n.)* a riotous uproar, குழப்பம்.
rudder *(n.)* a device by which a ship is steered, சுக்கான்.
rud'dy *(adj.)* red'dish, having a healthy red colour, செவ்வண்ண,
rude *(adj.)* impolite, violent, not polished, மரியாதையற்ற, பண்பற்ற, முரட்டுத்தனமான, சொரசொரப் பான.
rudi'ments *(n.pl.)* the fundamental principles, early stages, அடிப்படைக் கோட்பாடுகள், அடிப்படைக் கூறுகள்; **rudimentary** *(adj.)*.
rue *(v.t. & i.)* to regret bitterly, செய்த தவற்றிற்கு உள்ளமுருகு; **rue'ful** *(adj.)*.
ruf'fian *(n.)* a rough lawless person, முரடன், சட்டதிட்டங்களுக்குக் கட்டுப் படாதவன்.
ruffle *(v.t.)* disturb the peace of mind, become rough, உள அமைதி கெடு, முரட்டுத்தனமாக நடந்து கொள்.
rug *(n.)* thick woollen fabric, floor carpet of thick material, முரட்டுக் கம்பளித் துணி, சமுக்காளம், தரை விரிப்பு.
rug'ged *(adj.)* rough, கரடுமுரடான.
ruin *(n.)* complete destruction, பெரும் அழிவு; also *(v.t.)*; **ruinous** *(adj.)*.
rule *(n.)* law, traditional custom, the tenure of office, விதி, மரபு வழக்கு, பதவிக்காலம்; also *(v.t. & i.)*.
ruler[1] *(n.)* one who governs, அரசர், ஆட்சியாளர்.
ruler[2] *(n.)* a wooden or metal rod used to draw lines, கோடிடும் மரக்கோல்.
ru'ling *(n.)* a judgement, an official decision, தீர்ப்பு, அலுவலக முடிவு.
rum *(n.)* an alcoholic drink made from sugarcane, வெல்லச் சாராயம்.
rum'ble *(n.)* a low continuous sound, உறுமும் ஒலி; also *(v.t. & i.)*.
ru'minant *(n.)* a cud chewing animal, அசைபோடும் விலங்கு; also *(adj.)*.
rum'mage *(v.t. & i.)* to make a thorough search, துருவித் துருவித் தேடு.
rummy[1] *(n.)* a card game played in many variations, சீட்டாட்ட வகை.
rummy[2] *(adj.)* characteristic of rum, மதுபானம் சார்ந்த.

ru'mour *(n.)* a vague gossip, வதந்தி.
rump *(n.)* the buttocks of an animal, the unimportant part, விலங்கின் பிட்டம், முக்கியமற்ற பகுதி.
rum'ple *(v.t. & i.)* to crumple, கசக்கு, சுருட்டு.
run *(v.t. & i.)* move swiftly, to flow, to operate, manage, to spread, continue, ஓடு, பாய், வழிந்தோடு, இயக்கு, நிர்வகி, பரவு, தொடரு; also *(n.)*; **ran** *(p.t.)*.
run'away *(n.)* one who or that which runs away, தப்பி ஓடியவர், தப்பிச் சென்றது.
rune *(n.)* a kind of script, ஒரு வகை வரிவடிவம்.
rung' *(n.)* a horizontal step of a ladder, ஏணிப்படி.
rung (see ring).
runt (n.) a dwarf animal, plant or thing, குட்டை விலங்கு, குட்டைச் செடி, அளவில் சிறிய பொருள்.
runway *(n.)* the bed of stream, a passage for planes to land and take off, வானூர்தி தரையிறங்கி, ஏறும் தளம், வானூர்திப் படுகை, ஆற்றுப் படுகை.
rupture *(n.)* a breach, burst, breaking apart, உடைப்பு, வெடிப்பு, தகர்வு; also *(v.t. & i.)*.
rural *(adj.)* pertaining to place as opposed to town, நாட்டுப்புற, ஊரக; **ruralism** *(n.)*.
ruse *(n.)* a trick, சூழ்ச்சி.
rush[1] *(v.t. & i.)* move with speed and force, பாய்ந்து செல்; also *(n.)*.
rush[2] *(n.)* a tall grass-like plant, நாணற்புல்.
rusk *(n.)* baked hard and crisp bread, பொரித்த ரொட்டி.
rus'set *(adj.)* reddish - brown colour, பழுப்பு நிறமான.
rust *(n.)* a coating formed on iron and steel by air and moisture, துரு; also *(v.t. & i.)*.
rus'tic *(adj.)* rural, unsophisticated, rough, நாட்டுப்புற, நாகரிகமற்ற, முரட்டுத் தனமான; also *(n.)*.
rus'tle *(n.)* a soft rubbing sound, கரகரவென்ற ஒலி, சலசலப்பு; also *(v.t. & i.)*.
rut[1] *(n.)* a deep track made by wheels in soft ground, வண்டித்தடம்.
rut[2] *(n.)* the periodical occurrence of sexual excitement in certain animal, விலங்குகளில் ஏற்படும் முறைநிகழ் பாலுணர்வு வேட்கை.
ruth *(n.)* mercy, இரக்கம், கருணை.
rye *(n.)* a variety of cereal used as food and fodder, கம்பு.
ryot *(n.)* a peasant, உழவன்.

S

sab'bath *(n.)* the day set apart to be observed as a day of rest, வார ஓய்வுத் திருநாள்; **sabbati'cal** *(adj.)*.
sable *(n.)* a flesh-eating animal of the weasel family, கீரியின விலங்கு.
sabre *(n.)* a cavalry sword, பட்டாக் கத்தி.
sabotage *(n.)* intentional destruction of machinery, railways, bridges etc., நாசவேலை, அழிவுவேலை.
sac *(n.)* a bag, a pouch like part of an animal or plant, பை, பைபோன்ற உறுப்பு.
saccharin *(n.)* a very sweet crystalline substance, தார்ச் சர்க்கரை; **saccharine** *(adj.)*.
sachet *(n.)* a small bag filled with powder, liquid etc., பை.
sack[1] *(n.)* a large size bag made of coarse material, சாக்குப்பை; also *(v.t.)*.
sack[2] *(n.)* a kind of upper garment for women, பெண்கள் அணியும் தளர்த்தியான மேலங்கி.
sack[3] *(n.)* a kind of wine, ஒரு வகை மது.
sackbut *(n.)* a kind of wind instrument, ஒருவகைக் காற்றிசைக் கருவி.
sack cloth *(n.)* coarse cloth worn as a symbol of mourning, துயர ஆடை.

sacrament *(n.)* something regarded as having a sacred character, சமய நெறியில் புனிதமாகக் கருதப் படுவது; **sacramental** *(adj.)*.
sacred *(adj.)* pertaining to religion holy, சமயச் சார்புடைய, புனிதமான.
sacrifice *(n.)* the offering of anything to a deity as homage, something given in order to benefit another, பலியிடுதல், தியாகம்; also *(v.t. & i.)*.
sacrilege *(n.)* violation of sacred things, the disrespectful treatments of persons, places, ideas etc., மக்கள், இடம், கருத்துகள் ஆகியவற்றின் புனிதத்தன்மையை மதியாது செய்யப்பட்ட அவச்செயல், புனிதத் தன்மையை அழித்தல்.
sacrist *(n.)* an official having the responsibility of the sacred things of the church, கோயில், மடத்தின் பொருள்களின் பொறுப்பாளர்.
sacrosancht *(adj.)* sacred, புனித மான.
sad *(adj.)* sorrow, dejected, dull, வருந்தும், மன ஏமாற்றமுடைய, சோர் வுடைய; **sad'den** *(v.t.)*.
sad'dle *(n.)* a padded leather seat for a rider on a horse, bicycle etc., சேணம், மிதிவண்டி இருக்கை; also *(v.t.)*.
sa'dism *(n.)* the getting of pleasure from mistreating or hurting others, பிறரைக் கொடுமைப்படுத்தி மகிழும் இயல்பு; **sad'ist** *(n.)*.
safa'ri *(n.)* a journey of hunting expedition, வேட்டையாடுதல்.
safe *(adj.)* free from danger, unharmed, protected, reliable, இடரற்ற, துன்ப மற்ற, பாதுகாப்புடைய, நம்பத் தகுந்த.
safe'ty *(n.)* the quality or condition of being safe, பாதுகாப்பு, இடர்க்காப்பு.
saffron *(n.)* a low ornamental plant, the dried orange- coloured stigmas of the flowers of this plant used as a medicine, குங்குமப்பூ.
sag *(v.i. & t.)* to bend in the middle from weight or pressure, to hang down loosely, to decline in price, தொங்கு, தொய்வு, விலைவீழ்ச்சி.
sagacious *(adj.)* wise, shrewd, அறிவுக் கூர்மையுடைய; **sagacity** *(n.)*.
sage[1] *(n.)* a wise holy man, துறவி, முனிவர், ஞானி; also *(adj.)*.
sage[2] *(n.)* a herb whose leaves are used for flavouring, ஒருவகைப் பூண்டுச் செடி.
sagit'tarius *(n.)* the 9th sign of the zodiac, தனுர் இராசி.
sa'go *(n.)* starchy cereal obtained from some palm trees, சவ்வரிசி.
said (see say).
sala'cious *(adj.)* lustful, obscene, சிற்றின்ப வெறி கொண்ட, இழிசுவையுள்ள.
sail *(n.)* a sheet of canvas to catch the wind the movement of the boat, a sailing vessel, a journey by a ship, பாய்மரத்துணி, கப்பல், கப்பல் பயணம்; also *(v.t. & i.)*.
sail'or *(n.)* one who navigates, கப்ப லோட்டி.
saint *(n.)* a holy person, துறவி, முனிவர்; **saint'ly** *(adj.)*.
sake *(n.)* cause, purpose, காரணம், நோக்கம்.
salacious *(adj.)* lustful, obscene, சிற்றின்ப வெறி கொண்ட இழி சுவையுள்ள.
sal'ad *(n.)* sliced raw vegetables etc., cut up and eaten raw, பச்சைக் காய்க் கூட்டு.
salaman'der *(n.)* a small lizard - like animal, பல்லி போன்ற விலங்கு.
sal'ary *(n.)* a regular monthly payment for work done, ஊதியம்.
sale *(n.)* the act of giving something to someone in exchange for money, விற்பனை; **sale'able** *(adj.)*.
sa'lient *(adj.)* outstanding, easily noticed, சிறப்பான, எளிதில் விளங் கும்.
sal'ine *(adj.)* containing salt, உப்புக் கலந்த.
sali'va *(n.)* the fluid that forms in the mouth to help digestion, உமிழ் நீர்.
sal'low *(n.)* a pale yellow complexion indicating ill-health, சோகை நிறம்.

sal'ly *(n.)* a quick funny remark, a sudden act of rushing out to make an attack, குறும்பாகப் பேசு, சாதுரிய மாகப் பேசு, பாய்ந்து போதல்.
sal'mon *(n.)* a large fish with orange pink colour flesh, ஒரு நன்னீர் மீன்.
salon *(n.)* a reception hall, வரவேற் புக்கூடம்.
saloon *(n.)* a place for specific purpose, a place for hair-dressing, குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கப் படும் அறை, சிகை அழகுக்கூடம்.
salt *(n.)* white substance that gives taste to food, உப்பு; **saltish, salty** *(adjs.)*.
saltpan *(n.)* a dried up salt lake, உப்புப் பாத்தி, உப்பளம்.
salt pit *(n.)* a pit yielding salt, உப்புக்குழி.
salu'brious *(adj.)* likely to make people healthy, உடல் நலம் ஏற்படுத் தும்; **salu'brity** *(n.)*.
sal'utary *(adj.)* producing health of body or mind, உடல் நலம் மற்றும் மன நலம் ஏற்படுத்தும்.
salute *(v.t. & i.)* raise the hand or bow the head as a gesture of respect, வணக்கம் தெரிவி, தலைவணங்கு; **saluta'tion** *(n.)*; **sal'utory** *(adj.)*.
sal'vage *(n.)* the saving of something from loss, danger etc., anything so saved, இடையூறிலிருந்து காப்பாற் றுதல், வெகுமதி.
salv'ation *(n.)* the act of saving, rescue, காப்பாற்றுதல், முக்தி யளித்தல்.
salve[1] *(v.t.)* to save from damage, danger etc., அழிவிலிருந்து காப் பாற்று, இன்னலைப் போக்கு.
salve[2] *(n.)* a healing ointment, குணப் படுத்தும் களிம்பு.
sal'ver *(n.)* a small silver tray, சிறு வெள்ளித் தட்டு.
sal'vo *(n.)* a great burst of firearms as a salute, a sound of applause, பீரங்கி வரவேற்பு, கைதட்டல்.
same *(pron.)* alike in every respect, not different, ஒரேமாதிரியான, அதுவே யான; also *(adj.)*.
samite *(n.)* a heavy silk fabric, கன மான பட்டாடை.
sampan *(n.)* a flat bottomed boat, அகன்ற அடிப்பாகம் கொண்ட படகு.
samp'le *(n.)* a specimen, a small part of something that shows what the rest is like, மாதிரி.
sanatorium *(n.)* a hospital for convalescent people, a hospital for those suffering from disease of the lungs, நலிவு நீக்கும் மருத்துவ மனை, நுரையீரல் நோய்க்கான மருத்துவ மனை.
sanc'tion *(n.)* permission given by authority to do something, அனுமதி, இசைவாணை; also *(v.t.)*.
san'ctity *(n.)* sacredness, புனிதத் தன்மை, அருள் தன்மை; **sanctify** *(v.t.)*.
san'ctuary *(n.)* a holy place, an asylum, கோயில், புனித இடம், சரணா லயம், புகலிடம்.
sanctum *(n.)* a sacred place, புனித இடம்.
sand *(n.)* tiny grains of crushed rocks, மணல்; **sand'y** *(adj.)*.
san'dal *(n.)* a loose slipper with straps to fold it on, செருப்பு.
san'dal wood *(n.)* a pleasant smelling wood, சந்தனக்கட்டை, சந்தனம்.
sand'wich *(n.)* two slices of bread with any kind of food between, இடைச் செருகு ரொட்டி.
sane *(adj.)* of sound mind, நல் லறிவுள்ள, அறிவார்ந்த
sa'nity *(n.)*.
sang (see sing).
sanitary *(adj.)* concerning arrangements that encourage good health and prevent disease, உடல் நலத்திற்கு உகந்த, துப்புரவுள்ள.
sanita'tion *(n.)* the arrangement for the protection of health by removing the human waste from toilets, உடல் நலக்காப்பு, துப்புரவு.
sanity (see sane).
sank (see sink).
sap[1] *(n.)* the liquid in trees, plants etc., anything vital to life, சாறு.

வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்று; **sap'py** *(adj.)*.

sap² *(v.t. & i.)* to drain sap, weaken or destroy, சாறு வடி, உரமற்றதாக்கு.

sap³ *(n.)* trench or tunnel, சுரங்கம், அகழி.

sap'ient *(adj.)* wise, sagacious, அறிவுள்ள.

sap'ling *(n.)* a young tree, இளம் மரக்கன்று.

sapp'hire *(n.)* a bright blue gem, நீலக்கல்.

sarcasm *(n.)* a wounding remark said in scorn, குத்திச்சொல்லுதல், பழித்தல், **sarcas'tic** *(adj.)*.

sarcop'hagus *(n.)* a sculptured stone coffin, செதுக்குவேலை செய்யப்பட்ட கல் சவப்பெட்டி.

sar'dine¹ *(n.)* a small edible fish tinned in oil, எண்ணெயில் பதப்படுத்தப் பட்ட ஒருவகை மீன்.

sardine² *(n.)* a precious gem, மணிக் கல் வகை.

sardonic *(adj.)* scornful, ironical, வெறுப்புடைய, ஏளனமான.

sardonyx *(n.)* a precious gem, கோமேத வகைக் கல்.

sarsaparil'la *(n.)* a tropical medicinal plant, its root, நன்னாரிச் செடி, நன்னாரி வேர்.

sartor'ial *(adj.)* pertaining to a tailor or tailoring, தையல்காரர் தொடர்பான, தையற்கலை சார்ந்த.

sash¹ *(n.)* a band worn as an ornament of cloth worn round the waist or over one shoulder, இடுப்பைச் சுற்றியோ, தோளில் குறுக்காகவோ அணியப் படும் அலங்காரப் பட்டை.

sash² *(n.)* a window that opens up and down, மேலும் கீழுமாகத் திறந்து மூடும் பலகணி.

sat (see sit).

satch'el *(n.)* a small hand bag of leather or canvas, கைப்பை, சிறுபை.

sat'ellite *(n.)* a heavenly body that revolves around a planet, துணைக் கோள்; செயற்கை நிலா; also *(adj.)*.

sa'tiate *(v.t.)* make fully satisfied especially with more food etc., than is necessary, தேவைக்கதிகமாகக் கொடுத்துத் திகட்டச் செய்; also *(adj.)*; **satiable** *(adj.)*; **satiety** *(n.)*.

satin *(n.)* a thin silk with a shiny surface, பளபளப்பான பட்டுத் துணி வகை.

satire *(n.)* a piece of speech, writing etc., that makes someone look foolish because of his faults, foolish actions etc., கிண்டல், நையாண்டி; **satiri'cal** *(adj.)*.

satisfac'tion *(n.)* a feeling of pleasure or content, மனநிறைவு; **satisfy** *(v.t. & i.)*.

satisfac'tory *(adj.)* fulfilling all needs, expectations, wishes etc., தேவை களை அல்லது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும், மனநிறைவளிக்கும்.

sat'urate *(v.t.)* to soak with moisture, make a thing absorb as much as possible, நீர்மத்தில் முழுவதும் தோயச் செய், தெவிட்டச் செய்; **satura'tion** *(n.)*.

saturnine *(adj.)* gloomy, angry, மனச் சோர்வுடைய, எரிச்சலுடைய.

saturn *(n.)* a planet, சனிக்கோள்.

satyr *(n.)* a god of woods with human head and the body of a goat, மனிதத் தலையும், ஆட்டுடலும் கொண்ட வனதேவதை.

sauce¹ *(n.)* a liquid seasoning added to food to give good flavour, குழம்பு.

sauce² *(n.)* impudency, இறுமாப்பு; **saucy** *(adj.)*.

saucepan *(n.)* a pan with a long handle, நீண்ட கைப்பிடி உடைய பாத்திரம்.

saucer *(n.)* a small shallow plate for placing under a cup, குழியான சிறு தட்டு, தேநீர் ஏந்து தட்டு.

saunter *(v.i.)* to wander about idly or in a leisurely way, சுற்றித் திரி; also *(n.)*.

sau'sage *(n.)* chopped meat seasoned and stuffed into a case, கொத்துக்கறி.

sav'age *(adj.)* uncivilized, rude, நாகரிகமற்ற, பண்பாடற்ற, கொடிய; also *(n.)*.

savan'na *(n.)* a grassy plain with scattered trees, அதிக மரங்களற்ற புல் வெளி.

savant *(n.)* a man of great learning, கற்றறிவாளர், புலவன்.

save *(v.t. & i.)* to rescue from danger, to protect, to keep for future use, காப் பாற்று, பாதுகாப்புக் கொடு, சேமித்து வை.

sav'ing *(n.pl.)* the act of keeping something from danger, any reduction in expense, time etc., பாதுகாத்தல், சேமிப்பு.

saviour *(n.)* one who saves from sin, காப்பவர்.

sa'vour *(n.)* taste or flavour, இன் சுவை, நறுமணம்; also *(v.t. & i.)*; **sa'voury** *(adj.)*.

saw[1] (see - see).

saw[2] *(n.)* a cutting tool, வாள்; also *(v.t. & i.)*.

saw'yer *(n.)* one who saws, மரமறுப் பவர்.

saxborn *(n.)* a brass musical instrument, பித்தளையிலான இசைக் கருவி.

saxophone *(n.)* a muscial wind instrument with key, சுருதிக் கட்டைகள் உடைய காற்றிசைக் கருவி.

say *(v.t. & i.)* to speak, state, பேசு, சொல், கூறு; **said** *(p.t. & p.p.)*.

say'ing *(n.)* a proverb, adage common remark, பழமொழி.

scab *(n.)* a dry rough crust formed over a sore or wound, காயும் புண்ணின் மேல் படரும் பொருக்கு.

scab'bard *(n.)* a case in which sword is placed, வாளுறை, கத்தியுறை.

sca'bies *(n.)* an itchy skin disease, சொறி சிரங்கு; **scabious** *(adj.)*.

scaf'fold *(n.)* a platform on which criminals are executed, தூக்கு மேடை.

scaff'olding *(n.)* a frame work of poles and planks used at the building site, சாரம்.

scald[1] *(v.t.)* to hurt with hot liquid or vapour, சுடுநீரால் வெந்துபோகவை; also *(n.)*.

scald[2] *(n.)* scurf on the head, பொடுகு; also *(adj.)*.

scale[1] *(n.)* an instrument for measuring length or weight, one of the two pans of a balance, proportion between the map and the real space represented by it, a graph or musical notes going up or down in order, அளவு கோல், தராசு, தராசுத் தட்டு, அளவு வீதம், பொருத்த அளவை, சுருதி வரிசை; also *(v.t. & i.)*.

scale[2] *(n.)* a thin layer, a thin plate forming the outer covering of fish or reptile; also (v.t), மீன், முதலை போன்றவற்றின் செதிள்.

scalene *(adj.)* having three unequal sides, சமமிலா மூன்று பக்கங்களைக் கொண்ட.

scal'lop *(n.)* an oyster like shell - fish, நத்தைவகை, கிண்ணம்.

scalp *(n.)* layer of the skull with skin and hair, மண்டையோட்டுப் பகுதி.

scal'pel *(n.)* a surgical knife, அறுவை மருத்துவக் கருவி.

scamp *(n.)* a worthless person, a rascal, பயனற்றவன், போக்கிரி; also *(v.t.)*.

scamp'er *(v.t.)* to run off in fear, run away quickly, அச்சத்தால் ஓட்டமாக ஓடு, விரைவாக ஓடு; also *(n.)*.

scan *(v.t.)* to look at and examine carefully, நுண்ணாய்வு செய்.

scan'dal *(n.)* something considered disgraceful, unkind gossip, one who breaks the ordinary rules of good conduct, இகழ்ச்சி, அவதூறு, வதந்தி, ஒழுங்கமைதிக்கு ஊறு விளைவிப்பவன்; **scan'dalize** *(v.t.)*.

scant, scant'y *(adj.)* insufficient, too little, பற்றாக்குறையான, தேவைக் குக் குறைவான, மிகக் குறைவான.

scape'goat *(n.)* one who bears the sins and misdeeds of others, பலியாடாக இருப்பவர்.

scar[1] *(n.)* a mark left on the skin by wound, sore etc., வடு, தழும்பு; also *(v.t.)*.

scar[2] *(n.)* a submerged rock in the sea, a bare rocky place on the mountain, கடலடிப் பாறை, செங்குத்துப்பாறை.

scar'ab *(n.)* a dung beetle, வண்டு.

scarce *(adj.)* scanty, rare, பற்றாக்குறை யான, அரிய; **scarc'ely** *(adj.)*; **scarcity** *(n.)*.

scare *(v.i.)* frighten, alarm, அச்சுறுத்து, வெருட்டி ஓட்டு.

scare'crow *(n.)* a figure made of old clothes, hay etc., set up on poles in the fields to frighten away birds, சோளக் கொல்லைப் பொம்மை.

scarf *(n.)* a strip of cloth worn round the neck, neckerchief, கழுத்துத் துண்டு. also *(v.t.)*

scar'ify *(v.t.)* to scratch and cut the skin, தோலைச் சுரண்டு, தோலை அறு; **scarifica'tion** *(n.)*.

scarlat'ina *(n.)* a dangerous and contagious fever, ஒரு வகை நச்சுக் காய்ச்சல்.

scarle't *(adj.)* of a deep red colour; also *(n.)*.

scarp *(n.)* inner wall, the interior slope of a ditch, உட்சுவர், அகழியின் உட் சரிவு.

scathe *(n.)* injury, harm, புண், துயர்; **scathing** *(adj.)*.

scathing *(adj.)* damaging, hurtful, இழி வான, புண்படுத்தும்.

scat'ter *(v.t. & i.)* to throw loosely in different directions, சிதறு, தூவு, தெளி, பரப்பு; **scattering** *(n.)*.

scav'enger *(n.)* one who removes dirt and waste matter, துப்புரவுத் தொழி லாளி.

scenar'io *(n.)* an outline of the plot of a play or an opera, an outline of any planned series of events, நாடகக் காட்சியமைப்பு, நிகழ்ச்சி நிரல், திட்ட அமைப்பு.

scene *(n.)* a stage, a view, a place where an event has happened, நிகழ்ச்சி, கட்டம், காட்சி, நிகழிடம், அரங்கம்.

scen'ery *(n.)* a landscape, a painted view, இயற்கைக் காட்சி, சித்திரக் காட்சி.

scent *(n.)* a perfume, sense of smell, நறுமணப் பொருள், முகர் உணர்வு; also *(v.t. & i.)*.

sce'ptic *(adj.)* one who doubts the truth of religious doctrines, நாத்திகன், ஐயுறவாதி.

scep'tre *(n.)* an ornamental staff which is the sign of royal or imperial authority, செங்கோல், கட்டியக் கோல்.

sche'dule *(n.)* a detailed statement of activities, events etc., a programme, a time table, பணிக்குறிப்பு அட்ட வணை, செயல் குறிப்பு அட்ட வணை, நிகழ்ச்சிக் குறிப்பு, நிகழ்ச்சி நிரல்.

scheme *(n.)* a plan, a way of doing something, திட்டம், செயலாக்கத் திட் டம்; also *(v.t. & i.)*.

schism *(n.)* the action of separation from the main group, பிரிவினை.

schist *(n.)* a slaty rock, தகடுப்பாறை.

schol'ar *(n.)* a very learned and knowledgeable man, a student who has been awarded a scholarship, அறிஞன், உதவித்தொகையுடன் படிக்கும் மாணவன்.

schol'arship *(n.)* knowledge, learning, money allowance given to a clever student to carry on further studies, புலமை, அறிவு, கல்விக்கான உதவித் தொகை, **scholas'tic** *(adj.)*.

school *(n.)* a place of teaching and learning, instruction or learning, a group of persons having the same ideas, thoughts etc., பள்ளி படிப்பு, கல்வி, கருத்துப்பாங்கு; also *(v.t.)*.

schoon'er *(n.)* a vessel with two masts, இரட்டைப் பாய்மரக் கப்பல்.

sciat'ica *(n.)* pain in the upper part of the leg, இடுப்புக் சில்வாதம்.

science *(n.)* systematic knowledge gained by observation and experiment, அறிவியல்; **scientific** *(adj.)*.

scientist *(n.)* one versed in science, விஞ்ஞானி, அறிவியலார்.

scimitar *(n.)* single edged curved sword, கொடுவாள்.

scintilating *(adj.)* sparkling, ஒளி வீசும், சுடர்விடும்; **scintillation** *(n.)*.

sci'on *(n.)* a sprout, a descendant, தளிர், வழித்தோன்றல்.

scis'sors *(n.)* a cutting tool with two blades joined together in the form of X, கத்தரிக்கோல்.

scis'sure *(n.)* a fissure, sutire, பிளவு, கீறல்.

scoff *(v.t. & i.)* to make fun off, ridicule, கேலிசெய், இகழ், ஏளனம் செய்.

scold *(v.t. & i.)* to blame loudly and angrily, கடிந்து கொள், அதட்டு; also *(n.)*; **scolding** *(adj.)*.

sconce[1] *(n.)* head- piece, உச்சந்தலை, மண்டையோட்டுப் பகுதி.

sconce[2] *(n.)* a bracket attached to a wall for holding candles, விளக்குக் கூண்டு.

scone *(n.)* a kind of small flat cake, ஒரு வகை அப்பம்.

scoop[1] *(n.)* an exciting piece of news, புதுமையான செய்தி.

scoop[2] *(n.)* a ladle, கரண்டி, அகப்பை; also *(v.t.)*.

scope *(n.)* opportunity, a range of view, field of activity, வாய்ப்பு, காட்சிப் பரப்பு, செயல் இலக்கு.

scorch[1] *(v.t. & i.)* roast, affect with sensation of burning, வாட்டு, கொப் பளிக்க வை; also *(n.)*.

scorch[2] *(n.)* act of driving a vehicle at a high speed, வண்டியை மிகுந்த வேகத்தில் ஓட்டிச் செல்.

score *(n.)* a mark for keeping count, a record of points, கணிப்புக் கோடு, மதிப்பெண் பதிவு செய்தல்; also *(v.t. & i.)*.

scorn *(v.t.)* to look down on, to refuse to consider, இழிவாக நினை, மறுப் புத் தெரிவி; **scorn'ful** *(adj.)*.

scor'pio *(n.)* the 8th sign of the zodiac, விருச்சிகு(தேள்) இராசி.

scor'pion *(n.)* a reptile with a poisonous sting, தேள்.

scot *(n.)* a native of Scotland, ஸ்காட் லாந்து நாட்டவர்.

scotch *(v.t.)* to wound without killing, உயிர்ச் சேதம் விளையாமல் காய முண்டாக்கு; also *(n.)*.

scot'-free *(adj.)* unpunished, free from danger, தண்டனையில்லாத, இடை யூறற்ற, ஆபத்தில்லாத.

scoun'drel *(n.)* a very wicked person, rascal, கயவன், முரடன்.

scour[1] *(v.t. & i.)* cleanse or brighten by rubbing hard, நன்றாகத் தேய்த்துத் தூய்மைப்படுத்து, பளபளப்பாக்கு.

scour[2] *(v.t. & i.)* search thoroughly, துருவித் துருவித் தேடு; also *(n.)*.

scourge *(n.)* a cause of great disaster, a whip, அழிவிற்குக் காரணம், சாட் டை.

scout[1] *(n.)* one sent out to spy the enemy member of an organization formed to develop alertness and strong character, வேவு பார்ப்பவர், ஒற்றர், சாரணர்; aslo *(v.t.)*.

scout[2] *(v.t. & i.)* reject with scorn, வெறுத்தொதுக்கு.

scow *(n.)* a flat-bottomed boat, தட்டைப் படகு.

scowl *(v.t. & i.)* to draw the brows together in displeasure or anger, சினத்தால் முகம் சுளி, புருவம் சுருக்கு; also *(n.)*.

scrab'ble *(v.t. & i.)* to make marks on with claws, நகத்தால் கோடுகள் போடு, கிறுக்கி எழுது.

scrag *(n.)* a thin and lean person, மிக ஒல்லியானவர்; **scraggy** *(adj.)*.

scram *(v.t.)* to go away from one's way, ஒருவர் வழியில் குறுக்கிடாமல் விலகிச் செல்.

scramble *(v.t. & i.)* to struggle with others to seize something, to crawl

quickly using hands and feet, வலுக் கட்டாயமாகப் பிடுங்கு, பற்றிப் பிடித்து ஏறு, முட்டிபோட்டு ஏறு.
scrap[1] *(n.)* a fragment, the left-over of something, any interesting picture, news, etc., cut from book, news paper etc., ஒடிந்த துண்டு, துணுக்கு, வெட்டியெடுக்கப்பட்ட துணுக்கு.
scrap[2] *(n.)* a short fight, சின்னச் சண்டை.
scrape *(v.t. & i.)* to rub hard, நன்றாகச் சுரண்டி எடு.
scratch[1] *(v.t. & i.)* to make by rubbing hard, to rub with nails or something pointed, பிறாண்டு, கீறு; also *(n.)*.
scratch[2] *(v.t. & i.)* to withdraw from a match or race, போட்டி அல்லது பந்தயத்திலிருந்து விலகிக் கொள்; **scratch'y** *(adj.)*.
scrawl *(v.t.)* to write in an awkward way, கிறுக்கி எழுது; also *(n.)*.
scrawny *(adj.)* thin looking, ஒல்லியான.
scream *(v.t. & i.)* utter a loud piercing cry, வீறிட்டு அலறு; also *(n.)*.
scree *(n.)* heap of stone, loose stone lying on a rocky slope, கற்குவியல், மலையடிவாரப் பாறைச்சரிவு.
screech *(v.i. & t.)* to make a shrill cry, கீச்சொலி எழுப்பு; also *(n.)*.
screed *(n.)* a long speech, report, letter etc., சலிப்பூட்டும் பேச்சு, நீண்ட உரை, நீண்ட அறிக்கை, நீண்ட கடிதம்.
screen *(n.)* a movable frame for partition, anything to prevent interference, a sheet like object or surface on which films, slides etc., are projected, தட்டி மறைப்பு, திரைச் சீலை, திரை, காட்சித் திரை; also *(v.t.)*.
screw *(n.)* a spiral nail, an action of turning or twisting a screw, திருகாணி, திருகுதல்; also *(v.t. & i.)*.
scrib'ble *(v.t. & i.)* to write quickly and carelessly, கிறுக்கி எழுது, also *(n.)*.
scribe *(n.)* a copyist, படியெடுப்பவர்; also *(v.t.)*.
scrim'mage *(n.)* a disorderly struggle, பூசல்.
scrimp *(v.t. & i.)* to supply less than need, தேவைக்கும் குறைவாகக் கொடு.
scrip[1] *(n.)* a share certificate, பங்குச் சான்றிதழ்.
scrip[2] *(n.)* a traveller's bag, பயணப் பை.
script *(n.)* a handwriting, manuscript of a play, original document, கையெழுத்துப் படிவம், மூல ஆவணம்.
scrip'ture *(n.)* the sacred writings of a religion, திருமறை நூல்.
scrofula *(n.)* a disease causing swelling of certain glands, கண்டமாலை நோய்.
scroll *(n.)* a roll of paper or parchment with writing on it, காகிதச் சுருள், சுருட்டோலை; also *(v.t. & i.)*.
scro'unge *(v.t. & i.)* to look around for taking something without permission, திருட்டு நோக்குடன் சுற்றுமுற்றும் பார்.
scrub[1] *(v.t. & i.)* rub hard against, அழுத்தித் தேய்.
scrub[2] *(n.)* low bushes, புதர்க்காடு, குறுங்காடு.
scruff *(n.)* the back of the neck, பிடரி.
scruple *(n.)* conscientious hesitation, hesitation of doubt what one ought to do, மனச்சாட்சியின் உறுத்தல், மனச்சான்றின் தடுப்புணர்வு; also *(v.t. & i.)*; **scrupulous** *(adj.)*.
scru'pulous *(adj.)* honest, accurate, demanding precision, நேர்மையான, துல்லியமான, தவறுதலற்ற, வழுவாத.
scru'tiny *(n.)* careful and close investigation, நுண்ணாய்வு, கூர்ந்து ஆராய்தல்; **scru'tinize** *(v.t.)*.
scud *(v.t.)* to move lightly and swiftly, காற்றாக விரைந்து செல், விரைந்தோடு.
scuff *(v.t. & i.)* to scrape the floor with the feet, walking with dragging feet, காலைத் தேய்த்துத் தேய்த்து நட, இழுத்து இழுத்து நட.
scuf'fle *(n.)* a confused hand fight, கைகலப்பு, கலவரம்; also *(v.t.)*.

scull *(n.)* one of a pair of oars, சிறு துடுப்பு.
scull'ery *(n.)* a place where utensils are kept and cleaned, புறக்கடை, அடுக்களையில் பாத்திரம் கழுவும் புறப் பகுதி.
scul'lion *(n.)* an assistant to the head cook, தலைமைச் சமையல்காரரின் உதவியாளர்.
sculp'tor *(n.)* an artist who practices sculpture, சிற்பி.
sculp'ture *(n.)* the art of modelling or carving figures in soilds like stone, wood etc., சிற்பம்.
scum *(n.)* impure foam or froth that forms on the surface of a liquid, நீர்மங்களில் உள்ள கசடு, அழுக்கு நுரை.
scurf *(n.)* dry flake of dead skin found among the hairs of head, பொடுகு.
scurril'ity *(n.)* an abusive quality, வெறுக்கத்தக்க பண்பு.
scur'rilous *(adj.)* using violent words of abuse, கடுமையான சொற்களால் கீழ்த்தரமாகச் சுட்டும்.
scurry *(v.t.)* to hurry along, விரைந் தோடு.
scur'vy *(n.)* a skin disease caused by lack of nutritious food, ஊட்டச்சத்துக் குறைவினால் ஏற்படும் சொறி; also *(adj.)*.
scut'tle[1] *(v.t.)* to run hurriedly with hasty steps, விரைவாக ஓடு, காற் றாகப் பற.
scut'tle[2] *(n.)* a box for keeping coal, கரிப்பெட்டி.
scythe *(n.)* a grass cutting tool, புல் லரிவாள்.
sea *(n.)* a stretch of salt water covering most of the earth's surface, கடல்.
seaboard *(n.)* the coastal area, கடற் கரை.
sea coast *(n.)* the land bordering the sea, கடற்கரை.
seadrome *(n.)* an aerodrome floating on the sea surface for emergency landing of planes, கடலில் மிதக்கும் வானூர்தித் தளம்.
sea'farer *(n.)* a sailor, மாலுமி.
sea-faring *(n.)* travelling by the sea, கடற்பயணம் செய்கிற.
seal[1] *(n.)* an aquatic animal valued for its skin, கடல் நாய், நீர் நாய்.
seal[2] *(n.)* an engraved stamp, முத்திரை; also *(v.t.)*.
seam *(n.)* a line formed by the sewing together of two pieces of cloth, இணைப்புத் தையல்; also *(v.t.)*.
seance *(n.)* the meeting of members of a society who try to obtain message from the sprits of dead people, ஆவி யுலகத்தோடு தொடர்பு கொள்ளும் கூட்டம்.
sea'port *(n.)* a town with a harbour, துறைமுகப் பட்டினம்.
sear *(v.t.)* to wither, to burn severely, வாடச்செய், வாட்டு, வதக்கு; also *(adj.)*.
search *(v.t. & i.)* to seek carefully, do examine thoroughly, நன்றாகத் தேடு, ஆராய்ந்து பார்.
sea'son[1] *(n.)* one of the main divisions of the year with reference to the weather, பருவகாலம்.
season[2] *(v.t. & i.)* preserve, to improve its flavour, கெடாமல் பதப்படுத்து, சுவையூட்டு; **sea'soning** *(n.)*.
seat *(n.)* something for sitting on, இருக்கை; also *(v.t. & i.)*.
seba'ceous *(adj.)* fatty, கொழுத்த, பருத்த,
secede *(v.i.)* to withdraw formally from a group, society etc., குழுவி லிருந்து, கட்சியிலிருந்து, சமய அமைப்பிலிருந்து விலகிக் கொள்; **secess'ion** *(n.)*.
seclude *(v.t.)* to keep apart, isolate, ஒதுக்கி வை, விலக்கு; **seclu'sion** *(n.)*.
sec'ond[1] *(adj.)* next after first, lesser in importance, quality etc., இரண் டாவதான, தாழ்நிலையிலுள்ள.
second[2] *(n.)* the sixtieth part of a minute, வினாடி, நொடி.
second[3] *(v.t.)* to support, ஆதரி, வழி மொழி; also *(n.)*.

sec'ondary *(adj.)* second in position, of less importance, இரண்டாம் நிலையிலுள்ள, இடைநிலை.
second-hand *(n.)* the needle in the clock that shows seconds, வினாடி முள்.
se'cret *(adj.)* done purposely without the knowledge of others, ஒளிமறைமான; **se'crecy** *(n.)*.
secretariat *(n.)* office of the staff of the government secretaries, அரசுத் தலைமைச் செயலகம்.
secretary *(n.)* a chief departmental officer, one employed to write letters, keep records and make business arrangements for another person, அரசுத் துறைச் செயலாளர், உதவியாளர்.
secrete[1] *(v.i.)* to give forth juice or liquid, சுரக்க வை; **secre'tion** *(n.)*.
secrete[2] *(v.i.)* to hide, ஒளித்து வை; **secretise** *(adj.)*.
sect *(n.)* a group of people having certain views, தனிப்பட்ட குழு.
sec'tion *(n.)* a part or division, representation of something when cut, பகுதி, பிரிவு, வெட்டுப்பகுதி.
sec'tor *(n.)* part of a circle, branch of an industry, வட்டக்கோணப் பகுதி, தொழில்துறை.
sec'ular *(adj.)* worldly, not spiritual or religious, happening once in hundred years, உலகம் சார்ந்த, சமயச்சார்பற்ற, நூறாண்டுகளுக்கு ஒரு முறை நிகழும்.
secure[1] *(adj.)* free from danger, loss etc., firm, பாதுகாப்பான, உறுதியான; also *(v.t.)*.
secure[2] *(v.t.)* to obtain or get, கிடைக்கப் பெறு.
sec'urity *(n.)* the state of being safe, something valuable as a guarantee of repayment, பாதுகாப்பு, பிணையம்.
sedan *(n.)* an enclosed seat for one person carried on poles by two bearers, சிவிகை, தூக்கு நாற்காலி, மூடு பல்லக்கு.
sedate *(adj.)* calm, sober, அடக்கமான, உணர்ச்சியடங்கிய.
seda'tion *(n.)* calmness, the quietening of mental excitements, அமைதி, அமைதிப்படுத்தல்; **sedative** *(adj.)*.
sed'entary *(adj.)* requiring much sitting and little physical exercise, உட்கார்ந்திருக்கும், உடல் உழைப்பற்ற.
sedge *(n.)* a coarse grass, கோரைப்புல்.
sediment *(n.)* the dregs that settle at the bottom of the liquid, வண்டல், கசடு; **sedimentary** *(adj.)*.
sedi'tion *(n.)* agitation against government, a rebellion against the authorities, அரசு எதிர்ப்புக் கிளர்ச்சி, கலகம்; **sedi'tious** *(adj.)*.
seduce *(v.t.)* persuade somebody to commit sin, to succeed in tempting a woman to abandon her chastity, பாவம் செய்யத் தூண்டு, கற்பிழக்கச் செய்.
sed'ulous *(adj.)* trying hard, விடா முயற்சியுடைய.
see *(v.i. & t.)* to perceive with the eye or mind, பார், அறி; **saw** *(p.t.)*; **seen** *(p.p.)*.
seed *(n.)* the reproductive part of a plant, வித்து, விதை; also *(v.i. & t.)*; **seeding** *(adj.)*.
seedling *(n.)* a tender plant just sprung from seed, நாற்று, தளிர்ச்செடி.
seek *(v.t.)* search for, try to obtain, தேடிப் பார், பெற முயற்சிசெய்.
seem *(v.i.)* to appear to be , போலத் தோன்று.
seemly *(adj.)* proper, decent, பொருத்தமான, அழகிய, பண்பாடுடைய.
seen (see 'see').
seepage *(n.)* act of leakage, கசிந்தொழுகுதல்; **seep** *(v.i.)*.
seer *(n.)* a prophet, one who foretells the future, மெய்யறிவாளர்.
sea'saw *(n.)* a long flat piece of wood, metal etc., in which children move up and down, ஏற்ற இறக்க விளையாட்டு; also *(v.i.)*.
seethe *(v.t. & i.)* be boiling hot, to surge, கொதிக்கவை.

seg′ment *(n.)* a section or division of anything, a part of a circle, துண்டு, வட்டப் பகுதி.
seg′regate *(v.t. & i.)* to separate from others, isolate, விலக்கு, தனிமைப் படுத்து; also *(adj.)*; **segrega′tion** *(n.)*.
seis′mic *(adj.)* pertaining to earthquake, நிலநடுக்கம் சார்ந்த.
seize *(v.t. & i.)* to take or catch hold of, கைப்பற்று; **seiz′ure** *(n.)*.
sel′dom *(adv.)* rarely, அபூர்வமாக.
selec′tion *(n.)* the process of choosing, the thing chosen, தேர்ந்தெடுத்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்; **select** *(v.t.)*; **selective** *(adj.)*.
self *(n.)* one's own individuality as distinguished from others , தான்.
self - centred *(adj.)* selfish, தன்னலம் பேணும்.
self-confidence *(n.)* confidence in one's own ability, தன்னம்பிக்கை.
self-control *(n.)* the power of holding one's own emotions, தற் கட்டுப் பாடு.
self-decep′tion *(n.)* act of deceiving oneself, தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளுதல்.
self-denial *(n.)* self-sacrifice, தியாகம் தன் மறுப்பு.
self-evident *(adj.)* clear enough requiring no evidence, தானே விளங்கும், விளக்கம் தேவையற்ற.
self-government *(n.)* democratic government, குடியரசு.
self′ish *(adj.)* self-centred, தன்னலம் மட்டுமே கருதுகிற.
self - made *(adj.)* pertaining to a person who has risen by his own exertions, தன் உழைப்பால் அல்லது முயற்சியால் முன்னேறிய.
self-pity *(n.)* pity for oneself, தன்னிரக்கம்.
self-reli′ance *(n.)* one who believes in one's own powers, தன்னம்பிக்கையுள்ள.
self-respect *(n.)* proper regard of one's status, சுயமரியாதை, சுயகௌரவம், தன்மானம்.
self-sac′rifice *(n.)* the act of giving up one's desires, well being etc., for the sake of others, தியாகம், தன்னலமற்ற விடுப்பு.
self-same *(adj.)* the very same, அதுவேயான.
self-service *(n.)* the practice of serving oneself in a store, cafetaria etc., சுய சேவை தற்பணி.
self-suffi′cient *(adj.)* needing no help from others, தன்னிறைவுடைய; **self-sufficiency** *(n.)*.
self-trust *(n.)* confidence in one's self, தன்னம்பிக்கை.
self-will *(n.)* obstinacy in one's own will, தான்தோன்றித்தனம், முரண்டு.
sell *(v.t. & i.)* give something in exchange for money, விற்பனை செய்.
seller *(n.)* one who sells, விற்பனை செய்பவர்.
semantics *(n.)* branch of linguistics which deals with the change of meaning of words, பொருண்மையியல்.
sem′aphore *(n.)* a device to convey information through signs, கைகாட்டி.
semb′lance *(n.)* likeness, external appearance, ஒத்ததன்மை, புறத்தோற்றம்.
semes′ter *(n.)* half year term in an educational system, பருவமுறை.
sem′icircle *(n.)* a half circle, அரை வட்டம்.
sem′icolon *(n.)* a punctuation mark used in writing, அரைப்புள்ளி (;).
sem′ifinal *(adj.)* relating to the round in a game or contest which preceds the final, அரையிறுதிப் போட்டி.
seminar *(n.)* group of people assembling to discuss on a particular topic, ஆய்வரங்கு, பயிலரங்கு.
seminary *(n.)* a training institute for Roman Catholic priests, உரோமன் கத்தோலிப் பயிற்றகம்.
sem′iprecious *(adj.)* pertaining to gems of lower value than those qualified as precious, இரண்டாம் நிலை மாணிக்கக்கல்.
semolina *(n.)* a flour food made from cereal, நொய்க்கஞ்சி.

senary *(adj.)* pertaining to the number six, ஆறின் தொகுதியான, ஆறு என்ற எண்ணிக்கை சார்ந்த.
senate *(n.)* the upper house of the parliament, an advisory council in a university, மேலவை, பல்கலைக் கழக ஆளவை.
send *(v.t. & i.)* to cause to be carried, to dispatch, to arrange for the going of, அனுப்பிவை, அனுப்பு, அனுப்ப ஏற்பாடு செய்; **sent** *(p.t. & p.p.)*.
senile *(adj.)* of old age, மூப்படைந்த; **senility** *(n.)*.
senior *(adj.)* of the greater age, of higher rank, வயதில் மூத்தவர், முது நிலை; also *(n.)*; **seniority** *(n.)*.
senna *(n.)* a drug consisting of the dried leaves of a plant used as laxative, மலமிளக்கி மருந்து.
sen'sate *(adj.)* felt by the senses, புல னுறுப்புகளால் உணரப்பட்ட.
sens'ation *(n.)* the process of receiving concious sense impressions through body organs, excitement, உணர்வு, உணர்ச்சி, எழுச்சி; **sensational** *(adj.)*.
sense *(n.)* the ability of the brain to receive and react the stimuli, intelligence, புலனுணர்வு, பகுத்தறிவு; **sensible, sensitive** *(adjs.)*.
sensitive *(adj.)* of the senses easily hurt or defended, fluctuating, புல னுணர்வுடைய, எளிதில் புண்படக் கூடிய, அலைபாய்கிற, எளிதில் மாறும் இயல்புடைய.
sent (see send).
sentence *(n.)* a word or group of words stating something, the judgement of a court, வாக்கியம், தீர்ப்பு; also *(v.t.)*.
senten'tious *(adj.)* expressing much in words, fond of using maxims, proverbs etc., பொருட்செறிவுள்ள, சொற்பசுட்டுடைய, பழமொழி களைப் பயன்படுத்திப் பேசுகிற.
sentiment *(n.)* sensibility, a complex feeling of emotions and thought, உளப்பாடு, பற்று; **sentimental** *(adj.)*.
sentinel *(n.)* one who or that which guards a group, காவல் காப்பவர்; also *(v.t.)*.
sentry *(n.)* a guard, watchman, பாது காவலன், காவலாளி.
separate *(v.t. & i.)* to put apart, to discriminate between, segregate, பிரித்து வேறாக்கு, விலக்கு, தனிப் படுத்து; also *(adj.)*; **separation** *(n.)*.
sepia *(adj.)* a dark reddish - brown colour, பழுப்பு நிறம்.
September *(n.)* the name of the ninth month of the English year, செப் டம்பர் மாதம்.
septenary *(adj.)* of the number seven, ஏழு என்ற எண்ணிற்குரிய.
septennial *(adj.)* happening every seven years, continuing seven years, ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும், ஏழு ஆண்டுகள் தொடர்ந் திருக்கும்.
septic *(adj.)* infective, அழுகச் செய் கிற.
septuagenarian *(n.)* a person seventy or between seventy and eighty years of age, எழுபது வயதுடையவர், எழுப திற்கும் எண்பதிற்கும் இடைப்பட்ட வயதுடையவர்.
sepulchre *(adj.)* a grave, tomb, சவக்குழி, கல்லறை.
sequel *(n.)* something that follows, consequence, பின்விளைவு, பலன்.
sequence *(n.)* succession, an arrangement, தொடர் வரிசை, வரிசைமுறை; **sequential** *(adj.)*.
seques'tered *(adj.)* secluded, retired, தனித்த, பணி ஓய்வு பெற்ற.
seragl'io *(n.)* an enclosure for women in the palace, அந்தப்புரம்.
ser'aph *(n.)* a member of the highest of the nine orders of angels with three pairs of wings, தேவதை.
serenade *(n.)* a song sung at night by a lover at his lady's window, காதலி யின் அறையருகே சென்று பாடும் பாடல்.
serene *(adj.)* clear, undisturbed, தெளி வான, அமைதியான.

serf *(n.)* any person who is oppressed or without freedom, அடிமை, சுதந்தரமற்றவன்.
serge *(n.)* a kind of twilled silk, கம்பளித் துணிவகை.
ser'geant *(n.)* an official ranking next below a captain or lieutenant, படைத் தலைவர்.
se'rial *(adj.)* appearing periodically, appearing in a series, தொடர்ந்து வெளியிடப் படுவது, தொடர்ந்து பரப்பப்படுவது.
sericulture *(n.)* the art of breeding silk-worms,பட்டுப்புழு வளர்ப்பு.
se'ries *(n.)* a number of things produced as a related group, தொடர், வரிசை.
se'rious *(adj.)* showing earnestness or deep thought, sincerely important, கருத்தூன்றிய. நேர்மையான, முக்கியமான.
sermon *(n.)* a discourse delivered in public by a clergy man or preacher, சமயச் சொற்பொழிவு.
serpent *(n.)* a large poisonous snake, பெரிய நச்சுப்பாம்பு.
serried *(adj.)* crowded, placed close together, அடர்ந்த. செறிவான, நெருக்கமான.
se'rum *(n.)* any watery animal fluid, ஊனீர், தெளியம்.
servant *(n.)* a person employed to perform household duties, a government employee, வேலைக்காரன், பணியாளர். ஊழியர்.
serve *(v.t. & i.)* to work for, to assist or help, to carry out the duties, to offer food to customers, to be used by , to perform, வேலை செய் ,பணி புரி, உதவு, கடமையாற்று, உணவு பரிமாறு, பயன்படு, நடத்து; **service** *(n.)*.
service[1] (see serve).
service[2] *(n.)* the first hit in tennis தொடக்கப் பந்தடி.
serviette *(n.)* a table napkin, மேசைக் கைக்குட்டை.
servile *(adj.)* pertaining to a slave, submissive, அடிமைத்தனமாய் இருக்கிற, அடிபணிகிற.
servitude *(n.)* mental submission, compulsory service, கீழ்ப்படிதல், அடிமைத்தனம், அடிமைவேலை.
sesame *(n.)* a herbaceous plant whose seeds yield an edible oil, எள்.
session *(n.)* the meeting of a group, a period of activity of any kind, குழுக் கூட்டம், அமர்வு, கூட்டத் தொடர்.

set *(n.)* to cause to sit, to put in some place, to bring into contact, அமர்த்து, ஒழுங்கான அமைப்பில் ஒரு பொருளை வை, தொடர்புப்படுத்து.
setback *(n.)* an interruption in progress, an offset, தடை, இன்னல், பின்னடைவு.
setsquare *(n.)* a three cornered mathematical instrument, கணிதக் கருவி, மூலைமட்ட அளவி.
settee *(n.)* a kind of sofa, நீண்ட சாய் விருக்கை.
settle *(v.t. & i.)* to place in a fixed position, to agree over a matter, to pay a bill, நிலையான இடத்தில் வை, ஒத்திசைவிற்கு வா, கணக்குத் தீர்த்துக் கொடு.
set'tlement *(n.)* the act of settling, colonization, a colony, payment for a bill, a decision, குடியேற்றம், குடியிருப்பு, கணக்குத் தீர்த்தல், முடிவு.
seven *(adj.)* the number next to six, ஏழு என்கிற எண்; also *(n.)*.
sev'enty *(adj.)* seven times ten, எழுபது; also *(n.)*.
sev'er *(v.t. & i.)* to cut apart, to separate, துண்டி, பிரி.
sev'eral *(adj.)* some, more than two, சில, இரண்டிற்கும் மேற்பட்ட.
severe *(adj.)* harsh, strict, extreme, கடுமையான, கண்டிப்பான, மிக அதிகமான; **severity** *(n.)*.
sew *(v.t. & i.)* join together with a needle and thread, தையலிடு.
sew'age *(n.)* refuse or waste matters passing through drains, கழிவுநீர்ச் சாக்கடை; the matter carried of by underground drainage, சாக்கடை நீர், கழிவுநீர்.

sewer' *(n.)* an underground pipe to carry off waste water; சாக்கடை; கழிவு நீர்க்குழாய்
sewer *(n.)* one who or that which sews, தைப்பவர்.
sex *(n.)* the state of being male or female, ஆண்பால், பெண்பால்.
sexagen'arian *(n.)* a person between sixty to sixty nine years old, அறுபதிற்கும் அறுபத்து ஒன்பதிற்கும் இடைப்பட்ட வயதினர்.
sexa'genary *(adj.)* of 60, அறுபதிற்குரிய.
sexa'gesimal *(adj.)* pertaining to the number 60, அறுபது என்ற எண் தொடர்பான.
sextant *(n.)* the sixth part of a circle, an instrument used for measuring angles, an instrument used for measuring the altitude of the sun, வட்டத்தின் ஆறில் ஒரு பகுதி, கோணமானி, சூரியனின் விண்நிலை அறிய உதவும் கோணமானி.
sex'ton *(n.)* one who is in charge of ringing the church bell, and digging of graves, திருக்கோயிலில் மணி அடிப்பவர், சவக்குழி தோண்டுபவர்.
shabby *(adj.)* much worn-out, not smart and fresh, mean, கந்தலான, அலங்கோலமான, கீழ்த்தரமான.
shack *(n.)* a roughly-built hut, குடிசை.
shack'le *(v.t.)* put on chain to prevent freedom of action, தளையிடு, விலங்கிடு.
shack'les *(n.pl.)* fetters, handcuffs, தளை, விலங்கு.
shad *(n.)* a fish of the herring family, ஒரு வகை மீன்.
shade *(n.)* a place sheltered from the sun or from light, slight darkness, நிழல், அரையிருள், மங்கல்; **shady** *(adj.)*; also *(v.t. & i.)*.
shad'ow *(n.)* the area of shade caused by some object, coming in the way of light, least sign or appearance, நிழல், அடையாளம், சாயல்.
shaft *(n.)* the long handle of a tool, weapon etc., an arrow, on the two poles of a cart to which the horse is tied, a long revolving bar transmitting motion in an engine, the main vertical part of a pillar, the deep narrow passage leading to a mine, தண்டு, நுகத்தடி, கம்பத்தின் நடுத்தண்டு, சுரங்கப்பாதை.
shag'gy *(adj.)* having rough hair, untidy in appearance, சிக்குப் பிடித்த, சிடுக்குடைய, தாறுமாறான.
shagreen *(n.)* green leather made from the skin of horse, camel etc., பதனிடப் படாத பச்சைத் தோல்.
shake *(v.t. & i.)* move quickly up and down or backwards and forwards, shiver, disturb, குலுக்கு, கலக்கு, நடுங்கு, அதிரச்செய்; also *(n.)*; **shaky** *(adj.)*; **shook** *(pt.)*; **shaken** *(p.p.)*.
shale *(n.)* a kind of rock, மாக்கல் பாறை.
shall *(aux. v.)* used as an auxiliary verb to denote the future tense, எதிர் காலம் குறிக்கும் துணைவினை; **should** *(p.t.)*.
shal'lop *(n.)* a light boat, பரிசல்.
shal'lot *(n.)* a kind of onion, வெங்காயச் செடி வகை.
shal'low *(adj.)* not deep, not wise, ஆழம் குறைந்த, நுட்பமற்ற.
sham *(n.)* artificiality, an imitation that is meant to deceive, போலித் தன்மை, பாசாங்கு; also *(v.t.)*; also *(adj.)*.
shamble *(v.i.)* walk or run awkwardly, கால் இடறி நட, தட்டுத்தடுமாறி நட.
sham'bles *(n.)* a slaughter-house, கசாப்புக்கடை.
shame *(n.)* an unpleasant feeling caused by wrong or foolish behaviour, disgrace, வெட்கம், அவமதிப்பு, இழிவு; **shame'ful** *(adj.)*.
sham'my *(n.)* leather of a kind of deer, ஒரு வகை மான்தோல்.
shampoo *(n.)* a soapy liquid for washing the hair, தலைமயிர் கழுவு நீர்மம்; also (v.t).
shank *(n.)* part of the leg between knee and ankle, கால், முழங்காலுக்கும் கணுக் காலுக்கும் இடைப்பட்ட பகுதி.
shape *(n.)* outward form, embodiment, condition or state, புறவடிவம், அமைப்பு, மெய்யுருவம்.
share *(n.)* the portion of something belonging to an individual, part of

the capital, பங்கு, வீதம், பங்கீடு; also *(v.t.)*.

shark *(n.)* a large and dangerous sea-fish, சுறாமீன்.

sharp *(adj.)* having a fine cutting edge, clear, shrill in sound, keen, sudden, கூரான, கூர்மையுடைய, தெளிவான, கிறீச்சிடும், அறிவுக் கூர்மையுடைய, உடனடியான.

shat'ter *(v.t. & i.)* break into small pieces, put an end to, உடைத்தெறி, தூள்தூளாக்கு, இல்லாமலாக்கு.

shave *(v.t.)* remove the facial hair with a razor, மழி, சவரம் செய்; also *(n.)*.

shawl *(n.)* a long piece of cloth or silk worn loosely over the shoulders or head, சால்வை.

sheaf *(n.)* bundle of reaped corn stalks, bundle of paper etc., கற்றை, கட்டு; also (v.t).

shear *(v.t. & i.)* to clip or cut with scissors, கத்தரி, வெட்டு.

shears *(n.)* a kind of large scissors, பெரிய கத்தரிக்கோல்.

sheath *(n.)* a case for the blade of a sword, knife etc., கத்தியுறை; also *(v.t.)*.

sheathe *(v.t.)* to enclose or protect in a case, உறையிடு, மேலுறையிடு.

shed[1] *(n.)* single-storeyed shelter for keeping goods, vehicles etc., கொட்டகை.

shed[2] *(v.t. & i.)* to cast off, get rid off, உதிரவிடு, விலக்கு, நீக்கு.

sheen *(n.)* brightness, ஒளி, பளபளப்பு.

sheep *(n.)* a ruminant reared for its wool and flesh, செம்மறியாடு.

sheep'-cote *(n.)* a shelter for sheep, ஆட்டுக் கொட்டில்.

sheep'ish *(adj.)* shy, awkward, நாணமுடைய, மடத்தனமான.

sheer[1] *(adj.)* clear, absolute, steep, தெளிந்த, முழுமையான, செங்குத்தான.

sheer[2] *(v.i.)* to turn aside, விட்டுவிலகு.

sheet *(n.)* a broad thin piece of anything, a bed spread, a wide expanse of water, தகடு, பாளம், படுக்கை விரிப்பு, நீர்ப்பரப்பு.

shelf[1] *(n.)* a board fixed to a wall for laying things on, தட்டடுக்கு; **shelve** *(v.t.)*.

shelf[2] *(n.)* a sand bank, மணல் படுகை, மணல் திட்டு.

shell *(n.)* hard outer covering of certain creatures or certain things, a metal case containing explosives, ஓடு, தோடு, வெடிகுண்டு; also *(v.t. & i.)*.

shellac *(n.)* solid thin flakes of resin used for making varnish, polish etc., அரக்கு.

shell'-fish *(n.)* a mollusc or water creature covered with a shell, சிப்பி, நண்டு, நத்தை போன்ற ஓட்டுயிரி.

shel'ter *(n.)* a place for protection against wind, rain, enemies etc., protection, பாதுகாப்பிடம், பாதுகாப்பு; also *(v.t. & i.)*.

shelve[1] (see shelf)

shelve[2] *(v.t.)* to put aside the consideration of a problem for the time being, முடிவெடுப்பதை ஒத்திப் போடு, பிரச்சினையை ஒதுக்கி வை.

shep'herd *(n.)* one who looks after sheep, ஆட்டிடையன்.

sher'bet *(n.)* a fizzy drink made from fruit juices, இனிய குடிநீர்ப் பானம்.

sheri'ff *(n.)* a law official in a country, மாநகரண்ணல்.

sher'ry *(n.)* a kind of white wine, ஒரு வகைத் திராட்சை மது.

shib'boleth *(n.)* a test word, அடையாளச் சொல்.

shield *(n.)* a broad piece of metal, wood etc., used as a defensive armour, a trophy shaped like a shield presented as a prize in a sport, competition etc., கவசம், பரிசுக் கேடயம்.

shift *(n.)* change of position or character, a group of people who begin work on a job when another group stop work, மாற்றம், முறைப் பணி; also *(v.t. & i.)*.

shifty *(adj.)* not able to be trusted, dishonest, நம்பிக்கைக்குப் பாத்திரமற்ற, தந்திரமான.

shil'ling *(n.)* a British silver coin, ஆங்கில நாணயம்.
shil'ly- shally *(v.i.)* hesitate, தயங்கு, தடுமாறு; also *(n.)*.
shim'mer *(v.t.)* to shine faintly, மங்கலாக ஒளிவீசு; also *(n.)*.
shin *(n.)* the front part of the leg below the knee, முழங்கால்.
shin'dy *(n.)* a noisy protest, சச்சரவு, சந்தடி.
shine *(v.t. & i.)* reflect light, to excel, ஒளிவீசு, ஒளிவிடு; also *(n.)*, **shin'y** *(adj.)*;**shone** *(p.t. & p.p.)*; **shining** *(n.)*.
shin'gle[1] *(n.)* an oblong slip used as a roof cover, கூரைப் பலகை, கூரை ஓடு; also *(v.t.)*.
shin'gle[2] *(n.)* small rounded pebbles, சிறு கூழாங்கல்.
shin'gles *(n.)* a painful skin disease, கொப்புளப் புண் ஏற்படுத்தும் ஒரு வகைத் தோல் நோய்.
shinty *(n.)* a ball game like hockey, ஒரு வகைப் பந்தாட்டம்.
ship *(n.)* a vessel used for navigation, கப்பல் ; also *(v.i.)*.
ship'ment *(n.)* load of goods for transportation, கப்பல் சரக்கு.
ship'ping *(n.)* ships taken as a whole, the act of transporting goods by ship, கப்பல் தொகுதி, கப்பல் ஏற்றுமதி.
ship'shape *(adj.)* in good order, tidy, ஒழுங்கான, நல்ல நிலையிலுள்ள, தூய்மையான.
ship'-wreck *(n.)* destruction of a ship at sea, கப்பல் உடைப்பு.
shipyard *(n.)* an enclosure where ships are built, கப்பல் கட்டுமிடம்.
shire *(n.)* a county in England, இங்கிலாந்திலுள்ள ஒரு மாவட்டம்.
shirk *(n.)* one who evades duty, பொறுப்பைத் தட்டிக் கழிப்பவர், கடமையிலிருந்து நழுவுபவர்; also *(v.t.)*.
shirt *(n.)* an upper garment for men, சட்டை.
shi'ver[1] *(v.i.)* to tremble with cold or fear, குளிரால் நடுங்கு, அச்சத்தால் நடுங்கு; also *(n.)*; **shi'very** *(adj.)*.
shi'ver[2] *(n.)* a small broken piece, உடைந்த துண்டு, சிம்பு .
shoal[1] *(n.)* a great number of fish swimming together, மீன் கூட்டம்.
shoal[2] *(n.)* a shallow place in the sea, கடலில் ஆழமற்ற பகுதி.
shock[1] *(n.)* a sudden blow, violent collision, sudden shaking caused by an electric current, திடீர் அடி, கடும் மோதல், மின் அதிர்ச்சி; also *(v.t. & i.)*; **shock'ing** *(adj.)*.
shock[2] *(n.)* a heap of sheaves of grain, thick bushy hair, பயிர்க்கட்டு, கடை மயிர்.
shod *(adj.)* with a shoe or shoes on, புதைச் செருப்புகள் அணிந்த.
shod'dy *(adj.)* badly made, pretentious, தரம் குன்றிய, இழிவான, பாசாங்கான; also *(n.)*.
shoe *(n.)* an outercovering for the foot, காலணி, புதைமிதி; also *(v.t.)*.
shone (see shine).
shook (see shake).
shoot *(v.i. & t.)* to hit with a bullet, throw violently, to take photographs, துப்பாக்கியால் சுடு, வேகமாக எறி, படம்பிடி; also *(n.)*; also *(p.t. & p.p.)*; **shooting** *(n.)*.
shop *(n.)* a place where goods are sold, a place where any kind of industry is carried on, கடை, தொழிற்சாலை, பணிமனை; also *(v.i. & t.)*.
shore[1] *(n.)* the land bordering a sea, river or lake, கடற்கரை, ஆற்றங் கரை, ஏரிக்கரை.
shore[2] *(n.)* a supporting beam, அணைப்பு; also *(v.t.)*.
short *(adj.)* not tall, not having enough of time, amount, quality etc., குட்டையான, குறுகிய, போதிய கால அவகாசமற்ற, குறைந்த அளவு, நேரம், காலம், அளவு முதலானவை போதாத; also *(adv.)*; **short'ly** *(adv.)*.
shortage *(n.)* deficiency, an amount that is not enough, பற்றாக்குறை, குறைந்திருக்கும் அளவு.
short'coming *(n.)* failure to reach a required standard, குறைபாடு.

shortcut *(n.)* a quicker way to achieve a result, a quicker way than usual, குறுக்கு வழி, குறுக்குப்பாதை.

short'er *(v.t. & i.)* make shorter, குறை, சுருக்கு, குறுக்கு.

short'hand *(n.)* a system of writing using strokes and dots to show sounds, சுருக்கெழுத்து.

shorts *(n.pl.)* a dress covering the area between the hip and above the knee, குறுங்கால் சட்டை.

short'sight *(n.)* inability to see faraway things clearly, கிட்டப் பார்வை; **short-sighted** *(adj.)*.

shot *(n.)* discharge of a firearm, the act of shooting, something which is shot, the distance traversed by a projectile, சுடுதல், வெடிகுண்டு, எறி தொலைவு; also *(v.t.)*.

should' (see shall).

shoul'der *(n.)* the part of the body between the neck and the upper arm, தோள்; also *(v.t. & i.)*.

shout *(n.)* a loud call or sudden cry, கூச்சல், கூப்பாடு; also *(v.t. & i.)*.

shove *(v.t. & i.)* to push with force, தள்ளு, உந்தித் தள்ளு; also *(n.)*.

shov'el *(n.)* a flat tool with a handle, மண்வாரி; also *(v.t.)*.

show *(v.t. & i.)* be visible, to offer for display, to point out, to make clear, காட்டு, காட்சிக்கு வை, சுட்டிக் காட்டு, தெளிவு படுத்து; **shown** *(p.t. & p.p.)*.

show'er *(n.)* a gentle fall of rain, மழை பொழிதல்; also *(v.t. & i.)*.

shown (see show).

show'y *(adj.)* making a grand display, pretty but not good, ஆடம்பரமான, பகட்டான.

shrap'nel *(n.)* an explosive shell which scatters bullets over a wide area, சிதறு வெடிகுண்டு.

shred *(n.)* narrow strip cut or torn off, கிழிந்த துண்டு, கிழிசல், உடைந்த துண்டு.

shrew *(n.)* a mouse-like animal, மூஞ்சூறு.

shrewd *(adj.)* having a good common sense, wise, நுண்ணறிவுடைய, கூர் மதியுடைய; **shrewd'ness** *(n.)*.

shriek *(n.)* a scream, கிறீச்சொலி; also *(v.t. & i.)*.

shrift *(n.)* confession made to a priest, பாவமன்னிப்பு.

shrill *(adj.)* high pitched, having a piercing tone, கிறீச்சிடுகிற, காதைத் துளைக்கிற.

shrimp *(n.)* an edible long-tailed shell fish, இறால்மீன்.

shrine *(n.)* a holy place, புனிதத் தலம்.

shrink *(v.i. & t.)* contract, to move back in fear, disgust etc., சுருங்கு, அச்சத்தால் ஒடுங்கு, குறுகு; **shrunk** *(p.t. & p.p.)*; **shrin'kage** *(n.)*.

shri[illegible] *t. & i.)* to hear a confession [illegible] pardon, பாவமன்னிப்பளி.

shriv'el *(v.t. & i.)* to wither, to wrinkle as from cold or heat, உலர்ந்து போதல், குளிரால் நடுங்கு, சூட்டால் வதங்கு.

shroud *(n.)* a winding sheet for the dead body, anything that covers, பிணத்தை மூடும் துணி, மறைக்கும் அல்லது மூடும் பொருள்; also *(v.t. & i.)*.

shrub *(n.)* a small bush, குற்றுமரம்.

shrug *(v.t. & i.)* to raise the shoulders to express doubt, disdain etc., ஐயம், வெறுப்பு போன்றவற்றைக் குறிக்கும் வகையில் தோளைக் குலுக்கு; also *(n.)*.

shrunk (see shrink).

shrunk'en *(adj.)* wrinkled, சுருங்கிய, வதங்கிய.

shud'der *(v.i.)* to tremble from cold, fear, disgust etc., குளிரால் நடுங்கு, அச்சத்தால் நடுங்கு, வெறுப்படை.

shuf'fle *(v.i. & t.)* walk without sufficiently lifting the foot above the ground, scuff, change position, walk with dragging feet, காலைத் தூக்கி நடக்காமல் தேய்த்துத் தேய்த்து நட, புரட்டு; **shuf'fling** *(adj.)*.

shun *(v.t.)* to avoid, தவிர்த்து ஒதுக்கு, விலக்கு.

shunt *(v.t. & i.)* to turn a train aside, to move out of the way, தடம் திருப்பு, ஒதுக்கிச் செலுத்து; also *(n.)*.

shut *(v.t. & i.)* to close, அடை, மூடு.

shut'ter *(n.)* a movable cover, one who or that which shuts, நழுவு கதவு, மூடுபவர், மூடி.

shut'tle *(n.)* an instrument in a loom which carries threads, a transport system operating constantly backwards and forwards between two places, தறிநாடா, தறியின் ஓடம், போக்குவரத்து முறை.

shy *(adj.)* feeling uncomfortable in the presence of others, நாணமுடைய, கூச்சமுடைய.

sibilant *(adj.)* making a hissing sound like S and Z, சீறொலி சார்ந்த.

sib'yl *(n.)* a woman able to tell the future, வருங்காலமுரைக்கும் பெண்.

siccative *(adj.)* drying, உலர்த்துகிற; also *(n.)*.

sick *(adj.)* ill, very tired, vomiting, நோய்வாய்ப்பட்ட, களைத்த, வாந்தியெடுக்கும்; **sickness** *(n.)*.

sick'en *(v.t. & i.)* to make or become sick, to disgust, நோயுண்டாக்கு, நலம் குன்றச் செய், வெறுப்புண்டாக்கு.

sick'le *(n.)* a farm tool with a curved blade for cutting grass etc., அரிவாள்.

side *(n.)* the lateral part of an object, margin, border, party, பக்கம், விளிம்பு, ஓரம், கட்சிப்பிரிவு; also *(v.t.)*.

side'real *(adj.)* having to do with the stars, விண்மீன்களுக்குரிய.

side-track *(n.)* a pathway branching from the main line, கிளைப்பாதை; also *(v.t.)*.

side-view *(n.)* a view as seen from the side, பக்கவாட்டுக் காட்சி.

side'ways, *(adv.)* towards the side, பக்கவாட்டில்.

sidle *(v.t.)* to move sideways in shy, fear etc., நாணத்தால் பின்னடை, அஞ்சியொதுங்கு; also *(n.)*.

siege *(n.)* the setting down of an army surrounding a fort or town in order to capture it, முற்றுகை.

sien'na *(n.)* a kind of earth used as a colouring matter, காவிக்களிமண்.

sierra *(n.)* a range of mountains with jagged peaks, கரடுமுரடான மலைத்தொடர்.

sies'ta *(n.)* a slight sleep taken at noon, பகல் தூக்கம்.

sieve *(n.)* a round box with perforated bottom for separating fine pieces from larger ones, சல்லடை, அரிப்பு; also *(v.t.)*.

sift *(v.t.)* filter with a sieve, சலித்தெடு, கொழித்தெடு.

sigh *(n.)* to breathe deeply expressing sorrow or relief, ஆழ்ந்த மூச்சு விடு, பெருமூச்சு விடு; also *(v.t. & i.)*.

sight *(n.)* the act or power of seeing, a view, பார்வை, காட்சி; also *(v.t. & i.)*; **sighty** *(adj.)*.

sight-seeing *(n.)* the act of visiting the places of interest of an area, புதிய இடங்களைப் பார்த்து மகிழ்தல்.

sign *(n.)* a mark used to mean something, a jesture, an omen, அறிகுறி, அடையாளக் குறி, அறிவிப்பு, சின்னம், சகுனம்; also *(v.t. & i.)*.

sig'nal *(n.)* an indication, அறிவிப்புக் குறி, சைகை.

sig'natory *(n.)* one who has signed an agreement, கையொப்பமிட்டவர்.

sig'nature *(n.)* a person's name signed by himself, கையொப்பம்.

sign'board *(n.)* a board on which something is displayed, அறிவிப்புப் பலகை.

sig'net *(n.)* a private seal, முத்திரை, அடையாளக் குறி.

signi'ficance *(n.)* importance, தனிச் சிறப்பு, முக்கியத்துவம்.

signifi'cant (adj) having importance, carrying a meaning, முக்கியத்துவம் வாய்ந்த, பொருள் பொதிந்த.
signi'fica'tion *(n.)* act of signifying meaning, பொருள் உணர்த்துதல், குறிப்பிடுதல்; **sig'nify** *(v.t. & i.)*.
sign-post *(n.)* a post giving information, கைகாட்டி, வழிகாட்டி.
si'lence *(n.)* absence of noise or speech, ஓசையின்மை, மௌனம்; also *(v.t.)*.
si'lent *(adj.)* free from noise, not speaking, ஓசையற்ற, பேசாத, மௌனமான.
silhoutte *(n.)* an outline drawing seen from the side, a shadow, நிழற்படம், நிழலுருவம்.
si'lica *(n.)* a colourless substance made of flint and sandstone, மணற்சத்து, சிலிகா.
silk *(n.)* a fine string thread obtained from the cocoon of the silk worm, cloth made of this , பட்டுநூல், பட்டாடை.
silk'en *(adj.)* made of silk, பட்டாலான.
sill *(n.)* a horizontal block of wood or stone across the bottom of the frame of a window, பலகணியின் அடி மட்டத்தில் இருக்கும் படிக்கட்டை அல்லது படிக்கல்.
si'lly *(adj.)* foolish, simple, மடத்தனமான, அற்பமான; also *(n.)*,
silo *(n.)* an airtight structure in which green fodder is pressed, காற்றிறுக்கமான பசுந்தீவனக் குழி.
silt *(n.)* sediment left behind by flowing water, வண்டல்மண்; also *(v.t. & i.)*.
si'lvan', syl'van *(adj.)* having to do with wood, மரங்களடர்ந்த.
si'lver *(n.)* shining white metallic element, வெள்ளி; **silvery** *(adj.)*.
silver-tongued *(adj.)* pleasing in speech, நாவன்மையுள்ள.
simian *(adj.)* pertaining to apes, ape-like, மனிதக் குரங்கு சார்ந்த, மனிதக் குரங்கு போன்ற.
sim'ilar *(adj.)* having a resemblance, alike in many ways, ஒத்த, போன்ற; also *(n.)*; **similarity** *(n.)*.
sim'ile *(n.)* a striking comparison, the figure of speech showing resemblance, ஒப்புமை, உவமை.
simil'itude *(n.)* likeness, resemblance, போல இருக்கும் தன்மை, ஒற்றுமை.
sim'mer *(v.i. & t.)* boil gently with a hissing sound, இளங்கொதி வரும் படிச் சூடாக்கு; also *(n.)*.
simoom' *(n.)* a hot dry wind carrying particles of sand, பாலைவன மணற் காற்று.
sim'per *(v.i. & t.)* to smile in a silly manner, அசட்டுச் சிரிப்புச் சிரி; also *(n.)*.
sim'ple *(adj.)* easy to tackle, plain, clear, innocent, ignorant, எளிதான, கடினமற்ற, தெளிவான, நேர்மையான, குற்றமற்ற; **simply** *(adv.)*.
sim'pleton *(n.)* a foolish person, உலகறிவற்றவன், அனுபவ அறிவற்றவன், மூடன், பட்டறிவு அற்றவன்.
simpli'city *(n.)* the state of being simple, எளிமை, நேர்மை, கள்ளம் கபடமற்ற தன்மை.
simp'lify *(v.t.)* to make less difficult, எளிமைப்படுத்து, சுருக்கு; **simplification** *(n.)*.
simula'crum *(n.)* unreal likeness, an image, போலி ஒப்புமை, போலித் தோற்றம்.
sim'ulant *(adj.)* imitating, போலியான.
sim'ulate *(v.t.)* imitate, to pretend, போலச்செய், பாசாங்கு செய்; **simula'tion** *(n.)*.
simulta'neous *(adj.)* happening at the same time, ஒரே நேரத்தில் நிகழ்கிற, உடன்நிகழ்தலான.
sin *(n.)* a wicked act, crime, immorality, கொடுஞ்செயல், குற்றம், தவறு, பாவம்; also *(v.t. & i.)*; **sinful** *(adj.)*.
since *(adj.)* from that time, till row, அப்போதிலிருந்து, இதுவரை, இதற்கு முன்.

sincere *(adj.)* honest, genuine, நேர்மையான, உண்மையான; **sin-ceri'ty** *(n.)*.
sinecure *(n.)* a job for which one receives salary but has little work to do, பொறுப்போ, வேலையோ இன்றி ஊதியம் பெறும் பணி.
sine'quanon *(n.)* something indispensable, இன்றியமையாத ஒன்று.
sinew *(n.)* muscles , strength, vigour, தசைநார், வலிமை, விறுவிறுப்பு; **sin'ewy** *(adj.)*.
sing *(v.t. & i.)* utter words or sound in a musical way, பாடு; **song** *(n.)*.
singe *(v.t. & i.)* to burn slightly, பொசுக்கு, வெதுப்பு ; also *(n.)*.
sin'gle *(adj.)* one, unmarried, ஒற்றையான, ஒரு, மணமாகாத.
singlet *(n.)* an undershirt for men, ஆண் கள் அணியும் உள்சட்டை.
singleton *(n.)* a single card in card game, ஒற்றைச் சீட்டு.
sing'-song *(n.)* a monotonous sounding song, சலிப்பூட்டும் இசை.
sin'gular *(adj.)* odd, unique, unusual, indicating only one of a thing that is being spoken of, ஒற்றையான, தனிப்பட்ட, வழக்கத்திற்கு மாறான, ஒருமையான; **singulari'ty** *(n.)*.
sin'ister[1] *(adj.)* malevolent, suggesting evil, தீய இயல்புடைய, கெட்ட.
sin'ister[2] *(adj.)* of the left side, இடப் பக்கம் சார்ந்த.
sink *(v.t. & i.)* to go down below the surface of the water, நீரில் மூழ்கு,
sink *(n.)* a basin with a drain pipe, அங்கணம்.
sinker *(n.)* one who or that which sinks, மூழ்குபவர்.
sin'ner *(n.)* one who sins, பாவம் புரிந்தவர், பாவி.
sin'uos *(adj.)* bending in and out, பல வளைவுகளைக் கொண்ட.
sip *(v.t. & i.)* to drink slowly in very small mouthfuls, உறிஞ்சிக் குடி; also *(n.)*.
sip'hon, syphon *(n.)* a curved tube for transfering liquid to a lower level, தாம்புக்குழாய், வடிகுழாய்; also *(v.t. & i.)*.
sir *(n.)* a respectful form of address, மதிப்பு விளி, ஐயா.
sire *(n.)* father, forefather, a form of address used to a king, தந்தை, மூதாதை, அரசனை விளிக்கும் சொல்.
siren *(n.)* a sea nymph, a kind of instrument that gives a whirly sound in a factory, கடல் தேவதை, சங்கொலி.
sirocco *(n.)* a dusty dry sea wind, அனற் காற்று.
sis'ter *(n.)* daughter of the same parent as another person, a senior nurse, a female member of a religious group, சகோதரி, உடன்பிறந்தவள், செவிலி, கிறித்தவப் பெண் துறவி; **sis'terly** *(adj.)*.
sister-in-law *(n.)* sister of one's husband or wife, brother's wife, நாத்தனார், கொழுந்தி, அண்ணி, தம்பியின் மனைவி.
sit *(v.t. & i.)* to rest on the buttocks, remain, உட்கார் , அமர், தங்கு; **sitting** *(n.)* .
site *(n.)* a location chosen for some purpose, a place for constructing a building, இடம், புரையிடம், மனையிடம்.
sit'uate *(v.t.)* to put in certain circumstances, to locate, குறிப்பிட்ட சூழலில் அமை, இடத்தில் வை.
sit'uated *(adj.)* located or in a place, அமைந்த, இடத்திலுள்ள, இருக்கின்ற.
situa'tion *(n.)* position, condition of some affair, பதவி, தொழில், நிலை, சூழல்.
six *(adj.)* half a dozen, ஆறு.
six'fold *(adj.)* six times, ஆறு மடங்கான.
six pence *(n.)* a coin worth of six pennies, ஆறு செப்புக்காசு மதிப்புடைய வெள்ளி நாணயம்.
sixteen *(adj.)* the number next to fifteen, பதினாறு.
six'ty *(adj.)* six times ten, அறுபது.
siz'able *(adj.)* fairly large, பெரிய அளவிலான.

size *(n.)* the magnitude of anything, the dimension, அளவு, பருமன், பரப்பெல்லை; also *(v.t.)*.
sizzle *(v.t.)* to make a hissing sound, உஸ்ஸென்று ஒலியெழுப்பு; also *(n.)*.
skate[1] *(n.)* a boot with a steel blade fixed to it for gliding on ice etc., சறுக்குக் காலணி; also *(v.i.)*.
skate[2] *(n.)* a variety of long tailed edible fish, ஒரு வகை பெரிய உணவு மீன் வகை.
skein *(n.)* yarn or thread wound in a coil, நூற்கண்டு.
skel'eton *(n.)* the bony frame work of an animal body, எலும்புச் சட்டம், எலும்புக் கூடு, சட்டகம்.
skep *(n.)* a wicker basket, பிரம்புக் கூடை.
skeptic, sceptic *(n.)* an atheist, a disbeliever, சமய நம்பிக்கையற்றவர், நாத்திகர்.
sketch *(n.)* a rough outline, gist, description, வரைபடம், சுருக்கம், விளக்கம்; also *(v.t. & i.)*.
skew *(adj.)* oblique, not symmetrical, சாய்வான, கோணலான, சரிந்த; also *(v.t. & i.)* & *(n.)*.
skewer *(n.)* a long pin for holding meat together while roasting, பற்றுக் கோல்.
ski *(n.)* a long wooden snow shoe, பனிச் சறுக்குக் கட்டை; also *(v.t.)*.
skid *(n.)* a plank under the wheel of a cart, a side slip, சக்கரத் தடைக் கட்டை, சறுக்கல்; also *(v.i.)*.
skiff *(n.)* a small boat for a single person, ஒருவர் மட்டும் செல்லும் சிறு படகு.
skill *(n.)* cleverness to do something efficiently, திறமை, செயல்திறன், ஆற்றல்; **skil'ful** *(adj.)*.
skil'let *(n.)* a small pot with a long handle, நீண்ட கைப்பிடியுள்ள சமையல் பாத்திரம்.
skim *(v.t. & i.)* remove the floating cream from the surface of a liquid, glide swifty, நீர்மத்தின் மேல் படர்ந்துள்ள ஆடையை நீக்கு, சறுக்கிச் செல்.
skimp *(v.t. & i.)* give less than what is needed, தேவைக்குக் குறைவாகக் கொடு, கஞ்சத்தனம் காட்டு.
skin *(n.)* the substance forming the outer covering of an animal body or fruit, தோல்; also *(v.t. & i.)*.
skip *(v.t. & i.)* leap or jump lightly and quickly, குதி, தாண்டு, சாடு; also *(n.)*.
skip'per *(n.)* captain of a small ship, கப்பலோட்டி.
skir'mish *(n.)* irregular fight between small groups, சண்டைசச்சரவு, சிறு போர்; also *(v.i.)*.
skirt *(n.)* women's garment below the waist, பாவாடை.
skit *(n.)* a piece of writing which makes fun of a person, an event etc., a cartoon, கேலி நாடகம், கேலிச் சித்திரம்.
skit'tish *(adj.)* easily frightened, எளிதில் அச்சமுறுகிற, கூச்சமுடைய.
skive *(v.t.)* to slice in thin layers, to grind away the surface of a gem, அடையடையாய் எடு, அடுக்கடுக்காய் எடு, பட்டை தீட்டு.
skulk *(v.t.)* move secretly to avoid work, மறைந்து செல், செய்ய விரும்பாமல் ஒதுங்கிச் செல்.
skull *(n.)* the bone case that encloses the brain, மண்டையோடு.
sky *(n.)* the space above the earth, வானம் , ஆகாயம்.
sky'lark *(n.)* a bird that sings as it flies upward, வானம்பாடி.
skyscraper *(n.)* a tall building with many storeys , பலமாடிக் கட்டடம், வானளாவிய கட்டடம்.
slab *(n.)* a thin flat piece of any thing, பாளம், பலகை.
slack *(adj.)* lazy, careless, not tight, சோம்பேறித்தனமான, கவனமற்ற, தளர்த்தியான, இறுக்கமற்ற; also *(v.t. & i.)*; **slacken** *(v.t. & i.)*.
slag *(n.)* waste left over from iron-smelting works, கசடு.
slain (see slay).

slake *(v.t.)* to mix lime with water, சுண்ணாம்பு நீறு.
slam *(v.t. & i.)* shut violently making a loud nosie, தடாலென்று கதவை அடை.
sland'er *(n.)* a false report that injures the reputation of a person, அவதூறு, பொய்க் குற்றச்சாட்டு அறிக்கை; also *(v.t.)*.
slang *(n.)* words and phrases used in informal speech, but not suitable for polite use, கொச்சை மொழி; also *(v.t.)*.
slant *(v.i. & t.)* lean to oneside, slope, சாய், சரிந்து நில்; also *(n.)*; **slanting** *(adj.)*.
slap *(n.)* to strike with hand, பளாரென்று அடி.
slash *(v.i. & t.)* cut with a blow, வெட்டி முறி, குத்திக் கீறு; also *(n.)*.
slat *(n.)* a thin strip of wood, slate etc., மரச்சிம்பு.
slate *(n.)* a type of easily split rock used for roofing or writing upon, கற்பலகை.
slat'tern *(n.)* a dirty or untidy woman, நடத்தைகெட்ட பெண், தூய்மையற்ற பெண்.
slaugh'ter *(n.)* the killing of animals or people in large numbers, படுகொலை; also *(v.t.)*.
slave *(n.)* one who has no freedom, one who is the legal property of another, சுதந்தரமற்றவன், அடிமை.
slav'er *(n.)* a vessel employed in slave trade, one engaged in buying and selling of slaves, அடிமை வாணிகக் கப்பல், அடிமை வாணிகர்; **slav'ish** *(adj.)*; **slavery** *(n.)*.
slay *(v.t.)* to put to death, கொலை செய்; **slain** *(p.p.)*; **slew** *(p.t.)*.
sledge *(n.)* a carriage with runners used for sliding upon snow, பனிச்சறுக்கு வண்டி; also *(v.i.)*.
sledge-hammer *(n.)* a large heavy hammer used by smiths, சம்மட்டி.
sleek *(adj.)* having a smooth and glossy surface, வழவழப்பான, பளபளப்பான.
sleep *(n.)* state of complete rest in which the eyes are closed with a state of natural unconsciousness, உறக்கம், தூக்கம்; **sleepy** *(adj.)*; **slept** *(p.t. & p.p.)*.
sleet *(n.)* rain mixed with snow and hail, ஆலங்கட்டி மழை.
sleeve *(n.)* part of the garment which covers the arms, சட்டைக்கை.
sleigh *(n.)* a sledge pulled by a horse etc., பனிச்சறுக்கு வண்டி.
sleight *(n.)* a tricky devise, ஏமாற்று வித்தை, செப்பிடுவித்தை.
slen'der *(adj.)* slim, small in amount, மெலிந்த, ஒல்லியான, மிகச்சிறிய.
slept (see sleep).
sleuth *(n.)* a person who tracks down criminals, a dog that follows scent, துப்பறிபவர், மோப்பம் பிடிக்கும் நாய், துப்பறியும் நாய்.
slew[1] (see slay).
slew[2] *(v.t. & i.)* to swing in a certain direction, சுழன்று திரும்பு.
slice *(n.)* a thin flat piece, துண்டு, சீவல்; also *(v.t. & i.)*.
slick[1] *(adj.)* clever in a dishonest way, சூழ்ச்சித் திறனுடைய.
slick[2] *(n.)* a band of oil floating on the surface of the sea etc., கடலில் உள்ள எண்ணெய்ப் பரப்பு.
slide *(v.i. & t.)* to move quietly and smoothly, to glide, to move secretly, சறுக்கு, வழுக்கிச்செல், நழுவு; also *(n.)*.
slight *(adj.)* light, fragile, insignificant, not thorough, foolish, மெலிதான, ஒல்லியான, முக்கியமற்ற, முழுமையற்ற; also *(v.t. & i.) (n.)*.
slim *(adj.)* slender, meagre, மெல்லிய, ஒல்லியான, மிகச்சிறிய ; also *(v.t. & i.)*
slime *(n.)* thin slippery mud or other substance, சேறு, சகதி; **slim'y** *(adj.)*.
sling *(n.)* band of material looping round the neck or shoulders to support an injured arm, a string or strap used to throw stones, bullets etc, தொங்கல் கட்டு, கவண்; also *(v.t. & i.)*; **sling** *(p.t. & p.p.)*.

slink *(v.i. & t.)* to sneak a way, பதுங்கிச் செல்.
slip *(v.t. & i.)* move smoothly, slide a way, to escape from, சறுக்கி விழு, நழுவு, தப்பிச் செல்; also *(n.)*; **slip'pery** *(adj.)*.
slip'per *(n.)* a soft kind of shoe, one who or that which slips, செருப்பு, சறுக்குபவர், சறுக்கும் பொருள்,
slip'shod *(adj.)* careless, untidy, கவன மற்ற, அழுக்கான.
slit *(n.)* a narrow incision, நீண்ட பிளவு, கீறல்.
slith'er *(v.t.)* to slide while trying to walk. நடக்கும் போது சறுக்கிவிழு.
sliv'er *(n.)* lengthwise slice of something, சிராய், சிம்பு.
slobber *(v.t. & i.)* to let saliva dribble from the mouth, எச்சில் வடி.
sloe *(v.)* the black thorn and its fruit, கற்றாழை முள், கற்றாழைச் செடி.
slo'gan *(n.)* a catchword or phrase used for advertising or political propaganda, முத்திரைச் சொல், கட்சிக் குரல்.
sloop *(n.)* a one-masted sailing boat, ஒற்றைப் பாய்மரக் கப்பல்,
slop *(v.t. & i.)* cause to overflow, spill, கவிழ்ந்து வடி, சிந்து; also *(v.t. & i.)*.
slope *(n.)* slant, obliquity, சரிவு, சாய்வு; also *(v.t. & i.)*.
slops *(n.pl.)* dirty waste water from the kitchen, சமையலறையிலிருந்து வெளியாகும் கழிவு நீர்.
slot *(n.)* a slit or groove, காடி, சிறு துளை.
sloth[1] *(n.)* laziness or idleness, சோம் பேறித்தனம்; **slothful** *(adj.)*.
sloth[2] *(n.)* a South American animal that lives in trees and moves slowly, கரடியினப் பாலுண்ணி.
slouch *(n.)* to stand, sit or walk in an unattractive way, குனிந்து நில், தலையைத் தொங்கவிடு, தட்டுத் தடுமாறி நட.
slough[1] *(n.)* a swamp or marsh, சதுப்பு நிலம்.
slough[2] *(n.)* dead skin of an animal, any part that an animal casts or moults, பாம்புச் சட்டை, உதிர்க்கப் பட்ட தோல் அல்லது உறுப்பு; also *(v.t. & i.)*.
slov'en *(n.)* untidy person, carelessly dressed person, அழுக்கான மனிதர், அலங்கோலமானவர்; **slov'enly** *(adj.)*.
slow *(adj.)* not quick, behind in time, மந்தமான, காலந்தாழ்த்தும்; **slowly** *(adv.)*.
sludge *(n.)* soft mud, sewage, சேறு, சாக்கடை நீர்.
slug[1] *(n.)* a nature like snail without shell, கூடில்லா நத்தை.
slug[2] *(n.)* a small piece of metal used as bullet, துப்பாக்கிக் குண்டு.
slug'gard *(n.)* one who is slow and lazy in habits, சோம்பேறி.
sluggish *(n.)* inactive, மந்தமான.
sluice *(n.)* an artificial channel for conducting water, மதகு; also *(v.t. & i.)*.
slum *(n.)* dirty over crowded part of town marked by poverty, சேரி; **slum'my** *(adj.)*.
slum'ber *(v.i. & t.)* to sleep, குட்டித் தூக்கம் போடு; also *(n.)*.
slump *(n.)* a falling off, a sudden fall in value, trade, etc., திடீர் வீழ்ச்சி, விலை இறக்கம்; also *(v.i.)* **slump'y.**
slung (see sling).
slur *(n.)* a damaging remark, indistinct pronunciation, களங்கம், அவதூறு, தெளிவற்ற உச்சரிப்பு, also *(v.t. & i.)*.
slurp *(v.t. & i.)* to make noise while consuming drink, ஒலியெழுப்பிக் குடி; also *(n.)*.
slush *(n.)* melting snow , waterly mud, உருகிய பனிக்கட்டி, குழம்பிய சேறு.
slut *(n.)* an immoral woman, நடத்தை கெட்டவள்; **slut'tish** *(adj.)*.
sly *(adj.)* cunning, stealthy, சூழ்ச்சித் திறனுடைய, திருட்டுத்தனமான.
smack[1] *(n.)* a particular taste, opening and closing the lip noisily, குறிப் பிட்ட ஒரு சுவை, சப்புக் கொட்டுதல்; also *(v.t. & i.)*.

smack² *(n.)* a slap, sound of strapping whip, சாட்டையடி, சாட்டையொலி; *(v.t. & i.).*

smack³ *(n.)* a small fishing boat, சிறு படகு.

small *(adj.)* little in size, degrade, unimportance etc., அளவில் மிகச் சிறிய, இழிவான, அற்பமான.

small'pox *(n.)* a contagious disease that causes severe rash of large pus-filled spots, பெரியம்மை நோய்.

smart¹ *(adj.)* quick and clever, neat and well-dressed, சுறுசுறுப்பான, அறிவுக் கூர்மையுடைய, நேர்த்தியாக உடை அணிந்த.

smart² *(v.t. & i.)* to feel a sharp pain, குத்தலும் குடைச்சலும் ஏற்படுத்து. சுடுநோவு உண்டுபண்ணு; also *(n.).*

smash *(v.t. & i.)* break into pieces with violence, to strike with great force, துண்டு துண்டாக நொறுக்கு, வேகத்துடன் மோது; also *(n.).*

smat'tering *(n.)* a very slight knowledge of a particular subject, அரைகுறை அறிவு.

smear *(v.t. & i.)* spread over a surface, to stain, மேற்பூச்சுப் பூசு, கறை உண்டாக்கு; also *(n.).*

smell *(n.)* the sense of noticing things through one's nose, மணம், நாற்றம், முகர்ச்சி; also *(n.)*; **smelt** *(p.t. & p.p.).*

smelt¹ (see smell).

smelt² *(v.t.)* to melt ore in a furnace to separate the metal, கனிப்பொருளை உருக்கி உலோகத்தைப் பிரித்தெடு.

smelt³ *(n.)* small silvery edible fish, ஒரு வகை உணவு மீன்.

smile *(n.)* to show pleasure by extending the lips laterally, புன்முறுவல் செய், புன்னகை செய்; also *(n.).*

smirch *(v.t.)* to discolour, to stain, to make dirty, நிறம்அகற்று, கறையுண்டாக்கு, மாசு ஏற்படுத்து, also *(n.).*

smirk *(v.t.)* to smile in a foolish manner, அசட்டுச் சிரிப்புச் சிரி; also *(n.).*

V.23.

smite *(v.t. & i.)* to strike hard, வன்மையாகத் தாக்கு, அடி; **smit'ten** *(p.p.)*; **smote** *(p.t.).*

smith *(n.)* one who works with a particular metal, கொல்லன், கருமான்.

smithereens *(n.)* small fragments, சிறு துண்டுகள்.

smith'y *(n.)* the place of work of a smith, கொல்லன் பட்டறை.

smitten (see smite).

smock *(n.)* a garment worn by women, மாதர் உடை.

smocking *(n.)* an ornamental cloth held tight with stiches, ஒருங்கிணைத்துத் தைக்கப்பட்ட உடை.

smog *(n.)* a mixture of smoke and fog, புகை, மூடுபனி.

smoke *(n.)* gas or vapour given off by something which is burning, புகை; also *(v.i. & t.).*

smolt *(n.)* a kind of fish, வச்சிரமீன்.

smooth *(adj.)* having a polished surface, வழவழப்பான, மென்மையான.

smote (see smite)

smoth'er *(v.t. & i.)* to kill or die from lack of air, to suffocate, to put out fire, to suppress, மூச்சுத்திணறடித்துக் கொல், மூச்சு விட முடியாதபடி செய், தீயணை, அடக்கு; also *(n.).*

smoul'der *(v.i.)* to burn without bursting into flame, புகைத்து எரி, கொழுந்தின்றி எரி.

smudge *(n.)* a blurred mark, a stain, அழுக்குக் கறை, கறை; also *(v.t. & i.).*

smug *(adj.)* well satisfied, தன்னிறைவுடைய, மனநிறைவுடைய.

smug'gle *(v.t.)* to bring goods secretly in or out of a country, கள்ளக்கடத்தல் செய்; also *(n.)*; **smug'gling smug'gler** *(ns.).*

smut *(n.)* a spot of dirt, கறை, அழுக்கு.

snack *(n.)* a hasty meal, சிற்றுணவு.

snaffle *(n.)* a part of the bridle of the horse, கடிவாளப் பகுதி.

snag *(n.)* a hidden rock or something that causes danger, a difficulty or drawback, மறைவான பாறை, குற்றி, முளை, எதிர்பாரா முட்டுக்கட்டை அல்லது இடையூறு.

snail *(n.)* a small crawling amphibian, நத்தை.

snake *(n.)* a legless long crawling creature, பாம்பு.

snap *(v.t. & i.)* make unexpected snatch with the teeth, to break with a crack, take a quick photograph of, எதிர்பாரா நேரத்தில் பற்களால் கடி, சடக்கென்று ஒடி, ஒளிப்படமெடு; also *(n.)*.

snare *(n.)* a trap for catching animals, birds, கண்ணி, பொறி; also *(v.t.)*.

snarl *(v.t. & i.)* to growl angrily showing the teeth, to speak in a rude manner, உறுமு, சீறிப்பேசு; also *(n.)*.

snatch *(v.t. & i.)* to seize or grab quickly, வெடுக்கெனப் பறி; also *(n.)*.

sneak *(v.t. & i.)* go slyly for dishonest, purpose, கெட்ட நோக்கத்துடன் பதுங்கிச் செல்; also *(n.)*; **sneaking** *(adj.)*.

sneer *(v.t. & i.)* to express contempt in a derisive smile, ஏளனமாகச் சிரி, இகழ்ச்சியாகச் சிரி; also *(n.)*.

snee'ze *(v.t.)* to blow out air forcibly and audibly through the nose, தும்மு; also *(n.)*.

snick *(n.)* a small cut, சிறு வெட்டு.

snicker *(n.)* a giggle, a quiet laughter, கனைப் பொலி, இளித்தல்; also *(v.i.)*.

sniff *(v.t. & i.)* to draw in air through the nose, மூக்கினால் உறிஞ்சு, மணம் பிடி; also *(n.)*.

snig'ger *(v.i.)* to laugh quietly in a suppressed way, அடக்கிச் சிரி; also *(n.)*.

snip *(v.t.)* to cut sharply with a scissors, கத்திரி; also *(n.)*.

snipe[1] *(n.)* a bird with a long bill, உள்ளான் குருவி.

snipe[2] *(n.)* to shoot at from a hidden position, மறைந்திருந்து சுடு.

sniv'el *(v.i.)* to cry from pretended fear, அச்சம் கொண்டவன் போல அழு; also *(n.)*.

snob *(n.)* one who looks down on others, one who attaches much value to social position, wealth etc., பிறரைக் கேவலமாக நினைப்பவர், சமூக நிலை, செல்வம் இவற்றிற்குப் பெருமதிப்புக் கொடுப்பவர், பகட்டாளர்.

snood *(n.)* hair net worn by women, தலைமயிர் வலை.

snook *(n.)* a variety of sea fish, ஒரு வகைக் கடல் மீன்; also *(v.i.)*.

snooker *(n.)* a game played with colour balls, வண்ணப் பந்துகள் வைத்து ஆடும் மேசைப் பந்து ஆட்ட வகை.

snoop *(v.i.)* to go about sneaking, பிறருக்குத் தெரியாமல் பதுங்கிச் செல்.

snooze *(v.t. & i.)* to have a short sleep, சிறு தூக்கம் கொள்.

snore *(v.i. & t.)* to make a noise when breathing in sleep, குறட்டை விடு; also *(n.)*.

snort *(n.)* to pass air through nose violently, to express contempt, வெறுப்பைக் காட்டும் வகையில் சீறு.

snot *(n.)* mucus of the nose, மூக்குச் சளி; **snot'ty** *(adj.)*.

snout *(n.)* the projecting nose of an animal, நீள மூக்கு, நீள அலகு.

snow *(n.)* frozen water vapour falling in soft flakes, பனி, பனித்திரள், பனி மழை; also *(v.t. & i.)*.

snub[1] *(v.t.)* to rebuke in a scornful way, மட்டந்தட்டு; also *(n.)*.

snub[2] *(adj.)* short and slightly turned up at the end, சப்பையான.

snuff[1] *(n.)* powdered tobacco, மூக்குப் பொடி.

snuff[2] *(v.t. & i.)* remove the wick of a candle, மெழுகுத்திரியின் கருகிய பகுதியை நீக்கு.

snuf'fle *(v.t. & i.)* to inhale in order to smell, to draw breath and mucus audibly, மோப்பம்பிடி, மூக்கை உறிஞ்சு.

snug *(adj.)* fitting closely, comfortable, compact and warm, சரி அள வான, வசதியான, கதகதப்பான.
snug'gle *(v.t. & i.)* to come closely against another person for warmth etc., கதகதப்பிற்காக நெருங்கி அமர்.
so *(adv.)* in such a manner, to this extent, அப்படி, அதுபோலவே, இவ் வாறாக.
soak *(v.t. & i.)* to make very wet, become saturated with liquid, முழுதும் நனை, ஊறவை.
soap *(n.)* a cleansing agent made of fat, oil and an alkali and used for washing, சவக்காரம், சோப்பு; also *(v.t.)*.
soar *(v.i.)* to fly high in the sky, உயரப் பற.
sob *(v.t. & i.)* to weep noisily with catching of the breath, விம்மிவிம்மி அழு; also *(n.)*.
sob'er *(adj.)* marked by self-control having a serious mind, தன்னடக்க மான, ஆழ்ந்து சிந்திக்கும்; **sobrie'ty** *(n.)*.
sobriquet' *(n.)* a nick name, புனை பெயர், சாட்டுப்பெயர்.
soccer *(n.)* a ball game played by two teams of eleven, கால்பந்தாட்ட வகை.
so'ciable *(adj.)* fond of the company of others, friendly, கூடிப்பழகும் இயல்புடைய, நட்பிணக்கமுடைய.
so'cial *(adj.)* concerning the way of life and welfare of people in a community, pertaining to the society, companionable, சமுதாய நல நாட்டமுடைய சமூகம் சார்ந்த, கூடிவாழும் இயல்புடைய; also *(n.)*.
society *(n.)* mankind considered as a whole, a particular group or part of mankind considered as a whole, an associate organization of persons with a purpose, சமுதாயம், சமூகம், கழகம், குழு.
socio'logy *(n.)* the study of the way of life and welfare of the people in a community, சமூகவியல், வாழ்வி யல்.
sock[1] *(n.)* short stocking worn inside a shoe, boot etc., காலுறை.
sock[2] *(n.)* a blow, பலத்த அடி; also *(v.t.)*.
sock'et *(n.)* a cavity in which something fits, மூட்டுக்குழிவு..
sod *(n.)* grass land, lawn, புல்தரை.
so'da *(n.)* the name given to several substances formed with sodium used for washing or baking, சோடா உப்பு, உவர்க்கார நீர்.
sod'den *(adj.)* soaked thoroughly, நீர்மத்தில் தோய்த்த.
so'domy *(n.)* unisexual act between males, ஆண்களிடையே ஒருபாற் புணர்ச்சி.
so'fa *(n.)* a kind of wide seat with a back and arms, சாய்விருக்கை.
soft *(adj.)* not hard or firm, smooth, mild, not loud, உறுதியற்ற, மென்மை யான, மிதமான, மெல்லோசை யுடைய; **soft'en** *(v.t. & i.)*.
soft-hearted *(adj.)* tender-hearted, இளகிய மனமுடைய.
soggy *(adj.)* very wet and soft, ஈர மான, ஓதமான.
soil[1] *(n.)* the upper layer of the earth, மண், நிலம்.
soil[2] *(v.t. & i.)* make dirty, மாசுண் டாக்கு, அழுக்காக்கு.
soi'ree *(n.)* a social gathering or party for a particular purpose, குறிப்பிட்ட நோக்கத்திற்காகக் கூடும் கூட்டம், மாலைக் கூட்டம்.
so'journ *(v.t.)* to stay temporarily, சிறிதுகாலம் தங்கியிரு, தாற்காலிக மாகத் தங்கியிரு; also *(n.)*.
sol *(n.)* the sun, கதிரவன்.
sol'ace *(n.)* comfort, something that mitigates sorrow or pain, தேறுதல், ஆறுதல்.
so'lar *(adj.)* pertaining to the sun, கதிரவனுக்குரிய, கதிரவன் சார்ந்த.
solarium *(n.)* an enclosed room with glass top exposed to solar rays, கதிரவ ஒளி விழுமாறு கண்ணாடி யால் மூடப்பட்ட அறை.
sold (see sell).
sold'er *(n.)* a fusible metal used to join edges of wires, பற்றாசு.

sol'dier *(n.)* a member of an army, படைவீரன்.

sole[1] *(n.)* the bottom of the foot, உள்ளங்கால்; also *(v.t.)*.

sole[2] *(adj.)* pertaining to one individual or a group, தனிப்பட்ட, தனிக் குழு சார்ந்த; **solely** *(adv.)*.

sole[3] *(n.)* a kind of edible fish, ஒரு வகை உணவு மீன்.

sol'ecism *(n.)* incorrect speech, வழு வான பேச்சு, இலக்கணப் பிழை,

sol'emn *(adj.)* earnest, serious-looking having formal dignity, observed with religious rites, பெருமிதமான, வீறுடைய, கௌரவமான, சமயச் சடங்குகளுடன் கூடிய; **solemnize** *(v.t. & i.)*; **solemnity** *(n.)*.

solicit *(v.t. & i.)* to entreat earnestly, வருந்தி வேண்டிக்கொள்; **solicitation** *(n.)*.

solicitor' *(n.)* one who advocates the clients, வழக்கறிஞர்,

solici'tous *(adj.)* anxious, careful, ஆர்வமுடைய, ஆவலுள்ள, அக்கறையுடைய; **solici'tude** *(n.)*.

sol'id *(adj.)* firm or strong, not in the form of liquid or gas, உறுதியான, திண்மமான, திண்ணிய; also *(n.)*; **solidi'fy** *(v.t. & i.)*; **solidity** *(n.)*.

solidarity *(n.)* oneness caused by the union of interests, feelings, and actions, ஒற்றுமை, கட்டுப்பாடு.

solilo'quy *(n.)* talking on oneself on the stage, நாடக மேடையில் தனி மொழி.

sol'itary *(adj.)* alone, unattended, தனிமையான, கவனிப்பாரற்ற; **sol'itude** *(n.)*.

so'lo *(n.)* a musical performance by one person at a time, தனிஆவர்த் தனம், தனி இசை; also *(adj.)*.

sol'stice *(n.)* the time of the greatest or shortest length of day lights, நீண்ட பகல், நீண்ட இரவு.

sol'uble *(adj.)* able to be dissolved, கரையக் கூடிய; **solubility** *(n.)*.

solution *(n.)* a liquid with something dissolved in it, the working art of a problem, கரைசல், தீர்வு.

solve *(v.t.)* to find the answer, to find a way , தீர்வு காண், வழி கண்டுபிடி.

sol'vency *(n.)* the ability to pay all the debts, கடன் தீர்க்கும் திறன்; **solv'ent** *(adj.)*.

solvent[1] (see solvency).

solvent[2] *(n.)* thing that dissolves another, கரைப்பான்.

som'ber, som'bre *(adj.)* dull, gloomy, துயரம் நிறைந்த, இருளார்ந்த.

some *(adj.)* indefinite amount or number, வரையறுத்துக் குறிப்பிடாத சில, கொஞ்சம்.

some'body *(n.)* a person not known, யாரோ ஒருவர்.

some'how *(adj.)* in some unknown way, ஏதோ ஒரு வழியிலான, எப்படி யாவது.

someone *(pron.)* some person, யாரோ ஒருவர்.

som'ersault, som'erset *(n.)* any action performed by turning the body one full revolution forward or backward heels overhead, turn of the body, குட்டிக் கரணம்.

some'thing *(n.)* a thing not specified, ஏதோ ஒன்று.

some'time *(adv.)* at an unknown time, ஏதோ ஒரு காலத்தில், ஏதோ ஒரு சமயம்.

some'times *(adv.)* once in a while, now and then, எப்பொழுதாவது, சில வேளைகளில்.

some'what *(adj.)* rather, a little, ஏறக் குறைய, ஓரளவு.

some'where *(adv.)* in or at some place, எங்கோ ஓரிடத்தில், ஏதோ ஓரிடத்தில்.

somnam'bulism *(n.)* the act of walking in sleep, தூக்கத்தில் நடத் தல்; **somnambulist** *(n.)*.

somni'ferous *(adj.)* inducing sleep, தூக்கத்தை வரவழைக்கிற.

som'nolence *(n.)* sleepiness, தூக்கம்; **somnolent** *(adj.)*.

son *(n.)* a male offspring, மகன்.

sonant *(adj.)* having sound, ஒலியுடைய, ஓசையுடைய.

sona'ta *(n.)* an extended instrumental composition for piano or for some other instrument, இசைக் கருவிகளுக்குரிய வகையில் அமைக்கப்படும் இசைப்பா.

song *(n.)* words set to music, something sung, பாடல்.

sonic *(adj.)* pertaining to sound, ஒலி சார்ந்த.

son-in-law *(n.)* one's daughter's husband, மருமகன்.

son'net *(n.)* a poem in fourteen lines with ten or eleven syllables each, பதினான்கு வரிக் கவிதை.

sonori'ty *(n.)* the quality of having a clear loud sound, உரத்த குரல்; **sono'rous** *(adj.)*.

soon *(adv.)* in a short time from now, readily, விரைவில், உடனே.

soot *(n.)* black dust left by smoke, புகைக்கரி.

sooth *(n.)* truth, உண்மை, மெய்ம்மை.

soothe *(v.t. & i.)* to quieten with soft words, to mitigate pain etc., ஆறுதலளி, வலியைத் தணி.

sooth'sayer *(n)* one who foretells the future, குறிசொல்லுபவர், எதிர்கால முரைப்பவர்.

sop[1] *(n.)* a piece of food soaked in milk or gravy, பால், சாறு போன்றவற்றில் தோய்த்த உணவுத் துண்டு; also *(v.t. & i.)*.

sop[2] *(n.)* something given as a reward, a bribe, சலுகை, கையூட்டு.

sophisti'cated *(adj.)* highly developed, marked by worldly experience and wisdom, சொகுசான, உலகியல் அறிவுடைய, நடைமுறைக்கேற்ற.

sopori'fic *(adj.)* causing sleep, தூக்க மூட்டும்; also *(n.)*.

sop'rano *(n.)* a singing voice of the highest pitch, உச்சக்குரல் இசை.

sor'cerer *(n.)* a wizard, one who spells magic power, மந்திரவாதி, சூனியக்காரன்; **sorceress** *(fem.)*.

sor'cery *(n.)* a witch craft or black magic, சூனியம், மாயக்கலை.

sor'did *(adj.)* filthy, mean, இழிந்த, கீழ்த்தரமான.

sore *(adj.)* cut or blister that causes pain, வெட்டுக்காயம், புண்; also *(adj.)*.

sore'ly *(adj.)* acutely, very greatly, தீவிரமாக, கடுமையாக.

sor'rel *(n.)* a plant with sour-tasting leaves, புளியங்கீரைச் செடி வகை.

sorrow *(n.)* sadness, grief, வருத்தம், துயரம்; also *(v.t.)*; **sorrow'ful** *(adj.)*.

sor'ry *(adj.)* sad, feeling pity, துயரமுள்ள, வருந்துகிற.

sort *(n.)* group of persons or things of the same kind, வகை, இனம்; also *(v.t. & i.)*.

sor'tie *(n.)* a sudden attack by the defenders from a besieged place, முற்றுகையிடப்பட்ட பகுதியிலுள்ள வீரர்களின் திடீர்த் தாக்குதல்.

sos *(n.)* a code signal of distress, Save Our Souls, அபயக் குரல், உதவி கோரல்.

sot *(n.)* a drunkard, குடிகாரன்; **sot'ted** *(adj.)*.

sott'ovoce *(adv.)* said in a low tone, தணிந்த குரலில் சொல்லப்பட்ட.

sough *(n.)* a murmuring sound as of the wind, காற்றின் சீழ்க்கையொலி, சலசலப்பொலி; also *(v.i.)*.

sought (see seek).

soul *(n.)* the spirit, the non-physical part of the body, ஆன்மா,

sound[1] *(n.)* that which can be heard, ஒலி.

sound[2] *(adj.)* strong, deep, accurate, trustworthy, உறுதியான, முழுமையான, நம்பத்தகுந்த.

sound[3] *(v.t. & i.)* produce or raise noise, to investigate, to measure, ஓசை யெழுப்பு, சோதனைசெய், கண்டுபிடி.

soup *(n.)* a liquid food made from meat, vegetables etc., வடிசாறு, காய்கறிச் சாறு, இறைச்சிச் சாறு.

sour *(adj.)* having an acid taste, புளிப்பான.

source *(n.)* the origin, any place, person, circumstance, thing etc., which is the origin of something, மூலம், தோற்றுவாய், பிறப்பிடம்.

souse *(v.t. & i.)* immerse into a liquid, நீர்மத்தில் அழுத்து.

south *(n.)* the direction to the right of a person facing the rising sun, தெற்கு; **south'ern** *(adj.)*.

south'-east *(n.)* the direction midway between south and east, தென் கிழக்கு.

souve'nir *(n.)* something that is produced as a reminder of a place, person or occasion, நினைவுப் பொருள், நினைவுமலர்.

sov'ereign *(n.)* a king or queen, a British gold coin worth 20 shillings, அரசன், அரசி, இருபது ஷில்லிங் மதிப்புள்ள தங்க நாணயம்.

sow[1] *(n.)* a female pig, பெண் பன்றி.

sow[2] *(v.t. & i.)* to scatter the seeds over the ground, விதை தூவு; **sown** *(p.p.)*.

sown (see sow).

soya bean *(n.)* an annual crop plant, its seed, சோயா அவரை.

spa *(n.)* a place where there is mineral water, கனிம நீரூற்று.

space *(n.)* an empty place, a gap, the region outside the earths' atmosphere, வெற்றிடம், இடைவெளி, விண்வெளி, வானவெளி.

spac'ious *(adj.)* providing plenty of place, இடமகன்ற, பரந்த.

spade[1] *(n.)* a tool with a broad blade used for digging and cutting the ground, மண்வெட்டி; also *(v.t.)*.

spade[2] *(n.)* one of the four kinds of playing cards, விளையாட்டுச் சீட்டில் ஒன்று.

spade'work *(n.)* hard work done at the beginning of a project, முன்செய் வேலை

span *(n.)* the maximum distance between the tips of a man's thumb and the little finger, the distance between the supporting pillars of the bridge, arch, ஒரு சாண் அளவு, வில்வட்டம்; also *(v.t.)*.

span'gle *(n.)* a shining disc used to decorate the cloth, . மினுக்கு;. also *(v.t.)*.

span'iel *(n.)* a breed of dog with drooping ears and long hair, தொங்கு காதுகளும் நீண்ட மயிரும் உடைய நாய்வகை.

spani'sh *(adj.)* pertaining to Spain, ஸ்பெயின் நாடு, மொழி சார்ந்த.

spank *(n.)* a smart slap with the open hand on the buttocks, பிட்டத்தில் அடித்தல்; also *(v.i)*.

